திருமூலர்

கருக்கிடை வைத்தியம்-600

கருத்துரையுடன்

தாமரை நூலகம், சென்னை - 26.

திருமூலர்
கருக்கிடைவைத்தியம்-600

(கருத்துரையுடன்)

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 115
முதல் பதிப்பு : ஏப்ரல் 1994
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 1998
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2012
நான்காம் பதிப்பு : அக்டோபர் 2016
ஐந்தாம் பதிப்பு ஜூன் 2020

நூலைப்பற்றி

நூலின் பெயர்	:	திருமூலர் கருக்கிடை வைத்தியம்-6
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	ஜூன் 2020
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி
அச்சுத்தாள்	:	16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	168
பிரதிகள்	:	1200
நூல் விலை	:	ரு. 85
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

91/4

பதிப்புரை

சித்தர்களின் முதல்வர் சிவன். சிவன் உறையுமிடம் சித்தர்கள் இதயம் எனக் கூறுவார் யூகி முனிவர்.

சிவன் உமையன்னைக்குச் சொல்ல உமை நந்திக்குச் சொல்ல, நந்தி மற்றவர்களில் யாருக்காவது உபதேசிக்க அவ்வழியாகக் கிடைத்த இந்த நூலை உலகுக்கு அளிக்கிறேன் என்று கூறியே சித்தர்கள் தங்கள் நூல்களைத் தொடங்குவது வழக்கம்.

நந்தி யருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரும் ஆமே.

என்று நந்தியோடு ஒப்பானவர்களில் தாமும் ஒருவர் என்று கூறுகிறார் திருமூலர்.

திருமூலர் வர்க்கம் என்று ஒரு சித்தர் பரம்பரையே திருமூலர் பெயரால் அழைக்கப்படுகிறது. சித்தர் நெறிக்கு முழுமையான ஆதாரமும், பாடவகுப்பும் செயல் திட்டமும் எல்லாமே திருமூலர் அருளிய திருமந்திரம் தான் என்று கூறவேண்டும். ஒழுங்காகவும் முறையாகவும் படிப்படியான வரிசைக் கிரமமாகவும் சித்தர் நெறியைக் கூறும் நூல் திருமந்திரமே என்று துணிந்து கூறலாம். கடல் போல் விரிந்து பரந்து கிடக்கும் சித்தர் நூல்கள் எல்லாம் திருமந்திரம் கூறும் சித்தர் நெறியையே பறைசாற்றிக் கிடக்கின்றன.

சித்தர் இலக்கியத்தின் நான்கு அம்சங்களான வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகள் பற்றியும் திருமூலர் பிரான் பாடியருளியுள்ளார். வைத்தியத் துறையில் முதலாவதாக வைத்து எண்ணப்படும் தகுதிபடைத்தது திருமூலர் கருக்கிடை வைத்தியம் 600. என்ற நூலே.

ஒரு குழந்தை கருவில் உற்பத்தியாகும் பொழுதே அதன் ஆயுள், அமைப்பு, அது அடையப்போகும் வாழ்வின் தன்மை யாவும் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன என்று கூறுகிறார் திருமூலர்பிரான்.

ஆண்மிகில் ஆணாம் பெண்மிகில் பெண்ணாம்
பூணும் இரண்டொன்றிப் பொருந்தில் அலியாகும்
தாண் மிகவாயில் தரணி முழுதாறம்
பாண்மை மிகுந்திடில் பாய்தலும் இல்லையே. (8)

பாய்ந்து முனைந் தோடிற்பார் ஆயுளு நூறாம்
பாய்ந்து பின்னைந் தோடிற் பார் வயது ஐம்பதாம்
பாய்ந்திடும் வாயு பகுத்தறிந்து, இவ்வகை
பாய்ந்திடும் யோகிக்கும் பார்ச்சலும் ஆமே. (9)

என்ற பாடல்கள் பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா? அதன் அறிவு ஆற்றல் திறம் என்ன? அது நூறு வயதிருக்குமா? ஐம்பது வயதிருக்குமா? என்பதையெல்லாம் கருத்தரிக்கும் பொழுதே அறிந்து கொள்ள உதவுபவை.

திருமூலர் மேலும் தொடர்ந்து பிணிகள் தோன்றும் காரணங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் கூறுகிறார்.

பிணி, மூப்பு, சாக்காடு என்பவைகளில்லாமல் கற்ப காலம் வாழ்ந்திருக்கும் முறையையும் கூறுகிறார். கற்ப மூலிகைகளைப் பற்றியும் மற்ற மருந்துகளைப் பற்றியும் திருமூலர் கூறியிருப்பது அருமையிலும் அருமை.

அரிதாகக் கிடைத்த இந்த மனிதப் பிறவியை முறையாகப் பயன்படுத்தி மனிதன் கடைத்தேற வேண்டும் என்பதே சித்தர் நெறி. அதற்காகவே முதலாவதாக நோயற்ற நீண்ட ஆயுளைப் பெறவேண்டும். அதைப் பெற்றவுடன் மனிதன் தான் பிறவி எடுத்த காரணம் என்ன? எப்பயன் பெறுதற் பொருட்டு இப்பிறவி நேர்ந்துள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று தூண்டி விடுவதே சித்தர் நெறி.

காயம் கல்தூண் ஆகி கற்பாந்த காலம் வாழ முடியும் என்ற தகுதி கிட்டியவுடன் எந்த ஜீவனாலும் சும்மா இருக்க முடியாது. அறிவும் ஒழுக்கமும் ஆன்ற பண்பும் இல்லாமல் முரட்டுக் காளையாக வளர்ந்த ஒருவன் நீண்ட ஆயுள் பெற்றுப் பிறமாந்தர்க்கு ஊறு புரியத் தொடங்கிவிட்டானானால் கெடுதல் தானே ஏற்படும் என்ற ஐயம் எழலாம்.

அப்படிப் பட்டவர்களால் சித்தர் நெறியைத் திருப்பிப் பார்க்கவே முடியாது. சித்தர் வழியில் செல்லவும் முடியாது. மிக எளிமையான சொற்களில் அமைந்துள்ள சித்தர் பாடல்கள் அவனுக்குத் தாண்ட முடியாத பெருங்கடல்களாகவே தோன்றும்.

91/4

சித்தர்கள் அனைவருமே அதனால்தான் மறைப்பு மொழி (பரிபாஷை)யிலேயே முக்கியமான கருத்துகளைக் கூறியுள்ளனர். அத்தகைய மறைப்பு மொழியைப் பயன்படுத்தாதது திருமூலரின் தனிச் சிறப்பு. ஆயினும் திருமந்திரப் பாடல் ஒவ்வொன்றும் மேலும் மேலும் ஆழ்ந்தமிக நுண்ணிய புதுப் பொருள்களைத் தோற்றுவிக்கும் கருத்துச் சுரங்கங்களாக அமைந்துள்ளன.

பாடல்களின் சுவை, கருத்தின் ஆழம், நுணுகி ஆராய்ந்து கொண்டே போகுந்தோறும் புதுப் புதுப் பொருள் தோன்றி விரிந்து கொண்டே போகும் மாண்பு - இவை வேறெந்த நூலிலும் கிடையாதெனவே கூறிவிடலாம்.

திருமந்திரப் பாடல் ஒவ்வொன்றும் வேத சுலோகங்களைப் போல் மந்திரத் தன்மை கொண்டவை. மாந்திரிக ஆற்றல் கொண்டவை. திருமந்திரம் 300. (புவனைகக்கிஷம் - தாமரை வெளியீடு) என்ற நூலில் மாந்திரிகத்தையே திருமூலர் பாடியிருப்பதைக் காணலாம்.

ஆற்றல் வாய்ந்த அரிய பாடல்களால் திருமூலர் மருத்துவத்தைப் பற்றிப் பாடிய பாடல்கள் இந்த நூலில் அடங்கியிருப்பதால் இது உயிருக்கு உயிராக வைத்துக் காப்பாற்ற வேண்டிய கருவூலம் எனலாம். தமிழன் இத்தகைய அரிய நூல்களின் பெருமையை மறந்து, தான் மனிதன் என்பதையே மறந்துவிட்ட காரணத்தால் தான் இன்று இத்தகைய அவல நிலைக்கு ஆளாகிக்கிடக்கிறான்.

அறம் உணர்ந்த, ஆற்றல்மிக்க, நெறியும் நேர்மையும் கொண்டு ஒழுகும் ஒரு மனித சமுதாயத்தை உருவாக்கும் அறிவுச் சுடர் தமிழகத்தில் மட்டும் தான் தூண்டா விளக்காக இன்னும் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது. இந்த விளக்கு மேலும் மேலும் பிரகாச மடையும் என்பதில் ஐயமில்லை.

உலகத்திற்கே வழிகாட்டக் கூடிய அறிவும் ஆற்றலும் தகுதியும் தமிழனுக்கு உளது என்பதைப்பறை சாற்றும் நூல் திருமூலர் திருமந்திரம். தமிழன் இதன் பெருமையை உணர்ந்து செயல்படும் காலம் வந்தால் உலகிற்கே உய்வுண்டாம் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

❖❖❖❖❖

உ
சிவமயம்

திருமூல நாயனார் திருவாய் மலர்ந்தருளிய

கருக்கிடை வயித்தியம் - 600

காப்பு

கர்ப்ப உற்பத்தி - விநாயகர் துதி

அந்தி நிறத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே.

சாம்பல் போல் நிறங் கொண்டவரும், யானை முகத்தை உடையவரும், உதயச் சந்திரனைப் போல் பிரகாசிப்பவரும், நந்தி ரூபமாய் இருக்கும் சிவபெருமானின் புத்திரரும், ஞானச் சொரூபமாய் இருப்பவருமான கணபதியை என் புத்தியில் வைத்து போற்றி வணங்குகிறேன்!

தேவி துதி

தாதாவைப் போலத் தயவு கொடுப்பவள்
வேதா கமத்தின் மெய்ஞ்ஞான மெய்ப் பொருள்
ஆதார சத்தி அரிய மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேன் என் சென்னியில். (1)

பெற்ற அன்னையைப் போல் ஈவிரக்கம் கொண்டவளும், வேதத்தின் ஆகமத்தால் விளக்கப்படும் மெய்ப் பொருளும், அனைத்திற்கும் ஆதாரமாய் நிற்கும் மனோன்மணியுமான தாயாரின் திருவடியில் என் சிரசை வைத்து வணங்குகிறேன்.

தற் சிறப்புப் பாயிரம்

சென்னியில் வைத்தே திருநந்தித் தாளிணை
மன்னிய காயம் வந்த வகைதனை
கன்னி வகுத்த கருப்பத் திரு மந்திரம்
உன்னி வுரைத்தேன் அறுநூற்றி இருபதே. (2)

தாயை வணங்கியது போல் நந்தியின் பாதத்திலும் சிரம் வைத்து வணங்கி உடல் தோன்றும் விதத்தையும், கரு உற்பத்தியின் வகைகளையும், வளரும் விதத்தையும் இந்த "அறுநூற்றிருபது" என்ற நூலில் சொல்லப் போகிறேன்.

உடலுற் றுறவாறும் உயிருற் றுறவாறும்
மடையற்ற ஒன்பது வாசலின் தன்வாறும்
திடமுற்ற தத்துவ சீவ புலன்களும்
கடலுற்ற நீர்போல் கண் கருவிதே. (3)

ஒன்பது வாயில்களைக் கொண்ட இவ்வுடலும், இவ்வுடலில் உள்ள தத்துவங்களுடன் சேர்ந்த உயிரும். கடலில் இட்ட நீரைப் போல் ஒன்றையொன்று பற்றி நிற்கிறது. இது ஆன்றோர்களால் அறியப்பட்ட நீதியாகும். (பிறப்பையும், இறப்பையும் வென்றவர்களே ஆன்றோர்கள்.)

கருவை ஒழிந்தவர் கண்டநன் மூவேழும்
புருஷன் உடலிற் பொழிந்தது மற்றொன்றும்
தெரிவைக் கருக்குழி தேயுவுட் புகுந்து
உருவம் இரண்டாம் ஓடி விழுந்ததே. (4)

பிறவாப் பெருநெறி பற்றிய திருவடியுணர்வு கை வந்த சிவனடியார் கருவை ஒழித்தவராவர். அவர்கள் பருவுடலுக்கெனக் கண்டறிந்த இருபத்தைந்து பொருள்களும் உண்மையை உணராதவரைப் பொருந்தும். இவர்களுக்கு மற்றோர் எனப்பெயர்.

ஒரு ஆண் மகன் தன்னுடைய மனைவியுடன் சேரும் பொழுது ஆண் மகனின் சுக்கிலம் - பெண்ணின் கருக்குழியில் உள்ள நாதத்துடன் கலந்து ஆண் - பெண் எனப்பேதங் கொண்டு வளர்ந்தது.

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்தது முதலைந்து உயிரோடே ஏறி
தெழிந்தது அப்பு தேற்றுங் குணமும்
பொழிந்து புகுந்தது புணர்கின்ற போதே. (5)

போகின்றது எட்டும் புகுகின்ற பத்தேட்டும்
ஆகின்ற முற்றினும் ஒன்பது வாசலும்
நாகனும் எட்டும் நான்கிரவி மதியும்
பாகன் விடாவிடிற் படர்ந்து அனலாமே. (6)

கணவன் மனைவி இருவரும் புத்திரனை விரும்பி கூடி நிற்கும் பொழுது ஆணின் பருவுடம்பிலுள்ள லிங்கத்தின் மூலமாக உயிர் நீரான சுக்கிலம் பாய்ந்து

விழும். அப்பொழுது அதை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு கருவழியாகிய யோனி விரிந்து கொடுக்கும். அச்சமயம் சுக்கிலமும் நாதமுடன் ஒன்றுடன் ஒன்று கலப்புற்று நிற்கும். கலந்து நிற்கும் இந்நாத விந்துடன் நீர் முதலான பஞ்ச பூதங்களும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற சூக்ஷ்ம பூதங்களுடனும் கூடி ஒன்பது வாசல் கொண்ட தேகமாகவளர ஆரம்பித்து - வளரும் பொழுது தத்துவங்களும், தசவாயுக்களும் கூடி இடை பிங்கலை, சுழிமுனை போன்ற நாடிகளும் ஆதாரஸ்தானங்களும் தோன்றி முழு உடம்பாக முற்றி வளர்ந்தது.

ஏற எதிர்க்கில் இனலயன் தானாகுந்
நேரொக்க வாகில் நிகர்போதந் தானாகும்
மாற எதிர்க்கில் மறையவன் தானாகும்
போரொத்த மைந்தனும் பேரரசு ஆளுமே. (7)

பக்தி மார்க்கத்திலுள்ளவர்களும், இறைவனை என்றும் மறவாது நிற்பவர்களுமான அடியார்கள், தங்கள் மனைவியருடன் கூடும்பொழுது அவர்களுடைய விந்தானது சுழிமுனை நாடியிலுள்ள நாத ஒளியின் மேல் மோதிக் கொண்டு எதிர்த்துச் செல்லும். அப்படி நாத ஒளியின் மேல் மிக வேகமாக மோதி எதிர்த்துச் சென்ற விந்துவால் பிறக்கும் குழந்தை சிவ அடியாராய்த் தோன்றும் விந்தானது மிக வேகமாக மோதாமல் அமைதியாக எதிர்த்தால் செயற்கரிய சாதனைகளை செய்யும் குழந்தையாய்த் தோன்றும்.

அதே போல் விந்தானது நாத ஒளியை எதிர்க்காமல் அதைத் தொட்டுக் கொண்டு சமவேகத்தில் சென்றால் பிறக்கும் குழந்தை தன்னிகரில்லாத அறிவு படைத்ததாய் விளங்கும். மேற்கூறிய முறையில் பிறந்த எக்குழந்தையும் மெய்யுணர்வுடன் அரசாளும் தன்மையைப் பெற்றிருக்கும்.

ஆண்மிகில் ஆணாம் பெண்மிகில் பெண்ணாம்
பூணும் இரண்டொன்றிப் பொருந்தில் அலியாகும்
தாண்மிக வாயில் தரணி முழுதாளும்
பாண்மை மிகுந்திடில் பாய்ந்ததும் இல்லையே. (8)

கணவனும் மனைவியும் புத்திரனை வேண்டிக் கூடி நிற்கையில் கணவனுடைய சுவாஸம் வலப்பக்கமாக நடந்தால் ஆண் குழந்தை பிறக்கும். அதே போல் இடப்பக்கமாக சுவாசம் நடந்தால் பெண் குழந்தை பிறக்கும். இவ்வாறில்லாமல் இரண்டு பக்க மூக்கின் வழியாக சுவாசம் நடந்தால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

மேலும் அச்சமயம் புத்தியானது திடமாகவும் ஆன்மீகச் சிந்தனையுள்ளதாகவும் இருந்தால் பிறக்கும் குழந்தை இப்புவி முழுவதையும் ஆளும். மேற் கூறிய முறையில் கூடும் பொழுது கணவன் வீர்யஸ்தம்பன பயிற்சியில் மேன்மையுள்ளவனாக இருந்தால் விந்தும் சிதறாது குழந்தையும் பிறக்காது.

(குறிப்பு :- ஆணிற்கு வலப்பக்கமாக சுவாசம், நடக்கும் பொழுது பெண்ணிற்கு இடப்புறமும் ஆணிற்கு இடப்பக்கமாக சுவாஸம் நடக்கும் பொழுது பெண்ணிற்கு வலப்புறமாகவும் சுவாசம் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆண், பெண் குழந்தைகள் பிறக்கும். இவ்வாறின்றி இருவருடைய சுவாசமும் ஒரே பக்கத்தில் நடந்தால் குழந்தை அலியாகப் பிறக்கும்.)

வயதுண்டாங் காரணம்

பாய்ந்து முன்னைந்தோடிற் பார் ஆயுளு நூறாம்
பாய்ந்து பின்னைந்தோடிற் பார் வயது ஐம்பதாம்
பாய்ந்திடும் வாயு பகுத்தறிந்து இவ் வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. (9)

கணவனும் மனைவியும் கூடும் பொழுது அன்றைய வாரசரம் முறைப்படி ஐம்பூதங்களிலும் பறந்து ஓடினால் பிறக்கும் குழந்தை நூறு வயது கொண்டதாயிருக்கும். இதே போல் தந்தையின் உயிர்ப்பு கூடிய பின் ஐந்து பூதங்களிலும் பரந்து ஓடினால் பிறக்கும் குழந்தை ஐம்பது வயது கொண்டதாயிருக்கும். இதே போல் உள்வெளியோடும் மூச்சை பகுத்தறிந்து ஆயுளைக் கண்டு கொள். மேலும் யோக முறையில் கூடுபவர்கள் தங்களுடைய உயிர்ப்பினையை அறிந்து வேண்டியவாறு மாற்றியமைத்துக் கொள்வர்கள்.

அங்க ஈனம்

பாய்கின்ற வாயு குறுகில் குறளனாம்
பாய்கின்ற வாயு வளையின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படில் கூனாகும்
பாய்கின்ற வாயு மாதாவுக்கு இலை பார்க்கிலே. (10)

ஆண் - பெண்ணிருவரும் கூடும் பொழுது சரவோட்டஞ் செல்கின்ற உயிர்க்காற்றானது அளவிற் குறைந்தால் பிறக்கும் குழந்தை குறுகிய வடிவமாக இருக்கும். அதேபோல் மூச்சுக்காற்றானது இளைத்தவன் மூச்சைப் போல் வெளிப் போந்தால் பிறக்கும் குழந்தை முடமாயிருக்கும். அதே போல் மூச்சானது மேற் கூறியதைப் போலில்லாமல் நடுவு நிலையாக இருந்தால் பிறக்கும் குழந்தை கூனுள்ளதாயிருக்கும். இம்மூச்சு பார்க்கும் விதம் ஆண்களுக்கே அன்றிப் பெண்களுக்கில்லை.

மந்தன் ஊமை குருடன்

மாதா வுதரம் மலமிகில் மந்தனாம்
மாதா வுதரம் சலமிகில் ஊமையாம்
மாதா வுதரத்தில் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா வுதரத்தில் வந்த குழவிக்கே. (11)

தாயும் தந்தையும் கூடும் பொழுது தாயாரின் வயிற்றில் மலம் துப்புரவாக கழியாமல் வயிற்றில் தங்கியிருந்தால் பிறக்கும் குழந்தை மந்தமாக இருக்கும். இதே போல் சலமான சிறுநீர் துப்புரவாக கழியாமல் வயிற்றில் தங்கியிருந்தால் பிறக்கும் குழந்தை ஊமையாயிருக்கும். இரண்டு வகையான அசுத்தங்களும் சம அளவில் இருந்தால் பிறக்கும் குழந்தை குருடாக இருக்கும். மேற் கூறியவையாவும் தாயின் வயிற்றில் தோன்றும் சேய்க்கே என்றறிந்து கொள்.

ஆண் பெண் அலி இரட்டைப் பேறு

குழவியும் ஆணாம் வலத்தாது ஆகில்
குழவியும் பெண்ணாம் இடத்தாது ஆகில்
குழவியும் இரண்டாம் அபான னெதுக்கில்
குழவியும் அலியாம் கொண்ட காலொக்கிலே. (12)

கணவன் மனைவி இருவரும் மருவுங் காலத்தில் வலது மூக்கின் வழியாக உயிர்ப்பு வந்து கொண்டிருந்தால் பிறக்கும் குழந்தை ஆணாயிருக்கும். இதே போல் உயிர்ப்பு இடது புறமாக வந்து கொண்டிருந்தால் பெண் குழந்தை பிறக்கும். இவ்வுயிர்ப்புக்கு அபானன் எதிர்பட்டு வந்தால் பிறக்கும் குழந்தை இரட்டைகளாய் இருக்கும். இரு மூக்கின் வழியாகவும் சுவாசம் நடந்தால் பிறக்கும் குழந்தை அலியாக இருக்கும்.

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒண்டிடில்
கொண்ட குழவியும் கோமள மாய்விடும்
கொண்ட இவ்வாயு குறிப்பறிந்து இவ்வகை
கொண்டதும் இல்லை கோலம் உன்னாதே. (13)

மருவிப் புணரும் காதலர் இருவருக்கும் வருகின்ற உயிர்ப்பாகிய மூச்சு காற்று ஒரே அளவாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு ஒரே அளவாய் சுவாசம் நடந்தால் பிறக்குங் குழந்தை அழகும் வனப்பும் கொண்டதாயிருக்கும். அவ்வாறின்றி மூச்சானது குழன்றுப் போனால் பாரியாளின் வயிற்றில் கருத்தங்காது.

பஞ்சபூத பிண்ட உற்பத்தி

உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதுவி
வன்னியும் வாயுவும் ஆயுறுஞ் சுக்கிலம்
மன்னிச் சமனாய் வளர்க்கும் உதகமே. (14)

உதகம் உதிரம் உறுங்கனல் வாயுவால்
சிதகுறும் அங்கங்கள் செய்து முடித்திடும்
பதகுறும் உரோமம் பகர்தசை அஸ்தியின்
நிதகுறும் ஒன்பது வாசலும் நீங்குமே. (15)

பெண்ணின் கருப்பையில் அவளுடைய நாதத்துடன் அக்னி, வாயு போன்ற பூதங்களுடன் கூடிய சுக்கிலமானது கலந்து நிற்கும். இக்கலப்பு விகிதமானது சரி அளவிலிருக்கும் கலந்த இந்த நாத விந்தைச் சுற்றி உதகம் என்ற நீரானது சூழ்ந்து கொண்டு குழந்தையை வளர்க்கும். உதகம், உதிரம், (இரத்தம்) அக்னி, வாயு போன்றவைகள் ஒன்றாகக் கூடி நின்று அங்கங்கள், ரோமம், தசை, அஸ்தி போன்றவைகளை உண்டாக்கி ஒன்பது வாசல் கொண்ட தேகமாக வளரச் செய்யும்.

நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாம் வாயுவும்
வாங்கிட வாங்கிட வன்னி தலைக் கொளும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகும் திங்களே. (16)

பிறக்கும் போதே நோயும் பிறந்தது

திங்கள் பத்தாகில் தேய்வொடு வாயு சேர்ந்து
அங்கி மலர்த்தி அமளியாக் கீழ் நோக்கி
பொங்கிப் பிறந்த நாள் புகழ்வார் வெறுவீணர்
தங்கிச் செனிக்கையில் தாள்நோயும் உற்றதே. (17)

நாளாக நாளாகக் கருப்பையினுள் உள்ள குழந்தையானது வாயுவில் உள்ள பிராண சக்தியை இழுத்துக் கொண்டு திடமானதாய் வளரும். திடங் கொண்டு வளரும் சமயத்தில் அக்கினியானது குழந்தையின் சிரசைத் தாக்கும். இத்தாக்குதலானது பத்தாவது மாதத்தில் அதிகமாகி இவ்வக்கினியானது அங்கு அடைபட்டுள்ள வாயுவுடன் கூடி குழந்தையை கீழ் நோக்கித் தள்ளும். கீழ்நோக்கித் தள்ளும் இநநாளை மக்கள் பிறந்த நாளாக கொண்டாடுவர். இதே நாளில் குழந்தையுடன் சேர்ந்து நோயும் பிறந்தது. (இதை வீணர்கள் அறியவதில்லை.)

மூல நாடி - 17000 - தசநாடி

உற்ற விபரம் உறுதியாம் என்நந்தி
பற்றிய மூலம் பகர்ந்திடும் நாடிதான்
எற்றியே எண்ணிடில் எழுபத்து ஈராயிரம்
மற்றதில் பத்து வளமான நாடியே. (18)

தச நாடியில் - தச வாயுவும் - திரிநாடியும் ஆறுசங்கரம் - மூன்று மண்டலம்

வளமான பத்தில் வழங்குந் தசவாயு
உளமான இடைபின் சுழியென மூன்றுண்டு
களமான சக்கரம் காட்டியது ஆறுண்டு
தளமான மண்டலந் தான் மூன்றும் பாருமே. (19)

நந்தி வசிக்கும் மூலாதாரத்திலிருந்து எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் கிளம்பி உடல் முழுவதும் வியாபித்து நிற்கின்றன. இவற்றில் மிகமுக்கியமானவை பத்து நாடிகளாகும். (இடை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அஸ்தி, அலம்புடை, சங்கினி, குரு.) இப்பத்து நாடிகளில் தசவாயுக்கள் சேர்ந்து நிற்கும். மேற் கூறிய தசநாடிகளில் மிக முக்கியமானவை இடை, பிங்கலை, சுழிமுனை எனப்பட்ட மூன்று நாடிகளாகும். இம்மூன்று நாடிகளின் வழியாகத்தான் ஆறாதாரச் சக்கரங்களும், மூன்றுமண்டலங்களும், பரவி நிற்கின்றன. (ஆறாதாரங்களும் மூன்று மண்டலங்களும் இம்மூன்று நாடிகள் செல்லும் வழியில் இருக்கின்றன.)

பாரும் இடைகலை பின்கலை மாறியே
தாரும் பெருவிரல் காலொடு தானேறி
காரும் கழுத்தில் கபாலம் வரைநின்று
வாரும் இடமாய் வலக்கரம் சாருமே. (20)

வலக்கரம் தன்னில் வளமான பின்கலை
நிலைந்த இடக்கரம் நின்றது இடைகலை
துலக்க நடுமையஞ் சுழிமுனை ஓடிடும்
பிலக்க இவை மூன்றால் பிறந்தது தாதுவே. (21)

இடக்கலையானது வலது கால் பெருவிரலிலிருந்து மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்துக்கு இடப்பக்கமாய் ஓடி கத்தரிக்கோலைப் போல் மாறி கபாலத்தின் இடது பக்கமாய் நிற்கும். இதே போல் பிங்கலை என்ற நாடியானது இடது கால் பெருவிரலிலிருந்து மேலெழும்பி மூலாதாரத்தின் வழியாய் இருதயத்துக்கு வலப்பக்கமாய் ஓடி கத்தரிக்கோலைப் போல் மாறி கபாலத்தின் வலது பக்கமாய் நிற்கும். மேற்கூறிய இடநாடியானது இடது கையிலும், பிங்கலை நாடியானது வலது கையிலும் நிற்கும். இவற்றுக்கு மத்தியான சுழிமுனை நாடியானது முதுகெலும்புத் தண்டுவடத்தின் வழியாக மூலாதாரத்திலிருந்து கபால உச்சி வரை பாய்ந்து நிற்கும். இம்மூன்று வகையான நாடிகளில் மூன்று வகையான தாதுகள் உண்டாயின.

மூவகை நாடியின் மூவகை தாது

தாது முறையே தனிஇடை வாதமாம்
போதுறு பின்கலை புகன்றது பித்தமாம்
மாது சுழிமுனை வழங்கிடும் ஐயமாம்
ஓது முறை பார்த்து உணர்ந்தவர் சித்தரே. (22)

தாதுக்கள் நிற்கும் முறையைக் கூறுகிறேன் கேள்! இடை நாடியானது வாதம் என்ற தாதுவிற்கும், பிங்கலை என்பது பித்தம் என்ற தாதுவிற்கும். சுழிமுனையானது ஐயம் எனப்படும் கபத் தாது விற்கும் பிறப்பிடமாக அமைகிறது. இதை முறையாக அறிந்தவர்கள் சித்தராவர்.

மூவகை வாயு நாடி

உணர்ந்த அபானன் உறும் அந்த வாதத்தில்
புணர்ந்த பிராணன் புகும் அந்தப் பித்தத்தில்
அணைந்த சமானன் அடங்கும் கபத்தொடு
இணைந்திவை மூன்றுக்கு எடுத்தகுறி ஒன்றே. (23)

அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும், சமானன் கபத்திலும் அடங்கி நிற்கும். இவை மூன்றும் ஒரே இடத்தில் இணைந்து நின்று தேகத்திலுள்ள தோஷங்களை வெளியாகக் காட்டும்.

மூவகை நாடியும் அறியும் விபரம்

குறியாம் வலக்கரம் குவிந்த பெருவிரல்
மறிவாய் அதன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறிவாய் மேலேறிப் பிலத்தது வாதமாம்
அறிவாய் நடுவிரல் அமர்ந்தது பித்தமே. (24)

பித்தத்தின் கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப் பார்க்க ஓர் நரம்பே ஓடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே. (25)

அதாவது வியாதியஸ்தரின் வலக்கையிலுள்ள கட்டை விரலின் கீழே உன்னுடைய வலக்கையிலுள்ள ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் போன்றவைகளை வைத்து நன்றாக அழுத்திப்பார். அச்சமயம் ஆள்காட்டி விரலின் கீழே இருப்பது வாதம் என்றும் நடுவிரலின் கீழே இருப்பது பித்தமென்றும், மோதிர விரலின் கீழே இருப்பது சிலேத்துமமென்றும் அறிந்து கொள். இவையாவும் ஒரே நரம்பில் அறிந்து கொள்ளலாம் இம்மூன்று வகையான தோஷமும் எவ்வாறு பாயும் என்றால் ஒரு நாகத்தைப் போல் துள்ளிக் குதிக்கும். இதற்கு (இந்நரம்பிற்கு) நாளம் என்று பெயர்.

மூவகை நாடியும் அறியும் மாத்திரை

வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகில்
வழங்கிய பித்தம் தன்னில் அரைவாசி
அழங்கும் கபந்தான் அடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்குப் பிசகொன்றும் இல்லையே. (26)

ஒருவருடைய நாடியானது வாதம் ஒரு மாத்திரையளவும் பித்தம் அரை மாத்திரையளவும். சிலேத்துமம் கால் மாத்திரையளவும் குதித்து ஓடினால் தேகத்தில் ஒரு வியாதியும் பரவுவதற்கு வழியில்லை, பிணியுமில்லை.

மூவகை நாடி நடப்பு

இல்லையே வாதம் எழில்நடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புத் தவளைபோல்
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் பாம்பு போல்
அல்லையே கண்டு அறிந்தவர் சித்தரே. (27)

வாதமானது கோழியின் நடையைப் போலும், பித்தமானது துள்ளிக்குதிக்கும் தவளையைப்போன்றும், சிலேத்துமமானது பாம்பு போன்றும் நடைபெறும். இவ்வாறு நாடியின் முறையை யார் அறிந்து கொள்கிறாரோ அவரே சித்தர் எனப்படுவர்.

வாதம் பித்தம் சிலேட்டுமம் இருப்பிடம்

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேராஞ் சலத்தினில்
மறிந்திடும் ஐயம் வசிக்கும் விந்துவில்
உறைந்திடும் இம்மூன்றுக்கு உறவாம் தலமிதே. (28)

வாதம் எனப்படும் தோஷம் மலத்திலும், பித்தம் எனப்படும் தோஷம் சிறுநீரிலும், சிலேத்துமம் எனப்படும் தோஷம் விந்துவிலும் அடங்கி நிற்கும். இதுவே மூன்று வகையான தோஷங்கள் அடங்கும் இடமாகும்.

வாத பித்த கப வர்ணம்

உறவாங் கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவான பச்சை பகமை கொடும் பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றது நன்ஐயம்
அறைவான வர்ணம் ஆகுந் தலமதே. (29)

வாதமானது கறுப்பு நிறமும், சிவப்பு நிறமும் கொண்டதாயிருக்கும் பித்தமானது வெளிர்ப்பச்சையாகவும், கரும்பச்சையாகவுமிருக்கும். சிலேத்துமமானத வெண் நிறங் கொண்டதாயிருக்கும். இவ்வர்ணங்கள் யாவும் அந்தந்த தோஷங்களின் ஸ்தானத்தில் புகுந்து நிற்கும்.

தேக பஞ்ச பூதம்

தலங்காட்டி இந்தச் சடமான ஐம்பூதம்
நிலங்காட்டி நீர் காட்டி நின்றிடுந் தீ காட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே இருந்தது
குலங்காட்டி வானில் குடியாய் இருந்ததே. (30)

இருந்த இவ்வைந்தால் எடுத்து சடமிது
பிரிந்திடும் மாமிசம் பிருதுவின் மயமாகும்
சொரிந்திடும் இரதநீர் சொற்குறி அப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்பமே. (31)

வெதுப்பத் துடனே விடுபட்டு நாசியில்
எதுப்புற்று நிற்கும் இதுகாணும் வாயுவாம்
கதுப்பொத்து எல்லாங் கபளித்து இடமிட்டு
மதுப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே. (32)

இத்தேகமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதத்தால் வளர்ந்து நின்றது.

இத்தேகத்திலுள்ள மாமிசமானது நிலத்தின் கூறாகவும், இரத்தம், நீர், பால், குறி போன்றவைகள் நீரின் கூறாகவும், தேகத்திலுள்ள உஷ்ணம் தீயின் அம்சமாகவும், நாசிவழியில் ஓடும் மூச்சுக் காற்றானது வாயுவின் கூறாகவும், காது மற்றும் கேட்கும் சக்தி போன்றவைகள் ஆகாசத்தின் கூறாகவும் நிற்கும்.

வளப்பங்கேள் பூமி வாசிக்கும் நாசியில்
தளப்பமாம் வன்னி தான் உறுங் கண்ணினில்
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவினில்
பலப்பல வாயு பரிசிக்கும் எங்குமே. (33)

எங்கிய காதில் இருந்துறும் ஆகாசம்
பொங்கிய தைந்துக்குள் பொல்லாதது இம் மூன்றுதான்
தங்கிய வாயு சமத்தன் மகாவாதம்
பங்கிய வன்னியால் பகுந்தது பித்தமே. (34)

பகுந்த சலத்தில் பரிசிக்கும் நல்லையம்
வகுந்த இம்மூன்றால் வளர்ந்தது நோயெலாம்
அகுந்தது தானறிந்து அளவிட்ட யோகிகள்
மகிழ்ந்தே யிதில் நின்ற மயக்கம் அறிவரே. (35)

நிலம் எனப்படும் பூதமானது நாசியிலும், தீ எனப்படும் பூதம் கண்ணிலும், நீர் எனப்படும் பூதம் நாவிலும், ஆகாசம் எனப்படும் பூதம் காதிலும், வாயு என்ற பூதம் தேகம் முழுவதும் அடங்கி நிற்கும்.

மேற்கூறிய பஞ்ச பூதங்களில் தீ, காற்று, நீர் போன்ற மூன்று வகையான பூதங்கள் மிகவும் பொல்லாததாகும். ஏனெனில் வாயு என்ற பூதத்தால் வாத

நோய்களும், தீ என்ற பூதத்தால் பித்த நோய்களும், நீர் எனப்படும் பூதத்தால் சிலேத்தும நோய்களும் தோன்றுவதற்கு காரணமாய் அமைகின்றன.

ஆகவே இதனுடைய கலப்பு முறைகளை யோகிகளான சித்தர்கள் ஆராய்ந்து அளவிட்டுள்ளார்கள். இவ்வளவு முறைகளையும் தோஷக் குறிகளையும் முறையாக அறிந்து கொண்டு மனதிலுள்ள மயக்கத்தையும் உடலிலுள்ள தோஷங்களையும் அகற்றிக் கொள்ளுங்கள்.

வாதக் குணம் நோதல்

அறியதிம் மூன்றினது ஆண்மை சொன்னார் நந்தி
எறிய நல்வாதம் எறிக்கும் குணங்கேளு
குறியெனக் கைகால் குளைச்சு விலாச் சந்து
பறியென நொந்துடல் பச்சைப்புண் ஆகுமே. (36)

புண்ணாய் வலிக்கும் பொருமுங் குடலோடி
தண்ணா மலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணான ஆசனம் உறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம் பகுத்திடும் வாதமே. (37)

மூன்று வகையான தோஷத்தின் குணங்களைப்பற்றி நந்தியானவர் எனக்குச் சொன்னார். அதில் முதன்மையான வாதத்தின் குணங்களைச் சொல்கிறேன் கேள்.

கை, கால், விலாப்புறம் போன்ற இடங்கள் நொந்து குடைச்சலும், புண்ணும் உண்டாகி தேகம் முழுவதும் வலியுண்டாகும். மேலும், குடலும் புண்ணாகி வலிக்கும். மலமானது கழியாமல் வயிற்றினுள் தம்பித்து நிற்கும். ஆசனவாய் உட்புறமாய் சுருங்கி விடும். இது மட்டுமின்றி உடலை குளிரவைத்து சீதத்தை வெளிப்படுத்தும்.

பித்தக் குணம் கைத்தல்

பகுத்திடில் பித்தம் பலபல சிந்தையாம்
வகுத்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
மகுத்திடும் மேனியில் மாட்டி எரிப்பேறும்
மிகுத்து தவனிக்கும் மிக விடாய்க்குமே. (38)

பித்தமானது பல விதமான சிந்தனைகள், வாந்தி அதிக வாய்நீர், உடலெரிச்சல், தேகத்தில் அதிக உஷ்ணம், உடல் நடுக்கம் போன்றவைகளை உண்டாக்கும். அதுமட்டுமன்றி வாயில் கசப்புச் சுவையை தோற்றுவிக்கும்.

ஐயக் குணம் காய்தல்

விடங்கிய ஐயம் மேல் இரைப்பு ஏற்றிடுந்
தடங்கி இறுமிடும் தனிவிலா இரண்டும் நோம்
அடங்கிச் சுரங்காயும் அளவற்ற கோழைநீர்
இடங்கி உடல்வற்றி இரத்தமும் கக்குமே. (39)

கக்கிய மூவர் களிற்பெலன் கேளு
ஒக்கிய வாயு உடல் கூடிடில் பெலன்
தக்கிய வாயு சகலத்துக்கு ஆதாரம்
சிக்கிய நோயைச் சிறக்க விளக்குமே. (40)

தேகம் இளைத்தல், இருமல், இரண்டு பக்க விலாப்புறவலி, வறட்டு சுரம், சளி, (கோழை), உடல்வற்றிப் போகுதல். இரத்தங் கக்குதல் போன்றவை யாவும் சிலேத்துமத்தின் குணங்களாகும். இம்மூன்று வகையான தோஷங்களும் ஒன்றுடன் ஒன்று கூடுவதால் ஏற்படும் பலனைக் கூறுகிறேன் கேள். வாயுவானது மற்ற இரு தோஷங்களுடன் கூடினால் சகலவிதமான நோய்களையும் வளர்க்கும். ஏனெனில் வாயுவே சகலத்திற்கும் ஆதாரமாகும்.

தாபச் சுரமும் சீதச் சுரமும்

விளக்கிய வன்னியும் வாயுவும் மேற்கொண்டால்
தளக்கிய தாபச் சுரங்காணும் தோஷமாம்
வளக்கிய அப்புவும் வன்னியும் மேற்கொண்டால்
இளக்கிய சீதச் சுரங்காண் இதன்பேரே. (41)

வாயு என்ற பூதத்துடன் வன்னி (தீ) என்ற பூதம் சேர்ந்தால் தாபச்சுரம் உண்டாகும். அப்பு என்ற (நீர்) பூதத்துடன் வன்னி என்ற பூதங் கூடினால் சிதச்சுரம் உண்டாகும்.

தோஷ நிறக்குறி

பேரான தோஷம் பிறக்கும் முறை கேளு
வாரான வாதமும் வன்னி கருந்தோஷமாம்
தாரான பித்தமும் தழலூடில் வெண்மையாம்
சேரான ஐயமும் சிவப்பேறும் வாய்விலே. (42)

தோஷம் பிறக்கின்ற முறையும் அதன் நிறக்குறிகளும் கூறுகிறேன் கேள்! திரிதோஷங்கள் அளவுக்கு மீறி நடப்பதாலும், ஒன்றுடன் ஒன்று கலப்பதாலும்

வியாதிகள் தோன்றுகின்றன. வாதத்துடன் தீ என்ற பூதம் கலந்தால் கருந்தோஷம் ஏற்படும். இக்கருந்தோஷம் கொண்டவர்களின் நாவானது வெண்மை நிறங் கொள்ளும், சிலேத்துமத்துடன் வாயு என்ற பூதம் கூடினால் நாவானது சிவந்த நிறங் கொள்ளும். (ஆகவே இந்நிறங்களை கொண்டு தோஷத்தின் தன்மையை அறியலாம்.)

வாயு அடங்கினால் வளமான தோஷம்போம்
வாயு எழும்பினால் மண்ணும் நீர் ஒன்றாகும்
வாயுவும் நீரால் வழங்கிய வன்னிசாம்
வாயுவும் ஆகாசம் மண்டல ஓசையே. (43)

வாயுவானது உடலில் சரியான அளவு கலந்து நின்றால் சகலவிதமான தோஷங்களும் விலகும். வாயு என்ற பூதமானது மண்ணையும், நீரையும் ஒன்றாகக் கலக்கச் செய்யும். வாயுவும் நீரும் கலந்தால் தீ என்ற பூதம் அடங்கி நிற்கும். அனைத்தையும் அடக்கும் வாயுவானது சப்தம் என்ற குணங் கொண்ட ஆகாசத்தில் அடங்கி நிற்கும்.

ஓசையில் ஏழும் ஒளியினில் ஓரைந்தும்
நாசியில் மூன்றும் நாவினில் இரண்டும்
தேசியும் தேசனும் சேர்ந்து பிரிந்திடம்
மாசிலா நந்தி மகிழ்ந்து வுரைத்தாரே. (44)

தச நாடிகளில் இயங்கும் நம் உடலில் செவியில் ஏழுவிதமான நாடிகளும் கண்களில் ஐந்து விதமான நாடிகளும் மூக்கில் (நாசியில்) மூன்று விதமான நாடிகளும் (அதாவது இடை பிங்களை-சுழிமுனை என்ற நாடிகளும்) நாவில் இரண்டு விதமான நாடிகளும் புகுந்து நின்றும் பிரிந்தும் செயல் படுகின்றன. இதை நந்தி பகவான் எனக்கு கூறியிருக்கிறார்.

ஓராண்டிலும் ஈராண்டிலும் சாகும் குறி

உரைத்து நாசி உறுதிக் குறிகேள்
விரைத்திடப் பிங்கலை விட்ர்தோடில் மூன்று நாள்
இரைத்தசடம் ஆண்டில் எய்திடும் ஆகாசம்
பரத்தில் இரண்டு நாள் பாயிலிரண்டு ஆண்டெண்ணே. (45)

நாசி வழியாக ஓடும் மூச்சின் மகிமையைக் கொண்டு மரணம் ஏற்படும் காலத்தை அறியும் விதத்தைக் கூறுகிறேன் கேள். பிங்களை எனப்படும் சூரிய நாடியானது மூன்று நாட்கள் தொடர்ந்து ஓடினால் ஒரு வருடத்தில் மரணம் சம்பவிக்கும். (அதாவது மூன்று நாட்கள் தொடர்ந்து வலது நாசியில் மூச்சு ஓடினால் ஒரு வருடத்தில் மரணமுண்டாகும்). அதே போல் இரண்டு நாள் விடாதோடினால் இரண்டு ஆண்டுகளில் மரணம் சம்பவிக்கும்.

மூவாண்டிலும் ஆறு திங்களிலும் சாகும் குறி

எண்ணி யிருநாள் இயங்கிடில் பின்கலை
தண்ணிய மூவாண்டில் தப்பாது மாரணம்
ஒண்ணியு பயத்தில் ஓட்டிடில் பத்துநாள்
மண்ணில் மதியாறில் மரிப்பான் குறியாதே. (46)

ஒரு நாள் முழுவதும் வலது நாசியில் மூச்சு ஓடினால் தப்பாமல் மூன்றாண்டில் மரணம் சம்பவிக்கும். இதே போல் பத்து நாட்கள் தொடர்ந்து மூச்சானது வலது நாசியில் நடந்தால் ஆறு மாதத்தில் மரணம் உண்டாகும்.

நாள் மூன்றிலும், பதினைந்திலும் சாகும் குறி - வேறு

குறிகேளு மூக்கன்றி குலவியவாய் வழியோடில்
மறிகேளு மூன்றா நாள் மரித்திடுவன தப்பாது
தெறிகேளு மும்மலமும் திரண்டுமிகக் குறைந்துவரில்
பரிவாடும் பட்சமதில் பார்உயிர்தான் தப்பாதே. (47)

மூக்கின் வழியாக மூச்சோடாமல் வாயின் வழியாக மூச்சோடுமாயின் மூன்று நாட்களில் மர்ணம் சம்பவிக்கும். மூன்று நாட்களில் மரணம் சம்பவிக்கும். மூன்று விதமான மலங்கள் (அழுக்குகள்) குறைவாக வெளிப்படுமாயின் பதினைந்து நாட்களில் மரணம் சம்பவிக்கும்.

திங்களிலும் உடனேயும் சாகும் குறி

தப்பாது வாய்நீர்தான் தாக்கில்தன் மேல்விழிலே
ஒப்பாகத் தனுமறைய ஒழிந்திடுவன் மதியாறில்
செப்பாகத் தானிருக்க சேர்ந்தநிழல் ஐந்திடினும்
அப்பா கேள் சாவு நிசம் அறிந்து கற்பங் கொண்டிடே. (48)

வாய் நீரானது அதிகமாக வழிந்து நிற்காமல் மேலே விழுந்தால் அவ்வியாதியஸ்தன் ஆறு மாதங்களில் மரணமடைவான். மேலும் தன்னுடைய நிழலானது கண்ணுக்கு தெரியாமல் மறைந்தால் ஐந்து நாழிகைக்குள் மரணமடைவான். ஆகவே இதையறிந்து கற்ப மருந்தை உட்கொண்டு உடலை தேற்று.

நாளிற் சாகும் மரண தோஷக் குறி

கொண்டிடும் தோஷக் குறிசொன்னார் எந்நந்தி
தண்டும் உதடும் தனிப்பல்லும் நாக் கொன்றாம்
மண்டிடுந் தாதுவள மாய்க் கறுப்பேறில்
ஒண்டிடுமே ஆறாநாள் உறுதியாய்ச் சாவானே. (49)

தோஷத்தின் குறிகளை எனது குரு நந்தியானர் எனக்கு தெரிவித்தார் அதை கூறுகிறேன் கேள். உதடு, பல், நாக்கு, இந்திரியம் போன்றவைகள் கரிய நிறங் கொண்டதாக மாறினால் அன்றிலிருந்து ஆறாவது நாளில் மரணமடைவான்.

மாதத்திற் சாகும் குறி

உறுதியாம் பித்தம் உடம்பு இளைப்பதாம்
பொறுதியாய்த் தூலிக்கில் போவான் மதியொன்றில்
அறுதியாம் ஐயம் அஸ்தி உலர்ந்துமே
உறுதியோர் மதியில் ஒடுங்கிடுஞ் சீவனே. (50)

பித்தம் அதிகரித்து உடம்பு இளைத்துப் போய் துரும்பு மாதிரி காணப்பட்டால் கட்டாயம் ஒரு மாதத்தில் இறப்பான். மேலும் கபம் அதிகமாகி அதனால் அஸ்தியான எலும்புகள் உலர்ந்து போனால் கட்டாயம் ஒரு மாதத்தில் இறந்து போவான்.

சாகாக் குறியும் சாகும் குறியும்

சீவ களையரய்ச் சேர்ந்திடும் நாடியில்
ஆவக் கரம்வைத்து அழுத்திடின் தமலேறும்
தாவொத்து மேல்நோக்கில் சாகான் ஒரு நாளும்
பாவொத்து கீழ் நோக்கில் பதையாமல் சாவனே. (51)

சீவகளைகள் நாடியில் நிலைத்து நிற்பவைகளாகும். அதனால் ஒருவனுட கரத்தில் தோன்றும் நாடியை கை வைத்து அழுத்திப் பார்க்கும்பொழுது நாடியானது மேல் நோக்கி எழும்பிக் குதித்தால் ஒரு காலும் இறப்புண்டாகாது. அவ்வாறின்றி கீழ்நோக்கி அழுத்தினால் கட்டாயம் இறப்பு நிச்சயம்.

அமிர்தம் உண்டும் சாகுதல்

பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடில்
கதைக் கொண்டு இருந்தாலும் தோற்றியே வுயிர்விடும்
பிதைக் கொண்ட வாத பித்தமும் பெலனாமே. (52)

மூன்று வகையான நாடிகள் பக்குவமின்றி பதைப்புற்று ஓடும் பொழுது வாதம் பித்தம் எனப்படும். இரண்டுவகையான நாடிகள் அடங்கிப் போயிற்றானால் அமிர்தமே உட்கொண்டாலும் உடலில் உயிர் நிலைக்காது. இது தான் வாதமும் பித்தமும் அடங்கியதால் ஏற்படும் குணமாகும்.

பிணியரிடம் போகாக்குறி கிட்டாக்குறி மருந்து ஈகுறி

பித்தம் அடங்கினால் பேசாதே போய்விடு
எத்திய ஐயம் எழும்பிடில் கிட்டாதே
எத்திய வாதம் எழும்பில் மருந்து செய்
எத்தியிம் மூன்றின் இயல்பை அறிந்திடே. (53)

பித்தம் அடங்கினால் வயித்தியம் செய்யாதே செய்தாலும் மரணமுண்டாகும். கபம் எழும்பினால் மருந்துகள் உள்ளே இரங்காது. வாதம் எழும்பி ஓடினால் வயித்தியம் பார்க்கலாம். முறையாக மூன்றின் குணத்தையும் அறிந்து செய்.

சாகாக்குறி சாகுங்குறி

அறிந்திடு இம்மூன்றும் அடங்கியே முட்டிலும்
எறிந்துமிக ஓடிலும் எய்தாது சாவுதான்
பறிந்துநல் தாது பற்றற்றுக் கீழ்நோக்கில்
மறிந்தே வுயிர் சென்று மறலி கைப்புக்குமே. (54)

மூன்று வகையான நாடிகளும் மெதுவாகவும் சமமாகவும் மிக வேகமாகவும் எழும்பினால் (மேல் நோக்கி முட்டினாலும்) நோயாளி சாக மாட்டான். மூன்று வகையான நாடிகளும் தளர்ந்து (கீழ் நோக்கி அழுந்தினால்) ஓடினால் கட்டாயம் அவன் எமனிடம் சிக்குவான்.

மகா தோஷக் குறி

புக்கி உந்தியிற்கை பொருந்த ஒருவிரல்
எக்கி உயரம் எழும்பில் மகாதோஷம்
அக்கிய உந்திதான் ஆதாரம் வாய்விற்கு
வைக்குந் தலமென வகுத்தனர் தாதுஇதே. (55)

நோயாளியின் உந்தியில் ஒரு விரல் வைத்து அழுத்தி பார்க்குங்கால் அது மிக வேகமாக எழும்பி வோடினால் அதற்கு மகா தோஷம் என்று பெயர். ஏனெனில் உந்தியே வாயுவிற்கு ஆதாரமாகும். மேலும் தசநாடிகளின் (இருப்பிடமாகவும் இது இருக்கிறது) இருப்பிடங்களில் ஒரு இடமாக இதை முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

தச நாடிகள் இருப்பிடம்

தாது முறைகேள் தனித்த குதிச் சந்து
ஓதுறு காம்யம் உந்தி நடுமார்பு
காது நெடுமூக்கு கண்டம் கரம் புருவம்
போதுறும் உச்சி புகழ்பத்தும் பார்த்திடே. (56)

தச நாடி எங்கு நிற்கிறது என்று கேட்பாயாகில் கூறுகிறேன் கேள். குதம் (மலவாய்), குய்யம் (பாற்குறி) உந்தி (தொப்புழ்), நடுமார்பு, காது, நெடுமூக்கு, கண்டம், கை (கரம்), புருவமையம், தலை உச்சி போன்ற ஸ்தானங்கள் தசநாடிகளின் இருப்பிடங்களாகும்.

சாகாக் குறி சாகுங் குறி

பார்க்கில் தசநாடி பதைப்புண்டாய் நின்றிடில்
ஏர்க்கில் சிலநாள் இருப்பான் இறந்திடான்
காக்கிடும் காம்யம் கழன்று சுழித்தோடில்
ஆர்க்கில் எமனுக்கு அடைவது உண்மையே. (57)

தச நாடிகளின் சலனங்கள் இருக்குமானால் (அதாவது அடங்காமல் குதித்தால்) இறப்புண்டாகாது சில நாட்கள் பூமியிலிருப்பான். மேலும் காம்யம் எனப்படும் குய்யத்தில் நாடி நடை சுழன்று காணப்பட்டால் நிச்சயமாக அவன் இறந்து போவான்.

உமிர் நீர்க் குறியாற் சாவு

உண்மைகேள் இன்னும் உமிந்திட நோயுள்ளோன்
தண்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடில் சாவில்லை
கண்மையாம் வாயு கழன்றிடில் கிட்டிடும்
வண்மையாய்ப் பார்க்க வகுத்தனர் நந்தியே. (58)

வியாதியஸ்தனை எச்சில் உமிழச் செய்து பார்க்கும் பொழுது எச்சிலானது சற்று தூரம் போய் விழுமாயின் மரணம் சம்பவிக்காது. அவ்வாறின்றி வாயுவால் தடைப்பட்டு கழன்று போனால் சாவு உண்டாகும். இம்முறையை எனக்கு குருவான நந்தி வகுத்து கூறினார்.

வாயு நோய் சுரம் திரிதோஷம்

வருத்த முறைப்பாடு மந்தத்தால் வாயுவாம்
மிகுத்தநல் வாயுவால் விளைந்திடும் நோயெலாம்
பகுத்திவை இரண்டால் பார் அச் சுரமுறும்
முகத்திவை மூன்றால் முத்தோஷங் காணுமே. (59)

மேலும் அவர் வகுத்த முறைகளைக் கூறுகிறேன் கேள். உடலில் மந்தம் ஏற்பட்டால் வாயு தொல்லை உண்டாகும். வாயுவால் எல்லா நோய்களும் உண்டாகும். மேலும் வாயுவும் மந்தமும் கூடுவதால் சுரமும், சுரம், வாயு, மந்தம் மூன்றும் கூடுவதால் உடலில் வாத பித்த கபங்களில் தோஷமேற்பட்டு நோய்கள் உண்டாகின்றன.

மந்தம் வருகுதல்

காணுமே மந்தம் கவளிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமாமிசம் மீறில்
காணுமே மந்தம் கலந்தமாப் பண்டத்தால்
காணுமே மந்தம் கடுமேதிப் பாலுக்கே. (60)

மந்தமானது அதிகவுணவாலும், மிகுதியாக மாமிசம் உட்கொள்வதாலும், மாவுப்பண்டங்கள் உண்பதாலும் எருமைப் பால் அதிகம் குடிப்பதாலும் உண்டாகிறது.

மேவிய அன்னத்தால் விளங்கியது இச்சடம்
பாவியே கொன்று பழியுறும் அன்னந்தான்
ஆவில் மிதப்பில் ஐயுற்று நோயாகும்
சாவில் இவையெலாங் கண்டு கொள் அன்னமே. (61)

அன்னமான உணவினாலேயே இவ்வுடம்பு வளர்கிறது. அதே அன்னத்தில் தான் இவ்வுடலும் அழிகிறது. அளவுக்கு மிஞ்சி உணவு கொள்வதால் நோயுண்டாகிறது. அதனால் மரணம் சம்பவிக்கிறது. ஆகையால் முதலில் இதை அறிந்து கொள். ஆக அன்னமே அனைத்திற்கும் ஆதி.

அன்னம் பிறந்தது அனைத்து விதையிலும்
மன்னிய வெட்டை மகாசீதம் இரண்டினால்
பன்னி அறிந்திதைப் பார்ப்பார் பெரியோர்கள்
கன்னி மயக்கத்தால் கண்டிடும் மேகமே. (62)

அன்னமானது உலகிலுள்ள செடிகளின் விதைகளில் தோன்றுகிறது. அதே போல் மனிதனுடைய பீஜத்திலும் வெட்டை, மகாசீதம் என்ற இரண்டு வகையாக தோஷங்கள் தோன்றுகின்றன. மேலும் பெண் மேல் உள்ள மயக்கத்தால் மேகம் என்ற வியாதி உண்டாகிறது.

மேகம் பிறந்த விதஞ்சொன்னார் எந்நந்தி
ஆகம் இளந்தைப் பருவத்தில் மோகித்துப்
போகம் தினஞ்செய்யில் புகழ் மந்தத்தே கூடில்
வாகப் பசியால் வழங்கும் சையோகமே. (63)

மேகம் பிறக்கும் விதம்

சையோகம் செய்யத் தனித்த சுழியோடும்
ஐயா அமிர்தம் அடங்கிக் கனலேறும்
மெய்யாக விந்து விழவிழப் புண்ணாகும்
மையான மேகம் வளரும் கிரந்தியே. (64)

மேகம் என்ற நோய் தோன்றுவதற்கு ஆதிகாரணத்தை நந்தி பகவான் எனக்கு சொன்னார். அதை கூறுகிறேன் கேள். சிறு வயதில் இளமைப் பருவத்தில் பெண் மேல் மயல் கொண்டு மோகித்து அனுதினமும் சம்போகம் செய்வதால் வாயுவானது சுழிந்து வோடும் அச்சமயம் தேகத்திலுள்ள குளிர்ச்சி நீங்கி கனலுண்டாகும். மேலும் இக்கனலால் விந்து வெளியேறும் பொழுது புண்ணுண்டாகும். இப்புண்ணே ஆரம்பத்தில் மேகமாகவும் பிறகு கிரந்தியாகவும் வளருகிறது.

சீழ்மேகம் வாயு சூலை பலமேகம் பலநோய்

கிரந்தி இரணம் கிளர்ந்திடும் சீமேகம்
உரைந் திவையிரண்டால் உறுவாய்வு சூலையாம்
பரந்த திவை முன்றால் பலப மேகங்கள்
துரந் திவை தொட்டு சூழ் நோய்கள் உற்றதே. (65)

கிரந்தி ரணமானது சில நாட்களுக்குள் கீழ் மேலாக வளரும். சீழ் மேகத்தாலும் கிரந்தியாலும் சூலை வாய்வு உண்டாகிறது. சூலை வாய்வு, சீழ் மேகம், கிரந்தி இவை மூன்றாலும் பல வகையான மேக நோய்கள் உண்டாகின்றன. இம்மேக நோய்களை மையமாக கொண்டு மற்ற நோய்கள் உண்டாகின்றன.

இலங்கனம் இடுதல்

உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாய்வுக்கும்
அற்றே வரும் மட்டும் அன்னத்தைக் காட்டாதே
முற்றக் கனல்ராசா முன்வழியே வரில்
ஒற்றே நிறைந்தோடில் ஒன்றுக்கும் அஞ்சாதே. (66)

சுரம் மற்றும் வாயு நோய்கள் உடலில் இருக்கும் வரை அன்னத்தை உட்கொள்ளாதே. அன்னத்தை உட்கொள்வதால் வாய் வழியாக மீண்டும் வெளிப்படும் (வாந்தியாகும்) வாதம், பித்தம், கபம் எனப்படும் மூன்றும் ஒன்றாக நடக்கும்பொழுது பயங்கொள்ளாதே ஒன்றும் ஆகாது.

காய சித்தியாக

அஞ்சி யுகத்தில் அழியாமல் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றெட்டு
தஞ்சம் உறவே தான்தின்ன வல்லோர்க்கு
பஞ்சு நரைபோய்ப் பதிந்தோங்கி வாழ்வாரே. (67)

பயந்து மாளாமல் என்றும் சீவித்திருக்க நான் நூற்றுஎட்டு வகையான கற்பங்களை கூறியுள்ளேன். அதன்படி உட்கொண்டு வருவார்களானால் நரை திரைகள் நீங்கப் பெற்று உலகம் உள்ளவரை வாழ்வார்கள்!

வளமான பித்தத்தில் மருவிக் கபங்கூடில்
தளமான வாயுவால் தானே வெதுப்பேறி
களமான சுண்ணத்தில் கட்டியே மூலமாம்
உளமாஞ் சுரத்தில் உறுகின்ற வாயுவே. (68)

மலசலக் கட்டு, மேல் மூச்சு, இரணம், உருத்திர வாயு

வாயு வினாலே மலசலங் கட்டிடும்
வாயு வினாலே வாங்கிடும் மேல்மூச்சு
வாயு வினாலே மலரும் இரணங்கள்
வாயு வினாலே வரும் ருத்திரரோகமே. (69)

பித்தத்துடன் கபம் இணைந்து கூடுவதாலும் வாயுவால் வெதுப்பேற்றப்படுவதாலும் மூலம் என்ற கட்டிகள் உண்டாகின்றன. மேலும் பலவகையான சுரங்களும் தோன்றி அதனுடன் (அச்சமயத்தில்) வாயு தாக்கப்படுவதால் மலசலங் கட்டி மேல்மூச்சு வாங்கும். இதனால் கடுமையான பலவகை இரணங்கள் உடலில் தோன்றி ருத்திர ரோகத்தை உண்டு பண்ணிவைக்கும்.

பேசிக் கொண்டிருக்கையில் சாகுதல்

ரோகம் கபத்தில் நுழைந்தேறி வாயுதான்
வாகுற்ற நெஞ்சில் வலித்தே மயக்கிடும்
போகுற்ற பித்தத்தை போகாமல் தம்பித்து
பாகுற்றுப் பேசையில் பதையாமல் கொல்லுமே. (70)

வாயுவானது கபத்தின் வழியாக புகுந்து நெஞ்சில் தங்க வைத்து வலியுண்டாக்கி மயக்கமடையச் செய்தும் பித்தத்தை மேலேற விடாமல் தம்பிக்கச் செய்தும், பேசிக் கொண்டிருக்கையிலேயே மரணத்தை உண்டாக்கும்.

சுக ஜன்னி வரும் காரணம்

பதமாம் சுகசன்னி பாயும் விதங்கேளு
நிதமாக மூழ்கி நிறையவே சாப்பிட்டு
சூதமாக மந்தத்தில் கூடிடில் வாயுவால்
அதமாம் அனுபோகம் அணைந்திடில் சன்னியே. (71)

சுக சன்னி உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள்! எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று உடனே வயிறு நிறைய உணவருந்துவதால் மந்தம் உண்டாகும். இம்மந்தத்தால் வாயு ஏற்படும். இச்சமயத்தில் பெண்ணுடன் கூடினால் சுக ஜன்னி என்ற நோய் சம்பவிக்கும்!

வியர்வை, கண்சிவப்பு, மாதோஷம், காயமழிதல்

சன்னி சுகத்தில் தானேறும் வியர்வைதான்
சன்னி சுகத்தினால் கண்கள் சிவப்பேறும்
வன்னி சுகத்தினால் வழங்கும் மகாதோஷம்
அன்ன சுகத்தினால் அழிந்திடும் காயமே. (72)

சுக சன்னி கண்டால் உடனே உடல் முழுவதும் வியர்க்கும். கண்கள் சிவப்பாகும். நாடிகள் அளவுக்கு மீறி எழும்பி மகாதோஷத்தை உண்டாக்கி தேகத்தை அழியச் செய்யும்.

மூலம் வரும் காரணம்

காயத்தில் மூலம் கண்ட வாதங்கேளு
பாயொத்த தீபனம் பரிந்தே அடக்கினும்
மாயை மயக்க மலத்தை அடக்கினும்
ஓயுற்றக் குண்டலிக்கு உள்புகும் வாயுவே. (73)

முளை மூலம்

வாயு புகுந்து மலத்தோட் பானத்தைத்
தேயுவைக் கூட்டி திரட்டிக் கருக்கிடும்
தோயம் மலம்வரில் சுருக்கி முன்னே நின்று
ஆயு முளைபோல் அபானன் இறுக்குமே. (74)

இரத்த மூலம்

இறுக்கும் சிலமூலம் ஏழு மண்டலம்போல
மறுக்க ரிணங்கொண்டு உருகும் சிலமூலம்
உறுக்கிய வாயுவால் உதிரமுந் தான்கூடி
தறுக்கி விழுக்காட்டுந் தான் ரத்தமூலமே. (75)

மூலம் உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள். உணவு உட்கொள்ளாமல் பசியை அடக்குவதாலும், மலத்தை அடக்குவதாலும் வாயுவானது குண்டலிக்குள் செல்லும். அப்படிச் சென்ற வாயுவானது உஷ்ணம் ஏற்பட்டு மலவாயை சுருக்கும். அது மட்டுமில்லாமல் மலம் வரும்பொழுது அதை வெளியேற விடாமல் அபானத்தை சுருக்கி முளைபோல் நிற்கச் செய்யும். இதற்கு முளை மூலம் என்று பெயர். சிலசமயம் இம்மூளையே பெரிதாக வளரும். சிலசமயம் இதில் இரணங்கள் தோன்றும். சில சமயம் வாயுவால் உந்தப்பட்டு உதிரமான ரத்தத்தை வெளிப்படுத்தும். இதற்கே இரத்த மூலம் என்று பெயர்.

பசி கெடும், விந்து நாசம், இரைச்சலாம் கழிச்சலாம்

மூலம் எழுந்திடில் முன்னே பசிபோகும்
மூலம் எழுந்திடில் முனைவிந்து நாசமாம்
மூலம் எழுந்திடில் முழங்கும் இரைச்சல்தான்
மூலம் எழுந்திடில் முகியாக் கழிச்சலே. (76)

மூலம் தோன்றினால் முதலில் பசியகலும், பிறகு விந்து கெட்டு நாசமாகும். அது மட்டுமில்லாமல் வயிற்றில் ஒரு சப்தத்தை உண்டாக்கி கழிச்சலை ஏற்படுத்தும்!

கிராணிக் கழிச்சலில் ஆறுவிதம்

கழிச்சல் கிராணிக் கழியும் விதங்கேளு
அழிச்சிய பித்தம் அனல்வாதம் ஐயமாம்
செழுச்சிய வாயு சேர்ந்திவை மூன்றால்
பழிச்செனப் பேதிக்கும் பார்பெலம் போகுமே. (77)

கழிச்சல் கிராணி உண்டாகும் முறையைக் கூறுகிறேன் கேள்! வாதம், பித்தம், கபம் எனப்படும் மூன்று வகையான தோஷங்களுடன் வாயு கூடுவதால் பேதியுண்டாகும். இதனால் உடலில் உள்ள பலங்குன்றும்.

பெலமான மேகத்தில் பிறந்த தொருபேதி
குலமான மூலத்தில் கொடியது ஒருபேதி
சலமான வாயுவால் சங்கித்தது ஒருபேதி
வுலமான ஆறும் வகுத்த முறையாமே. (78)

வாதத்துட்ன் வாயு கூடுவதால் ஒரு வகையும், பித்தத்துடன் வாயு கூடுவதால் ஒரு வகையும், ஐயத்துடன் வாயு கூடுவதால் ஒருவகை பேதியும் உண்டாகின்றன. இதைத் தவிர, மேகத்தால் ஒரு வகையும், மூல வியாதியால் ஒரு வகையும், சலத்துடன் வாயு கூடுவதால் ஒருவகை பேதியும் ஆக ஆறு வகையான பேதிகள் வாயு கூட்டுறவால் உண்டாகின்றன.

பித்த மேக நிறக்குறி

முறையான மேகம் முழங்கும் இருபதும்
துறையானது எல்லாம் சொல்லினார் என்னந்தி
கரையாகும் சீலையில் கண்டில் மஞ்சள்போல்
பறையான பித்தத்தால் படுகின்ற மேகமே. (79)

இருபது வகையான மேக வியாதிகளின் குறிகளையும் தோன்றும் விதத்தையும் நந்திபகவான் எனக்கு கூறினார். அதை இங்கு கூறுகிறேன் கேள்! மேகமானது வெளிப்பட்டு சீலையில் விழும்பொழுது மஞ்சள்நிறமாக இருந்தால் அது பித்தத்தால் ஏற்பட்டது என்று அறிதல் வேண்டும்.

வாதமேக, ஐயமேக நிறக்குறி

படுகின்ற சீலைதான் பாங்காம் வெளுப்பாகில்
அடுகின்ற ஐயத்தால் ஆகுங்காண் அம்மேகம்
மடுகும் கபனத்தில் மயில்நிறம் போல்பட்டால்
விடுகின்ற ஐயத்தால் விழுகின்ற மேகமே. (80)

மேகம் வெளிப்பட்டு விழுந்த துணியின் நிறம் வெண்மையாக இருந்தால் வாத மேகமென்றும், மேகம் வீழ்ந்த கௌபீனம் மயிலைப்போல் நீலமாக காணப்பட்டால் ஐயமான சிலேத்துமத்தால் ஏற்பட்டதென அறிதல் வேண்டும்.

தமரெரி மேகம் நீர்த்துளி மேகம்

மேகம் இவை மூன்றில் வெவ்வேறு குணங்கேளு
வாகிய பித்தமும் வாயுவும் கூடிடில்
தாகிய நாமத் தமர லெரிந்திடும்
போகும் நீர்கட்டிப் பொசிந்துளித்தே விழும். (81)

இம்மூன்று வகையான மேகங்களில் வாயுவின் கூட்டுறவால் வெவ்வேறு வகையான மேகங்கள் உண்டாகின்றன. அதைப் பற்றி கூறுகிறேன் கேள். பித்தத்துடன் வாயு கூடினால் துவாரத்தில் எரிச்சலுண்டாகும். இதற்கு தமரெரிமேகம் என்று பெயர். சில சமயம் நீர் சிறிது சிறிதாக வெளிப்படும். இதற்கு நீர்த்துளி மேகம் என்று பெயர்.

சிக்கா நீர் மேகம் கல்லெரிப்பு மேகம்

விழுகும் சிலநேரம் விடுபட்டு நீரோடும்
ஒழுகிய வாயுவும் ஒதுங்கினால் நோகாது
வழுகிய மந்தத்தால் வாயுவந்தே புகில்
கழுகி முதிர்ந்திடும் கல்லெரிப்பு ஆடுமே. (82)

சில நேரங்களில் வாயு துவாரத்தை விட்டு நீங்கும் சமயம் நீரானது தடையில்லாமலும் வலியில்லாமலும் வெளிப்படும். இதற்கு சிக்கர் நீர் மேகம் என்று பெயர். மந்தத்தால் வாயு கூடி கல்லெரிப்பு உண்டாகும். மேகத்திற்கு கல்லெரி மேகம் என்று பெயர்.

மேகமிடும் மேனி கருகும் தாது நாட்டமாம்

ஆகிய வாதமும் வாயுவும் கூடிடில்
தாகிய வெள்ளை தடையற்று மெத்தவாய்
போகிய மேனி பொருமிக் கறுப்பேறும்
வாகிய தாது வழங்காது நஷ்டமே. (83)

வாதத்துடன் வாயு கூடி மேக வியாதி உண்டானால் தடையில்லாமல் வெள்ளைப்படும். மேலும் உடல் கருத்த நிறங் கொள்ளும். அதுமட்டுமில்லாமல் வீரயம் நஷ்டமாகும். இது ஒரு வகை மேகம்!

வெளிக் காணா தெலும்பாய் இருமும் மேகம்

வழங்கிய ஐயமும் வாயுவும் கூடிடில்
பிழங்கிப் பொசியாது பிறவெள்ளை காணாது
தழங்கி இளைத்துத் தானஸ்தி போலாவான்
இழங்கும் புகைந்தே இருமிடும் மேகமே. (84)

சிலேத்துமத்துடன் வாயு கூடி மேக வியாதி உண்டானால் பசி எடுக்காது. வெள்ளையும் படாது. (வெள்ளை ஒழுக்கும் ஏற்படாது) ஆனால் தேகமானது நாளுக்கு நாள் இளைத்து எலும்பு போல் ஆகி புகைந்த இருமல் உண்டாகும். (இதுவும் ஒரு வகை மேகமாகும்.)

இருமிய பித்தமும் வாதமும் கூடிடில்
மருவச் சலமேகம் வாரிதி போலோடும்
உருவம் வேறாக்கும் உண்டஉடற் காய்ந்திடும்
உறாகவே ஊனோடு உறிஞ்சி இனிக்குமே. (85)

பித்தமும் வாதமும் கூடி மேக வியாதி உண்டானால் வெள்ளையானது மழைப் போல் கொட்டும். அதுமட்டுமின்றி உடலைக் காயச் செய்து அடையாளம் தெரியாமல் பண்ணுவிக்கும். மேலும் சதையை மாம்பழம் போல் உறிஞ்சி இளைக்கச் செய்யும்.

மதுமேக குணம்

இனிக்கின்ற வாதத் திடைசேரில் ஐயந்தான்
பனிக்கின்ற கள்ளுப் பதனிபோல் நீரோடும்
கனிக்கின்ற மேனி கரைந்து வெளுப்பேறும்
தனிக்கும் அதுமேகந் தப்பாது ஐயனே. (86)

வாதத்துடன் சிலேத்துமம் கூடி மேக வியாதி ஏற்பட்டால் கள்ளுப்பதனிப் போல் நீர் வெளிப்படும். மேலும் உடல் குலைந்து வெளுத்த நிறங் கொள்ளும். இதற்கு மதுமேகம் என்று பெயர். (இது உயிரையும் குடிக்கும்.)

இரத்த மேகம்

ஐயமும் பித்தமும் அணைந்திடும் காலத்தில்
நொய்யுறும் இரத்தம் கொப்பளிக்கும் தண்டில்
மையுறும் சுண்ணாட்டு மகத்தாம் பெரும்பாடாம்
வையுறும் மேகம் வரிசை முறை கேளே. (87)

சிலேத்துமமும் பித்தமும் கூடி மேக வியாதி கண்டால் குறியில் இரத்தம் வெளிப்படும். இதற்கு இரத்த மேகம் என்று பெயர். மையை கண்ணில் தீட்டும் பெண்களால் ஏற்படும் இம்மேக நோய்கள் அவர்களையும் தாக்குகிறது. அதன் வகை முறையை இனி கேள். (இதுவரை கூறியது ஆண்களுக்கு.) (இனி பெண்களுக்கு ஏற்படும் விதம்.)

முறை கேட்கின் ஒன்பது முயற்சியால் வந்தது
துறை கேட்கில் கர்ப்பத்தில் துவக்கிய மேகங்கேள்
நறைபூத்த கொங்கையாள் நாயகன் மோகத்தால்
மறை போற்றும் கர்ப்பத்தில் வளர்ந்தது மேகமே. (88)

முன் கூறிய ஒன்பது வகையான மேகமும் அவர்களிடத்தே தோன்றும். இனி கர்ப்பத்தில் தோன்றும் மேகத்தைக் கேள். பெரிய ஸ்தனத்தைக் கொண்ட பெண்கள் ஆணிடம் ஏற்படும் காம மயக்கத்தால் மறைவிடமான கர்ப்ப மேகம் உண்டாயிற்று.

வளர்ந்தது கர்ப்பத்தில் வகுத்தமுறை அஞ்சு
உளர்ந்திய வுந்தியில் வுற்பத்தியாம் மேகம்
அளுந்திப் படும்வெள்ளை ஆகாச் சுரலேகம்
தளர்ந்திய அஸ்தியைத் தணலாய் வுருக்குமே. (89)

தணல் காயும் மேகம் தண்ணீர்ப் பகைமேகம்
உணக்கால் முழுக்கற்றால் உருகும் சிலமேகம்
பிணக்கால் பசி கெட்டால் பெற்றப் பெருமேகம்
வணக்கால் சையோகத்தால் வருங் கடுமேகமே. (90)

கர்ப்ப மேகத்தில் மொத்தம் ஐந்து வகைகள் உள்ளன. இதைத் தவிர உந்தியில் ஒருவகை மேகமும், வெள்ளைத் தள்ளும் ஆகாசச் சுரமேகமும், அஸ்தியை தணலாய் உருக்கித் தண்ணீர் போல் வெளிப்படுத்தும் பகை மேகமும், பசியின்மையால் ஒரு வகை மேகமும் சம்போகத்தால் ஒரு வகை மேகமும் உண்டாகின்றன.

கடும்பசி தோன்றிடில் காணும் சிலமேகம்
அடுவுற்ற பாஷாணத்தால் ஆம் சிலமேகம்
அடுவுற்று இவையேழும் அஞ்சும் முன்னொன்பதும்
எடுவுற்று இருபத்தொன்று ஏற்றினார் மேகமே. (91)

மேலும் அதிக பசியால் ஒரு வகை மேகமும், பாஷாணத்தால் ஒரு வகை மேகமும் ஆக ஏழு வகையான மேகங்கள் உண்டாகின்றன. முன் கூறிய ஒன்பது வகைமேகமும், கர்ப்பத்தைச் சார்ந்துவரும் ஐந்து வகை மேகமும் மேற்கூறிய ஏழு வகை மேகமும் கூட்டி மொத்தம் இருபத்தொரு வகைகளாக நந்தி பகவான் எனக்கு எடுத்துரைத்தார்.

பித்த குன்மம்

ஏற்றிய குன்மம் எழுந்த விதங்கேளு
தோற்றிய பித்தமும் வாயுவும் தொந்திக்கில்
சேற்றிய அன்னம் செரிக்கில் வலிப்பேறும்
மாற்றிய நீரூறி வாந்தியாம் பாருமே. (92)

இனி குன்மம் என்ற வியாதியைப்பற்றிக் கூறுகிறேன் கேள். பித்தமும் வாயுவும் ஒன்று கூடி நின்று உணவு செரிக்கும் பொழுது வலி ஏற்பட்டு வாந்தியாகும். இதற்கு பித்த குன்மம் என்று பெயர்.

வாத குன்மம்

பாருமே வாதமும் வாயுவும் கூடிடில்
ஒருமே கும்பியில் உழன்று மிகநோகும்
கோருமே குத்தும் குடலை முறுக்கிடும்
வாருமே வாதத்தில் வழங்கிய குன்மமே. (93)

வாதமும் வாயுவும் ஒன்று கூடி கலப்புற்று நின்று குன்மத்தை உணடாக்குங்கால் வயிற்றில் அதிக வலி ஏற்படும். குடல் முறுக்கேறும், குத்துவலியுண்டாகும். இதற்கு வாத குன்மம் என்று பெயர்.

ஐய குன்மம்

வழங்கிய ஐயமும் வாயுவும் கூடிடில்
தழங்கிய அன்னத்தைச் சந்திக்க வொட்டாது
பழங்கிய அன்னம் புளிப்புக் கொடுத்தேறி
உழங்கிய முறுக்கி உடலை வலிக்குமே. (94)

சிலேத்துமமும் வாயுவும் ஒன்று கூடினால் அன்னத்தை செரிக்க விடாமல் புளிப்பு ஏற்படச் செய்து உடலை முறுக்கி வலியுண்டாக்கும். இதற்கு ஐய (சிலேத்தும) குன்மம் என்று பெயர்.

மேக குன்ம நோய்

வலிக்கிய மேகமும் வாயுவும் கூடிடில்
பலிக்கிய மலசலம் பதையாமல் கட்டிடும்
இலிக்கிய விடப்புறம் இயல்பாம் வலப்புறம்
வலிக்கும் முறுக்கும் வருஞ்சூலைக் குன்மமே. (95)

மேகத்துடன் வாயு கூடி (மேகம் = ஓர் வகை நோய்) நின்றால் மலசலம் கழிக்க முடியாமல் கட்டி விடும். மேலும் இடது விலாவும், வலது விலாவும் மாறி மாறி வலியுண்டாக்கி உடலை முறுக்கச் செய்யும். இதற்கு மேக குன்மம் என்று பெயர்.

குன்மம் இவை நாலில் கூறினார் எண்விதம்
வண்மையாய் நோய்க்கு மகாநோய்காண் பொல்லாது
கன்மமே செய்து கடத்துக்கு இதுவெய்தும்
நன்மையாம் தர்மஞ்செய் நாட்டோர்க்கும் வாராதே. (96)

இந்த நான்கு வகையான குன்மம் நோயில் எட்டு வகையான பிரிவுகள் உள்ளன. நோய்களிலே இவைதான் மிகவும் கொடுமையானவை. இந்நோய் பாவம் செய்தவர்க்கே வரும். தர்மம் செய்பவர்க்கு ஒருக்காலும் வராது.

பித்த சூலை நோய்

நாட்டிய பித்தமாம் சூலை முறைகேளு
மாட்டிய அன்னம் ருசிகெட்டு வாந்தியாம்
ஆட்டிய கைகால் அதன்சந்து பின்தண்டு
நீட்டி வலித்து நிலையாய் எரியுமே. (97)

பித்த சூலையின் குணத்தைக் கேள்! அன்னம் ருசியில்லாமல் வாந்தியுண்டாகும். மேலும் கைகால்களிலும் மற்றும் முதுகுத் தண்டு வடத்திலும் வலி ஏற்பட்டு எரிச்சல் உண்டாகும்.

வாத சூலை நோய்

நிலையான வாதத்தில் நின்றிடும் சூலைதான்
குலையான கைகால் குளைச்செல்லாம் புண்போல்
கலையாய் வலித்து கனத்திடும் கீழ்வயிறு
தலையான மேனி தானிளைந்து ஆடுமே. (98)

இனி வாத சூலையின் குணத்தைக் கேள்! கை கால்களில் குடைச்சல் ஏற்பட்டு புண் போல் வலிக்கும். அடி வயிறு கனமாகி உடம்பு இளைத்து ஆட்டம் காணச் செய்யும்.

ஐய சூல நோய்

இளைத்திடும் மேனி இருமி வறண்டிடும்
குளைத்திடும் கைகால் குத்தி மிகநோகும்
தளைத்திடும் மார்பில் சளிமிகத் தாக்கிடும்
அளைத்திடும் ஐயத்தால் ஆகாத சூலையே. (99)

உடல் இளைத்து இருமல் உண்டாகி வறட்சி ஏற்பட்டு கைகால்களில் குத்தும் வலியும் ஏற்படும். மேலும் மார்பில் சளி கட்டி மூச்சு தடைப்படும். இதுவே சிலேத்தும சூலையாகும்.

வாத பித்த சூலை நோய்

ஆகாத வாதமும் பித்தமும் சூலையாய்
வாகான கைகால் வளமாய்க் கரடேறும்
தாகான மேனி தனில்வெடிப் புண்ணாடும்
போகாமல் நின்று புணர்ச்சியாய்க் கொல்லுமே. (100)

வாதமும், பித்தமும் கூடுவதால் ஏற்படும் சூலையை பற்றி கூறுகிறேன் கேள். கை கால்கள் கரடுமுரடாகி, தேகத்தில் வெடித்துப் புண்ணுண்டாகும். இந்நோய் ஏற்பட்டால் உடலை உருக்கி கொன்று விடும்.

ஐய பித்த சூலை நோய்

கொல்லிய ஐயமும் பித்தமும் கூடிடில்
மல்லி யெலும்பில் வளமாய்த் துளைத்துநோம்
அல்லிச் சுரங்காயும் அதிகத் தாபமுமாகும்
எல்லி இருமிடும் இதுகாணும் சூலையே. (101)

சிலேத்துமமும் பித்தமும் கூடுவதால் அஸ்தியான எலும்பில் வலி ஏற்படும். மேலும் சுரமுண்டாகி தாபம் அதிகப்பட்டு இருமல் உண்டாகும். இதுவே ஐய பித்த சூலையாகும்.

ஐய வாத சூலை நோய்

காணுமே ஐயத்தில் கனவாத சூலை கேள்
பூணும் கபாலம் புடைத்து வெடித்திடும்
ஆணி முளையாம் அடங்காக் குளிர்சுரம்
பேணி எலும்பெலாம் பெலன்கெட்டு நோய்மாறே. (102)

ஆறுவகை சூலையில் அறுமூன்று பேர் சொல்வார்
வேறும் இதையல்லால் வெவ்வேறும் ஒன்றில்லை
கூறும் இதன் நாமங் கோடி குணஞ் சொல்வார்
பேறுமறு சூலைப்பேர் சொன்னார் நந்தியே. (103)

சிலேத்துமத்தில் வாதம் நுழைவதின் காரணமாக ஏற்படும் சூலையானது மண்டை (கபாலம்) வெடித்துப் போவதைப் போல் வலியுண்டாக்கும். மேலும் அடங்காத குளிர் சுரம் உண்டாக்கி உடலில் பலம் குன்றி எலும்புகள் அசதியாகும். இந்த ஆறு வகையான சூலையில் பதினெட்டுவகையான பிரிவுகள் உள்ளன. இதன் குணங்களும் பெயர்களும் வெவ்வேறு வகைப்படும். அதைப் பற்றி நந்தியானவர் எனக்கு நன்றாக கூறி அருளினார்.

ஆறு வித கர்ப்ப நோயால் பெண் மலடு

நந்தி உரைத்தது நலமான கர்ப்பத்தில்
அந்திய நோய்தான் அறுவகை கேளுநீ
புந்தியில் வாயுவும் தேயுவும் கூடிடில்
மந்தி மலடாவாள் மரண வரைக்கென்னே. (104)

நந்தியானவர் மேலும் கர்ப்ப வியாதியைப் பற்றி கூறினார். அதில் ஆறு வகைகள் உள்ளன. கர்ப்பப் பையில் வாயுவுடன் தேயுவான அக்னி கூடி நின்றால் அவள் உயிருள்ளவரை மலடியாக இருப்பாள்.

மலட்டுப் புழுவால் மலடு

வரையான கர்ப்பத்தில் மலட்டுப் புழுப்புகில்
விரையாம் சுக்கிலத்தை விரைந்து வுண்டிடும்
கரையாமல் அடியாங் காணதைப் போக்கிடில்
துரையானப் பிள்ளை சுகமாய்ச் செனிக்குமே. (105)

மேலும் கர்ப்பப் பையில் மலட்டுப் புழு உண்டானால் (புழு இருந்தால்) அது ஆணின் சுக்கிலத்தை உட்கொண்டு குழந்தை உண்டாகாதபடி செய்யும். ஆகவே அப்புழுக்களை அகற்றினால் பிள்ளை உண்டாகும்.

செனிக்கின்ற பிள்ளைத் திறமாய் பிறக்கையில்
கனிக்கின்ற சீயு நீர் கலந்துள்ளே சிக்கிடில்
பனிக்கின்ற கைகால் பாவியே குத்திடும்
தனிக்கும் பசிபோகும் தான்வயிறும் பாரிப்பே. (106)

பெண்களுக்கு குழந்தை பிறக்குஞ் சமயம் சீயும் நீரும் கலந்து உள்ளே சிக்கிக் கொண்டால் கைகால் குத்து வலியுண்டாகி பசியகன்று வயிறு பெரிதாக உப்பலாகும்.

பாரிய வாய்வு பரிந்து குழிப்புகில்
தாரிக் கழிந்து சதநித்தங் கூப்பிடும்
வாரி உடம்பெலாம் வலிக்கும் இடைநோகும்
ஆரியன் சொன்னான் அறிந்தவர் சித்தரே. (107)

வாயுவானது கர்ப்பக் குழியில் புகுந்தால் பிள்ளை தங்காமல் வெளிப்படும். மேலும் உடலிலும் இடையிலும் வலியுண்டாகும். இதை சிவபெருமான் கூறினார். அவர் கூறியபடி அறிந்தவர் எவரோ அவர்களே சித்தராவார்.

சித்தான கர்ப்பத்தில் சேர்ந்திடும் இரத்தந்தான்
வத்தாம் வுருண்டு வாயுபோல் ஓடிடும்
உற்ற பசிபோகும் உழன்றே இரைந்திடும்
வற்றாக் கழிச்சலாம் வன்சூதக வாயுவே. (108)

மேலும் கர்ப்பக் குழியில் வாயுவுடன் இரத்தமும் சேர்ந்து உருண்டு அங்கு மிங்கும் ஓடச் செய்து பசியை அகற்றி கழிச்சலுண்டாக்கும். இதற்கு சூதக வாயு என்று பெயர்.

சூதான மாமிசம் சுழித்திடில் கர்ப்பத்தில்
வாதான மேகத்தால் வழங்கிச் செனிப்பிக்கும்
போதா முடம்பெலாம் புண்போல் மிகநோகும்
நீதா மயக்கமாய் நிர்ச்சீலன் ஆவனே. (109)

ஆகின்ற நோய்கள் அறுவிதங் காண் கர்ப்பத்தில்
பாகொன்றி நின்றால் பலியாது கர்ப்பந்தான்
வாகின்ற தைப்போக்கில் மலடி பெறும் பிள்ளை
ஆகின்ற நோய்க்கெலாம் அறைந்த முறை பாரே. (110)

மாமிசங்கள் கர்ப்பக் குழியில் தங்கி மேக நோயை ஏற்படச் செய்து உடம்பில் புண் போல் வலியுண்டாக்கி மயக்கமடையச் செய்யும். இதுவும் ஒரு வகை கர்ப்ப நோயாகும். இவ்வாறு ஆறு வகையான கர்ப்ப நோய் தோன்றுவதால் குழந்தை பிறக்காது. ஆகவே இதையறிந்து முறைப்படி போக்கினால் பிள்ளையுண்டாகும்.

கர்ப்பச் சன்னி குன்மம்

அறைந்திடச் சன்னிகள் ஆகாது கர்ப்பத்தில்
இறைந்திடும் சீயின் உட்புகும் வாயுவால்
விறைந்துமிக வியர்க்கும் மெய்யில் மயக்கமாம்
துறைந்திடு பற்கிட்டும் சோம்பிக்கு:ம் பாருமே. (111)

இதே போல், கர்ப்பவதிகளுக்கு சன்னிகளும் வரக் கூடாது. சன்னி ஏற்படுவதால் சீயானது வாயுவால் தள்ளப்பட்டு கர்ப்பக் குழியினுள் சென்று தோஷமுண்டாக்கும். இத்தோஷத்தால் தேகத்தில் வியர்வைத் தள்ளும் புத்தியில் தடுமாற்றம் ஏற்படும். மேலும் பற்கள் கிட்டி சோம்பிக்கும். இதனால் கர்ப்பம் கலைந்து போகும்.

பாருமே பெண்தான் பச்சுடன் பாங்காலம்
தாறாம் அனுபோகம் தனிக்காடி வுண்ணுதல்
ஆருக்கு மாப்பண்டம் ஆகாது மாங்கனி
கோருமே கொண்டிடில் கொண்டிடும் சன்னியே. (112)

மேலுங்கேள் கருவுற்ற (பச்சுடம்புக் கொண்ட பெண்கள்) காலத்தில் கர்ப்பதோஷமுள்ள பெண்கள், புளிப்பான காடி வகைகளையும், மாவுப் பண்டங்கள், மாங்கனி, போன்றவற்றையும் உட்கொள்ளக் கூடாது. அப்படி மீறி உட்கொண்டால் சன்னிகள் உண்டாகிக் கர்ப்பம் கலைந்து போகலாம்.

கொண்ட மலடிக்குக் கூறிடும் சன்னிதான்
மண்டி இருக்கையில் மாத்தின்பாள் மோருண்பாள்
தண்டி அனைவாள் தனிச்சூதக் காய் தின்பாள்
ஒண்டிய பெண்களுக்கு ஒரெட்டுச் சன்னியே. (113)

மலடி எனக் கூறப்படும் கர்ப்ப தோஷமுள்ள பெண்கள் குறை நீங்கி கருவுற்ற காலத்தில் உணவின் மேலுள்ள ஆசையால் மாவுப் பண்டங்களையும், மோர் வகைகளையும், புளிப்பான காய்களையும் உட்கொள்வாள். மேலும் சம்போகத்தில் அதிக நாட்டம் உண்டாகும். இதனால் அவர்களுக்கு எட்டு வகையான சன்னி ஏற்பட்டு கர்ப்பம் கலைந்து போகலாம்.

ஒரெட்டுச் சன்னி உழண்டது பெண்ணுக்கும்
வாரெட்டு ஆணுக்கும் மகத்தாம் சுகசன்னி
நேரிட்டுப் பார்க்கில் நிகழ்ந்தது வெவ்வேறு
பாரெட்டு மெய்ச்ச பகுத்த முறைபாரே. (114)

பெண்களுக்கு மேற்கூறிய எட்டுவகையான சன்னியாலும். ஆண்களுக்கு சுக சன்னி முதற்கொண்ட பலவகை சன்னியாலும் கர்ப்பம் வாய்க்காமல் போகும். ஆகவே இதை முறைப்படி பகுத்தறிந்து குணப்படுத்துதல் வேண்டும்.

கண்ணில் நோய் வருதல்.

பாரே பொடிக்கடல் பருவெயில் மேற்படல்
வாரேறு கொங்கையாள் மாயை மிகச்செய்யல்
சாரே முழுக்கறல் சுண்ணால் அனல் பார்த்தல்
சீரேறு பாஷாணம் தின்றதால் கண் நோயே. (115)

வெய்யில் மேற்படும்படி கடற்கரையில் உலாவுதாலும் அதிகமான போகத்தாலும், எண்ணைத் தேய்த்துக் குளிப்பதை அறவே ஒழித்தலாலும் (எண்ணைத் தேய்த்துக் குளிக்காததாலும்) கண்ணால் உஷ்ணமான பொருளை உற்றுப் பார்ப்பதாலும், சுத்தி செய்யாத பாஷாணங்களை உட்கொள்வதாலும் கண் நோய்கள் உண்டாகின்றன.

கண்நோய் வருகின்ற காரணம் இன்னுங்கேள்
பண்ணான மேகத்தால் பருவெட்டை வாயுவால்
தண்ணாம் மலக்கட்டால் தன் சலக் கட்டினால்
புண்ணாம் இரணத்தில் போடும் காரத்தாலே. (116)

காரச் சுறுக்கால் கடுமிரசத் தூமத்தால்
தேரொத்த சாரம் நிறை மூக்கின் வாசத்தால்
பாரொத்த பேதியால் பலப்பல தண்ணீரால்
சீரொத்தக் கண்ணில் சிறக்கும் வியாதியே. (117)

மேலும் மேகத்தாலும், வெட்டை வாயுவாலும், மலத்தை அடக்குவதாலும் (மலச்சிக்கலாலும்) சிறு நீரை அடக்குவதாலும், புண்ணில் இடப்படும் காரமருந்தினாலும், பாதரசப் புகையாலும், நவசாரம், எவசாரம் போன்ற மருந்துகளை (அமிலங்களை) முகர்வதாலும், அதிகமான பேதியாலும், பல வகையான தண்ணீரை அருந்துவதாலும், முக்கிய உருப்பான கண்ணில் வியாதிகள் உண்டாகின்றன.

குட்ட நோய் பதினெட்டான காரணம்

வியாதியுண் மூவாறு விளங்கிய குட்டங்கேள்
சுயாதிக் கிரந்தி சுழல் மேகத்தால் ஆறும்
பயாதிய மண்ணுணிப் பல்வண்டினால் எட்டும்
நியாதிப்புழு நாலுமாய் நின்றிந்தக் குஷ்டமே. (118)

பதினெட்டு வகையான குஷ்ட நோய்கள் உண்டாவதற்கு மூல காரணத்தைக் கேள்! கிரந்தி என்ற சுழல் மேகத்தால் ஆறு வகையான குஷ்டங்களும், மண்ணில் வாழும் பல வகையான வண்டுக் கடிகளினால் எட்டு வகை குஷ்டமும் வஸ்திரப் புழு எனப்படும் ஒரு வகைப்புழுவால் நாலு வகையான குஷ்டமும் உண்டாகின்றன.

கண் நோய் தீரும் மருந்து

இந்துப்புத் திப்பிலி இயல்பீத ரோகிணி
நந்திப்பூச் சாற்றில் நயந்து அரைத்திட
அந்தகன் கண்ணுக் கருந்ததி தோன்றிடும்
நந்திக்கு நாதன் நயந்து உரைத்தே. (119)

இந்துப்பு, திப்பிலி, பீத ரோகிணி போன்றவற்றை நந்தியா வட்டைச்சாற்றில் அரைத்து கண்ணிற்கு தீட்டி வந்தால் குருடனுக்குக் கூடக்கண் தெரியவரும். இத்தகை மருந்தை குருவான நந்திக்குச் சிவபெருமான் விரும்பி உபதேசித்தார்.

சுரம்-தோஷம்-சன்னி வாயு- கர்ப்ப சூலை தீர

உரைத்த சுரம்போம் உறவான தோஷம்போம்
விரைந்திடும் சன்னிபோம் மேலான வாயுபோம்
பரத்திய கர்ப்பத்தில் பாய்கின்ற சூலைபோம்
குரைத்த நல்சூதக் குருக்கூட்டிப் பார்த்திடே. (120)

சுரம் திரிதோஷம், சன்னி, வாயு, கர்ப்பச் சூலை போன்ற நோய்களுக்கு சூதக் குருவை உட்கொள்ளல் வேண்டும். ரசத்தை குரு மருந்தாக்கி உட்கொண்டால் மேற்கூறிய வியாதிகள் அகலும்.

மேக நோய் இருபத்தொன்றும் தீர

பார்த்திடும் மேகம் பகர் இருபத்தொன்றும்
போற்றிடும் அப்பிரகம் பொலிவான சிந்தூரம்
சேர்த்திடும் சீந்தில் செவ்வாஞ் சருக்கரை
மாற்றிடு வெண்ணெயில் மாமேகம் போகுமே. (121)

இருபத்தொரு வகையான மேகமும், அகல வேண்டுமாயின் அப்பிரக செந்தூரத்தை, சீந்தில், சர்க்கரை போன்றவைகளுடன் கலந்து வெண்ணையில் உட் கொண்டால் அகலும்.

குன்மம் குஷ்டம் கிராணி மூலம்தீர

போகுமே குன்மம் புகட்டத் திராவகம்
போகுமே குஷ்டம் புகட்டச் செயகெந்தி
போகுமே கிராணி புகட்ட நல் பூநாகம்
போகுமே மூலம் புகழ் சங்கைச் சேம்புக்கே. (122)

குன்மம் திராவகத்தை உட்கொள்வதாலும், குஷ்டங்கள், கட்டிய கெந்தகத்தை உட்கொள்வதாலும், கிராணி வகைகள், பூநாகத்தை உட்கொள்வதாலும் அகன்று விடும். (மூலத்தை அகற்றும் மருந்து பாடலில் பிழை ஏற்பட்டுள்ளதாகத் தோன்றுவதால் இங்கு அது விடப்பட்டது.)

சங்கை கேள் நோய்தான் தனித்த நாலாயிரம்
சங்கை கேள் நானூற்றி நாற்பத்தெட் டென்பார்காண்
சங்கை கேள் இவ்வளவும் தானுடலில் உண்டாகில்
சங்கை கேள் எல்லாம் தவிடு பொடியாமே. (123)

சகல நோய்களும் தீர குருச் சிந்தூரம்

பொடியா நோய்போகப் புகன்றிட்டார் எந்நந்தி
மடிவானச் சூதம் மகத்தான தங்கமாம்
பிடிவான கெந்தியின் பேரானச் சத்து
குடியாய் சிந்தூரித்துக் கூட்டியே தின்றிடே. (124)

தின்றிட நோயெலாம் திசைகெட்டே ஓடிடும்
பன்றிட வாயுவும் பக்கத்திற் சேராது
நன்றிட லோகர்க்குத் தானாகாது இம்முறை
மன்றிட சித்தர்க்காம் மாவியாதி போகவே. (125)

மேலுங்கேள் இவ்வுடலில் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகள் தோன்றினும் அதை நீக்குவதற்கு நந்தி பகவான் மருந்தைக் கூறினார். அதை இங்கு சொல்கிறேன் கேள். சூதம் - தங்கம் இவை இரண்டையும் கெந்தியின் சத்து கூட்டி செந்தூரித்து உட்கொண்டால் எல்லா வகையான நோயும் மிக எளிதில் பறந்து போய் விடும். வாயுவின் தொல்லையும் இருக்காது. ஆனால் இம்மருந்து உலகவாழ்க்கையில் ஈடுபட்டவர்க்கு பலியாது. சித்தர்களான சிவயோகிகளுக்கு மட்டுமே பலிதமாகும்.

வியாதிகள் போக வெகுநாள் சடமுற
பயாதிற் தினாநரை பாங்காய்த் தவிர்ந்திட
யாதிக் கவனம் கலந்தெங்கும் சுற்றிட
அயாதிய ஞானம் அஞ்சாகும் சித்தியே. (126)

அஞ்சி உளத்தில் அழியாமல் காயத்தை
மிஞ்சியே கற்பம் விளம்பினேன் நூற்றெட்டு
தஞ்சம் உறவே தான்தின்ன வல்லோர்க்கு
பஞ்சை நரை போய்ப் பதின்கோடி வாழ்வரே. (127)

வியாதிகள் நீங்கி வெகுநாள் வாழ்வதற்கும், நரைகள் நீங்கவும், கவுன மார்க்கத்தில், (ஆகாயத்தில் பறக்கவும்) சஞ்சரிப்பதற்கும் ஞானம் கைகூட வேண்டியும் நூற்று எட்டு கற்ப மருந்துகளைக் கூறியுள்ளேன். அவற்றை முறையாக அறிந்து உட்கொண்டால் காயம் மாயாமல் நிற்பதோடு நரைதிரைகள் நீங்கப் பெற்று பல கோடி யுகங்கள் வாழலாம்.

வாழ்வது என்றல்ல மகாசித்தி எட்டுமாம்
கேழ்வது என்றெண்ணிக் கெடுக்காதே மாண்பாரே
தாழ்வது ஒன்றில்லைச் சதகோடி வேதையாம்
ஆழ்வதே வேதை அதுகாணுங் கற்பமே. (128)

கற்பம் ஏதென்று கசடரே எண்ணாதே
அற்பமும் அல்ல அகண்ட மகாசித்தி
சொற்பமும் அல்லத் தொடுமுன் னவலோக
மற்படுந் தங்க மாற்று பதினாறே. (129)

மேலும் அட்டமா சித்திகளும் உண்டாகும். அது மட்டுமின்றி கோடி வகையான வேதைகள் கைகூடும். வேதை பலிதமானால் கற்பமும் சித்தியாகும். ஆனால் கற்பத்தை சாதாரணமாக நினைக்காதே. அதனால் அகண்ட சராசரத்தையும் சுற்றி வரலாம். பஞ்சலோகங்களும் தொடு முன் தங்கமாகும். அதுவும் பதினாறு மாற்றுக் கொண்டதாயிருக்கும்.

பதினாறு மாற்றுபோல் பாலையா முன்தேகம்
விதிநாலுங் கையோன் மெய்யெழுத்தைப் பொய்யா
மதிநா்று மீசன் வாகுற்ற முறைபாடு
கெதிநாற வுண்டு கிட்டாய் சமாதியே. (130)

லோகங்கள் பதினாறு மாற்றாக மாறினது போல் உன் தேகம் பதினாறு வயதுடையதாய் மாறும். பிரம்மாவால் எழுதப்பட்ட தலை எழுத்து பொய்யாகும். சிவபெருமானால் அருளப்பட்ட நூறுவகையான கற்பத்தை உட்கொண்டு சமாதியில் அமருவாயாக.

சமாதிக்கு முன் செய்யும் சங்கை வகைகேள்
அமாதித்த அம்பிகை யாலே வழலைபோம்
புமாதித்த குஞ்சரன் போகும் மலமெல்லாம்
தமாதித்த கும்பகந் தம்பிரான் ஆகுமே. (131)

சமாதிக்கு செல்வதற்கு முன் சில வகையான கிரியைகள் செய்தல் வேண்டும். அதாவது தாயை வணங்கி நின்றால் உடலில் உள்ள வழலை அகலும், விநாயகப் பெருமானை வணங்கினால் பழைய மலங்கள் அகலும், பிறகு வாயுவை அடக்கும் பயிற்சியில் சித்தியாகி வாயுவைச் செயித்தல் வேண்டும்.

ஆமே இதுமுன் அடவாகத் தீர்ந்தபின்
போமே யுறுமயம் புகட்டிய தீபமாய்
ஓமே பரத்தில் உறவாய் மனஞ்சேரும்
தாமே சிவமாம் தனிச்சிவம் இல்லையே. (132)

மேற்கூறிய மூன்று வகையான பயிற்சியினை செய்வதால் சுழிமுனை திறந்து ஜோதி பிரகாசிக்கும். அப்பொழுது மனமானது பரம் பொருளிடம் ஒடுங்கும். அச்சமயம் நீ சிவமாக நிற்பாய். உன்னையன்றி வேறு சிவமில்லை இதை நன்றாக அறிந்து கொள்.

இல்லை யிதத்தே இறுக்கியே பாராதே
மல்ல லயத்தில் மதிட்டுமே மாயாதே
தில்லையே முத்தினைச் சேர்ந்திடும் மாயோகம்
வல்லயார் சாவழி மார்க்கம் உமக் கென்னே. (133)

மேலும் இவ்வுலக வாழ்க்கையில் மனம் வைக்காமலும், மாயக் குழியில் சென்று மாயாமலும், தில்லை வனமான அம்பலத்தில் மனதை வைத்து உனக்கென்றே உள்ள மகாயோகப் பாதையில் ஏறி நில். (இடையில் மூலத்தில் மூன்று பாடல்கள் விடப்பட்டுள்ளன.)

மூக்கு நுனியில் மூட்டு மனத்தை நீ
மூக்கின் இடையோடு முழங்கு மசபைதான்
மூக்கின் இடைவிட்டு முன்னோடிப் போகாது
மூக்கின் ஒளியோடி மூட்டும் பிர்மாண்டமே. (134)

பிர்மாண்டமும் மூட்டிப் பேசுமே முன்னின்று
கர்மாண்ட காண்டங் கடுகு பொடியாச்சு
தர்மாண்ட மோட்சந் தனியாம் பரத்துள்ளே
நிர்மாண்ட சித்தாய் நிலைத்திடு மூலியே. (135)

எவ்வாறு ஏறுதல் வேண்டும் என நீ கேட்பாயாகில் சொல்கிறேன் கேள். மூக்கு நுனியில் மனதை வைத்து அங்கு கேட்கும் சபை மந்திரத்தை மனதார செபித்து மூச்சை வெளியே ஓடவிடாமல் இடர் நாடியின் வழியாக உள்ளே இழுத்து பிரம்மாண்டமான சகஸ்ராரத்தை முட்டுதல் வேண்டும். இதனால் ஞான ஒளி ஏற்படும். அவ்வொளி எங்கும் வியாபிப்பதாய் தோன்றும். அப்பொழுது அவ்வொளியானது உருவம் தாங்கி வந்து உன்னுடன் பேசும். அப்பொழுது கர்மத் தொகுதிகள் சிதைந்து தூளாய்ப் பறக்கும். மோட்ச சாம்ராஜ்யம் கைபெற்றவனாய் பரமான பூரணத்துடன் கலந்து சித்தனாக இருப்பாய். இனிகாயத்தை சித்தியாக்கும் மூலிகை பற்றி கூறுகிறேன் கேள்.

நோய் வரலாறு முற்றுப் பெற்றது.

மூலிகை கற்பங் கூறுகின்றது

மூலிகைக் கற்ப முயன்ற அறுபத்தும்
பாவி யுபரசம் பாங்காய் அறுபது
வாலிய சூதமும் தங்கம் மிகரண்டு
யோலி யொருநூற்றுப் பத்திரண் டொன்றே. (136)

உடலை திடப்படுத்தி உயிரை நிலைக்கச் செய்யும் சக்தி கொண்ட கற்பங்கள் அநேகம் உள்ளன. ஆனால் அவற்றில் மிகவும் முக்கியமான கற்பங்கள் மொத்தம்

நூற்றி இருபத்தொரு வகைகள் உள்ளன. இதில் மூலிகை கற்பங்கள் அறுபதும், உபரசங்களின் கற்பங்கள் அறுபதும் தங்கமும் ரசமும் சேர்ந்த கற்பம் ஒரு வகையும் அடங்கும்.

ஒன்றான கற்பத்தை உண்ணாதே மாண்பாகேள்
கண்ணான வேதைக்குக் கலங்கி அழுவார்கள்
பண்ணான கற்பம் பதித்திடு மேனியில்
தண்ணாய் நவலோகம் சாயப் பசும்பொன்னே. (137)

இவற்றைத் தவிர வேறு வகையான கற்பங்கள் கிடையாது. அப்படி இருந்தாலும் அவற்றை உட்கொள்ளுதல் கூடாது. கற்ப மருந்துகளிலும் மூலிகைகளிலும் நவலோகத்தை உருக்கி சாய்த்தால் உயர்தரமான தங்கம் (பொன்) உண்டாகும். (இவையே கற்ப மூலிகைகளுக்கும், மருந்துகளுக்கும் சோதனையாகும்.) இவ்வாறில்லாத மூலிகைகளையும் மருந்துகளையும் உட்கொண்டால் கற்பமும், வேதையும் சித்தியாகாது. ஆகவே சோதித்த கற்பங்களை மட்டுமே உட்கொள்ளுதல் வேண்டும்.

பொன்தான் பிறந்தது புகழான கற்பத்தில்
பொன்தான் பிறந்தது பேராந் துரிசியில்
பொன்தான் பிறந்தது புகழான கற்பத்தில்
பொன்தான் உபரசப் போக்கில் பிறந்ததே. (138)

தங்கம் செய்யும் வேதைத் தொழிலானது உயர்தரமான கற்ப மருந்துகளாலும் மூலிகைகளாலும், துருசாலும், உபரசங்களாலும் உண்டாகும்.

பிறந்திடுங் கெற்பந்தான் பேறாகத்தின் கையில்
கறந்திடும் வாமமுங் கடுமலமே போக்கு
முறந்து வழலையு முன்பித்தமும் நீக்கி
திறந்து புளியுப்பைத் தின்றிடாக் கியானியே. (139)

கற்ப மருந்துகளும் பரம்பொருளிடமிருந்து உண்டானவை. இதை உட்கொள்வதற்கு முன்பாக உடலில் உள்ள மலங்களையும் வழலை எனப்படும் ஈளையையும், பித்தத்தையும் போக்கி, புளி உப்பை நீக்கிட வேண்டும். (சாத்வீக உணவை கொள்ள வேண்டும்.)

குறிப்பு :- 1. கரிசாலை சாற்றுடன் சாராவின் நெய் கலந்து குழப்பிக் கொண்டு கட்டை விரலால் உள் நாக்கில் தடவினால் வழலை எனப்படும் கபமானது நீங்கும்.

2. ஏரண்டத் தெண்ணையை இடது கையின் ஆட்காட்டி விரலால் எடுத்து மேல்வாயின் உட்புறம் செலுத்தி வல-இடப்புறமாக மாறி மாறி தடவினால் பழைய மலங்கள் கழன்று போகும்.

3. விரர் சுண்டி வேரை பொடி செய்து (மூக்கு பொடியாக உபயோகித்தால்) மூக்கின் வழியாக உறிஞ்சினால் நுரையீரலில் தங்கியுள்ள அழுக்குகள் நீங்கி வாசி வலுப்பட்டு ஓங்கும்.

ஆனி யடிக்குளத் திலங்குந் திரு
மூனி வேரறுக் கன்னியும் முப்பதாங்
கானிய வைப்பசி கார்த்திகை சர்க்கரை
மேனியாம் கடுகுக்கு அனுபானம் சொல்வுதே. (140)

உடலில் உள்ள அழுக்குகளை போக்கிய பிறகு முதன் முதலாக கடுக்காயின் கற்பத்தை உட்கொள்ளல் வேண்டும். அது எவ்வாறு எனில் நன்றாக கடுக்காயை பொடித்து வஸ்திரகாயம் செய்து இரண்டு விரல் அளவு உட்கொள்ள வேண்டும். இக்கடுக்காய்த் தூளை ஆனி ஆடி போன்ற மாதங்களில் வெல்லத்திலும், ஆவணி, புரட்டாசி போன்ற மாதங்களில் இந்துப்புடனும், ஐப்பசி, கார்த்திகை போன்ற மாதங்களில் சர்க்கரையுடனும் உட்கொள்ள வேண்டும்.

சொல்லுமே மார்கழி தையுமே தோன்றிடும்
மல்லுமே மாசியும் பங்குனி தப்பினி
மெல்லுமே சித்திரை மேலாம் வைகாசியும்
நல்லதேன் கடுகுக்கு அனுபானம் ஆகுமே, (141)

மார்கழி-தை போன்ற மாதங்களில் சுக்கின் கியாழத்திலும், மாசி-பங்குனியில் அமுரியுடனும், சித்திரை-வைகாசியில் சிறு குறிஞ்சித் தேனிலும் உட்கொள்ள வேண்டும். இதுவே கடுகு எனப்படும் கடுக்காய்க்கு கூறப்பட்ட அனுபானமாகும்.

அனுபானத் தோடே யந்த - மாசத் தையில்
கனுவாகக் கொண்டிடுங் காணரை மண்டலம்
பனுவாய் மலமறும் பாங்காய் வழலைபோம்
வினிபா றிதை விட்டு வேண்டுங் குமரியே. (142)

மேற்கூறிய அனுபானத்துடன் அந்தந்த மாதங்களில் அரை மண்டலம் உட்கொண்டால் தேகத்திலுள்ள கசடுகள் நீங்கப் பெற்று சுத்தமாகும். பிறகு குமரி எனப்படும் கற்றாழைக் கற்பத்தை உட்கொள்ள வேண்டும்.

குமரிக் கற்பம்

குமரியுடன் கள்ளிக்காய் கூறாக் கூட்டிடு
அமுரியுடன் கொள்வது அண்ட மலமறும்
உமுரியாம் மாம்பிஞ்சு உள்ளே விசிறிடும்
அமுரியாங் காயம் அழியாது தானாமே. (143)

கற்றாழையை கள்ளிக்காயுடன் சேர்த்து அமுரியுடன் கலந்து உட்கொண்டால் தேகத்திலுள்ள மலங்கள் அகன்று மாம்பிஞ்சு போல் தேகம் மாறி விடும். தேகமானது மாம்பிஞ்சு போல் மாறினால் பிறகு ஒரு காலும் அதற்கு (மரணம்) அழிவு ஏற்படாது.

மிளகு கற்பம்

தானாம் இக்கற்பம் தனியொரு மண்டலம்
ஆனால் மலமும் அளவற்ற வாமமும்
ஆனாய் வழிந்து வுறுதிப்படுந் தேக்கு
தானாம் இதைத் தாண்டித் தன்னூறுங் கொண்டிடே. (144)

மேற்கூறிய குமரிக் கற்பத்தை ஒரு மண்டலம் உட்கொண்டால் கபம், மலம் போன்றவைகள் விலகி (போன்ற அமுக்குகள் நீங்கி) தேகம் சுத்தியாகும். இக்கற்பத்திற்கு பிறகு மிளகை அமுரியுடன் கலந்து உட்கொள்ள வேண்டும். முதலில் இரண்டு மிளகிலிருந்து தொடங்கி நூறு மிளகு வரை இரண்டிரண்டாக ஏற்றி உட்கொள்ள வேண்டும்.

அமுரியில் மிளகு

நூறு மிளகு நுகரும் அமுரியில்
வேறு மருந்தென்ன இக்காய சித்திக்குத்
தேறி யிதனைக் செலுத்த வல்லார்க்கு
மாறி மயிரும் மறுமயிர் ஆகுமே. (145)

இரண்டு மிளகிலிருந்து உயர்த்தி நூறு மிளகு வரை அமுரியில் கலந்து எவர் உட் கொள்கிறாரே, அவருடைய காயம் சித்தியாகி ்டப்படும். அதுமட்டுமின்றி நரைத்த மயிர்கள் நீங்கி கருமை நிறங் கொண்ட மறும ர் முளைக்கும்.

ஆமிகு கற்பம் அடவாக மண்டலம்
வாகுடன் தின்று வளமாகத் தீர்ந்தபின்
பாகும் பொறுக்கும் பலகற்பம் தானோர்க்கும்
காகங் கறுத்த கரிச்சாலை தின்றிடே. (146)

மிளகு கற்பத்தை ஒரு மண்டலம் கொண்ட பிறகு பல வகையான கற்பங்களை உட்கொள்ளலாம். ஆனால் அவற்றில் கரிசாலையை முதலில் உட்கொள்வதே சால சிறந்ததாகும்.

தின்ற கரிச்சாலை தேகந் திரைபோகும்
தின்ற கரிச்சாலை சிறந்த நரைப்போகும்
தின்ற கரிச்சாலை தேகம் சிறுபிள்ளை
தின்ற கரிச்சாலை சிதையாது வாக்கையே. (147)

கரிய நிறங் கொண்ட கரிசாலையை உட்கொள்வதால் தேகத்திலுள்ள நரை திரைகள் மாறி இளமை ஏற்படும். பிறகு என்றென்றும் அழியாமல் நிற்கும்.

பஞ்ச மூலிகை கற்பம்

ஆக்கை இரண்டுக்கு அகமாம் பொற்றலை
வாக்கும் குறிய வல்லாரையோ டைந்தும்
பாக்கள வாகிலும் பாலில் குழைத்துண்ண
யாக்கை அழியாது ஆயிரத் தாண்டாமே. (148)

ஆண்டா யிரம் அளந்துமே கொண்டலந்
தீண்டாதே பெண்ணைத் தேகம் கொடுபோகும்
பூண்டவிது அஞ்சும் பொலியக் கறுப்பாக்கி
ஊண்டியே ஏந்தி உறுதியாம் சங்கையே. (149)

கரிசாலை கற்பத்திற்கு பிறகு இரண்டு வகையான காக்கைமூலி, பொற்றலை, அவுரி, வல்லாரை போன்ற ஐந்து வகையான மூலிகைகளை (கருப்பேற்றி) கரிய நிறமாக மாற்றி ஒரு மண்டலம் வீதம் தனித்தனியாக முறையே பாக்களவு பாலில் அரைத்து உட்கொண்டால் கேமானது திடப்பட்டு ஆயிரமாண்டு சென்றாலும் அழியாமல் நிற்கும். முக்கியமாக இக்கற்பங்களை உட்கொள்ளும் பொழுது பெண்களின் சேர்க்கையை நீக்க வேண்டும். இல்லையேல் தேகம் விரிந்து போகும். (*கவனிக்க* :- உரை சரியாக எழுதப்பட்டுள்ளது பாடல் தவறாக அச்சிடப்பட்டுள்ளது)

சங்கோல் பத்திரி தக்கோலம் சாதிக்காய்
செங்கோல் வித்துடன் சீர்வன்னிப் போர்கொண்டை
முன்கோல் வேருடன் முளக்கோல் நெய்கலந்து
ஐங்கோலங் கொண்டால் தான்கோலங் கொண்டாமே. (150)

மேற்கூறிய ஐந்து வகையான மூலிகையை உட்கொண்ட பிறகு ஆறாவது கற்பமாக இதை உட்கொள்ள வேண்டும். அது என்னவெனில் சாதிபத்திரி. வால்மிளகு சாதிக்காய், திப்பிலி, பொற்சீந்தில், பொற்கொன்றை, விடத்தேர், ஏலம் போன்றவைகளை பொடியாக்கி கொம்புத் தேனில் கலந்து நெய்யில் உட்கொண்டால் புத்தி திடப்பட்டு மனம் ஒரு நிலையாகி ஆத்ம க்ஷாஷாத்காரம் ஏற்படும். (தான்யார் என்ற கேள்விக்குப் பொருள் விளங்கும் - சமாதி கிட்டும்) (உரை சரியாக உள்ளது தவறு பாட்டில் தான்.)

கொண்டபின் ஏழாந்தரம் கற்பமே கேளும்
தண்டய தங்கம் தனிச்சூதம் அப்பிரேகம்
ஒண்டி யுருக்கி உணர்வாய்ச் செந்தூரித்து
தண்டும் புணவெடை தான்தினந் தின்னுமே. (151)

தின்னவே மேனி சிறுகதிர் போலாகும்
மன்னிய காயந்தான் வாங்கும் கெவனமாம்
முன்னிடில் மேலே ஒளித்த மனோன்மணி
பன்னிய லாவயிற் பார்க்கலாம் பாருமே. (152)

ஆறாம் தரமான முன்கற்பத்தை உட்கொண்ட பிறகு, ஏழாம் தரமான (ஏழாவதான) கற்பத்தை உட்கொள்ள வேண்டும். அதைப் பற்றிக் கூறுகிறேன் கேள். தங்கம், ரசம், அப்பிரகம் இவை மூன்றையும் சேர்த்து நன்றாக உருக்கி செந்தூரம் செய்து அனுதினமும் பண எடை உட்கொண்டால் இத்தூல தேகமானது சூரியன் போல் பிரகாசிக்கும். கெவுனமார்க்கம் (ஆகாயத்தில் பறக்கும் தன்மை) சித்தியாகும். அதுமட்டுமின்றி உள்வாயான அன் நாக்கில் மனோன்மணியான தேவியை காணலாம். (பார்த்து மகிழலாம்.)

வாத சத்துச் செந்தூரம்

பாருமே படர்ந்தரம் பாங்கான கற்பத்தை
தாருமே கெந்தகச் சத்தொடு தங்கத்தைச்
சேருமே சூதம் சிறக்க வுருக்கிட
ஏருமே கூட்டி இயல்பாச் செந்தூரியே. (153)

செந்தூரந் தின்றித் தின்மேராப் பணவெடை
சந்தூரு மேனி களங்கத்துப் பொன்போலாம்
எந்தூரு போகலாம் எங்கும் இருக்கலாம்
செந்தூரக் கெவன மாங்கிஷம் நீலமே. (154)

மேற்கூறிய செந்தூரத்தை ஒரு மண்டலம் உட்கொண்ட பிறகு, அடுத்த கற்ப மருந்தை உட்கொள்ள வேண்டும். அது என்ன வென்றால் கெந்தகச் சத்துடன் தங்கம், சூதம் போன்றவைகளை முறையாக கூட்டி செந்தூரித்து அனுதினமும் பணவெடை உட்கொண்டால் தேகத்தில் பொன் போன்ற காந்தி ஏற்படும். மேலும் மனோவேக சஞ்சாரம் கெவுனம் போன்றவை சித்தியாகும். தேகத்திலுள்ள மாமிசங்கள் நீல நிறமாக மாறும்.

நீலஞ்சேர் அதின் நேரிடை கெந்தகம்
ஏலங் காலுடனே மிரதமும் அவ்விடை
கோல நீலியின் சாற்றில் குழைத்துண்ணப்
பாலனும் ஆவார் பார்நந்தி ஆணையே. (155)

நீலம், கெந்தகம் இவை இரண்டையும் சம எடை கூட்டி இவற்றுக்கு கால் பங்கு ஏலமும், இம் மூன்றின் எடைக்கு சமபங்கு சூதமும் (ரசமும்) கூட்டி நீலியின்

சாற்றால் அரைத்து உட்கொண்டால் சிறுபிள்ளையாக மாறுவார்கள். நந்தியின் மீது ஆணையிட்டு கூறுகிறேன் இவையாவும் கட்டாயம் பலிதமாகும், (பொய்யாது)

ஆணு மலசலம் அடவான பாண்டத்தில்
பூணவே விட்டுப் பொலிவாக மண்டலம்
காணக் கரைத்துக் கலந்துற்ற சூதத்தை
ஊணவே சாத்தா லுறவாய் உருக்கிடே. (156)

உருக்கி எடுத்து வுறவிடு சாரணை
செருக்கிய பாலுடன் செய்வாய்க் கனபுடம்
பெருக்குங் கவனந்தான் பேரண்டஞ் சுத்திடும்
வருக்கிய சித்தரில் வாசிப்பார் பாருமே. (157)

நல்ல வியாதியற்ற தேகமுள்ளவரிடமிருந்து ஒரு பாண்டம் முழுவதும் சிறுநீர் வாங்கி அதில் ரசத்தை விட்டுக் ஒரு மண்டலம் ஊற வைத்து கசடு நீக்கி கரைத்து சத்தாக உருக்கி எடுத்து சாரணை ஏற்றி, பாலுடன் சேர்த்து கனபுடமிட்டு வைத்துக் கொண்டால் பேரண்டம் முழுவதையும் ஒரு வினாடியில் சுற்றக் கூடிய வலிமை ஏற்படும். மேலும் அங்குள்ள சித்தர்களிடம் பேசலாம்.

பத்தியம்

பாருமே கற்பம் பலபலவே தின்னில்
ஆருமே கொள்ள வரையாது நற்றேகம்
வாருமே னென்பார் மகத்தான சித்தர்கள்
காருமே பத்தியம் காட்டினார் பாலன்னே. (158)

முறையாக பலவகைப்பட்ட கற்பத்தை உட்கொண்டால் தேகமானது திடப்பட்டு அழியாமல் நிற்கும் மேலும் சித்தர்கள் உன்னைக் கண்டவுடன் வாருங்கள் சுவாமி! என்று மரியாதையுடன் அழைப்பார்கள். ஆனால் கற்பத்திற்கு மிகவும் அவசியமானது பத்தியமே அவற்றை கூறுகிறேன் கேள்!

ஆகும் பண்டங்கள்

பாலுடன் வெல்லம் பயறும் அரிசிநெய்
போல்வகைத் தின்பனை பொற்கனி தேனுடன்
மேலப் பணியார மிளகு பொன்னாங்காணி
சீர்பெறும் யோகிகள் சித்தர்கள் பூசையே. (159)

பால், வெல்லம், பயறு, அரிசி, நெய், நல்ல பழவகைகள், தேன், பணியாரம், மிளகு, பொன்னாங்கன்னி, போன்றவையும், சித்தர்களின் பூசையும் யோகியின்

தரிசனமும், பத்தியத்திற்கு ஏற்றதாகும். (சித்தர்களின் பூசையாலும், யோகிகளின் சேவையாலும் பாவங்கள் நீங்கும். மேலும் உணவிலுள்ள குற்றங்கள் நீங்கும். ஞானம் உண்டாகும் என்பதால் இங்கு இவற்றை கூறியுள்ளார்.)

ஆகாத பண்டங்கள்

புளிக்கறி கைப்பு புலாலாட்டு இறைச்சியும்
களிம்பு சுண்ணாம்பு கடுகுள்ளிக் காரெண்ணே
யளிம்பு லவணம் ஆகாது இவையொன்று
முளம் பெறு சித்திக்கும் யோகிக்கும் ஒன்னாதே. (160)

தலை முழுக

யோகிடு முகறிழை யுறவாடல் நீராடல்
பாகிய நெய்யாம் பலபல சித்தர்க்குத்
தாகித்த தாகம் தனிப்பாலும் செந்நீரும்
ஆகி முழுக வயந்த அழகெண்ணே. (161)

புளி, உப்பு, கசப்பு, புலால், இறைச்சி, சுண்ணாம்பு, கடுகு, பூண்டு, வெங்காயம், காரம், எண்ணைய், போகம் போன்றவைகள் கற்பத்திற்கு ஆகாத பண்டங்களாகும். ஆகையால் இதை சித்தர்களும், யோகிகளும் விடுத்தல் வேண்டும். மேலும் தாகமெடுத்தால் பச்சை நீரை பருகுதல் கூடாது. பாலுடன் கூடிய நீரைத் தான் பருக வேண்டும். அதுவும் வெண்ணீராக இருத்தல் வேண்டும். இனி தலை முழுகும் முறையைக் கூறுகிறேன் கேள்.

அழகு நுதலி அதிசயமே கேளாய்
களவு காயங் கலந்த அந்நீரிலே
மிளகு மஞ்சள் கடுநெல்லி வேம்பிடில்
இளகுங் காயம் இறுகுங் கபாலமே. (162)

கடுக்காய் பருப்பு, மிளகு, மஞ்சள், நெல்லிமுள்ளி, வேப்பங்கொட்டை போன்றவைகளை பாலில் அரைத்து தலை முழுகினால் தேகம் திடப்படுவதோடு கபாலமும் இறுகும்.

கபாலம் இறுகும் கண்ணும் துலக்கமாம்
அபால மிந்தனி அதிவண்டு போலாகும்
விபாலத் திசைவாய்வு வேதனை செய்யாது
இபாலத் தினுள்ளே எளிதாக மத்தியே. (163)

கபாலம் இருகுவது மட்டுமின்றி கண்கள் பிரகாசமாகும். தலை முடியானது வண்டு போல் கறுப்பாயிருக்கும். தசவாயுக்கள் உடலை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யாது எளிதாக கற்பங்கள் சித்தியாகும்.

மத்தித்த சித்தர்கள் மாள்வரே மாளாரோ
உத்தகரு முறைத்திடா யென் நந்தி
பத்தித்த பூரணம் பார்த்தவர் மாளார்கேள்
குத்தித்த கற்பம் முன்னுண்டார் கேட்டிட்டே. (164)

முறையாக கற்ப முண்ணுதல், தலை முழுகுதல், பத்தியம் காத்தல், பூரணத்தில் மனதை நிறுத்துதல் போன்றவைகளை நடத்துபவர்களுக்கு இறப்பு என்பது ஒருகாலும் அணுகாது என்று எனக்கு என் குருவான நந்தி பகவான் கூறினார்.

மூலிகை கறுப்பு ஏற்றும் வகை

கேட்டிடு வஞ்சுக் கொடியான மூலிகை
நாட்டிடு கரிசாலை நலமாய்க் கறுப்பேற
வாட்டு குழிவெட்டி அதிலேநல் மண்ணிட்டு
பூட்டு செங்கொட்டை புகழாக வெட்டியே. (165)

முன் சொன்ன ஐந்து வகையான மூலிகைகளை அதாவது காக்கை மூலி, பொற்றலை, அவுரி, வல்லாரை மற்றும் கரியோடு சேர்த்து ஆறு வகையான மூலிகைகளை கருப்பேற்றும் முறையைக் கூறுகிறேன் கேள். நன்றாக ஒரு இடத்தை சுத்தி செய்து அவ்விடத்தில் குழி வெட்டி அக்குழியில் நல்ல கருத்த நிறங் கொண்ட மண்ணைக் கொட்டி அதில் செங்கொட்டைகளை நறுக்கி போட வேண்டும்.

வெட்டிப் பரப்பி மேலே நல் மண்போட்டு
ஒட்டி விளையட்டுறவரு நல்லநீர்
வட்டிமுத லத்தான் வளமாம் அரைவாசி
கட்டி விளையக் கலர்மண்ணீக் கொட்டையே. (166)

கொட்டை தனைப் போட்டுக் கொட்டிப் பரப்பிட்டு
சட்டையா முன்விரை தானே தனியிட்டு
அட்டிய நீர்விட்டு அடவாய் அருக்கு நீ
இட்டமாய் மூணாந்தரம் இப்படிப் பண்ணே. (167)

அக்கொட்டைகளின் மேல் மீண்டும் நல்ல மண்ணை கொட்டி நீரை வார்த்து கொட்டைகளை அழுக செய்து பிறகு மண்ணை கிளறி ஆறவிட்டு அதில் முன் கூறிய மூலிகை விதைகளை போட்டு பயிராக்கினால் மூலிகைகள் பாதியளவு கருப்பாகும். பிறகு மீண்டும் முன் போல் செங்கொட்டைகளை இட்டு கலர் மண்ணைக் கொட்டி பாதிகருப்பான மூலிகை விதையை பயிராக்கினால் முக்கால் பாகம் கருப்பு நிறங் கொண்டதாயிருக்கும். பிறகு மீண்டும் முன் போல் செங்கொட்டைகளையிட்டு பரப்பி நீர் வார்த்து அழுகச் செய்து மணலை கிளறி

ஆரவிட்டு முக்கால் பாகம் கருத்த செடிகளின் விரையை விதைத்து பயிராக்கினால் முழு கருப்பாக மாறும். இவ்வாறு முறைப்படி மூன்று முறை செய்து கருப்பாக்கிய மூலிகைகளை மட்டுமே உட்கொள்ள வேண்டும்.

மூணாந் தரத்தில் முழுகறுப்பா மேலா
மாணான சித்தர் களங்கங்கு செய்வது
வேண கெடிகள் வெளுப்பு கறுப்பாகும்
ஊணவே செய்துண்ட உத்தமர் தான்கேளே. (168)

மூன்றாந்தரமான முழுக் கருப்பு மூலிகளை சித்தர்கள் முறைபடி செய்தல் வேண்டும். முறையாக செய்வதால் வெண்மையான செடிகள் கருத்த நிறங் கொள்ளும் உத்தமர்களே இதை செய்து முடிப்பார்கள். (மற்றவர்களுக்கு பலியாது). மூன்றாந்தரமான முழுகருப்பு மூலிகையே மிகவும் சிறந்ததாகும்.

கேளு சதாசிவன் கெடியேழு லட்சந்தான்
நாளு மயேசுரன் நான்மூன்று லட்சந்தான்
உளழிய ஈசனு முயன்றிரு லட்சந்தான்
வாழியான் கொண்டது வைம்பத் தாயிரமென்றே. (169)

சதாசிவன் ஏழு லட்சம் வகை கற்பத்தையும், மகேஸ்வரன் மூன்று லட்சம் வகை கற்பத்தையும், ஈசன் இரு லட்ச வகையும், திருமால் ஐம்பதாயிரம் வகை கற்பத்தையும் உட்கொண்டார்கள்.

என்னப் பிரமன்றா னெழுமுப்பத் தாயிரம்
பன்ன முனிவர் பகிர்ந்ததில் ஆயிரம்
மன்னிய சித்தர்கள் மற்றுள்ளோர் கொண்டார்கள்
தன்ன நல்மூவர் சாவு பொய்யானதே. (170)

பிரம்மா முப்பதாயிரம் வகையான கற்பத்தையும், முனிவர், சித்தர், ரிஷி போன்றவர்கள் ஆயிரம் வகையான கற்பத்தையும் உட்கொண்டார்கள். அதனால் அவர்கள் (சாவு) மரணம் இல்லாமல் வாழ்ந்தார்கள் என கூறப்பட்டது.

பொய்யாச்சு சாவென்றார் போனார் பிரமன்மால்
மெய்யாய் அடைந்தார்கள் விளங்கிய மூவரும்
ஐயா விதுலென்ன ஆச்சரியஞ் சொல்லாய்
மையான கன்னிகள் மாய்த்தால் மாண்டதே. (171)

ஆனால் அவர்களும் ஒருநாள் மாண்டு போனார்கள். பிரம்மா, மால், ருத்திரன் போன்றவர்களும் வையகத்தில் இல்லாமல் போனார். இதற்கு காரணம் என்ன வென்றால் பெண்ணின் சேர்க்கையேயாகும்.

மாண்டதி தினாலோ மாதிண்டோ வென்னந்தி
பூண்ட திவர்கள் புகழ் வாழ்ந்த தெவ்விடம்
வாண்டது மேரு வடியிற் கணேசன் கேள்
தாண்ட வதின்மேலே தான் பிரமாதியே. (172)

பெண்ணின் சேர்க்கையால் மாண்ட இவர்களை காட்டிலும் பெண்ணை அணையாமல் வாழ்ந்த என் குரு நந்தி மேலானவராவார். முன் கூறிய ருத்திரன், மால், பிரம்மா, கணேசன் போன்ற எங்கே (வாழ்ந்தார்) வசித்தார்கள் என்று கேட்பாயாகில் கூறுகிறேன் கேள். மகா மேரு பர்வதத்தின் கீழே கணேசனும், அதற்குமேல் பிரம்மாவும் வாழ்ந்தனர்.

பிரமாதி மேலே பிறந்தமால் பட்டணம்
அறமாதி மேலே யானுட பட்டணம்
நிறமாய் அதின்மேலே நின்ற மயேசுரன்
தறமா யதின்மேல் சதாசிவன் வாழ்ந்ததே. (173)

பிரம்மாவின் பட்டணத்துக்கு மேல் விஷ்ணுவின் பட்டணமும், விஷ்ணுவிற்கு மேல் ருத்திரனுட பட்டனுமும் அதற்கு மேல் மகேஸ்வரனின் பட்டணமும் மகேஸ்வரத்திற்கு மேல் சதாசிவத்தின் பட்டணமும் இருந்தது. அங்குதான் அவர்கள் அனைவரும் வாழ்ந்தார்கள்.

பிண்ட உற்பனம்

வாழ்ந்த விதஞ்சின்மேல் வாசலில் சிற்பரி
ஆழ்ந்த வதின்மேல் அணுகும் பராபரம்
வீழ்ந்த வசபை விடுநாலோடு எங்குமாய்
சூழ்ந்தவை கண்டந் துலையாப் பிரமமே. (174)

இவர்கள் ஐந்து பேருடைய ஸ்தானத்திற்கு மேல் வாசலில் சிற்பரியும், சிற்பரியின் பராபரமும், பராபரத்திற்கு மேல் எங்கும் வியாபித்த அசபையும் இருக்கிறது. இதை முறையாகக் கண்டவர்கள் மூலப் பொருளாவார்கள். (அதாவது பிரம்மத்தில் ஒன்றாவார்கள்.)

பிரமம் முதலாய்ப் பிறந்ததே இவ்வண்டம்
அரமாண்ட பிண்டத்தில் அப்படியே கண்டேன்
தரமாண்ட லோகத்தோர் தாக்கியும் நோக்கியும்
உரமாணக் காணாது உழல்வது என்னந்தியே. (175)

பிரம்மா முதல் எல்லா தேவர்களும் இந்த பூமியில் பிறந்தவர்களே இவ்வண்டத்தில் எது எதுவெல்லாம் உள்ளதோ அதுவே இப்பிண்டத்திலும்

தேகத்திலும் உள்ளது. இவ்வாறிருந்தும் இவ்வுலகமக்கள் பிரம்மத்தை அறியாமல் மாயையில் உழல்வதற்கு என்ன காரணம்? என்று கூறுங்கள் நந்தி பகவானே!

நந்தியை நோக்கார் நடுவணை நோக்குவார்
பந்தியை நோக்கிடார் பார்ப்பார் சபையை
அந்தியை ஏறையில் ஆகாக் குரங்குதான்
வந்திட வேசனம் வாசனை பூணுமே. (176)

நந்தியை அறியாமலும், சுழிமுனையை அறியாமலும், வாசியான நாதவிந்தை அறியாமலும் அசபை மந்திரத்தை செபிப்பார்கள்! இவ்வாறு மேலிரண்டை அறியாமல் அசபையை காண ஏறினால்! மனக் குரங்கானது மாயா வாசனையால் இழுக்கப்பட்டு தள்ளாடும்!

பூணிடில் வாசம் பொறியில் மனமோடி
யூணிடி யலட்சிய முழன்று சுழன்றிடும்
கோணிக் குரங்கால் குறிநூறுக் கெய்யாது
பேணிப் பிடித்துப் பிதற்றுவார் பேயரே. (177)

அப்படி மாயா வாசனை வந்துகூடும் பொது மனமானது பொறிகளின் வழியில் சென்று திரியும்! அப்படி பொறிகளின் வழியில் திரிந்தால் லட்சிய பாதையை விட்டு அலட்சியமான பாதையில் சிக்கி சுழலும் கோணலாக நூறு முறை கற்களை எரிந்தாலும் ஒரு கனியும் விழாதது போன்று நேரான முறையில் மனதை செலுத்தாதவர்கள் பேய் பிடித்தவர்களைப் போல்! பிதற்றி அலைவார்கள்!

பிதற்றாமல் நோக்கப் பிரம வழிகாண
மதத்த மதுவுண்டு மனதெண்ணப் பூரண
மதைத்தானே யான்காணா வதுவென்னை யுட்கொள்ள
எதிர்த்தாலே யாகு மென்னீச நந்தியே. (178)

ஈசனைக் காண வெளிதாய்ப் பாங்கான
வாசானைத் தாண்டி யகண்ட மயங்காண
வாசான வாசல் மனோன்மணி பேசிட
யோசனை சூதமும் உயர்ஞானம் ஒக்குமே. (179)

இவ்வாறு பிதற்றல் வழியில்லாமல் ஞான மார்கத்தில் சென்று அமிர்தமுண்டு மனதை பூரணத்தில் லயிக்கச் செய்ய வேண்டுமானால் என்னுடைய ஈசனான நந்தியின் அருள் வேண்டும்! நந்தியை காண்பது என்பது மிகவும் கடினமான காரியமாகும்! அவரைக் காண வேண்டுமென்றால் மாயா வாசனையை கடந்து அகண்ட மயமாய் நின்ற மனோன்மணியைக் கண்டால்தான் நந்தியின் தரிசனம் ஏற்படும்! அதனால்

ஞானமும் ஏற்படும். இந்த ஞானமானது சாரணை தீர்த்த உயர்வான சூத்திரத்திற்கு சமமாகும்!

ஒக்குமே சூதமும் ஒப்பற்ற ஞானமும்
சிக்குமே பூரணம் தெவிட்டாதே காணாமோ
மக்குமோ வாசனை மனக்குரங்கு ஏகுமோ
தக்குமே தேகஞ் சாத்திடா என்னந்தி. (180)

உயர்வான சூதமும் ஞானமும் சமமாக நிற்கும், அந்த உயர்வான ஞானத்தால் பூரணம் கையில் சிக்கும் அதனால் தெவிட்டாத இன்பம் உண்டாகும். இந்த ஞானத்தை அடைந்தவர்களிடம் மாயா வாசனையும்! சஞ்சலமான மனமும் ஏற்படாது. தேகமும் நிலைத்து நிற்கும். நந்தியின் ஒளியும் மிஞ்சிடும்!

சாற்றுங் குளிகையைத் தான்வாயிலே வைத்து
ஏற்றியே நீபார் ஏழுசபை காணும்
போற்று மனோன்மணி புகழுங் கடந்தபின்
தீற்றிய பூரணம் நிர்மலங் காணுமே. (181)

இவ்வகையான ஞானத்தை அடைந்த பிறகு குளிகையை வாயிலிட்டுக் கொண்டு வாசியால் மேல் நோக்கினால் அசபைக் காணும் அவ்வசபைக்கு மேலுள்ள மனோன்மணியைத் தாண்டினால் நிர்மலமான பூரணம் கிட்டும்!

நிர்மலம் ஆகும் நீண்ட வடகோணார்
நிர்மலம் ஆகுமே நின்றுடல் பூரணம்
நிர்மலம் ஆகுமே நின்சாய்கையே பொய்யாம்
நிர்மலம் ஆகவே நின்றிடில் காணுமே. (182)

நிர்மலமான இப்பூரணத்தில் நின்றால் மனமும் பூரணமாகும். மாயை விலகும், பொய்யான கற்பிக்கப்பட்ட அக்ஞான பேதம் விலகும். ஆகவே மனம் நிர்மலமாக வேண்டுமானால் இப்பூரணப் பொருளுடன் கலந்து நில்!

காணும் வழியேது காரணா யென்னந்தி
பூணும் விளக்கில் ஒருதீபங் கீழ்நோக்கி
ஆணிய விளக்கே வந்த புகையொடு
பூணியே தீபம் பொரிந்தங்கு பத்துமே. (183)

நிர்மலப் பொருளிடம் எப்படி கண்டு நிற்பது என்பதை கூறும் நந்தியே! ஒரு விளக்கில் தீபமேற்றி அதன் மேல் அடுக்கடுக்காய் விளக்குகளை வைக்குங்கால் அடியிலுள்ள விளக்கின் உஷ்ணத்தாலும் புகையிலுள்ள தீட்சுஷண்யத்தாலும் மேலுள்ளவைகள் பற்றி எரியும்.

பத்திய தீபம்போல் பராபரங் கீழ்நோக்கில்
எத்தி எடுக்குமிது காண் மகாசித்தி
அத்தி குளிகையும் அப்படியே காணும்
முத்திக்கு மாமேதான் முன்னின்று காணுமே. (184)

அதே போல் தான் பராபரமான பொருள் கீழ்வழியாக மேல் நோக்கில் நாதம் மேல் நோக்கி கிளம்பும். அதனால் நிர்மலப் பொருளும் சிக்கும். அதேபோல் குளிகையும் நாதத்தை மேல் நோக்கி செலுத்தி முக்திக்கு வழி காட்டும். (ஆகவே விளக்கின் தீபம் - பராபரம்) குளிகை ஆகிய மூன்றும் சமமானதாகும்).

பற்பம்

காணுமே தேகந்தான் அகத்தின் நடுவோடும்
பூணுமே தேகம் பிடித்த விடம் பொய்யாம்
கோணுமே மேனி கொழுந்தாகும் சோதிபோல்
ஆணுமே காணும் அய்யா மறையுமே. (185)

பூரணப் பொருளானது இத்தேகத்திலுள்ள நடுமையான சுழிமுனையின் வழியாக மேல் நோக்கி சஞ்சரிக்கும். அப்பூரணப் பொருளே உண்மை தேகம் என்ற அபிமானம் பொய்யாகும! இதை அறிந்தால் ஆணவங்கள் அகன்று தேகம் (இவ்விடத்தில் சொல்லப்பட்ட தேகம் சூக்ஷ்ம தேகமாகும்) கற்பூரதீபம் போல் பிரகாசிக்கும்!

மறையும் பூரணம் வளர்ந்த முடியேது
மறையும் பூரணம் வாழா தடியேது
மறையும் பூரணம் வளர்ந்த பனிரெண்டில்
மறையும் பூரணம் வளமாக நாலெட்டே. (186)

தேகத்தில் சூக்ஷ்மமாய் நிற்கும் பூரணத்திற்கு (ஆதிபொருளுக்கு) அடிமுடியான ஆரம்பமும் முடிவும் கிடையாது அந்த பூரணமே எங்கும் வியாபித்து கலை வடிவாய் பிரிந்து நிற்கிறது! (பன்னிரெண்டு என்பதும் நாலெட்டு என்பதும் கலைகளை குறிக்கும். இதுவே வாசிகள் உள்வெளியாக பாயும் அளவை குறிக்கும்).

நாலேது எட்டேது நாட்டிடாய் என்னந்தி
காலோடு மூலங் கலந்தோடி மையத்தில்
பாலோடு மூட்டிப் பறிந்த பனிரெண்டும்
பூலோடு எட்டுந்தான் புக்கித்துப் பாருமே. (187)

பாரிது எட்டும் பறிபட்டது நாலும்
ஆரும் அறியார்கள் அண்டிடும் பூரணம்
வேரும் முதலும் விளங்கினேன் கேள்மூலர்
சேரும் இதனில் சேர்ந்தவர் சித்தரே. (188)

எட்டும் நாலும் என்னவென்று எனக்கு கூறியருளும் நந்தியே! கூறுகிறேன் கேள். மூக்கின் வழியாகச் செல்லும் வாசியானது மூலாதாரத்திலுள்ள சுழிமுனை வழியாக பன்னிரெண்டு விரலளவு சென்று எட்டு தளத்திலும் புக்கி நிற்கும் பன்னிரெண்டு விரலளவில் பன்னிரெண்டு கலைகளாய் பிரிந்து நிற்கும் வாசியானது ஓங்கார நாதத்தை தோற்றுவிக்கும் அந்த ஓங்கார நாதமே அடி முடியற்ற பூரணப் பொருளாகும். இந்த ஓங்காரமான பூரணப் பொருளிடம் சேர்ந்தவரே சித்தராவர்!

சித்தர்க்கு நாலோ தெவிட்டாத பூரணம்
மத்தித்த எட்டின்வகை சொல்லாய் என்னந்தி
ஒத்தித்த தொருவிரல் உயர்ந்த பரமாகும்
மத்திரண்டாந்தான் மகத்தான சிவமென்னே. (189)

மகத்தான மூவிரல் மாய மகாசத்தி
பகத்தான நாலும் பரிவான நாதங்கேள்
அகத்தான ஐவிரல் ஆதி மகாவிந்து
சகத்தான வாறுஞ் சதாசிவம் பாருமே. (190)

"பன்னிரெண்டு கலைகளில் கடைசி நாலு பங்கு ஓங்காரமான பிரம்மத்திடம் கலந்து நிற்கும். இதுதான் சித்தர்க்கு மிகவும் இன்பத்தை அளிக்கும்! இதில் மீதியுள்ள எட்டு பங்கை பற்றி நந்தி பகவானே கூறியருளுங்கள்!" கூறுகிறேன் கேள். முதல் பங்கு பரமாகவும், இரண்டாம் பங்கு சிவமாகவும், மூன்றாம் பங்கு மாயாசக்தியாகவும், நான்காம் பங்கு நாதமாகவும், ஐந்தாம் பங்கு ஆதிவிந்தாகவும், ஆறாம் பங்கு சதாசிவமாகவும்,

பஞ்ச பூத வேராஞ்சம்

மூறாரல் பார்க்கில் மயேசுரம் வேரரும்
மேரு தட்டாம லுயர்ந்திடு ருத்திரன்
சேரும் இதெட்டால் சீவனங்கேள் சஞ்சார
ஆரும் அறியார் அறிந்துகொள் உண்மையே. (191)

ஏழாம் பங்கு மகேஸ்வரனாகவும், எட்டாம் பங்கு ருத்திரனாகவும் நிற்கும். இந்த எட்டு வகையான பாகமாக பிரிந்து நிற்கும் கலைகளில்தான் ஜீவன் சஞ்சரிக்கிறது. இதை எவரும் அறிய மாட்டார்கள் நீ அறிந்துக் கொள். இதுதான் உண்மை!"

உண்மை தானிமை யொடுங்கும் வகைசொல்வாய்
வண்மைப் பிரமன்றான் மாலொடு சேருவான்
தண்மையாய் மால்தான் தனிருத்திரன் சேரு
மண்மய ருத்திர னுக்கு மயேசனே. (192)

மயேசுரன் சென்றிலே வாழும் சதாசிவம்
மயேசுபர விந்துவில் பாய்ந்து ஒடுங்கிடும்
வயேசுர விந்து அடங்குமே நாதத்தில்
தயேசுர நாகத்தைத் தான்கொள்ளும் சத்தியே. (193)

"நந்திபகவானே இந்த எட்டுவகையான கலைகளும் ஒடுங்கும் விதத்தை எனக்கு கூறி அருளுதல் வேண்டும்". "மகனே கேள்! பிரம்மா மாலான விஷ்ணுவிடத்தில் ஒடுங்குவார். விஷ்ணுவானவர் ருத்திரன் இடத்திலும், ருத்திரன் மயேசனிடத்திலும், மயேசன் சதாசிவனிடத்திலும் ஒடுங்கி நிற்பார்கள். பிறகு சதாசிவன் விந்துவிலும், விந்து நாதத்திலும், நாதம் சக்தியிடத்தும் ஒடுங்கி நிற்கும்.

சத்தி யொடுக்குந் தனித்த சிவத்துள்ளே
ஒத்திச் சிவந்தான் உயர்ந்தவ ராட்டிய
நத்தியை வாட்டியை நடத்துவாள் சிற்பரி
கொத்துடன் சிற்பரி கூடியே நிற்குமே. (194)

பின்னர் சத்தியானவள் சிவத்திடம் ஒடுங்கி நிற்பாள்! இந்த சிவமே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்த பொருளாகும். இச்சிவமே நந்தியாகும். இந்நந்தியை மேய்க்கும் சக்தியே சிற்பரி. இச்சிற்பரியினிடத்தே பூரணப் பொருள் கலந்து நிற்கும்.

நிற்கும் அப்பூரணம் நீண்ட முகசாலை
தக்குந் தாள்வாசல் தனிக்கு மனோன்மணி
ஒக்கு நெருப்பாறு ஓட மயிர்ப்பாலம்
சிக்குமோ சிக்காதோ திறந்துநீ பார்த்திடே. (195)

இந்த பூரணப் பொருளை காணவிடாமல் மூடிக் கொண்டு நிற்கும் வாசல் தேவதையே மனோன்மணி ஆகவே நெருப்பாறு எனப்படும். கானற்பாலை (நாதம்+விந்து சேர்ந்த வாசியை) மயிர்பாலம் எனப்படும். சுழிமுனை நாடியின் வழியாக பிரம்ம கபாலத்திலுள்ள மனோன்மணியின் வாசலை தட்டினால், தாழ் திறந்து பூரணப் பொருளின் தரிசனம் ஏற்படும். நான் கூறியதை முறைப்படி செய்து பார்! சிக்குவதும், (அடைவதும்) சிக்காததும் (அடையாதும்) உன் விட்ட குறையான (ஊழியைப்) பொருத்து அமையும்.

பார்த்திடப் பார்த்திடப் பாழாகும் பேய்மனம்
ஏர்த்திட ஏர்த்திட எழுந்திடும் வாசனை
கோர்த்திடக் கோர்த்திடக் குருக்கு குலைத்தோடும்
சேர்த்திட மார்க்கம் தெளிவிப்பாய் நந்தியே. (196)

அனுதினம் இதைப் பழகுவதால் (யோகத்தை), மனதிலுள்ள சஞ்சலங்கள் அகன்று படிப்படியாக அமைதி உண்டாகி, கர்மத்தனை அகலும்". "ஆனால்

குருதேவா! நீர் கூறியதை முறைப்படி மனதை நிறுத்துங்கால் வாசனை எனப்படும். மாயை வந்து கூடி யோகத்தில் முன்னேற விடாமல் தடுக்கிறது. அதை அகற்றும் முறையை எனக்கு உபதேசித்தது நந்தி பகவானே!"

தெளிந்தாயே மைந்தா நீ சேரவே ஒவ்வொன்றாய்
அழிந்தே கடந்தே அகண்டத்தில் புக்கிடேல்
அழிந்து ஆயிரத்தெட்டுங் கடுகு பொடியாக
ஒழிந்தவா ராட்டிய எனக்கறு மாண்டதே. (197)

"குழந்தாய் முறையாக கணபதி முதல் சதாசிவன் வரை படிப்படியாக ஏறி ஆயிரத்தெட்டண்டமான சகஸ்ராரத்தை அடைந்தால் மாயை என்னும் வாசனையானது தவிடு பொடிப் போலாகும். எக்காரணத்துக்கும் மீண்டும் தளைகளான வாசனைகள் (மாயைகள்) ஏற்படாது எல்லாம் மாண்டு போய்விடும்!

மாண்டவர் உன்னுள்ளே வந்தவழி சொல்லாய்
ஏண்டிய சித்தர்கள் எல்லாரும் போனாரோ
ஆண்டனே மூலம் அறிவிப்பாய் என்னந்தி
ஊண்டேனே உற்பனம் உரைத்திட்டாய் போதமே. (198)

"குருவான நந்தியே மேற்கூறிய கணேசன் முதல் சதாசிவன் வரை இவ்வுடலில் எப்படி வந்து புகுந்தனர் என்றும், சித்தர்கள் எல்லாம் முக்தியடைந்தார்களா அல்லது வேறு எங்காவது சென்றார்களா என்றும், அண்டத்தின் உற்பவத்தையும் எனக்கு கூறியருளள் வேண்டும். மேலும் ஆனந்த போதத்திற்கு உவமை அளித்து கூறும்."

உபதேசம்

போதமே என்று புலம்பின மாணாக்கள்
மாதர் மனோன்மணி வந்தாள் அவ்வாசலில்
ஒத நினைத்தால் உண்டானாள் ஈசனை
காதைய வீசனுக்குச் சத்தி யானதே. (199)

போதத்தின் உவமை முதல் அண்டம் உற்பத்தி வரையுள்ள அனைத்து விஷயங்களையும் அறிய வேண்டும் என்று அவா கொண்ட சீடா கேள்! பூரணப் பொருளின் வாசலில் உள்ள மனோன்மணியானவள் சங்கல்ப மாத்திரத்தில் (மனதில் சிருஷ்டியை பற்றி எண்ணிய உடன்) ஈசன் என்னும் சிவம் உண்டாயிற்று. இச்சிவனிடத்தில் சக்தி உண்டாயிற்று.

சத்தியில் நாதம் தனிநாதம் விந்துவாய்
வெத்திச் சதாசிவம் ஊட்டி மயேசுரன்
கொத்திய ருத்திரன் குலாவிய மால்கஞ்சன்
பத்தி முறைகேள் பலப்பல சீவனே. (200)

சக்தியினிடத்தில் நாதமும் நாதத்திடம் விந்துவும் உண்டாயிற்று. விந்திலிருந்து சதாசிவமும், சதாசிவத்திடமிருந்து மயேஸ்வரனும், மயேஸ்வரனிடமிருந்து ருத்திரனும், ருத்திரனிடமிருந்து மாலும் மாலிடம் பிரம்மாவும் உண்டானார்கள். இப்பிரம்மாவிடம் இருந்தே உலகத்திலுள்ள சகல ஜீவ ராசிகளும் தோன்றின.

இருக்கின்ற சீவன்கேள் எல்லாத்திற் பூரணம்
மருக்கி இருக்குமதைக் காணா லில்லோர்கள்
தெருக்கியே தீண்டாதே தேர்விந்து நாதந்தான்
சொருக்கியே வைத்திடஞ் சுருதி முடிந்ததே. (201)

தோன்றிய பொருளனைத்திலும் பூரணப் பொருளானது எவராலும் காண முடியாதபடி மிக சூக்ஷமமாக வியாபித்து நிற்கிறது. இப்பூரணப் பொருளை எந்த ஒரு வஸ்துவும் நெருங்க முடியாது. வேதத்தின் முடிவான கருத்தும் இதுவே!

முடிந்த முடிவேது முற்றும் படியேது
கடிந்த கதலிப்பூ கண்டத்தில் நின்றாடும்
படிந்த இதழ்தான் பதினாறாய் நின்றது
அடிந்த நடுவே அறுகோணம் பார்த்திடே. (202)

பார்த்தாயோ மூலர் பரத்தின் அடியிது
ஏத்தாயோடு அன்னம் எடுத்த வதிச்சடம்
கூத்தான கூப்பிடும் கொட்டாவி செம்பண்ணல்
காத்தாங் கடிநிற்கும் கண்டாங்கு அதைபாரே. (203)

இப்பூரண வஸ்துவிற்கு முதலும் முடிவும் கிடையாது (இது) நெஞ்சு எனப்படும் கண்டத்தில் அன்னாக்கிற்கு அருகில் வாழைப் பூப்போல் தலை கீழாக உள்ள பதினாறு இதழ் பூவின் மத்தியில் அறுங்கோணம் ஒன்று உள்ளது. இதுவே பரம்பொருள் நிற்கும் ஸ்தானமாகும். இதன் வழியாகத்தான் உணவு உள்ளே செல்கிறது. கொட்டாவி உண்டாகிறது. சப்தமும் (ஒலியும்) ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இந்த சக்கரத்தில் மனதை நிறுத்திப் பார். (இதற்கு தான் சோடசகலா என்று பெயர்.)

அங்கென்று ஒட்டில் அடிவிட்டு அசையாது
சிங்கென்று சென்று தனிலெட்டும் உள்ளோடி
பங்கொன்று நாலும் பரத்தின் முடியாகும்
நங்கென்று நாட்டிய நாட்டம் அதுபாழே. (204)

இங்குதான் வசிவானது (மூச்சுக்காற்று) பனிரண்டு கலைகளாக பிரிந்து எட்டு கலைகள் உள்ளே சென்று மற்ற ஸ்தானத்தில் கலக்கின்றன. மிகுதியாக உள்ள நான்கு கலைகள் இவ்விடத்திலிருந்து ஒவ்வொரு அங்குலமாக உயர்ந்து முடிவில் பூரணப்

பொருளுடன் கலக்கிறது. இந்நான்கு பிரிவில் முதல் மூன்று பிரிவு பாழாகவும் கடைசியில் மூலமாகவும் நிற்கிறது.

அண்ட உற்பத்தி

பாழென்று சொன்னீர் பகர்ந்திடு முப்பாழை
மாழென்று ஒருவிரல் மலங்கா வெளிபாழாம்
தாழென்று இருவிரல் தனியொளிப் பான்பாழாம்
வேழென்று மூவிரல் வெளியாம் ஒளிப்பாழே. (205)

பாழ் என்று கூறிய குருதேவா அதைப் பற்றி சற்று விளக்கமாக கூறும். பனிரண்டாக பிரிந்த வாசியில் எட்டு பாகம் உள்ளே ஒடுங்கிய பிறகு மிகுதியாக உள்ள நான்கு அங்குல அளவுள்ள வாசியானது முதல் பங்கு வெளி பாழாகும்! இரண்டாம் பங்கு ஒளிப்பாழாகவும், மூன்றாம் பங்கு வெளிஒளி பாழாகவும் நிற்கிறது (பாழ் - சூனியம்)

பாழ்மூன்று தாண்டில் பராபர பூரணம்
நாள்மூன்று கோடி நாடிலும் எட்டாது
தாள்மூன்று கண்டால் சகலமும் பூரணம்
கேள்மூன் றினாலே கெடியண்டம் ஆனதே. (206)

இந்த மூன்றையும் கடந்து நான்காவதில் பூரணப் பொருள் உள்ளது. அதில் நாலாவது பங்கு கலந்து நிற்கிறது. மேற்கூறிய மூன்று வகையான பாழ்வெளி மண்டலத்தால் தான் இவ்வுலகங்கள் உண்டாயிற்று. இவற்றைக் கடந்து சென்றால் பூரணப் பொருளின் தரிசனம் ஏற்படும்.

அண்டந்தான் இம்மட்டே அப்பாலு முன்டோதான்
பண்டுமுதற் பாழ்படர்ந் தீயாச் சென்று
தண்டும் பணருந் தனிக்கொம்பு காய்பழம்
ஒண்டும் விரையொன்றில் ஓரண்ட நின்றதே. (207)

மூன்று வகையான பாழ் மண்டலங்கள் வரைதான் அண்டவுற்பத்தி அதை கடந்தால் வேறொன்றும் கிடையாது. இப்பாழ் வெளி மண்டலங்களை வேராகக் கொண்டு சம்சார (ப்ரபஞ்ச) வ்ருஷம் (மரம்) உண்டாயிற்று. அம்மரத்தில் இலை, கொம்பு, காய், பழம் போன்றவைகளும் தோன்றின.

நின்று ஆயிரத்தெட்டு நேரொரு காயாச்சு
பண்டான கொம்பும் பணரும் அதிற்காயும்
கண்டார் உரைப்பார்காண் காணவுங் கிட்டாது
பண்டான வத்தி பரத்தின் அடிகண்ணே. (208)

இதிலுள்ள மொத்த காய்களின் எண்ணிக்கை ஆயிரத்தெட்டாகும். ஒவ்வொரு காய்களிலும் ஆயிரத்தெட்டு விதைகள் உள்ளன. பேர் அண்டங்களே - காய்கள், விதைகள் - சிற்றண்டங்கள் இதை யோகிகளான சித்தர்களே அறிவர். மற்றவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்! இம்மரத்தின் வேரில்தான் பிரம்மம் உள்ளது!

(குறிப்பு :- இம்மரத்தின் விளக்கம் கொங்கணவர் வாதகாவியம் மூவாயிரம் என்ற நூலிலும், கீதையிலும் உள்ளது. இதில் கொங்கணவர் வாதகாவியம் - 3000 என்ற நூல் எமது நிலையத்தில் கிடைக்கும்.)

வேறு

கண்பார்க்கக் கிட்டாதது காண அரிதுஎன்னீர்
நண்பாகப் பார்க்கவே மார்க்கஞ் சொல்நந்தி
வன்பட்ட கன்ரண்டும் வைத்து முனைமூக்கில்
தென்பட்ட நாலுஞ் சிதையாமல் நோக்கிடே. (209)

சம்சார வ்ருக்ஷத்தை அறிவது கடினம் என்று கூறினீர். அதை அறிவதற்கு வேண்டிய மார்க்கத்தை கூறியருளும் நந்தி பகவானே! - கூறுகிறேன் கேள்! கண்கள் இரண்டையும் மூக்கின் நுனியில் நிறுத்தி, சிந்தனைகளை அடக்கிட முன்சொன்ன கண்டத்தானத்தில் (அன்னாக்கில்) மனதை வைத்துப் பார்க்க வேண்டும்.

சிதைக்குமேல் நாலொன்று சேர வெறும்பாழாய்
பதைக்கும் மனோன்மணி பட்டப் பகலாவாள்
உதிக்கும் ரவிகொடி ஒப்பல்ல ஒப்பல்லவே
கதிக்கின்ற பூரணம் கரையில்லை பார்த்திடே. (210)

அப்படி பார்க்குங்கால் தமர் வாசில் நிற்கும் மனோன்மணி தேவியானவள் சூரியன்போல் பிரகாசிப்பாள். அப்பிரகாசமானது கோடி சூரியனுக்கு மேலானதாயிருக்கும். அந்த ஒளியின் மத்தியில் பூரணம் நின்று பிரகாசிக்கும்.

கரையற்று நின்ற கலிங்க கற்பூரணம்
உரையற்று நின்ற தொளியா மகாபோதம்
நிரையற்று நின்ற சிறுபிள்ளை காட்டிடில்
வரையற்று நிர்க்குணம் வாக்கற்ற மோனமே. (211)

அப்பூரணமானது மாசில்லாத கற்பூர சோதியைப் போல் தெளிவாய் தோன்றும். அதனால் மகா ஆனந்தம் உண்டாகும். இம்முறையை சிறுபிள்ளை அறிந்து செய்தாலும் மோனத்தில் நிலைத்து நிற்கும்.

மோனம் அறிந்து முழுவுன்னாசி ஒட்டிடில்
கானம் இருந்தேன் கருவூரிடை வாழ்ந்தேன்
தானமேன் தனமென்ன சாவேன் பிழைத்திட
வானமேன் அண்டமேன் வாரிதி பொய்யாச்சே. (212)

இம்மோன மார்க்கத்தில் அறிந்து நின்று வாசியை நிறுத்தி கருவூரான அம்பலத்தில் நின்று பிறப்பும் இறப்பும் இன்றி அண்டத்தை கடந்து நின்றேன். அப்பொழுது இவ்வுலகமெல்லாம் மறைந்து நான் ஒருவனே இருந்தேன். அனைத்தும் பொய்யாயிற்று.

பொய்யாமோ வையா புகழுறக் கண்டது
மையான சாங்கத்தால் வார்த்தையால் பொய் யென்பார்
கையாறக் கண்டதும் காணாதே போய்விட
ஐயா சமாதி அடைந்தார்க்குக் காணாதே. (213)

பார்க்கும் இப்பொருளெல்லாம் பொய்யா? ஆம் பொய்தான். ஆனால் இதை இவ்வுலக மக்கள் அறிந்து பார்க்காமல் வாய் வார்த்தையில் மட்டும் இவ்வுலகம் பொய் என்பார்கள்! உண்மையில் யோகத்தில் நின்று பார்த்தால்தான் இக்கருத்து விளங்கும். சமாதியடைந்த முனிவர்க்கே பார்க்கும் இவ்வுலகம் பொய்யாக தோன்றும்!

காணாதே போய்விடில் காணு நடனந்தான்
ஊணாதே பூணிட ஓங்குந் தொனிபத்துந்
தோணாதே தோணுஞ் சுருதி முடிந்திடற்
தோணாதே தம்முறைக் குறிப்பது போதமே. (214)

மாயை நீங்கிட பிரபஞ்சம் பொய்யானால் ஆனந்த பிரம்ம நடனம் தோன்றும், மேலும் தசநாதங்கள் ஓங்கி கேட்கும். சூக்ஷமமாக வேதத்தின் முடிவான பொருள் விளங்கும். மேலும் இவன் போதமாக நிற்பான்.

போதமே நோக்கவும் புக்க வெளிதோதான்
நீதமாய் மெள்ள நிலையுற்று நீபாராய்
காதமும் அல்லகாண் கண்ணுக் கடுக்கக்காண்
சாத முறையோடே தப்பாமல் பார்த்திடே. (215)

ஆனந்த மயமான பூரணத்தை பார்ப்பதென்பது மிகவும் கடினம். ஆகவே மெதுவாக அனுதினமும் பழகுதல் வேண்டும். இது வெகு தூரமில்லை கண்ணிற்கு கண்ணாய் நிற்கிறது. ஆதலால் முறையாக விடாமல் அப்பியாசிப்பாயாக.

தப்பாமல் பார்க்கவும் தனஞ்செயவோ நந்தி
ஒப்பாக உன்செயல் ஊடி ஒளியாகும்
முப்பாழும் தாண்டு முடியமட்டுந் தோன்றும்
அப்பா உனக்குமேல் வாதியொன்று இல்லையே. (216)

முறையாக செய்யுங்கால் என்ன பலனுண்டாகும் என்று கூறவேண்டும். நந்தி பகவானே! கேள்! மனதிற்கு உறுதியதிகமாகும். பிரகாசம் உண்டாகும். முப்பாழைக்

கடந்து பூரணத்தைக் காட்டும். அப்பொழுது நீயே உனக்கு நிகர்! வேறொன்றும் நிகர் இருக்காது.

இல்லை யென்றால் எல்லை எங்கும் பராபரம்
இல்லை யென்றால் எல்லை அருக்கொம்பும் பின்னொன்று
இல்லை யென்றால் எல்லை ஏகமென்பார் காணார்
இல்லை யென்றால் எல்லை எனக்கெல்லை சொன்னதே. (217)

நீ பராபரமாய் நிற்பதால் எங்கும் வியாபிப்பதால் நிகரில்லை என்று சொன்னேன். உன்னைத்தாண்டி ஒரு புல்லும் கிடையாது. வாய் ஞானம் பேசுபவர்கள் இதை காணமாட்டார். வாயால் மட்டும் புலம்புபவர் எங்கும் வியாபித்த எனக்கே எல்லை இல்லை என்று சொன்னேன்.

சொன்ன வழி கேளும் சூட்ச வராட்டியன்
தன்னிய கண்டத்தின் வைத்தான் மவைடி
பன்னிய எட்டுள் பரந்தமுடி பார்த்தான்
தன்னையே யான் சொன்னேன் சாதிக்க வல்லோர்க்கே. (218)

சொன்ன முறையாதெனில் விராட்டாக நிற்கும் பரம்பொருள் தன்னை அண்ணாக்கில் நிறுத்திக் கொண்டு கலைகளுக்கு எல்லாம் அனாதியாக நிற்கும் பொருள் அவனே. நீயே அந்தபொருள். உன்னை நீ அறிவதற்காகவே இவ்வளவும் சொன்னேன்.

வல்லோர்கள் பார்ப்பார்கள் வராட்டியன் தானாக
எல்லார்க்கும் எய்த எளிதாச்சோ மெய்ஞ்ஞானம்
பல்லோர் பரமாய் பார்பிரா வராட்டியை
சொல்லோர் மயிர்ப்பாலம் சூட்சம் கனத்தாண்டே. (219)

தாண்டிடில் வாசனை தவிடு பொடியாச்சு
ஆண்டிடில் மற்கட்டு முழன்றங்கு இறுத்தது
தூண்டிடில் சிற்பரை சுடர்கோடி பானுபோல்
காண்டிடு மாணாக்கர் கடத்து வெளிபாரே. (220)

யோக மார்க்கத்தில் நிற்பவர்களே தன்னை பரம் பொருளாக பாவனை செய்து சித்தியடைவர். மற்றவர்களுக்கு இம்மார்க்கம் மிகவும் கடினமாகும். எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் நின்ற பரம் பொருளை மயிர் பாலம் தாண்டி சென்று காண வேண்டும். மயிர் பாலத்தை தாண்டினால் கர்ம வாசனைகள் அகலும் அகங்காரம் விலகும். மேலும் சிற்பரை சக்தி கோடி சூரியனைப் போல் பிரகாசிக்கும். ஆகையால் மயிர் பாலத்தை கடந்து வெளியைப் பார்!

வெளிக்கும் அழிவில்லை மென்மேனு முடிவில்லை
ஒளிக்கு முடிவில்லை யூண வடியில்லை
தெளிக்கும் விரையதில் சேர்ந்தது உன்மனம்
வளிக்கும் வராட்டி மனமும் வெறும் பொய்யே. (221)

அந்த பரவெளிக்கு அழிவோ முடிவோ கிடையாது. மேலும் அதனுடன் ஒளிக்கும் முடிவுயில்லை. இப்பரவெளிக்கு முறையான உருவமும் கிடையாது. உருவமற்ற இதில் மனதை சேர்த்தால், மனமானது கரைந்துபிரம்ம மயமாகி விடும். அப்பொழுது மனம் பொய் என்ற தோற்றம் ஏற்படும்.

மனந்தானோ விந்த மகத்துவ மானது
மனந்தானோ விந்த வழிதாண்டிக் கூடிற்று
மனந்தானோ மாயத்தில் மருவி அலைந்தது
மனந்தானோ நீதான் மாறாத போதமே. (222)

அப்பொழுது இந்த மனம்தான் பிரம்மமா? இம்மனம்தான் எல்லாவற்றையும் கடந்து வந்ததா? இந்த மனம்தான் முன்பு மாயத்தில் (உலகத்தின் இன்பத்தில்) கலந்து திரிந்ததா? என்ற கேள்விகள் எழும்! அச்சமயம் மனமே மாறாத பிரம்மம் என்ற உண்மை புரியும்.

மாறாக் கருணைக்குள் வாழ்ந்தாரே சித்தர்கள்
மாறால் கருணையை வாவென்று அழைத்தீரோ
மாறாக் கருணைதான் வாய்க்க எளிதாமே
மாறாத விட்ட குறையாலும் வாச்சுதே. (223)

இம்மாறாத கருணையுள்ள மனதைக் கொண்டு பரவெளியில் சென்று சித்தர்கள் வாழ்ந்தார்கள். மாறாத கருணையைவா என்று அழைத்தால் வருமா? குருதேவா? வராது. அதை அடைவதும் மிகவும் கடினம் ஏன்னெனில் முன் சென்ற சித்தர்கள் அனைவர்க்கும் அது (பூர்வ ஜென்ம) விட்டகுறையால் (புண்ணியத்தால்) அடையப் பெற்றாதாயிற்று.

வாய்ச்ச பெரியோர் மவுனம் அடைவார்கள்
வாய்ச்ச பெரியோர் மகாசித்தி ஆவார்கள்
வாய்ச்ச பெரியோர்க்கு மற்றும் துயரில்லை
வாய்ச்ச பெரியோர் மகத்தான பிர்மமே. (224)

மனதை வென்ற பெரியோர்க்கே, மவுன மயமான பிரம்ம நிலையை அடைவார்கள். அவர்களுக்கே மகா சித்தியும் ஏற்படும். இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு துன்பமும் வராது. எப்பொழுதும் பிரம்ம நிர்வாணத்தில் கலந்து பிரம்மமாகவே ஆகி விடுவார்கள்.

பிர்ம விசாரத்தைப் பேசிடும் வேதாந்தம்
பிர்ம விசாரத்தைப் பேசும் அறுநூல்கள்
பிர்ம விசாரத்தைப் பேசும் பதினெட்டு
பிர்ம விசாரத்தின் பேர் அறியார்களே. (225)

பிரம்மத்தை பற்றி வேதாந்தங்களான உபநிஷதங்களும் பிரம்ம சூத்திரங்களும் கூறுகின்றன. மேலும் ஆறு வகையான சமய நூல்களும், ஆகம நூல்களும், பதினெட்டு புராணங்களும் கூறுகின்றன. ஆனால் அதை முழுமையாக அறிந்தவரில்லை.

தேவாதிகள் பீசம் சரக்கு விபரம்

அறியார் சமயத்துள் ஆறாறு பேர்களும்
அறியார்கள் மாயத் தழுந்திய பேர்களும்
அறியார்கள் ஆங்காரத்து அவ்வேர் பிடுங்காதார்
அறியார் அறியார் அறிவுள்ளோர் காண்பாரே. (226)

பன்னிரெண்டு சமயத்தை சேர்ந்தவர்களும், மாயம் விலகாதவர்களும் (மாயை வெல்லாதவர்களும்) ஆங்காரத்தை அடக்காதவர்களும், அறிவால் மனதை வெல்லாதவர்களும் பிரம்மத்தை (காண மாட்டார்கள்) அறிந்திருக்க மாட்டார்! மனதறிவால் புத்தியை நிலைப்படுத்தியவர்களே ஆதியான பிரம்மத்தை காண்பார்கள்.

பரிசுக்குஞ் சூதம் பறமத்தோர் சமனிடை
துரிசிக்கும் ஒக்குந் துலையா மனோன்மணி
வரிசித்து சாரம் வாராட்டிக்கு நேரொக்கும்
தரிசித்த சித்திக்குந் தன்னொக்கும் தாரமே. (227)

(இனி வரும் பாடல்களில் பாஷாணங்களுக்கும், பிரம்ம விசாரத்திற்கும் உவமைகள் கூறப்படுகிறது.)

ஒப்பற்ற பிரம்மத்திற்கு பரிச வேதை செய்யக் கூடிய உயர்ந்த சாரணை பெற்ற சூதமே (ரசமே) சரிசமமாகும். (இவ்விடத்தில் பிரம்ம நிர்வாணத்திற்கு உவமை கூறப்படுகிறது.) துரிசு - மனோன்மணிக்கும், சாரம் - விரட்டான சகுனப் பிரம்மத்திற்கும் சித்தத்திற்கும் - தாரமும் உவமைகளாகும்.

தன்னான நாதமும் தானும் நிமிளையும்
பொன்னான விந்து பொறியுப்பு நேர்சமன்
பன்னாச் சதாசிவன் பணம் போக்குங் கர்ப்பூரம்
மன்னா மயேசுரன் வாழ் சவர்க்காரமே. (228)

நாதத்திற்கு - நிமிளையும், விந்துவிற்கு - வெடியுப்பும், சரிசமமாகும். சதாசிவத்திற்கு - கற்பூரமும் மகேஸ்வரனுக்கு - சவுக்காரமும் சரிசமமாகும்.

வாழ்கின்ற ருத்திரன் தானொக்கும் பொன்னாகம்
வேழ்கின்ற மாலின் விரிவொக்கும் வெண்ணாகம்
மாழ்கின்ற கஞ்ச நயநாகந் தன்னிறந்து
ஆழ்கின்ற இந்திரன் தன்கரு நாகமே. (229)

ருத்திரனுக்கு - பொன்னாகமும், மாலிற்கு - வெண்ணாகமும், தாமரையிலிருக்கும் பிரம்மாவிற்கு - நயநாகமும், இந்திரனுக்கு கருநாகமும் சரிசமமாகும்.

(குறிப்பு :- இங்கு கூறப்பட்ட சரக்கையும் அதற்கு நேர் உள்ள தேவதைகளின் பெயர்களையும் ஞாபகம் வைத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் சில சமயம் சரக்கின் பெயரை மறைமுகமாக அந்தந்த தேவதைகளின் பெயரில் கூறப்படும்.)

நாகம் வரலாறு

கருவாஞ் சரக்குக் கலந்த அறுசுவை
மருவான தேவர்கள் மகாவிந்து காணிது
உரு'பாகக் கட்டியே ஒட்டினால் வேதைதான்
திருவார் பெறுவார் சின்னமும் இல்லையே. (230)

மேற்கூறப்பட்ட சரக்குகளால் அறுசுவைகள் உண்டாயிற்று. தேவர்களும் உண்டாயினர். இச்சரக்குகளே அனைத்தையும் உண்டாக்கும் விந்துவாகும். இவற்றை முறையாக கட்டி சரியான விகிதத்தில் கலந்தால் வேதையுண்டாகும். இதை ரூபமற்ற தேவியின் அருள் பெற்றவர்களே சாதிக்க முடியும்.

சின்னம் எடுத்திட்டார் சித்தர்கள் வாதிகள்
கன்னமே வாதியைக் காணாமல் தூஷித்தால்
பன்ன ரவி கோடி படுவார் நரகத்தில்
தின்ன வறுமையால் திகைத்தேங்கி நிற்பாரே. (231)

ரூபமற்ற தேவிக்கு ரூபமளித்தவர்கள் வாதிகளான சித்தர்களே! எனவே இவர்களை போற்றாமல் (தூஷித்தால்) வெய்தால் கோடி சூரியன்கள் உண்டாகி அழியும் காலம் எவ்வளவோ அவ்வளவு காலம் நரகில் புகுந்து வாழ்வார்கள். மேலும் மறுமையில் வறுமையுடன் வாழ்வார்கள். (இங்கு இரச வாதத்தையும், தெய்வத்தையும் யோக மார்க்கத்தையும் இழிவாகப் பேசுபவர்களுக்கு சாபம் கூறப்படுகிறது.)

சொர்க்கம்

நிற்கும் நரகமும் நிலையான சொர்க்கமும்
ஒக்கவே சொல்லி உரைத்திட்டார் என்னந்தி
தக்க மலத்திலே தானுங் கிருமிகள்
மக்கள் நரகந்தான் மைந்தனே சுண்டிடே. (232)

நரகமும், சொர்க்கமும் எங்கேயிருக்கிறது என்றும் அதன் வகைகளையும் என் குருவான நந்தி எனக்கு உபதேசம் செய்தார். நரகம் என்பது மலத்தில் வாழும் பூச்சிக்கு சமமாகும். (மலத்தில் வாழும் பூச்சிகளாக பிறப்பதும் ஒரு வகை நரகம். அதாவது மனிதனல்லாத மற்ற பிறவிகள் நரகுக்கு சமமாகும் என்பதை மறைமுகமாக உணர்த்தப்படுகிறது.)

மைந்தனே கோபம் வளர்ந்த முறையாலே
பந்தனச் சென்மம் பலபலவாய் விடும்
செந்தந்தச் சென்மம் செனிப்பதெல்லாம் பாரும்
கந்தனக் கோபம் கடும்பாவம் கண்டிடே. (233)

பல வகையான பிறவிகளுள் பெற்ற துன்பத்தை அனுபவிப்பதற்கு மூலகாரணம் பாவமே, பாவத்திற்கு முழு முதற்காரணம் கோபமாகும். கோபத்தால் பாவ மேற்படுவதாலும், பாவத்தால் பல பிறவிகளில் துன்பங்களும் ஏற்படுவதால், கோபத்தை முற்றிலும் நீக்க வேண்டும்.

நரக சொர்க்கம்

கண்டோனே சொர்க்கத்தைக் காணும் வழியேது
நன்றான மானிடர் நரகஞ் செனித்திட்டு
பண்டே குறையார் பராபர நோக்கினால்
உண்டே தான் சொர்க்கம் உரைத்த முறைபாடே. (234)

மானிடர்கள் பாவத்தால் நரகம் பெற்றும், பல பிறவிகளடைந்தும் துன்பம் பெற்றும் அலைகிறார்கள். இதை நீக்க வேண்டுமானால் பராபர வஸ்துவான பிரம்மத்தை நீக்குங்கால் பாவம் நீங்கி சொர்க்கம் (நிலைக்கும்) சென்று வாழ்வார்கள் என்று நந்தி எனக்கு கூறினார்.

முறைபாடு கேட்டேன் முன்னே மெய்ஞ்ஞானத்தை
முறைபாடு கேட்டேன் முனிந்திட்ட வாதத்தை
முறைபாடு கேட்டேன் உவந்து சந்தோஷித்தேன்
முறைபாடு இம்மட்டோ முனிவர்க்கு வைத்ததே. (235)

இதுமட்டுமின்றி, மெய்ஞ்ஞானத்தையும், வாதத்தையும், நெறி முறைகளை முறைப்படி நந்தியானவர் எனக்கு உபதேசித்தார். அதை பெற்று நானும் சந்தோஷமடைந்தேன். இவை யாவும் ஞானமார்க்கத்திற்கு செல்லும் முனிவர்களுக்கே.

குளிகையின் விபரம்

வைத்துக் குளிகையும் மகத்தான ஞானமும்
ஒத்தே உரைத்திருக்கும் பயனும் சொன்னீர்
மெத்தக் குளிகைதான் வெவ்வேறோ சூட்சமோ
உத்த படிதான் உரைத்திட்டாய் நந்தியே. (236)

குளிகை செய்யும் முறையும், ஞான மார்க்கமும், அதன் பயனையும், சொன்னீர். இனி குளிகையின் தராதரத்தையும் வகை படித்தி கூறுங்கள் நந்தி பகவானே.

உரைத்த படிகேளு உறுதியாய் என்மைந்தா
தரைத்த சொரூபக் குளிகை முதற்தரம்
விரைத்த இரண்டாம் விளங்கிய சூட்சங்காண்
கரத்தில் மூன்றாத்தரங் கமலினி பார்த்திடே. (237)

பார்த்திடு நாலாந்தரம் அட்ட மகாசித்தி
கார்த்திடும் அஞ்சாந்தரங் காணக் கமலினி
போற்றிடும் ஆறாந்தரங் காணும் யோகினி
ஏற்றிடும் ஏழாந்தரங் காண் விண்ணேகியே. (238)

நான் கூறுவதை கவனமாகக் கேள். குளிகையில் முதல் தரமானது சொரூபக் குளிகையாகும். அட்சயம் என்ற குளிகை இரண்டாம் தரமானது. கமலி என்பது மூன்றாம் தரமானது அட்டமாசித்தி என்ற குளிகை நான்காம் தரமானது..........

யோகினி என்ற குளிகை ஆறாந்தரமானது. விண்ணில் பறக்கக் கூடிய ககனம் என்ற குளிகை ஏழாந்தரமானதாகும். பரிசம் என்ற குளிகை எட்டாந்தரமானதாகும்.

ஏகிப் பரிசம் இதினொடு எட்டாச்சு
வாகித்து யான்சொன்ன வழியெல்லாம் நீபாரு
போகத்தும் ஏழினாற் பொன்னாங் கெவனமாம்
சோகொத்து நின்ற சொரூப முறைகேளே. (239)

மேற்கூறிய குளிகைகளை நான் கூறிய முறைப்படி செய்தால் கவுன சித்தியும் (ஆகாயத்தில் சூக்ஷும தேகத்தைக் கொண்டு பறத்தலும்), பொன் செய்யும் மார்க்கமான வேதை தொழிலும் பலிதமாகும்.

முறையாங் குளிகையை முகிழ்ந்தங்கு வாயிலிட்டு
மறையாத பூரண மகத்துவம் நீபாரு
நிறையரண் போல் நின்றிடும் உன் திரேகமாம்
கறையான கண்டிப்புங் காணாது காணாதே. (240)

இக்குளிகைகளை வாயிலிட்டுக் கொண்டு வாசி வைத்து ஊதினால் தேகமானது பொன் போல் பிரகாசிக்கும். தேகத்திலுள்ள குறைகள் நீங்கிப் போகும்.

காணாது பூரணம் கவளித்த யோகிக்கு
காணாது விந்தக் கடிதாங் குளிகைக்குக்
காணாது சாய்கையுங் கண்டமுங் கற்றபேர்
காணாது நின்மலங் கற்பூர தீபமே. (241)

தீபத்தைப் போலே சிறந்து வெளியாகும்
மாவொத்த பூரணம் வாவாவென்று ஏகவும்
பாவொத்த வாசனையும் பலபல துன்பமும்
மாவொத்துப் போக்கும் அழியாது காயமே. (242)

குளிகையை வாயிலிருந்து எடுத்தால் பூரணம் காணாப் போகும். ஆகவே குகையை வாயிலிட்டுக் கொண்டு நோக்கினால் யோகிக்கு மாயையும் மலமும் அகலும், அதுமட்டுமின்றி மனது நிர்மலமாகி தேகம் கற்பூர சோதியைப்போல் பிரகாசிக்கும். பூரணம் பொருள் தன்னை நோக்கி அழைக்கும். பூர்வகர்ம வாசனையும் பலவகையான துன்பமும் விலகும். தேகத்திலுள்ள ஊறல் நீங்கப் பெற்று என்றென்றும் அழியாமல் நிற்கும்.

காயம் அழியாது கவனம்போம் ஆயிர
மாயமும் இல்லை மகிழ்ந்தது அவ்வண்டத்தில்
ஓயவே சித்தர் உறவாடல் மேத்துண்டு
பாயவே மார்க்கம் பரிவாக வைத்ததே. (243)

அது மட்டுமின்றி வினாடியில் ஆயிரத்து எட்டு வகையான அண்டங்களையும் கடக்கலாம். அவ்வண்டங்களிலுள்ள சித்தர்களுடன் பேசலாம். இன்னும் அநேக விதமான சித்தியும் ஏற்படும்.

வைத்தது கேட்டு மகத்துவங் கைக்கொண்டேன்
உத்தது சொன்னீர் உவட்டா உபதேசம்
கைத்தலம் ஏற்தும் கருநெல்லிக் கனிபோல
எத்தன்மை ஞாயேன் எனையாண்ட போதமே. (244)

இவ்வாறு எனக்கு உபதேசித்த நந்தி பகவானை நோக்கி, "ஐயனே உம்முடைய மகிமையுள்ள உபதேசங்களை பெற்று அதன்மூலம் செய்து சித்தியும் அடைந்தேன். தங்கள் அருளால் 'உள்ளங்கை நெல்லிக்கனிப் போல்' பலிதமாயிற்று" என்றேன். இதைக் கேட்ட நந்தி பகவான், "இவையாவும் என்னால் சித்தியாக வில்லை எல்லாம் வல்ல ஆனந்த போதப் பொருளால் சித்தியாயிற்று" என்றார்.

ஆண்ட பராபரம் அருளுந் தொழிற்கெல்லாம்
பூண்ட கணேசன் புகழுங் குருபீசன்
நீண்ட என்னந்தியார் இயல்பாம் வயிரவன்
காண்டிவை ஐந்துங் களங்காறுப் பூசியே. (245)

நந்தியின் அருளால் மேலும் கூறுகிறேன் கேள்! ஆண்ட பராபரமான ஆத்தாளையும், கணேசன், குருவான ஈசன், என் குருவான நந்தி மற்றும் வயிரவன் போன்ற ஐந்து பேர்களை மனதால் அனுதினமும் பூஜித்தல் வேண்டும்.

பூசை விபரம்

பூசிக்கப் பூசிக்கப் போட்ட குருவாகும்
பூசிக்கப் பூசிக்கப் போகும் வெகுவேதை
பூசிக்கப் பூசிக்கப் பொன்மலையே ஆகும்
பூசிக்கப் பூசிக்கப் பூண்பாய் மெய்ஞ்ஞானமே. (246)

பூசிப்பதால் சரக்குகளும், குரு மருந்துகளும் வேதையும் சித்தியுாகும், இதனால் மலையையும் தங்கமாக்கலாம். மேலும் பூசிப்பதால் மெய்ஞ்ஞானம் உண்டாகும்.

மெய்யாம் சுருபக் குளிமையோடு எட்டையும்
வையான நூலிலும் வாடினோம் பாருங்கள்
கையாரக் கண்டு களங்கற்றுக் காண்பார்கள்
மையான மூடர்க்கு வாதம் பலியாதே. (247)

சொரூபக் குளிகையை முதலாக எட்டு வகையான சூதக் குளிகையையும், அதன் செயல்முறைகளும் என்னுடைய நூலில் உள்ளது. அதை முறைப்படி அறிந்தால் வாதம் பலிதமாகும். ஆனால் மூடர்களுக்கு ஒரு நாளும் வாதவித்தை பலிதமாகாது.

பலியாது வாதம் பசுவான சரக்குக்கு
பலியாது வாதம் பலரையே தூஷிக்கில்
பலியாது வாதந்தான் பாவமாங் கோபிக்கு
பலியாது வாதம் பரம்பார்க்கா மூடர்க்கே. (248)

வாதமானது மெய்ஞ்ஞானம் பெறாதவர்க்கும், சித்தர்களையும், பெரியோர்களையும் தூஷிப்பவர்களுக்கு மிகுந்த கோபம் உடையவருக்கும். பரம்பொருளை காணாத மூடர்க்கும் பலிதமாகாது. (மேற்கூறியவர்க்கு தங்கம் செய்யும் வாதவித்தை பலியாது.)

துன்மார்க்கம்

மூடர்க்கு எய்யாது முத்தியும் பத்தியும்
வீடரெனக் காடு விட்டக்குறையாலே
தாடற வாதம் தனித்தனியே ஐந்துங்
கூடுறு ஞானம் குலாவிய சித்தியே. (249)

மூடர்களுக்கு பக்தியும், முக்தியும் ஏற்படாது. சென்ற பிறவியில் காடு சென்று செய்த தவத்தால் இம்மையில் வாதம் முதற்கொண்ட ஐந்து வகையான சித்தியும், ஞானமும் கை கூடுமேயன்றிவேறு வகைகளாலன்று!

நன்மார்க்கம்

சித்தியைக் கண்டால் சிவன்தான் அவன்தானாம்
பத்திய ஞானமும் பட்டப் பகலாகும்
சத்தியாம் காயம் தவறாது ஒருநாளும்
புத்தியை உன்னியே பூரணம் பார்த்திடே. (250)

சித்தியடைந்தால் (யோக சித்தியடைந்தால்) அவனே சிவனாவான். இவனையன்றி வேறு சிவம் கிடையாது. மேலும் அழியாத ஞானமும், காயசித்தியும் உண்டாகும். ஆகவே புத்தியைக் கொண்டு பூரணப் பொருளைப் பார்க்க வேண்டும்.

பார்த்திடப் பார்த்திடப் பாழிற் படர்ந்ததிக்
கோர்த்திட வண்ணமும் கொப்பு வெளியாச்சு
சேர்த்திடத் தாயைத் திரும்பியே யான்பார்க்க
மாத்திய மாச்சு மாயவெளி ஆச்சே. (251)

முறையாக பார்க்கும்பொழுது மனதானது பாழ்மண்டலத்தைக் கடந்துச் செல்லும். அப்பொழுது சம்சார விருக்ஷம் என்ன என்பது நமக்கு புலப்படும். அந்த மரத்தில் ஆதாரமாய் இருக்கும். தாயை திரும்பிப் பார்க்கும்பொழுது எல்லா மாயங்களும் தெரியவரும்.

வெளியாம் முப்பாழில் வேரென்றீர் ஆரென்றீர்
ஒழியாது என்று உரைக்க அரிதென்றீர்
நழிவான சித்து நயந்த மகாசித்து
தெளிவாஞ் சிதாகாசம் சேர்ந்தவெளி மூன்றே. (252)

இந்த சம்சார விருக்ஷத்திற்கு முப்பாழ் மண்டலங்களே வேர் பாகமாக உள்ளது என்றீர். மேலும் அதைப்பற்றி உரைப்பதென்பது மிகவும் கடினம் என்று கூறினீர். அப்பாழை கடப்பதென்பது மிகவும் சிரமமான காரியம் என்று உரைத்த குருதேவா! மேலும் தெளிவாகக் கூறும். கேள்! இம்மூன்று வகையான பாழ் மண்டலங்களும் சித்தாகாசத்தில் அடங்கி உள்ளது.

மூணின் முடியின் முகிழ்ந்த மனோன்மணி
பேணி வயிற்றினில் பேரண்டம் ஆச்சென்றால்
வாணியாள் வார்த்தை மகாகோடி ஆச்சென்றும்
ஊணித் துடைத்தாளே ஒக்க வெறும்பொய்யே. (253)

முப்பாழ் மண்டலங்களின் முடிவில் மனோன்மணித்தாய் வீற்றிருக்கிறாள். இவள் வயிற்றில்தான் பேரண்டம் அடங்கியுள்ளது. அவள் நம்முடைய மாயையைத்துடைத்து விட்டால். பூரணத்தின் தரிசனம் ஏற்படும்.

கன்னிப்பலன்

பொய்யாச்சுதே என்றால் போச்சுது பொய்யாக
மெய்யாச்சுதே என்றால் விரவிச்சு அண்டங்கள்
கையாச் சரியாமோ கன்னிப் பிலந்தானோ
பையாச்சு பூரணம் பாரீர் விலாசமே. (254)

உலகத்தின் தோற்றம் இதனால் பொய்யாகத் தோன்றும். இதையே உண்மை என்று வைத்துக்கொண்டால் உலகத்தின் தோற்றம் உண்மைப் போலவே தோன்றும். இவை கன்னியான தேவியின் மாயையில் என்றே அறிந்துக் கொள்.இவளால்தான் பூரணப் பொருளிடமிருந்து தோற்றம் முதலானவை உண்டாகின்றன.

விலாசத் தினாலே விரிந்தது சனங்களும்
விலாசத் தினாலே வேகித்துத் தாபரம்
விலாசத் தினாலே விரிந்து மனமாச்சு
விலாசத்தை உன்னி விரைந்தேற முத்தியே. (255)

பூரணப் பொருளிடம் மாயை கூடிய காரணத்தால் உலகங்கள் உண்டாயின. மேலும் ஜீவராசிகளின் தோற்றமும், மனதின் தோற்றமும், பிரபஞ்ச உற்பத்தியும் மாயையால் என்றறிந்துக்கொள். ஆகவே அதேமாயையை வணங்கி போற்றுவதன் மூலம் முக்தியும் உண்டாகும். (கிட்டும்) என்று என் குருவான நந்தி எனக்கு உபதேசம் செய்தார்.

விரைந்த குளிகைக்கும் வேதைக்கும் சித்திக்கும்
அறைந்த குருவுக்கும் அமர்ந்த களங்குக்கும்
பறந்திடும் செம்பு பகர்ந்தய நாகமும்
தரந்தயக் கன்மசந்தான் போக்குச் சத்துக்கே (256)

குளிகை, வேதை குருமருந்து, களங்கு போன்றவைகளை சித்தி செய்துக் கொள்ள வேண்டுமாயின் அதில் சேர்க்கப்படும் செம்பு, அயம், நாகம் போன்ற லோகங்களில் உள்ள (கன்மசங்களான) அழுக்குகளை முதலில் போக்கிய பிறகே சத்தாக உருக்கி பயன்படுத்த வேண்டும்.

சத்துக்கள் சோதிக்க வகைகள்

சத்து வகைக்குந் தனித் தனிச் செம்புக்கும்
பத்தியாக் கன்மசம் பாங்காகத் தீய்ந்திட
ஒத்து உருகையில் ஊட்ட முறைகேளு
சுத்தியும் அஞ்சு விதம் பாரு சொன்னோமே. (257)

சத்து வகைகளுக்கும், செம்பு வகைகளுக்கும், சுத்தி செய்ய உருக்கு முகங்களில் கொடுக்கப்படும் மருந்துகளை பற்றி கூறுகிறேன் கேள்.

சொன்ன வளகினிற் சூட்டு விடைநாலு
பன்னவே காரமும் பாச்சதில் மூன்றிடை
வன்னய வீரம் அதிலோர் இடைகூட்ட
வென்னப் பொடித்து வளமாகத் தூவிடே. (258)

குடோரியை நான்கு எடையளவு எடுத்துக்கொண்டு காரம் மூன்றெடையும், வீரம் ஓர் எடையும் கூட்டி பொடி செய்து சத்துகள் உருகும்பொழுது தூவி மேலும் நன்றாக உருக்க வேண்டும். (இது முதல் வகை மருந்து)

தூவவே இன்னஞ் சூட்ட முறைகேளு
காவி இடைநாலு கட்டுப்புத் தான் மூன்று
ஓவிய காரம் உருப்பொடு ரெண்டடே
தாவிய லிங்கந்தான் ஓரிடைப் பூவே. (259)

இன்னுங் கேள். காவி நான்கு எடை, கட்டிய உப்பு மூன்று எடை, காரம் இரண்டெடை. லிங்கம் ஓர் எடை இவைகளை ஒன்றாக சேர்த்து பொடி செய்து தூவி உருக்குதல் வேண்டும். (இது இரண்டாவது மருந்து)

பூநீரு நாலெடை பொரிகாரம் மூன்றெடை
வானோர் இணங்கன் வளமாக ரண்டெடை
பானேறு வீரம் பரிவாக ஒரெடை
ஆனிர்ப் பொடித்து அடவாகத் தூவிடே. (260)

பூநீரு நான்கு எடை, பொரி காரம் மூன்று எடை. வெடியுப்பு இரண்டெடை வீரம் ஓர் எடை. இவை நான்கையும் ஒன்றாகக் கூட்டி பொடி செய்து சத்துகளுடன் கூட்டி உருக்குதல் வேண்டும். (இது மூன்றாவது மருந்து)

அடவான செங்கல் அதுகாணு நாலெடை
படவான காரம் பகர்ந்தவெடை மூன்று
தடவான காரமுந் தானேயெடை ரெண்டு
நடவான லிங்கமும் நாடோரெடை சாம்பே. (261)

செங்கல் நான்கு எடை, கட்டிய காரம் மூன்று எடை, பொரிகாரம் ரெண்டு எடை, லிங்கம் ஓர் எடை இவை நான்கை ஒன்றாகச் சேர்த்து பொடி செய்து தூவி உருக்குதல் வேண்டும். (இது நான்காவது மருந்து)

தாபேர பற்பம்

சாம்பல் எடைநாலு தனியுப்பு மூன்றெடை
வாம்பாய் கராமுகில் மாட்டில் இரண்டெடை
காம்பக் கடல்நுரை காடோர எடையதில்
தேம்ப வரைத்து நிரையப் பொடித்தூவே. (262)

முட்டை சாம்பல் எடை நான்கு, கல்லுப்பு மூன்று எடை, கார் முகில் இரண்டெடை, கடல் நுரை ஓர் எடை இவை நான்கையும் ஒன்றாகச் சேர்த்து பொடி செய்து தூவி உருக்கினால் சத்துக்கள் மாசு நீங்கி சுத்தமாகும். (இது ஐந்தாவது மருந்து.)

(குறிப்பு :- ஒவ்வோர் பாடலும் ஒவ்வோர் உருக்கு மருந்துகளை கூறுகின்றன. அதனால்தான், முதலில் நான்கு, மூன்று! இரண்டு ஒன்று என சரக்குகளின் எடைகள் குறைந்து கொண்டே வருகிறது. மேலும் இவை ஐந்தும் தனித்தனி மருந்துகள் என்று பின்வரும் பாடல்கள் விளக்குகின்றன.)

(காரம் என்றால் வெங்காரம், முக்காரம் என்றால் - பொரிகாரமாகும்.)

பொடியானது அஞ்சும் புகழ்பெற்ற சோதனை
முடியாகக் கன்மசம் மோசனமாய்ப் போகும்
மடியாது ஒன்றும் அகற்றிடுந் தோடத்தை
ஓடியாது ஒன்று முறப்போட்டுச் சோதியே. (263)

சோதிக்கச் சத்தெல்லாம் சோதி மயமாகும்
சோதிக்கச் செம்பெல்லாம் சோதி அருணனாம்
சோதிக்க ஆயங்காந்தத் துறைக்கெல்லாம் உத்தமம்
சோதிக்க அறியாட்டால் சூதத்தைக் கொல்லாதே. (264)

மேற்கூறிய ஐந்து வகையான பொடிகளையும் ஒன்றன் பின் ஒன்றாக சத்துகளுடன் கூட்டி உருக்கினால் மாசுகள் நீங்கப் பெற்று சத்துக்கள் சோதியைப் போலும், செம்புகள் சூரியனைப் போலும், பிரகாசிக்கும். இம்மருந்துகள் அயம் மற்றும் காந்தம் போன்ற லோகங்களுக்கு மிகவும் சிறந்தது. இதை முறையாக அறிந்தால்தான் எதையும் மேற்கொண்டு செய்யலாம். இல்லையேல் சூதத்தை கட்டி ஒரு பிரயோசனமும் இல்லை. (ஆகையால் சூதத்தை முதலில் கட்டாதே.)

நூல் விபரம் ஐந்து லட்சம்

கொல்லாது சூதத்தைக் கூடாது ஒன்றிலும்
வெல்லாது உப்புக்கு வேதையும் காணாது
வெல்லாது காயத்தில் மகாசித்தி ஆகாது
பொல்லாத கல்மசம் போக்கித் துறைபாரே. (265)

முன் மருந்துகளை அறியாமல் சூதத்தை கட்டினால் எந்த மருந்துடனும் கூடி குளிகையாகாது (சத்துக்களை ஏற்காது) உப்புடன் கூடி வேதையும் புரியாது. மேலும் காயசித்தியும் பலிதமாகாது. ஆகையால் முதலில் சத்துகளை முன் மருந்துகளால் சுத்தி செய்து பிறகு எல்லா முறைகளையும் செய்து பார்.

பாரென்றும் ஈசன் பராசத்திக்கே சொன்னார்
ஏரென்று வஞ்சுமே லட்சங் கிரந்தத்தில்
வாரென்றார் வண்ணத் தயிலத்தில் செம்பெல்லாம்
தாரென்று சத்தால் தச்சூதங் கட்டுமே. (266)

பார் என்று இதையே முன்பு சிவபெருமான் பார்வதிக்கு உபதேசம் செய்தார். அவர் சொன்ன நூலில் தொகை மொத்தம் ஐந்து லட்சமாகும். அதில் கூறியுள்ள ஒரு வகை தயிலத்தால் செம்பு முதல் எல்லா வகையான லோகமும் சத்தாகும். அந்தச்சத்தால் ரசங்கட்டி குளிகையாகும்.

கட்டும் விதங்கேளு கண்டர்பலஞ் செம்பு
மட்டிய சோதனையார் கட்டார் எல்லாம்பொய்
மட்டிய மாண்பரே மயங்கி மறவாதே
ஒட்டியே சோதிக்க ஒருகோடி வேதையே. (267)

எவ்வாறு அத்தயிலத்திற்கு அவ்வளவு சக்தி வந்ததென்று கேட்பாயாகில் அதில் சேர்க்கப்பட்டுள்ள துருசிலுள்ள செம்பே காரணமாகும். நான் கூறிய முறைப்படி முன் மருந்துகளை கூட்டி சோதனை செய்யும் முறையை யார்தான் அறிவர். ஆனால் நீ அறிந்திருக்கிறாய். எனவே செய்து பார்த்தால் கோடி வகையான வேதைகளும் பலிதமாகும்.

குளிகை அன்னூற்று ஐம்பது

கோடியென்றே சொன்னேன் கூற ஒருகோடி
வாடுங் குளிகைதான் அன்னூற்று ஐம்பது
தேடித் திரிந்து திகையாதே மாந்தரே
பாடினேன் எண் ஆயிரத்தினிற் பார்த்திடே. (268)

கோடி என்றால் கோடியல்ல. கோடோன கோடி என்று பொருள். அதே போல் குளிகையின் அறுநூற்று ஐம்பது வகையான குளிகைகளும் சித்தியாகும். குளிகையில் இத்தனை வகையா என்று மயங்காமல் நான் பாடி வைத்துள்ள எண்ணாயிரம் என்ற நூலைப் பார்.

எண்ணாயிரம் - எட்டு- அன்னூற்று - ஜால முன்னூறு ஒரு நூறு - ஆயிரத்து ஐநூற்றியைம்பது

பார்த்திடும் எட்டால் பகிர்ந்து அன்னூறு
கோர்த்திடும் சாலம் குலாவிய முன்னூறு
சேர்த்திடும் மூன்றால் திரண்டது ஒருநூறு
வார்த்திடும் ஆயிரம் ஐந்தது வைம்பாதே. (269)

அன்பது மாத்திரை ஆயிரத் தெட்டொக்கும்
அன்பது மாத்திரை அகண்டம் விலாசிக்கும்
அன்பது மாத்திரை அதீதப் பொருள் காட்டும்
அன்பது மாத்திரை அறிந்தவர் சித்தரே. (270)

அந்த எண்ணாயிரம் என்ற நூலின் சுருக்கமே இந்த அறுநூறு என்ற நூலாகும். மேலும், சாலம் முன்னூறு, இம்முன்னூறு என்ற நூலை சுருக்கி சாலம் நூறாக பாடியுள்ளேன். அதுமட்டுமில்லாமல் ஆயிரத்தை நூற்றுஐம்பது என்ற நூலும் என்னால் பாடப்பட்டுள்ளது. இதை பார்த்தவர்க்கு அகண்ட சிருஷ்டியும், பூரணப் பொருளும் இன்னதென்று தெரியவரும் மேலும் ஆயிரத்தெட்டு இதழிலுள்ள சகஸ்ராரத்திற்கு சமமாக இந்நூலை அறிந்தவர் சித்தராவார்.

சித்தர் வயதென்ன திரட்டிய ஆயிரம்
பக்தர் சிவயோகி பார்த்துப் பிழையுங்கள்
கொத்தாம் சபையைக் குறைந்த முடி காட்டும்
மத்தாத பூரணம் மத்தாம் அதுபாரே. (271)

சித்தர்களின் வயதென்னவென்றால் ஆயிரத்திற்கும் அதிகமாகும். அதே போல் பக்தர்களும் சிவயோகியுமான நீங்களும் ஞான சபையின் முடியை விளக்குவதாக விளங்கும் என்னுடைய நூலை பார்த்து சாகா நிலையை அடைவீர்களாக.

பாரென்றார் நந்தி பரந்த வசபையை
வாரெண்டி மூலத்தில் வானந்திக் கேட்டுக்குள்
தாரொன்றி னாலும் தனிக்கண்டத் தேகூட்டி
நேரெண்டி ஆடிச்சு நிறைந்த திருக்கே. (272)

குருவான நந்தியும் எனக்கு இதையே உபதேசம் செய்தார். அதாவது குழந்தையே அசபையான பூரணத்தை பார் என்று! அவர் கூறியபடி மூலத்தில் மனதை வைத்து ஜாக்ரத, சொப்ன, சுஷீப்தி, துரியம் போன்ற நான்கையும் கடந்து கண்டத்தை அடைந்து (அண்ணாக்கை அடைந்து) துரியாதீதத்தில் நின்றதால் ஞானகதிர் உண்டாயிற்று.

கதிரேது வென்றீர் களங்கா முனைமூக்கில்
சதிரான யோகிக்குந் தன்னிடத்தே ஓடும்
மதிரான ஞானிக்கு அதுகாண் பராபரம்
எதிரேபி லோகத் திறந்த முறைகேளே. (273)

கதிர் எங்கே உண்டாயிற்று என்று கேட்பாயாகில் அது மூக்கு நுனியில் என்றறிதல் வேண்டும். இதே கதிரை யோகியானவன் தன்னுள்ளேயே காண்பான். ஞானிக்கு அந்தகதிரே பராபரமாய் தோன்றும். (கதிரை பராபரமாய் பார்பான்). இவையெல்லாம் காணாமல் இறந்த லோகத்து மக்களை பற்றி கூறுகிறேன் கேள்.

முறையாம் புவியல் முழங்கிய சீவன்கள்
நிறையான நித்திரை நெடுவீதி ஓட்டத்தால்
குறையாச்சைக் யோகத்தால் கொட்டாவி ஏக்கத்தால்
வறையான முப்பத்து அறுபதும் இடுமே. (274)

ஓடும் புரியட்ட மொவ்வொன்றாய்ச் சீனிச்சி
நாடும் பரத்தில் நமனுக்கு இறையாவார்
நீடும் பரமும் நிறைந்துள்ளே வாங்கிடில்
ஆடும் திருநட னம்பலங் காணுமே. (275)

பூமியில் உள்ள சாதாரண மக்கள் தூக்கத்தாலும், நகர சஞ்சாரத்தாலும் பெண் போகத்தாலும், கொட்டாவி, ஏப்பம் போன்ற காரியத்தாலும் தன்னுடைய முழு ஆயுளையும் இழந்து முப்பது முதல் அறுபது வயதிற்குள்ளேயே தளர்வடைந்து எட்டு வகையான காயமும் (தூலம், குக்ஷுமம், காரணம், அன்னமயம், பிராணமயம், மனோன்மயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் போன்ற எட்டு வகையான காயமும்) அழிந்து உலக வாழ்க்கையில் சுழன்று எமனுக்கு இறையாகின்றனர். இவ்வாறில்லாமல் வாசியை உள்ளே வாங்கி நிறுத்தினால் ஆனந்த திருநடனம் காணலாம்.

காணும் குறிப்புக் கடுமேலோ கீழதோ
நாணும் சபையடிப் பூதமே ரண்டமோ
ஊணுமே ஆறு முழுகிச் சுழிஃபோடே
பூணுங் கபாலம் புகுங்குரு பாதமே. (276)

திருநடனமானதுமேலா, கீழா, சபையின் அடியிலா, அல்லது அண்டத்திலா எங்கு காணலாம் என்று கேட்பாயாகில் கூறுகிறேன் கேள், இவ்வுடலில் நெருப்பாறான வாசி மயிர்பாலமான சுழிமுனையோடு புகுந்து சென்று பிரம்ம கபாலத்தை அடைந்தால் குருபதமான அவ்விடத்தில் ஆனந்த நடனம் காணலாம்.

சமாதி

குரு மண்டலத்தில் கூறாயிரத் தெட்டு
கரு மண்டல முட்டிக் கவிந்தேப் புறுமையும்
மறு மண்டலக்கதிர் அண்டமும் பிண்டமும்
தரு மண்டலத்தோடு தானொன்றாய் நிற்குமே. (277)

குரு மண்டலமான ஆயிரத்தெட்டிதழில் வந்து அங்குள்ள அமிர்த கலசத்தை முட்டி கவிழ்த்து பிறகு புருவ மையம் வந்தடைந்தால் அண்டமும், பிண்டமும் ஒரே பொருளாய் நிற்கும்.

நிற்குமே ஒன்றென்றீர் நேர்பார்க்கில் ரண்டாச்சு
தக்குமோ நாதந் தனித்த மகாசத்தி
மக்குமோ யீசன் மகத்தான விந்துதான்
ஒக்குமோ நேர்ந்து ஒண்ணாம் அதுவாலே. (278)

ஒரே பொருளாய் நிற்கும் என்றீர். ஆனால் பார்க்கும் பொருள் பார்ப்பவன் என இரண்டும் எவ்வாறு இணைந்து நிற்கிறது என்று கேள். நாதமான சக்தியும், விந்துவான சிவனும் ஒன்று கூடி வாசி என்ற பொருளால் ஒன்றாக நின்றது.

நாலே முடிவென்றில் நாவிரண்டு ஏதாச்சு
காலே காண்சூட்சம் கலந்த புரியட்டம்
கோலே குறியோடிக் கூறுவார் சித்தர்கள்
மேலேதும் இல்லை விரித்தநூல் பொய்யென்றே. (279)

இதன் முடிவான பொருள் என்றால் முன்பு எட்டு என்று எதனால் கூறப்பட்டது. எட்டு எதைக் குறிக்கிறது. கேள்! தூலம் சூக்ஷம் முதற்கொண்ட எட்டு வகை தேகத்தில் வாசியானது பிரிந்து ஒடுங்குவதால் இதை குறிப்பாக நாலிரண்டு என்று சித்தர்கள் கூறுவர். ஆகையால் (இதை காட்டிலும்) இந்த எட்டு வகையான காயத்தை காட்டிலும் வேறேதும் கிடையாது. அப்படி கூறுமாயின் அந்த நூல் பொய் என்று அறிதல் வேண்டும்.

பொய்யென்றீர் நூலைப் புகழ்ந்த முறையேது
கையென்ற யோகம் கடந்த கபாலத்தே
மெய்யென்று விண்டு விரைந்துப் புகையோடி
தெய்யென்று வாதச் சொல்லாச்சுது பாரே. (280)

பொய் என்று கூறிய குருதேவா நீரே சில இடங்களில் முரண்பாடான கருத்துகளை கூறி புகழ்ந்திருப்பதால் எதை ஏற்பது என்று கூறும். மெய்யாக காணப்படும். இத்தேகம் யோகத்தால் மாசு நீங்கப்பெற்று பிரகாசிக்குங்கால் மெய்யாக சொரூப சித்தி ஏற்படுகிறது. இவ்வாறு இல்லாதவருடைய தேகம் நெருப்பால் சுடப்படுகிறது. அப்படி இருவகையிலும் பார்க்கும் பொழுது மெய் பொய் என்ற முரண்பாடான கருத்துக்கள் தோன்றும். இம்முரண்பாடான சொற்களை வாதப் பிரிவினை என்றறிந்துக் கொள்.

சொல்லான மார்க்கந்தான் சொன்னது யோகிக்கு
வல்லாஞ் சபைமறித்தே முகடு ஏத்திட
கல்லாங் கபாலங் கடுந்தணலே மூண்டு
எல்லாத் தெரிசனம் ஏறவுங் காணுமே. (281)

ஆனால் எவ்வாறிருந்தாலும் யோகிக்கு முறையாக அசபை அறிந்து அதை கபாலம் ஏற்றி கடுந்தணல் மூட்டினால் எல்லா வகையான தோற்றமும் தெரிய வரும். இதனால் பூரணப் பொருளின் அனுபவமும் ஏற்படும்.

காணுமே என்றீர் கண்மூக்கு வேறாச்சு
பூணுமே ஓடிப் பொய்ப்பூண்ட மனத்தோடே
ஊணுமே அங்கே உறும்பாழிற் பூரணம்
தோணுமே பாச்சுடர் கொடித் தீபமே. (282)

பூரணத்தின் தோற்றத்தை பற்றி கூறிய குருதேவா! கண் மூக்கை காட்டிலும், மனம் வேறான பொருளாகும். மனதை காட்டிலும் பூரணம் வேறானது. அப்படி இருக்கையில் கண் மூக்கு மத்தியில் மனதை கூட்டினால் பாழை கடந்து நிற்கும் தீபச் சுடரான பூரணம் எவ்வகையில் தெரியவரும்.

தீபச் சுடரோ தான் தீக்கெல்லாங் காண்பது
தீபச் சுடரோ தான் சேர்ந்து சபையினில்
தீபச் சுடரோ தான் தெவிட்டா முனைநாசி
தீபச் சுடரோ தான் சிறந்தது நாலுமே. (283)

தீபச் சுடரான பூரணம் எங்கும் நிறைந்தது. அந்த தீபச்சுடர் தான் அசபையானது வாசியில் நிற்கும். வாசியானது முக நாசியின் வழியாக சஞ்சரிப்பதால் துரியாதீத நிலையில் இதன் விளக்கம் தெரியவரும். ஆகவே பூரணமான தீபச்சுடரை தான் காண வேண்டும்.

சிறந்த விதம்ரண்டிற் செய்வ தெதுநன்று
உறைந்திடும் யோகத்தால் ஊடியே முட்டினால்
கறந்த கபாலங் கடந்தெப் பொருள்காணும்
நிறைந்தே நெடுமூக்கு நின்றது ஞானமே. (284)

குருதேவா உம்மால் இரண்டு விதமான பிரம்ம விசாரம் கூறப்பட்டது. இதில் எதை அனுஷ்டித்தால் நல்லது என்று கூறும். கேள்! யோகத்தால் வாசிமூட்டி கபாலம் ஏற்றி அதை தாண்டிச் சென்று புருவ மையத்தில் (நெடுமூக்கில்) நின்றால் ஞானம் ஏற்படும்!

ஞானந்தான் அல்லோ நாலாம் பதவெளி
ஞானந்தான் அல்லவோ வடிவந்த யோகத்தில்
பானந்தான் அல்லவோ பாரத்தில் நல்லூறல்
கானந்தான் முப்பாழ் கடந்தது பார்த்திடே. (285)

ஞானத்தால்தான் மூன்று பதத்தைக் கடந்து துரியப் பதமான பதவெளியின் விளக்கம் ஏற்படும். ஞானமே யோக வடிவானது. ஞானம் என்ற ரசமே அமிழ்தத்திலும் மேலானது. ஆகவே முப்பாழை கடந்து நாலாவது பதத்தில் நிற்கும் துருவப் பொருளைப் பார்!

பார்த்திடப் பார்த்திடப் பாழும் வெளியாச்சு
ஏர்த்திட ஏர்த்திட எல்லாம் வெறும்பொய்காண்
தோர்த்திடும் மண்டலம் கருதி மனோன்மணி
பூர்த்திடும் பூவதும் பொய்யாச்சு நந்தியே. (286)

முறையாகப் பார்ப்பதால் பாழ்கள் வெளியாகும். மேலும் நோக்குங்கால், எல்லாம் பொய்யாகவே தோன்றும். மனோன்மணி, வாசிபூ போன்றவை எல்லாம் காணாமல் பொய்யாக போயிற்று. இது ஏன் என்று கூறவேண்டும் நந்தியே!

பொய்யாச்சு தையா புகுந்தபின் பூரணம்
நிய்யாச்சு யாக வெருண்ட வகைகாணேன்
சிய்யாச்சு மேனி சிறந்த வாராதாரம்
தையாச்சு நித்தந் தனியோசை கூட்டமே. (287)

மேலும் பூரணத்தில் புகுந்த பின்பு யாகத்தில் விடப்பட்ட நெய்யைப்போல் எல்லாம் எரிந்து சாம்பலாயிற்று (மாயை மறைந்தது) ஆராதாரம் வெளியாக தோன்றி திசாநாதங்கள் காதில் கேட்டது.

ஓசைத் திசைநாதம் உண்டென்பார் எல்லாரும்
போசைக் காண்பாசம் அடங்காத வாசனை
கோசச் சின்னங் கொடுகோல் முனையும்போய்
மாசற்ற பூரணம் அடியில் அடைந்தோர்க்கே. (288)

திசாநாதம் என்ற ஓசை உண்டு என்று மட்டும் எல்லோரும் கூறுவர். ஆனால் அடங்காத பாசம் என்ற வாசனையால் அதை அறியாமல் தவிப்பர். பூரணப் பொருளின் அடையாளச் சின்னமான திசா நாதத்தை பூரணப் பொருளின் தாள் சேர்ந்தோர்க்கே கிட்டும்.

அடைந்தபின் முப்பாழ் அடவாகத் தோன்றிற்று
முடைந்திடு ஞான சரிதைமுதற் பாழாய்க்
கிடந்திடு ஞானக் கிதுகை யொளிப்பாழாய்
விடைந்திடும் யோகம் வெளியொளி பாழாச்சே. (289)

பாழான மூன்றில் பசிந்திடும் யோகந்தான்
நீழாய் மனத்தாலே நின்றது வெவ்வேறு
கோழாப் பிடரிக் குழியில் மனமோடி
தாழாமை நோக்கிடில் தாயங்கே காண்பளே. (290)

பூரணத்தை அடைந்த பிறகு அதிலிருந்து தோன்றி பாழின் தோற்றம் நன்றாக விளங்கிற்று. அதாவது ஞானச் சரிகை முதல் பாழாகவும், ஞானக் கிரியை ஒளிப்பாழாகவும், யோகம் வெளியொளிப் பாழாகவும் நின்றதை கண்டேன். யோகமானது மூன்று வகையான பாழிலும் கலந்து நின்றது. ஆனால் மனதின் மாயையால் வெவ்வேறாய் தோன்றிற்று. இந்தப் பேத புத்தியை நீக்கிட, பிடரிக்குழியான அண்ணாக்கு மேலில் மனதை நிறுத்தி நோக்கினால் மனோன்மணித்தாய் காண்பாள்.

காண்பளே தாய்தான் கவிந்த இடமெல்லாம்
பூண்பாய் மனந்தான் புகழ்ந்த மனோன்மணி
ஏண்பாழ் வெளியெல்லாம் எட்டாத பூரணம்
நான் பார்க்கக்கண்டு நலமுற்றேன் நந்தியே. (291)

நந்தி கொடுத்தது நல்ல பதியொன்று
அந்தித்த வாங்கு அகண்ட வெளிகாட்டும்
வந்தித்து வாங்கிட வாசிவா வென்றோடும்
பந்தித்துக் காட்டாய் பரத்தின் அடியிலே. (292)

தாயான மனோன்மணி மணங்கவிழ்ந்த இடமெல்லாம் காண்பாள். பாழ்களுக்கெல்லாம் கடந்ததான பூரணப் பொருளை நந்தியின் அருளால் தாயானவள் எனக்கு கூட்டி வைத்தால் நந்தியால் காட்டப்பட்ட அந்த இடத்தில் நின்றுக் கொண்டு நீயும் வாசியை வைத்து கூட்டினால் பரத்தின் அடிதோன்றும்.

அடியிலே கண்ணுற்று அகண்டத்தை நீபாரு
முடிவில் மனோன்மணி முன்னின்று பேசுவாள்
படியில் மனந்தானே பேராச்சு அவளாகும்
நெடிய எழுத்தாக நின்றது பார்த்திடே. (293)

அவ்வடியில் மனதை வைத்து நோக்கினால் மனோன்மணியானவள் உன் முன் நின்று பேசுவாள். பலபடியில் மனமே வெவ்வேறாக நின்றது அளவு எழுத்து சொல் எல்லாம் மனத்தின் திரிபே.

பார்த்திடு நீதான் பகுந்திவ் வெளியோடி
ஏர்த்திடு மேலே இருக்கும் வகாரந்தான்
சேர்த்திடு ரண்டையும் தேசி மகாவாசி
கார்த்திடும் பாரு கருதுமுனை நீயே. (294)

முனையில் மனமோட்டி மூட்டி விழிரண்டும்
நினைவிலே நோக்கிட நின்மலம் கண்டிடும்
கனவிலே கண்டதும் கண்ணாறக் கண்டதும்
சுனையிலே மூழ்கும் துறைபோலும் ஆனதே. (295)

இம்மனமானது மூச்சுக் காற்றுடன் நாசியின் வழியாக உள்ளும் வெளியுமாக பாய்ந்துக் கொண்டிருக்கும். அவ்வாறு பாயும் வகாரமான வாசியை மனமுடன் கூட்டி, சுழிமுனை வழியாக மூட்டி கண் பார்வையை மூக்கின் நுனியில் நிறுத்தினால் மனம் சலனமில்லாமல் நிஷ்களங்கமாய் நிற்கும்!

துறையா மனமொன்றித் துலங்கு மனோன்மணி
நிறையா மனதுக்கு நிலையாப் பிறப்பேது
கறை வாசனையாங் கருவியாந் தோல்மூடி
மறையாப் பிறப்பாச்சு மைந்தனே கண்டிடே. (296)

மனம் திடப்பட்டால் மனோன்மணி வெளிப்படுவாள் இப்படிப்பட்ட மனதிற்கு பிறப்பு எவ்வாறு ஏற்பட்டதெனின் கூறுகிறேன் கேள்! மனதில் வாசனை புகுந்த பொழுது (மாயை கூடிய பொழுது) அவ்வாசனையை கருவிகள் பிடித்தது. கருவிகளை தோல் மூடி மனிதன் என்ற சென்மம் உண்டாயிற்று. (கருவிகள் - தத்துவங்கள்.)

கண்ட பிறப்பின் கருவை அறிந்திட
ஒண்டியும் தேசம் உரைத்திடாய் என்னந்தி
தண்டிய வாசந் தனித்த பொறியஞ்சும்
அண்டாது அடித்து அகண்டத்தைப் பார்த்திடே. (297)

பிறப்பின் பயனை அடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள் நந்தியே! உடலில் தோன்றும் வாசனைகளை ஒழித்து மனதை ஐந்து விதமான பொறிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக இழுத்து அடித்துக் கொண்டு மனதை கண்டத்தில் நிறுத்தி மூலப்பொருளை நோக்க வேண்டும்.

வாசனை - (பூர்வசென்ம கர்ம வினையால் ஏற்படும் கெட்ட புத்தியின் பண்பு)

கண்டத்தைப் பார்த்தால் அறுமே பிறவிதான்
கண்டத்தைப் பார்த்தால் அழியாது உன்தேகம்
கண்டத்தைப் பார்த்தால் அட்டமா சித்தியாம்
கண்டத்தைப் பாரு கவண்டமும் நீயாமே. (298)

கண்டத்தில் மனதை நிறுத்தினால் பிறவித்தளை அகலும், தேகசித்தியும் கைகூடும். அதுமட்டுமின்றி அஷ்டமா சித்தியும் ஏற்படும். அப்பொழுது நீயே இவ்வுலகம் என்று புரிய வரும்.

நீயா மகண்டாம் நிகரில்லை பின்னொன்று
மாயாத் திசைகள் அடங்கிற்று உன்னுள்ளே
ஓயாது பூரணத்து ஊடலாம் ஆடலாம்
பாயிரத் தண்டம் பாயுமுறை கேளே. (299)

மேலும் அகண்டப் பொருளாய் நிற்பதும் நீயே என்று புரிந்துக் கொள்வாய். ஆகாயம், பூமி, திக்குகள் எல்லாம் உன்னுள் அடங்கப் பெற்றதாய் காண்பாய். அப்பொழுது நீ குளிகைக் கொண்டு பூரணப் பொருளுடன் கலந்து உறவாடலாம். அண்டத்தையும் கடந்து செல்லலாம். (அதாவது நீ புகுந்து நிற்கும் இத்தேகத்திற்கு இவ்வளவு மகிமைகள் உண்டாகும்.)

பாயுஞ் சொரூபக் குளிகைவைப்பாய் வாயில்
காயுங் கமலினி கட்டிடு உந்தியில்
வாயு நல்லட்ட மாசித்தியைக் கைப்பிடித்
தேயுவைப் போலச் சிறக்க நுழைந்திடே. (300)

அண்டங் கடந்து செல்லும் முறையைக் கேள். சொரூபக் குளிகையை வாயிலும், கமலிக் குளிகையை நாபியிலும்; அஷ்டமாசித்தி குளிகையை கையிலும் வைத்துக் கொண்டு பூரணத்திற்குள் புகுந்து செல்ல வேண்டும்.

திருமூலர் கெவனம் போனது

நுழைந்திட்டே நாலும்போய் நோக்கினேன் பேரண்டம்
இளைந்திட்ட வண்டங் கெடியாயிரம் கண்டேன்
நுழைந்திட்டப் புவனமும் இருநூற்று இருபது
மழைந்திட்டேன் எல்லாம் அளாவித் திரிந்தேனே. (301)

திரிந்தே சந்தோஷித்து தேகத்தை நோக்கினேன்
புரிந்த பதமும் புவனமும் அண்டமும்
தெரிந்தே மயக்கற்றேன் சிந்தை. தெளிவுற்றேன்
பரிந்தேன் குளிகையில் பாக்கிய மெய்யாச்சே. (302)

நானும் இதே போல் குளிகையை வைத்துக் கொண்டு பேரண்டம், சிற்றண்டம் போன்றவைகளை ஆயிரக் கணக்கில் பார்த்து வந்தேன். மேலும் இருநூற்று இருபது புவனங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தேன். அப்பொழுது தான் அண்டங்களைப் பற்றியும் புவனங்களைப் பற்றியும் எனக்கு புரிய வந்தது. அதனால் எனக்கிருந்த மாயா மயக்கங்கள் அகன்று போயின. உண்மையான ஞானம் எனக்கு குளிகையால் பிறந்தது.

மெய்யாச்சு வாத்தாள் வெளியிலே பூத்தது
பொய்யாச்சு ஞானப் புகட்டியே நோக்கிட
நையாச்சு பிண்டத்தை நானென்றால் கண்டிடு
தையாச்சு கண்டால் சகலமும் காணாதே. (303)

ஆத்தாளான தேவி வெளியே இருப்பதாக நினைத்த பொய் ஞானம் அகன்று தேகமே நான் என்ற அபிமானம் நீங்கப் பெற்று அதனால் உலக பொருள் அனைத்தும் பொய்யான மாயை தோற்றம் என்று அறிந்து நின்றேன்.

கற்பம் தின்ன வயது

காணாது சித்தர்க்குக் காயம் வலுநிற்க
ஏணாகத் தின்ன விரைந்தமுறை கேளு
ஈணாக வயது இருபதில் மண்டலம்
பூணா வறுபதில் போல்ரெட்டித் திண்ணிடே. (304)

சித்தர்களைத் தவிர மற்ற பேர்களுக்கு காயம் (தேகம்) அதிக நாட்கள் திடமாக நிற்காது. ஆகவே கற்பம் உண்ணும் முறையைக் கேள். இருபது வயதில் கற்பங்களை ஒரு மண்டலம் வீதம் உட்கொள்ளல் வேண்டும். ஆனால் வயது அறுபதை கடந்தால் கற்பங்களை இரண்டு மண்டலங்கள் உட்கொள்ளல் வேண்டும்.

திண்ணிடு தொண்ணூறில் சேர்மூன்று மண்டலம்
பண்ணிடு தாண்டில் பலியாது கற்பந்தான்
மண்ணிடை மாண்பரே வருந்திப் பிறக்காமல்
எண்ணிடு மேனி இளந்தைப் பருவமே. (305)

வயதானது தொண்ணூற்றை எட்டிப் பிடிக்குங்கால் கற்பங்கள் மூன்று மண்டலங்கள் உட்கொள்ளல் வேண்டும். ஆனால் தொண்ணூறு வயதை கடந்து விட்டால் கற்பம் உண்ணுதல் பயன் தராது. ஆகவே சீக்கிரமாக இளம் வயதிலேயே கற்பத்தை உட்கொண்டால் என்றென்றும் இளமையோடு இருக்கலாம். அதுமட்டுமின்றி பூமியில் மீண்டும் பிறவி ஏற்படாது.

பருவமாய் வாழ்ந்தால் பலனேதோ வெண்ணாதே
அருவமாய் ஞான வகண்ட மகாயோகம்
சுருபமாய் வாய்க்குப் சுகசித்தி ஆடலாம்
நிருபமாம் பாழு நிலையும் வெளியாமே. (306)

என்றென்றும் இளமையாய் இருப்பதால் என்ன பயன் என்று கேட்பாயாகில் சொல்கிறேன் கேள். தேகம் இளமையாக இருந்தால் ஞானமுடன் கூடிய யோகம்

சித்தியாகும். அதுமட்டுமின்றி சித்துகள் பல ஆடலாம். முவ்வகையான பாழ்களின் விளக்கம் ஏற்படும். அதனுடைய உட்பொருளாய் நிற்கும். பூரணப் பொருளையும் காணலாம்.

வெளியான காலத்தில் மேருவைச் சுத்தலாம்
எளியான காலம் விளங்கிடும் அண்டங்கள்
வெளியான காலத்தில் மேலெட்டும் சித்திக்கும்
வெளியான ஞானம் வெளியில் வெளியாமே. (307)

பூரணத்தைக் கண்ட பிறகு மேருவை சுற்றி வரும் சித்தி ஏற்படும். சில வினாடிகளிலேயே அண்டங்களை சுற்றி வரலாம். அஷ்டமா சித்தியும் கைகூடும். ஞானத்துடன் கலந்து நின்று வெட்ட வெளியான பரமாகாசமாய் எங்கும் வியாபித்து நிற்கலாம்.

நூல் விபரம்

ஆமே இக்கற்பம் அறிந்தவர் கொள்ளுவார்
காமே விகாரத்தால் கசப்பென்பார் காட்டாதே
தாமே புளியுப்பு தள்ளாட்டால் பொய்யாகும்
காமேவி யுண்டது நாடோர்க்குஞ் சொன்னேனே. (308)

நான் கூறிய கற்ப முறைகளை அறிந்தவர் உட்கொள்வார்கள். ஆனால் உலக வாழ்க்கையில் சஞ்சரிப்பவர்கள் துவேஷிப்பார்கள். அதனால் இதை அவர்களுக்கு காட்டாதே. புளியுப்பை நீக்காமல் கற்பத்தை உட்கொண்டால் காயசித்தி பொய்யாகும். கற்ப முறைகளை காவி உடுத்தி காட்டை நோக்கி செல்பவர்களுக்காக சொன்னேன் என்றறி.

சொன்னேன் முன்வாதம் சுகமாம் குளிகைகள்
சொன்னேனே வசியம் துறைதோறும் கற்பங்கள்
சொன்னேனே யோகம் துரியமா மெய்ஞ்ஞானம்
சொன்னேன் அறிந்த சுகயோக சித்தர்க்கே. (309)

சித்தர்க்கு இதை விட்டால் தேசத்து நூலெல்லாம்
ஒத்துக் கிடவாது உரையும் தெரியாது
கொத்துப்பட ஒன்றாய்க் கோர்வையும் கிட்டாது
வத்துநீ கண்டு வலையத் திரைபாரே. (310)

மேலும் வாத முறைகள், குளிகை, வசியம், கற்பம், யோகம், ஞானம் போன்றவைகளும் சித்தர்க்கே சொன்னேன். சித்தர்களுக்கு இந்த நூலை விட்டால்

வேறு வகையான நல்ல நூல்கள் இவ்வுலகில் கிடையாது (கிட்டாது). ஆகவே இந்நூலை கண்ட மாத்திரத்தில் பத்திரமாக வைத்துக் கொண்டு ஞானத்தை அடைய முயற்சி செய்!

(அப்படி நூல் கிடைத்தாலும் இதிலுள்ள விஷயங்கள் அனைத்தும் அதிலிருக்காது.)

பாரே இந்நூல்தான் பட்டப் பகலொக்கும்
சேரே பல நூலைச் சேரில் இருட்டறை
யாரேனும் பாருங் கோளந்தாதி தப்பாமல்
சீரேது வாராட்டால் சேரவும் சித்தியே. (311)

இந்நூல்களிலுள்ள விஷயங்கள் பகலுக்கு சமமாகயிருக்கும். இந்நூலை விடுத்து மற்ற நூல்களை நோக்கினால் அது இருட்டறையைப் போல் காணப்படும். எவரேனும் நான் சொன்ன வார்த்தைகளை சோதித்துப் பாருங்கள். எந்த ஒரு கெடுதியும் ஏற்படாது. கட்டாயம் ஞானமுண்டாகும்.

சித்தியும் ஆகுந் தேகம் அழியாது
முத்தியும் ஆகுமே மூவுலகுக் கெல்லா
மத்திய பூரணம் ஆகத்தே கண்டிடும்
சத்தியம் சொன்னேனே தப்பாது நந்தியே. (312)

ஞான சித்தி ஏற்படுவதோடு தேகம் அழியாது நிற்கும். முக்தியும் கிடைக்கும். மூவுலகையும் சுற்றி வரலாம். பூரணப் பொருளை தனக்குள்ளேயே பார்க்கலாம். இது சத்தியம், ஒரு காலும் பொய்யாகாது. இது என் நந்தி மேல் ஆணை.

பஞ்ச பொறி வித்தை

தப்பாது உலகு சகஜாலக் கூத்தாச்சு
ஒப்பாப் பொறிதான் உயர்ந்த மகாமேருங்
கொப்பான மாயக் கொடிய திரையாச்சு
வப்பா மனந்தான் அறியாமல் கெட்டதே. (313)

இவ்வுலகமே சகச்சால கூத்தாகும். ஐந்து விதமான பொறிகளும் பெரிய மலைப் போல் வளர்ந்து மாயத் திரையாக நின்று மனதை ஞானப் பாதையில் செல்ல விடாமல் தடுத்து கெடச் செய்தது.

கெட்டதினால் லோகக் கேள்வி முயன்றது
பட்டுது மீன்தான் பகுந்திரைக் காசித்து
நட்டிது வண்டு நற்றீபம் பூவேண்டு
மட்டிது மான்தான் மணியோசைக் குள்ளிதே. (314)

மனம் மாயை மூடியதால் பிரம்ம விசாரம் என்று ஒரு வினா எழுந்தது. மேலுங் கேள்! பொறியால் அனைத்து விதமான உயிர்களும் மாண்டன. மீன் உணவின் மேலுள்ள ஆசையாலும், வண்டு விளக்கு ஒளியின் ஆசையாலும், பூவிலுள்ள மனத்தாலும், மான் இனிமையான காணத்தாலும் (ஓசையாலும்).

உள்ளான நெக்காக ஒட்டி எறும்பூர்ந்து
தள்ளாதே புக்கித் தலைசுற்றி மாண்டுது
கொள்ளப் பரிசங் கொசுக்குண்டு பட்டுது
விள்ளாதே தைந்தும் விரைந்த பொறியிதே. (315)

வெல்லத்தின் இனிப்பு சுவையால் எறும்பும் தேடித் திரிந்து தலைசுற்றி உயிர் மாண்டது. மேலும் பரிசத்திலுள்ள தோலின் சுவையின் பேரிலுள்ள ஆவலால் கொசுவும் மாண்டு போகிறது. மறைமுகமாய் இருக்கும். (சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரசம், கெந்தம்) ஐந்து வகையான பொறிகளால் எல்லா உயிர்களும் மாண்டு போகின்றன. (மீன் - ரசத்தாலும், பூச்சிகள் - ரூபத்தாலும், வண்டுகள் - கெந்தத்தாலும், மான் - சப்தத்தாலும், கொசு - ஸ்பர்சத்தாலும் மாண்டு போவதே இதற்கு உதாரணமாகும்).

பொறியாலே கெட்டார்கள் பூமியில் உள்ளோர்கள்
மறியார் மனதுக்கு வந்து மகாமாய்கை
நெறியாக நில்லாமல் நினைவை அறியாமல்
சிறியார் உடுத்தின சிற்றாடை ஆனதே. (316)

இதே போல் (மேற்கூறிய ஜீவராசிகளைப் போன்று) இப்பூமியிலுள்ள மக்களும் மனதிலுள்ள மாயையை அறியாமலும், மனதை புத்தி கொண்டு தன்னையறியாமலும் புலன்களின் மூலம் வெளிநாட்டங் கொண்டு மாண்டனர். இது எவ்வாறு இருக்கிறது என்றால் ஆடை அணிய அறியாத சிறு குழந்தைகள் ஆடைகளை உடுத்தி கிழிப்பதைப் போலுள்ளது.

ஊத்தி ஊருணம் காமநீர்பட

சித்தாடை கட்டும் சிறுபெண்ணாள் வாதந்தான்
முத்தாரப் பெண்ணாலே மூதண்ட மாத்திரை
வித்தாரப் பெண்ணாலே வியந்த வயத்தம்பம்
சத்தே அறிந்து கடந்தது பார்த்திடே. (317)

சிறு பெண்ணால் வாதம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த இரசவாத முறையாகும். இது பருவ வயதுடைய பெண்ணின் மூதண்ட நீரால் செய்யக் கூடியது. இந்நீரால் பல வகையில் வாதம் செய்யும் முறையை சரியான குருவை அடைந்து அவர் மூலம் உபதேசம் பெற்று செய்து பார்க்க வேண்டும். (சிறு பெண்ணால் வாதமென்பது இங்கு

மறைமுகமாக கூறப்பட்ட ஒரு வகை வாத முறையாகும். அதாவது உவர் நிலத்தில் வெளிப்படும் பூநீரைக் கொண்டும் அண்டக்கல்லைக் கொண்டும் செய்யப்படுவதாகும். இவ்வண்டக்கல்லிற்கு அண்டம் என்றும் பூநீறுக்கு பெண்ணின் நாதம் என்று மறைமுகமாக அறிவுறுத்தப்படுகிறது. பூமியை ஒரு பெண்ணாக பாவித்தும் அதிலிருந்து வெளிப்படும் பூநீரை நாதமாக உருவெடுத்தும் காட்டப்பட்டுள்ளது. இதை தவிர வேறுவகையான சரக்குகள் தவறாக கூறப்படவில்லை) இதைப்பற்றி மேலும் அறிய வேண்டுமானால் அகத்தியரால் எழுதப்பட்ட பெருநூல் - 12,000த்தின் பின்பகுதியில் காணலாம்.)

பார்த்திடு முத்துக்குப் பக்குவம் தப்பினால்
ஏர்த்திட நீறாம் இல்லாட்டால் சிட்டமாம்
கோர்த்திட்ட வாட்டுக் குமறினால் வெண்டாகும்
ஆர்த்திடஞ் சொன்னேன் வளமாகச் செய்திடே. (318)

வைப்பு முத்துக்கள் செய்யும் பொழுது பக்குவம் தவறிப்போனால் சரக்குகள் சாம்பலாகும் அல்லது ஒன்று சேர்ந்து சிட்டம்போல் உதிரும். சரக்குகளை வாட்டும் பொழுது முறைபிழன்றால் சரக்குகள் குமறி பின்னமாகும். அதே போல் தான் கண்ணியன் நாதத்தை வாங்குவதற்கு சரியான நேரம் வேண்டும் இல்லையேல் நாதத்தில் சக்தியிருக்காது.

கடந்திட்டால் காமநீர் காணாது பேய்வாதம்
இடந்திட்டால் சாரணை எடுக்காது மாத்திரை
புடந்திட்டம் தப்பினால் பொய்யாகும் கட்டெல்லாம்
தடைந்திட்டு அரைப்பேறில் சண்டிக்கும் பார்த்திடே. (319)

காமநீர் எனப்படும் நாதத்தை நேரங்கடந்து வாங்கினால் அதிலுள்ள சக்தி முழுவதும் போய்விடும். அதனால் வாதம் பலிதமாகாது. இக்காமநீர் இல்லை என்றால் குளிகைகள் சாரணைகளை ஏற்காது. புடத்தில் தவறு ஏற்பட்டால் கட்டுமுறைகள் தப்புவதைப்போலும், அரைப்பு தவறுவதால் சரக்குகள் சண்டிப்பதைப்போல், காமநீரை நேரங் கடந்து வாங்குவதால் சரக்குகள் குருவாகாது. வீணாகும்.

குறிப்பு :- தை, மாசி போன்ற மாதங்களில் உவர் நிலத்தில் பூமியின் நாதமான பூநீர் வெளிப்படும். இதை காட்டிலும் பௌர்ணமி காலங்களில் மேற்கூறிய மாதத்தில் பூநீர் அதிகமாக வெளிப்படும் இதை சூரிய உதயத்திற்கு முன்பு சுமார் நான்கு மணியளவில் சென்று வெகு சாக்கிரதையாக எடுத்தல்வேண்டும். நிறம், குணம், பண்பு போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு இதை நான்கு வகையாக பிரித்தறியலாம். இதையே சித்தர்கள் பெண்ணாக உருவகப்படுத்தி கூறியிருக்கிறார்கள். இப்பூநீரை சூரிய உதயத்தில் போய் எடுத்து பார்த்தால் அதிலுள்ள சத்துக்கள் மீண்டும் பூமியில் உறிஞ்சப்பட்டு வெறும் நுரையாக மட்டுமேயிருக்கும். அதனால் தான்

மேற்கூறிய பாடலில் திருமூலர் நேரம் கடந்து வாங்குவதால் காமநீரில் சக்தியிருக்காது என்று மறைமுகமாக கூறியிருக்கிறார். ஆகவே தவறான கருத்துக்களை கொண்டு படிக்காமல் முறையாக அறிந்து சிந்தனையை ஒரு நிலைப்படுத்திடப் பார்த்தால் அனைத்தும் புரியவரும்.

செய்த துரிசி சிறந்த குருவாகும்
பைதவ மேவப் பசுமையு மெத்தானால்
கைத்தவ றென்னக் கலங்காதே மாண்பரே
வைதனக் காமநீர் அதிகமாம் வார்த்திடே. (320)

வார்த்தது வெயிலில்லை வளமாய்த் தினம்பத்து
கோர்த்துக் குளறிக் கொடிய ரவிபட
ஏர்த்தி எடுத்திடு எல்லாக் குருவுக்கும்
சாதிய நூல்முறை தப்பாது நந்தியே. (321)

அதேபோல் துரிசிலுள்ள பசுமையான நிறம் நீக்கிட வெண்மை நிறமாக மாறினால் தான் உண்மையான குரு மருந்து கிட்டும். ஆகவே எவ்வாறு பசுமையை நீக்குவது என்று கலங்காமல் சக்தியுள்ள காமநீரை அதிக அளவு சேர்த்து நன்றாய் கலந்து பத்து நாட்கள் கடுமையான சூரிய ஒளியில் வைத்து எடுத்தால் முழுமையான குரு மருந்து சிட்டும். இதில் ஒரு குறையும் நேராது என்று என் குருவான நந்தி மேல் ஆணையிட்டு கூறுகிறேன்.

தப்பாத செந்தூரஞ் சமைக்கில் பதந்தப்பில்
ஒப்பாக முன்போல ஊட்டி எடுத்திடு
மெய்ப்பாக ஞானம் விளங்கும் சிவசத்தி
நட்பாகப் பூசை நலமுறச் செய்திடே. (322)

செந்தூரங்கள் செய்யும் பொழுது தீ அதிகமானால் பதந்தப்பி கருகிப்போகும். அதைக் கண்டு பயங் கொள்ளாதே கருகிய மருந்துடன் காமநீரை சேர்த்து நன்றாக கலந்து முன்போல் பத்து நாட்கள் வெய்யிலில் வைத்துப் பார்த்தால் செந்தூரம் அருணணைப் போல் சிவந்து காணப்படும். ஆனால் முதலில் ஞான வடிவாய் விளங்கும் சிவசக்தியை முறையாக பூசை செய். அப்பொழுதுதான் எல்லா மருந்துகளும் சித்தியாகும்.

பூசையினங்கள்

செய்திடில் வாதந் திருமுடி பண்ணாதே
செய்திடில் வாதத்தில் சேர்ந்திட்டு அதறாமே
செய்திடு வாதம் திறமாகப் பண்ணிவா
செய்திடு வாதநூல் சேரவும் சித்தியே. (323)

பூசை செய்வதால் வாதமுறைகள் தவறில்லாமல் சித்தியாகும். பூசை செய்த பிறகே வாதத்தை கவனமாக செய்தல் வேண்டும். முறையாக வாத நூலில் கூறிய முறைப்படி சரக்குகளை சேர்ப்பதால் எல்லாம் சித்தியாகும்.

சேரும் இனங்கண்டு சேர்த்து நீ செந்தூரி
சேரும் இனத்தில் சிறக்கக் குருபண்ணு
சேரும் இனத்தோடு சேரக் களங்காகும்
சேரும் இனந்தப்பில் சேர வெறும் பொய்யே. (324)

அந்தந்த இனத்தோடு நேரான இனத்தை கூட்டி மருந்துகளை செந்தூரம் செய்ய வேண்டும். அதேபோல் குருமருந்துகளை இனங்கண்டு சேர்க்கவேண்டும். இனத்தோடு இனத்தைச் சேர்ப்பதால் களங்கு முறைகளும் சித்தியாகும். இதை விடுத்து முறையில்லாமல் இனந்தப்பி சேர்த்தால் வாதம் பொய்யாகும்.

பொய்யாது என்னூல்தான் போக்கோடே பார்த்திடு
கையாரவே செய்து கண்டு களித்தேன்நான்
மையார்ந்த கண்ணிக்கு மகாயீசன் சொன்னது
வையாங் கிரந்தத்தில் வழங்கும் பொருளிதே. (325)

பொருளே மூன்றுலட்சம் போக்கெல்லா நான்பார்த்து
அருளாலே நந்தி அடங்கிற்று எண்ணாயிரம்
மருளாதே நின்று வழியோடு இதைப்பாரு
இருளேது வெளியேது ஏகமும் ஒன்றாமே. (326)

என்னூலை முறையாக பார்ப்பதால் எதுவும் பொய்யாகாது. இந்நூலில் கூறப்பட்ட முறைகளை நானும் செய்து பார்த்து சித்தியடைந்தேன் இதிலுள்ள முறைகள் அனைத்தும் மூன்று லட்சம் என்ற நூலில் சில பெருமானால் பார்வதிக்கு கூறப்பட்ட முறையாகும். அதிலுள்ளவற்றை குறுக்கி நந்தி பகவான் எண்ணாயிரம் என்ற நூலாக தொகுத்தார். நான் அதையும் குறுக்கி அறுநூறு என்ற இந்நூலை தொகுத்தேன். ஆகவே எல்லா நூல்களையும் படித்து மலைக்காமல் இந்நூல் ஒன்றையே படிப்பதன் மூலம் இருள் வெளி இல்லாத ஆனந்தமாக ஏக பொருள் சித்தியாகும்.

சித்தியில்லான்

ஒண்ணாகக் கண்டிடு உத்தம ஞானத்தைப்
பண்ணும் பொறிகள் பதையாமல் வென்றிடு
கண்ணான கற்பத்தால் காயம் செயம்பண்ணு
அண்ணார்ந்து அலையாதே அடங்கலும் சித்தியே. (327)

உலகத்தின் மூலப்பொருள் (என்பது) ஒன்று மட்டும் தான் அதையே எங்கும் யரவியதாய் நினைத்து ஞானத்தில் நிற்க வேண்டும். ஆகவே மனதை அலையாமல் நிறுத்திட புலன்களின் வெளி நாட்டத்தை வென்று கற்பத்தை உட்கொண்டு தேகத்தை சித்தி செய்து கொள்ளல் வேண்டும்.

சித்தியே காணா செய்வோர் முறைகேளு
பத்தியே கோபிப்பார் பரதூஷ கனமுடன்
மத்திம புத்தி மருளன் மகாபோகி
எத்திய பொய்யோன் இடும்பர்க்கும் ஆகாதே. (328)

உலகத்தில் எத்தனை காலம் யோகம் செய்தாலும் வாதம் செய்தாலும் சித்தியடையாதவர்கள் அநேகர் உள்ளனர். எதனால் ஏன் சித்திக்கவில்லை என்று கூறுகிறேன் கேள். கோபம் கொள்பவர், தெய்வத்தை நிந்திப்பவர், மூடமான மனதை கொண்டவர். மந்த புத்தியுடையவன், மருண்ட மனங் கொண்டவன், பொய் பேசுபவர், இடும்பம் கொண்டவர்களுக்கு எதுவும் சித்தியாகாது.

ஆகாக் கொலையன் அழும்பன் வெகுகோளன்
பாகாய்ப் பலபெண்ணைப் பார்த்தேங்கிப் பின்செல்வோன்
வாஃகான தர்ம்ம வரைதப்பு மகாபாவி
சோகா விகாரத்தான் சோம்பர்க்குக் காணாதே. (329)

மேலும் கேள். கொலை புரிபவன், அழும்பன், கோள் செய்பவன், மிகுந்த பெண் மோகம் கொண்டு பெண்ணைத் தேடிச் செல்பவன், தர்மமில்லாத முறையில் நடப்பவன், அதிகமாக பாவம் செய்பவன், விகாரம் படைத்தவன், சோம்பல் குணங் கொண்டவன் போன்றவர்களுக்கு வாதம் காணாது.

காணாத மூத்தோர்க்கு அணுகிய தந்தைதாய்
கோணாதே வைவோன் கொடுஞ்சில் தூஷகன்
வீணாற்பரான வெறுமை வெகு துஷ்டன்
பூணாக் குருதுஷ்டன் புல்லோர்க்கும் பொய்யாமே. (330)

இன்னும் கேள். வயதில் பெரியோர்களையும் தாய் தந்தையர்களையும் எவன் தூஷிகின்றானோ, அதிகமான துஷ்ட செய்கைகளை கொண்டவன் எவனோ, எவன் குரு துரோகியோ அவனுக்கு சித்தியும், வாதமும் பலியாது.

ஆமே கலப்படி அடங்காத காமத்தான்
தூமை துடக்கன் சுகியில்லாச் சண்டாளன்
சேமேசிவ வேடந் தெரிசிக்கில் தூஷிப்போன்
வாமேவு சொல்லர்க்கு வாத நூல் பொய்யாமே. (331)

அடங்காத காமங் கொண்டவனுக்கும், சுகமில்லாத துஷ்ட செய்கைகளை கொண்ட சண்டாளனுக்கும், சிவயோகியை கண்ட மாத்திரத்தில் ஏளனம் செய்பவனுக்கும் வாத நூலில் கூறப்பட்டவைகள் பொய்யாகும்.

நூலான நன்னூல் நுகர்ந்தவர் பார்த்தாலும்
காலானி மாற்று கனகமும் பிறவாது
சேலான செந்தூரஞ் சேர்ந்து பழுக்காது
சூலாசை போலே கழலுவார் துரோகியே. (332)

படித்த அறிவாளியாகவே இருந்தாலும், மேற்கூறிய குணம் ஒன்று இருப்பினும் ஆணியளவு தங்கமும் செய்ய முடியாது. செந்தூரம் சித்தியாகாது. அதனால் பயித்தியம் பிடித்தவன் போல் சுழன்றலைவான்.

(குறிப்பு :- இரசவாதம் செய்தேன் சித்தியாகவில்லை, மந்திரம் செபித்தேன், சித்தி ஏற்படவில்லை என்று நூலை குறை கூற வேண்டாம். ஏனெனில் உனக்குள்ள குணத்தை சோதித்து நீக்கிய பிறகு செய்து பார் சித்தியாகும் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார். ஆகையால் நாம் அனைவரும் நம்மிடமுள்ள குணத்தின் தாழ்மையை போக்கி மேலான உயர்ந்த வாத சித்தியை அடைவோம்.)

துரோகிக்கு வாதநூல் சொல்ல நரகெய்தும்
துரோகிக்கு ஞானநூல் சொல்லிடில் தோஷமாம்
துரோகிக்குக் கற்பத்தைச் சூட்ட வெகுபாவம்
துரோகிக்குக் கண்காணா தூரத்தே போய்விடே. (333)

துரோகிக்கு (குரு த்வேஷம்) செய்பவர்களுக்கு வாத நூலை கொடுத்தால் கொடுத்தவர் நரகெய்துவர், மேலும் ஞான நூலைக்கொடுத்தால் தோஷமுண்டாகும். கற்ப மருந்தை பற்றி கூறினால் பாவம் வந்து சூழும். ஆகவே துரோகியை கண்ட மாத்திரத்தில் விலகிச் செல்ல வேண்டும்.

சித்தி காண் பலன்

தூரத்தே போவென்றார் சொல்லுவது ஆருக்கு
பேரத்த வேதாந்தி பிர்ம விசாரத்தார்
வாரொத்த பூச்சக்ர மகத்தாம் சிவயோகி
நேரொத்த தர்ம்ம நிலைத்தோரைப் பார்த்திடே. (334)

துஷ்டரை கண்டால் தூர விலகு என்று தான் கூறினேன். ஆனால் வேதாந்த மார்க்கத்தை பின்பற்றுபவரையும், பிரம்ம விசாரத்தை கைக்கொண்டவரையும் சிவயோகியையும், தர்ம வழியில் நடப்பவரையும் கண்டால் உடனே வணங்குதல் வேண்டும்.

பார்த்திடும் சாந்தம் பாதாரம் இச்சியான்
சார்ந்திடும் வாசியைக் கண்டு களித்தோர்கள்
ஏர்த்திடும் யோகத் திருந்தோர் பெரியோர்க்குச்
சேர்த்துக் கயிலாசங் கிட்டுமென் செப்பிடே. (335)

மேலும் கேள். சாந்தம் கொண்டவனும், பொருள் மேல் ஆசையில்லாதவனும், வாசியை கொண்டு யோகம் புரிபவனும், யோக நிஷ்டர்களுமான பெரியோர்களுக்கே கைலாயம் சித்திக்கும். (கைலாயத்தை அடைவர்) என்று அறிந்து கொள்.

செப்பிடில் பத்தி சிறக்கவே சோதிக்கில்
ஒப்பிக் குருமுன்னே உபசாரம் போலாகும்
தப்பிலா மார்க்கம் பார் தானிது வாதம்பார்
அப்பினில் உப்புப்போல் அமர்ந்த விகம்பாரே. (336)

முதலில் புத்தி கொண்டு உன் மனதை சோதித் தேறினால் ஞானமுண்டாகும். அதுவே குருவான எனக்கு செய்யும் உபசாரமாகும். பிறகு முறையான மார்க்கத்தில் வாதத்தை செய்து பார்த்தல் வேண்டும். பின்னர் உப்பான நீரில் எவ்வாறு இரண்டற கலந்து நிற்குமோ அதே போல் நீ பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து நிற்பதை உணர்தல் வேண்டும். (சீடன் வந்து சேர்ந்தால் முதலில் அவன் அடக்கத்தையும் பக்தியையும் சோதிக்க வேண்டும்.)

அமர்ந்தால் பிழைப்பான் அல்லாட்டால் பேயாவான்
தமர்ந்த மயக்கமாம் தங்கத்தைக் கண்டுடன்
எமன்தானும் ஏதென்பான் என்முன்னே யாரென்பான்
சமைந்தான் பதம்பார்த்துத் தணலைக் கைக்கொடே. (337)

பிரம்மத்துடன் தான் ஒன்று பட்டவன் என்று எவன் அறிகிறானே அவனே எம பாசத்திலிருந்து பிழைப்பான், இல்லையேல் வாதத் தங்கத்தால் மயக்கமுற்று தன்னைக் காட்டிலும் உயர்ந்தது இவ்வுலகில் ஏதும் இல்லை என்ற இருமாப்பு வந்தடையும். அதனால் எமன் உன்னைக் காட்டிலும் நான் பெரியவன் என்று கூறி பாசத்தால் பிணித்து இழுத்து செல்வான். ஆகையால் மனதை அடக்கி இறுத்து, (சோதித்த சீடனுக்கு ஞானத்தை போதித்து பின்னர் வாதத்தை சொல்லுதல் வேண்டும்.)

கொடுத்த வழிசொல்லுங் கூடி ஞானத்திரன்
தடுத்தே மனந்தன்னைச் சாற்றிடு வாசியை
அடுத்தே இதைப் பார்த்து அப்பால் நூல் பாரென்று
விடுத்தே தொழிலை விடுவித்துக் காட்டிடே. (338)

மனதை ஞான பாதையில் இழுத்து வாசியைக் கொண்டு ஏறும் விதத்தை முதலில் நீ உன் சீடனுக்கு போதித்தல் வேண்டும். பிறகு இந்நூலில் உள்ள முறைகளை அவனுக்குச் சொல்லி கை பாகமும், செய்பாகமும் காட்டி ஞானத்தில் நிற்கச் செய்ய வேண்டும்.

காட்டிடு நூல்முறை கண்டே தொழில்பாரு
பூட்டிய வார்த்தை புகழுற்றுப் பாராதே
போட்டிடு வார்த்தை பொய்யர்பின் செல்லாதே
ஆட்டிடு நூல்கண்டு அர்த்தம் அறிந்திடே. (339)

இந்நூலில் கூறியுள்ள முறைகளை அறிந்து செய்து பார்த்து பிறகு போதனை செய்! உன்னை புகழும் சீடனைக் கண்டு இச்சிக்காதே. அது வெறும் பொய்யான வார்த்தையாயிருக்கும். அப்பொய் வார்த்தையைக் கண்டு அவர்களுக்கு எதையும் செய்து கொடுக்காதே! முறையான பாத்திரம் அறிந்து பின்பே பிச்சையிடுதல் வேண்டும். இந்நூலில் உள்ள முறைகளை நல்ல புத்தி கொண்டு அறிந்துக் கொள்!

அறியாத காலத்தில் அறிந்தவர் பின்சென்று
சிறியாரைப் போலே சிறக்கத் தொழில்பண்ணு
மறியா மனத்திலே வைத்திடு நேசத்தை
நெறியாக மாய்க்கும் நிலையுந் தவறாதே. (340)

உனக்கு அறிந்துக் கொள்ள புத்தியில்லாவிட்டால் அறிந்தவரிடம் சென்று சீடனாக இருந்து தொண்டு செய்து மனதினால் அன்பு காட்டி நேரான பாதையில் நில்! ஒருகாலும் நெறி தவறாதே.

வாய்க்குமே நூலென்று வார்த்தையால் பார்த்திடில்
ஏய்க்குமே வாதந்தான் எம்மட்டும் பார்த்தாலும்
காய்க்குமோ காய்த்தான் காயாத காலத்தில்
நாய்க்கும் ஏன் தேங்காய் நலமது பார்த்திடே. (341)

இவ்வாறின்றி இந்நூலை பார்த்தவுடன் வாதம் வந்து விட்டதாக நினைத்து பல வருடங்கள் செய்து பார்த்தாலும் பலிக்காது. (எவரேனும் தொட்டு காட்டுதல் வேண்டும்). வெறும் புத்தகத்தை மட்டும் வைத்துக் கொண்டு வாதம் பார்ப்போர்க்கு பருவமில்லாத சமயத்தில் காய்காய்க்குமா என்று பார்ப்பதை போலவும் நாயிடம் அகப்பட்ட தேங்காய்க்கு சமமாகும். (வெறும் புத்தக அறிவைக் கொண்டு வாதம் செய்ய முடியாது என்பதை மறைவாக உணர்த்தப்படுகிறது.)

மூலம்

பார்த்திடும் காயம் பரத்தின் முடிவைப்பார்
ஏர்த்திடு வாசியின் இந்தமுறை கேளு
சோர்த்திடு மூலம் குமட்டி வகாரத்தை
போர்த்திடு சிகாரத்தைப் போகாமல் ரேசியே. (342)

ரேசித்துப் பூசித்து நின்றிடில் குண்டலி
மாசித்து நந்தி வசனிப்பார் நீபாரு
நீசித்தோடு எட்டெட்டும் நிலையாத ஞானமும்
வாசித்து மந்திர மார்க்கத்தைக் கண்டிடே. (343)

காயமான தேகத்திலுள்ள ஆதார முறைகளைப் பார்! ஆதாரங்களை வாசிகொண்டு தாண்டும் முறையை கூறுகிறேன் கேள். மூலாதாரத்தில் வாசியை வைத்து சிங் என்று மூச்சை உள்ளே நிறுத்தி தம்பளம் செய்தால் குண்டலியானது விழிப்படைந்து வாயை திறக்கும் பொழுது நந்தியானவர் உன்னுடன் அவ்விடத்தில் நின்று பேசுவார். அவரிடத்தில் அறுபத்து நான்கு சித்து முறைகளையும் மந்திர முறைகளையும் கற்றறிந்துக் கொள்.

சுவாதிட்டானம்

கண்டே கடந்து நீ கஞ்சன் பதிகூடி
ஒண்டே வக்காரம் உறுதியாய் நோக்கிட்டுத்
தண்டே சிகாரத்தார் தன்னுள்ளே ரேசிக்க
பண்டே பிறப்பதும் பாழிப்பான் கஞ்சனே. (344)

பிறகு அவருடைய அனுமதியின் பேரில் மூலத்தை கடந்து பிரம்மாவின் பதியான சுவாதிட்டனத்தில் வாசி வைத்து மூச்சை சிங்கென்று தம்பித்தால் பிரம்ம தேவர் உனக்கு பிறவா வரத்தை அருளுவார். (பிறகு)

மணி பூரகம்

கஞ்சனைத் தாண்டி கடுமால் பதியூடி
மிஞ்ச வகாரம் விரையலே பூசித்து
ஒஞ்சியே காரத்தை உன்னுக்குள் ரேசிக்கப்
பஞ்ச நரையும்போம் பாழிப்பான் மாலென்னே. (345)

பிரம்மாவின் பதியை தாண்டி திருமாலின் பதியான மணிபூரகத்தில் வாசி வைத்து மூச்சை யிறுத்தி தம்பித்தால் நரைதிரையகன்று பாலன் போலாவாய்! (பிறகு)

அநாகதம்

மாலைக் கடந்து மகத்தான ருத்திரன்
காலையுறத் தாக்கிக் கலங்காதே நோக்கிட்டு
சாலச் சிகாரத்தை தன்னுக்குள் ரேசிக்க
மேலைச் சிவப்போடு இவ்விரிவெட்டுந் சித்தியே. (346)

மாலின் பதியை தாண்டி அடுத்து ருத்திரனின் பதியான அநாகதத்தில் வாசி வைத்து மூச்சை தம்பித்து நிறுத்தினால் தேகம் சிவப்பேறி எட்டு விதமான காயமும் சித்தியாகும்.

விசுத்தி

சித்தியாம் ருத்திரன் சேர்ந்த படிதாண்டி
ஒத்தி மகேசன் உறுகும் பதிக்குள்ளே
அத்தி வகாரம் அசையாமற் பூரித்து
ஒத்தி சிகாரத்தை உள்ளுக்குள் ரேசியே. (347)

உள்ளும் மகேசன் உறுக்கும் பரத்தடி
தெள்ளியே நோக்கச் சிறுபிள்ளை தானாவான்
அள்ளும் கனிபோலே ஆகும் சிவயோகம்
துள்ளிய வாசி துடியாது சித்தியே. (348)

ருத்திரனின் பதியை தாண்டி அதற்கடுத்துள்ள மகேசனின் பதியான விசுத்தியில் வாசியை வைத்து சிங்கென்று மூச்சை தம்பித்து நிறுத்தினால் பராபரத்தின் திருவடி தரிசனம் ஏற்படும். மேலும் சிறு குழந்தைப்போல் தேகம் மாறி மூச்சோடாமல் நிற்கும்.

ஆக்கினை

துடியாம் மயேசுரன் சூழ்ந்த படிதாண்டி
அடியாஞ் சதாசிவம் அங்கேநீ காலூணி
மடிவாய் சிகாரத்தை வைத்துநீ பார்த்திடு
கெடியாக கெவனமாங் கேளீர் மகாசித்தே. (349)

மகத்தா மனோன்மணி மாதாவின் பாதத்தில்
அகத்தாமல் வாசியை அப்படியே பார்க்க
செகத்தான மெய்ஞ்ஞானஞ் சேர நிராகார
மகத்தான வாசனை தானும் நீ ஆனதே. (350)

பிறகு மகேஸ்வரனின் படியை தாண்டி அப்பாலுள்ள சதாசிவத்தின் பதியான ஆக்கினையில் வாசி வைத்து மூச்சை தம்பித்து நிறுத்தினால் கெவுனசித்தி ஏற்படும். பிறகு அங்குள்ள மனோன்மணித்தாயின் பாதத்திலும் வாசி வைத்தால் மெய்ஞ்ஞானம் ஏற்படும் வாசனைகள் அகலும்.

குருபதம்

நீதான் குருபதம் நின்று பராபரன்
சூதான வாசியைச் சூட்டச் சிவயோகம்
தாதான பூரணந் தானே தெரிசனம்
வாதாம் வகாரம் சிகாரத்தின் மார்க்கமே. (351)

மார்க்க முறையோடே வைத்துவைத்து அங்கங்கே
ஏர்க்கவே பாரும் எடுத்ததெல்லாஞ் சித்தி
நீர்க்கவிட மற்று நின்றிடும் பூரணம்
பார்க்க மகாவித்தை பரஞ்சேரான் அண்டமே. (352)

பிறகு மேலான குருபதமான சகஸ்ராரத்தில் வாசி வைத்து நின்றால் அங்கு நாதமும் விந்தும் ஒன்று கூடி சிவயோகத்தின் உட்பொருளான பூரணத்தின் தெரிசனம் கிட்டும். இதேபோல் அதன் மேலுள்ள பிந்துஸ்தானங்களில் வாசிவைத்து நின்றால் எடுத்த காரியம் அனைத்தும் சித்தியாகும். பூரணம் பிரகாசிக்கும் அண்டத்தை சுற்றி வரும் சித்தியுண்டாகும்.

அண்டம் இருந்த அடவுசொன்னார் நந்தி
தண்டியது அஞ்சுந் தனித்த அடுக்காக
ஒண்டி இருந்து ஓடி நுழை என்றார்
கண்டிக் கமலினி காணீர் சொரூபமே. (353)

சொரூபத்தை வாய்வைத்துச் சூட்டிக் கமலினி
அரூபத்தைச் சோதிபோல் அண்ட நுழைந்திட்டேன்
நிரூபத்த கற்பம் நிறையனை யோகியும்
தருவொத்த ஞானச் சதாகோடி சித்தரே. (354)

அண்டங்களிலுள்ள விஷயங்களை என் குரு நந்தி எனக்கு உபதேசம் செய்தார். மேலும் என்னையும் அவ்வண்டத்தினுள் புகுந்து அறிந்து வரச் சொன்னார். உடனே நானும் சொரூப குளிகையை வாயில் வைத்துக் கொண்டும், கமலி என்ற குளிகையை உடலில் அணிந்துக் கொண்டும் சோதிபோல் நின்ற அண்டத்தினுள் மிகவேகமாக நுழைந்தேன். அங்கே (அண்டங்களில்) கற்பத்தை உட்கொண்டு சித்தியடைந்த யோகிகளையும் ஞானத்தின் எல்லையில் நிற்கும் சித்தர்களையும் கண்டேன்.

சித்தரைக் கண்டேன் தெவிட்டாதே பாழித்தேன்
ஒத்திய சித்து உனக்கென்னா ஆச்சென்றார்
அத்திய கோடி அறுபது ஆச்சென்றேன்
எத்தி இளஞ்சித்து இன்னம்பார் என்றாரே. (355)

உடனே அவர்களுடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கி நின்றேன். இதை கண்ட சித்தர்கள் உனக்கு என்ன சித்துகள் உள்ளது என்றார். அறுபது கோடி சித்துகளும் வாதங்களும் சித்தியாயிற்று என்று நான் கூறியதை கேட்டு நீ சிறு பயல் இன்னும் பார்க்க வேண்டியது நிறைய உள்ளது. எனவே அவைகளையும் பார்த்து வா என்றார்கள்.

மாலின் பதியை தாண்டி அடுத்து ருத்திரனின் பதியான அநாகதத்தில் வாசி வைத்து மூச்சை தம்பித்து நிறுத்தினால் தேகம் சிவப்பேறி எட்டு விதமான காயமும் சித்தியாகும்.

விசுத்தி

சித்தியாம் ருத்திரன் சேர்ந்த படிதாண்டி
ஒத்தி மகேசன் உறுகும் பதிக்குள்ளே
அத்தி வகாரம் அசையாமற் பூரித்து
ஒத்தி சிகாரத்தை உள்ளுக்குள் ரேசியே. (347)

உள்ளும் மகேசன் உறுக்கும் பரத்தடி
தெள்ளியே நோக்கச் சிறுபிள்ளை தானாவான்
அள்ளும் கனிபோலே ஆகும் சிவயோகம்
துள்ளிய வாசி துடியாது சித்தியே. (348)

ருத்திரனின் பதியை தாண்டி அதற்கடுத்துள்ள மகேசனின் பதியான விசுத்தியில் வாசியை வைத்து சிங்கென்று மூச்சை தம்பித்து நிறுத்தினால் பராபரத்தின் திருவடி தரிசனம் ஏற்படும். மேலும் சிறு குழந்தைப்போல் தேகம் மாறி மூச்சோடாமல் நிற்கும்.

ஆக்கினை

துடியாம் மயேசுரன் சூழ்ந்த படிதாண்டி
அடியாஞ் சதாசிவம் அங்கேநீ காலூணி
மடிவாய் சிகாரத்தை வைத்துநீ பார்த்திடு
கெடியாக கெவனமாங் கேளீர் மகாசித்தே. (349)

மகத்தா மனோன்மணி மாதாவின் பாதத்தில்
அகத்தாமல் வாசியை அப்படியே பார்க்க
செகத்தான மெய்ஞ்ஞானஞ் சேர நிராகார
மகத்தான வாசனை தானும் நீ ஆனதே. (350)

பிறகு மகேஸ்வரனின் படியை தாண்டி அப்பாலுள்ள சதாசிவத்தின் பதியான ஆக்கினையில் வாசி வைத்து மூச்சை தம்பித்து நிறுத்தினால் கெவுனசித்தி ஏற்படும். பிறகு அங்குள்ள மனோன்மணித்தாயின் பாதத்திலும் வாசி வைத்தால் மெய்ஞ்ஞானம் ஏற்படும் வாசனைகள் அகலும்.

குருபதம்

நீதான் குருபதம் நின்று பராபரன்
சூதான வாசியைச் சூட்டச் சிவயோகம்
தாதான பூரணந் தானே தெரிசனம்
வாதாம் வகாரம் சிகாரத்தின் மார்க்கமே. (351)

மார்க்க முறையோடே வைத்துவைத்து அங்கங்கே
ஏர்க்கவே பாரும் எடுத்ததெல்லாஞ் சித்தி
நீர்க்கவிட மற்று நின்றிடும் பூரணம்
பார்க்க மகாவித்தை பரஞ்சேரான் அண்டமே. (352)

பிறகு மேலான குருபதமான சகஸ்ராரத்தில் வாசி வைத்து நின்றால் அங்கு நாதமும் விந்தும் ஒன்று கூடி சிவயோகத்தின் உட்பொருளான பூரணத்தின் தெரிசனம் கிட்டும். இதேபோல் அதன் மேலுள்ள பிந்துஸ்தானங்களில் வாசிவைத்து நின்றால் எடுத்த காரியம் அனைத்தும் சித்தியாகும். பூரணம் பிரகாசிக்கும் அண்டத்தை சுற்றி வரும் சித்தியுண்டாகும்.

அண்டம் இருந்த அடவுசொன்னார் நந்தி
தண்டியது அஞ்சுந் தனித்த அடுக்காக
ஒண்டி இருந்து ஓடி நுழை என்றார்
கண்டிக் கமலினி காணீர் சொரூபமே. (353)

சொரூபத்தை வாய்வைத்துச் சூட்டிக் கமலினி
அரூபத்தைச் சோதிபோல் அண்ட நுழைந்திட்டேன்
நிரூபத்த கற்பம் நிறையனை யோகியும்
தருவொத்த ஞானச் சதாகோடி சித்தரே. (354)

அண்டங்களிலுள்ள விஷயங்களை என் குரு நந்தி எனக்கு உபதேசம் செய்தார். மேலும் என்னையும் அவ்வண்டத்தினுள் புகுந்து அறிந்து வரச் சொன்னார். உடனே நானும் சொரூப குளிகையை வாயில் வைத்துக் கொண்டும், கமலி என்ற குளிகையை உடலில் அணிந்துக் கொண்டும் சோதிபோல் நின்ற அண்டத்தினுள் மிகவேகமாக நுழைந்தேன். அங்கே (அண்டங்களில்) கற்பத்தை உட்கொண்டு சித்தியடைந்த யோகிகளையும் ஞானத்தின் எல்லையில் நிற்கும் சித்தர்களையும் கண்டேன்.

சித்தரைக் கண்டேன் தெவிட்டாதே பாழித்தேன்
ஒத்திய சித்து உனக்கென்னா ஆச்சென்றார்
அத்திய கோடி அறுபது ஆச்சென்றேன்
எத்தி இனஞ்சித்து இன்னம்பார் என்றாரே. (355)

உடனே அவர்களுடைய பாதத்தில் வீழ்ந்து வணங்கி நின்றேன். இதை கண்ட சித்தர்கள் உனக்கு என்ன சித்துகள் உள்ளது என்றார். அறுபது கோடி சித்துகளும் வாதங்களும் சித்தியாயிற்று என்று நான் கூறியதை கேட்டு நீ சிறு பயல் இன்னும் பார்க்க வேண்டியது நிறைய உள்ளது. எனவே அவைகளையும் பார்த்து வா என்றார்கள்.

என்றே நுழைந்தேன் அயலொரு வண்டத்தில்
கண்டேன் சித்தரைக் கடிபதுமைப் போல
தண்டே கை கூப்பினேன் தடாவினேன் தட்டாது
அண்ட நிராகாரத்து அடைந்த பெரியோரை. (356)

பெரியோர் தனைக்கண்டேன் பேராய் வலம் வந்தேன்
நரியோ மவுனமென்று அப்பால் நுழைந்திட்டேன்
பரிவாய் அடுக்கொண்டு பாய்ந்து முடியேறி
விரிவாம் அடுக்கில் விரைந்து நுழைந்தேனே. (357)

பிறகு அவ்வண்டத்தை விட்டு மற்றொரு அண்டத்தில் புகுந்தேன். அங்கு கற்சிலையைப் போல் அசைவற்று மௌனச் சமாதியில் நிற்கும் சித்தர்களை கண்டேன். உடனே அவர்களின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி கைகூப்பி நின்றேன். பிறகு பலமுறை வலம் வந்தேன். ஆனால் அவர்கள் அசைவற்று நிற்பதை கண்டு அது மௌன சமாதி என அறிந்து அவ்வண்டத்தை விட்டு நீங்கி வேறொரு அண்டத்திற்கு சென்றேன்.

நுழைந்திடில் அண்டத்தில் நூல்பார்த்த சித்தர்கள்
அழைந்திடு நூல்சொன்னது ஆர்தான் எனக்கேட்டேன்
தனஞ்செய வீசன்தாய் கண்டு சொன்னது
களைந்தேழு லட்சம் கரைகண்டு பார்த்தோமே. (358)

அவ்வண்டத்தில் சித்தர்களையும் குவியலாக உள்ள பெரிய நூலையும் கண்டேன். உடனே இந்நூலை இயற்றியது யார் எனக் கேட்டேன். அதற்கு அச்சித்தர்கள் ஈசனான சிவபெருமான் தாயான பார்வதிக்கு சொன்ன ஏழு லட்சம் என்ற நூல் இது என கூறினார்கள். மேலும் இதை ஆதிமுதல் அந்தம் வரை படித்து முடித்து விட்டதாகவும் கூறினார்கள்.

பார்த்தோம் என்றீரே பராபர சித்தர்கள்
கார்த்தே இந்நூல்தன்னைக் கண்டு கருக்காதேன்
சேர்த்ததே சுருக்கச் சிவனாலுங் கூடாது
மார்த்ததே உண்டாகில் மகத்துவம் சொல்வீரே. (359)

இவ்வார்த்தையை கேட்ட நான் பரமாய் நின்ற சித்தர்களே இந்நூலை படித்து கரைக்கண்டவர்களாக இருந்தால் ஏன் இதை சுருக்கி மற்றொரு நூலாக எழுதவில்லை என நான் கேட்டேன். உடனே அதற்கு அச்சித்தர்கள் இம்மகா பெரிய நூலைச் சுருக்கிக் கூற சிவனாலும் முடியாது என்றார்கள். அப்படி சுருக்கம் இருந்தால் அதை எங்களுக்கு கூறுதல் வேண்டும் என வினவினார்கள்.

சொல்லிடும் என்றீர் சுகஞான சித்தர்கள்
மல்லிய நந்திதான் வைத்தார்கேள் ஆயிரம்
பல்லுயிர் பார்க்கப் பகர்ந்தேழு லட்சமும்
கல்லுயிர் வெட்டுபோல் காட்டினார் பார்த்திடே. (360)

ஞான வழியில் நிற்கும் சித்தர்களே கேளுங்கள். இந்த ஏழு லட்சம் என்ற கிரந்தத்தின் சாரமாக நந்தி பகவான் ஆயிரம் என்ற நூலை சாரம் குன்றாமல் சுருக்கி கூறியுள்ளார். ஆகவே அதை படித்துப் பாருங்கள்.

பார்த்திடு என்றீரேநீர் பார்க்கும்நூல் எங்குண்டு
தேர்த்து மடக்குந் தெட்சண பாகத்தில்
ஆர்த்திடு ஒருநூற்று அறுபதாம் அண்டத்தில்
கோர்த்திடு சித்தர் குலாவிப் படிப்பதே. (361)

படித்துப்பார் என்று கூறிய திருமூலரே! அந்த நூல் எங்கிருக்கிறது என்பதை கூறுதல் வேண்டும். சொல்கிறேன் கேளுங்கள். அதாவது இவ்வண்டத்தின் தென்பாகத்தில் உள்ள நூற்று அறுபதாவது அண்டத்தில் என்னால் சொல்லப்பட்ட நந்தி நூல் உள்ளது. அதை வாங்கி படித்துப் பாருங்கள்.

படிக்கின்ற நூலில் பயனெல்லாஞ் சொல்லுமோ
படிக்கின்ற நூலிலே பார்சுமோ சாரணை
படிக்கின்ற நூலில் பரிதான் குருவாமோ
படிக்கும் பதினாறும் பாங்காமோ சித்தரே. (362)

படித்துப்பார் என்று கூறிய திருமூலரே! அந்நூலைப் பார்ப்பதன் மூலம் எல்லாவகையான முறைகளையும், சாரணை விவரங்களையும், தங்க குரு மருந்துகளையும் அறியலாமா! மேலும் அதனால் பதினாற. மாற்றுக் கொண்ட வாதத்தங்கம் கிட்டுமா என கேட்கவே

பாங்காமோ எட்டெட்டும் பலபல சித்தொடு
வாங்காமல் ஆடலாம் மற்றோர்க்குங் கிட்டாது
தேங்காமல் தேங்குஞ் சிவயோகப் பூரணம்
தூங்காமல் தூங்கும் சொரூபத்தைக் காட்டுமே. (363)

அதற்கு நான், சித்தர்களே அறுபத்து நான்கு சித்தாடும் முறையும் தங்கம் செய்யும் முறையும் அந்நூலில் உள்ளது. அவையாவும் யோகிகளுக்கே சித்தியாகும். மேலும், அதை முறையாக பார்ப்பதன் மூலம் சிவயோக நெறியில் நின்று தூங்காமல் தூங்கும் சமாதியில் லயித்து சொரூப சித்தியை பெறலாம் எனக் கூறினேன்.

நூல் வழி

காட்டுமென்றீர் நூலைக் கைக்குள்ளாறீ பேர்சொல்லும்
நாட்டிய வாசிக்கு குருநாத நந்திதான்
கூட்டினார் சித்தர்க்குக் கொடுத்தார் தான் இந்நூலை
ஆட்டிய மூலர்தான் அறைந்த நூல் என்பாரே. (364)

மேலும் அச்சித்தர்கள் திருமூலரே! இவ்வளவு மகிமைவாய்ந்த நூல் யாருடைய பெயரில் உள்ளது எனக் கூறும். கேளுங்கள் என் குருவான நந்தி சிவனால் கூறப்பட்ட நூலை குறுக்கி அதை எனக்கு உபதேசம் செய்தார். அவர் கூறியதை நூல் வடிவமாக நான் எழுதியதால் அந்நூலை என் பெயரான திருமூலர் ஆயிரம் என்றே சித்தர்கள் வழங்குகிறார்கள்.

திருமூலர்

அறைந்து நீர்சொல்லவோ என்ற திருமூலர்
மறைந்தே மயங்கியே வார்த்தையால் நீர் சொன்னீர்
குறைந்திடுமோ நூலைக் கொடுத்தாக்கால் பூரணம்
உறைந்தேழு லட்சமும் ஒண்ணாக் கரிதென்னே. (365)

உம்மால் எழுதப்பட்ட நூலையே இத்தனை நேரம் மறைமுகமான வார்த்தையைக் கொண்டு கூறினீரோ! ஏன் இதை முன்பே கூறவில்லை வெளிப்படையாக கூறுவதால் குறை ஏற்படும் என்று பயங்கொண்டா? அல்லது ஏழு லட்சம் என்ற நூலின் சாரம் கிடைத்தல் அரிது என்ற காரணங் கொண்டா? எதனால் கூறவில்லை எனச் சொல்லும்!

அரிதல்ல காணும் அகப்பட்டால் வாசிதான்
புரிதல்ல மூலத்தில் புகட்டினால் வாசியை
எருதல்ல நந்தி எழுநூறும் ஒன்றாகப்
பெரிதல்லோ நூலைப் பேசவறி நீரே. (366)

நீங்கள் கூறியதுபோல் ஏழு லட்சத்தின் சுருக்கம் கிடைப்பது மிகவும் அரிதல்ல. ஏனெனில் மூலத்தில் வாசி வைத்து நின்றால் (மிகவும் எளிதில் அகப்படும்.) ஏழு லட்சத்தின் சாரம் மிக எளிதில் அகப்படும். அதுமட்டுமின்றி என் குருவான நந்தி என்னைக்காட்டி மிகக்குறுக்கி எழுநூறாக கூறியுள்ளார்.

பேசாத நூலிலே பிறந்த முறை சொல்லாய்
வாசாமல் சாரணை மருவிய கட்டினம்
நேசாக் குடோரியும் நிலைக்கும் திராவக
மாசாப் பரிக்குரு வகண்ட செந்தூரமே. (367)

அப்படியானால் திருமூலரே அந்த சுருக்க நூல் வகையை கூறுங்கள். சொல்கிறேன் கேளுங்கள்! சாரணை விதம், கட்டிணங்கள், குடோரி முறை, திராவகம், தங்கக்குரு, அண்ட செந்தூரம்.

நூல் கோர்வை

அகண்ட களங்கம் அடவாஞ் சலனங்கள்
நிகண்டான சத்துக்கள் நேர்பல செம்புகள்
பகண்ட குளிகைகள் பார்க்கில் செயநீரும்
தகண்ட திராவகந்தான் இனிக் கூட்டமே. (368)

கூட்டமா மூலிக் குறையா யுதங்களை
நீட்டிய வஸ்து நிலையப் பதினேழு
மாட்டியே சொன்னேனே ஆயிரத்துள்ளே நான்
பாட்டியேழ் லட்சமும் பாங்காய்ப் பிழிந்தொண்ணே. (369)

களங்கு சலன முறைகள், சத்து வகைகள், குளிகைகள் பல வகையான செம்புகள், செயநீர் அகண்ட திராவகம், வயதை முடிவில்லாமல் வளர்க்கும் மூலிகைக் கற்பங்கள், வஸ்து வித்தை போன்ற பதினேழு அங்கங்கள் கொண்டதாக உள்ள ஆயிரம் என்ற நூலை ஏழுலட்சத்தின் சாரமாக என்னால் எழுதப்பட்டுள்ளது.

மூலர்

ஒண்ணாப் பிழிந்த நூல் உத்தமாயோ மூலர்
கண்ணாரக் கண்டால் கவலை அகன்றிடும்
வண்ணான் உரைத்தது மாக்கியேழு லட்சம்
எண்ணாயிர மீதில் அஞ்சாகச் சொன்னேனே. (370)

சொன்னேனே மூவாயிரம் சுருக்கு ஆயிரம்
முன்னே என்னந்திதான் முந்நூறு முப்பதாய்
பன்னென்ன மூன்று பகர்ந்தெழு முறையாகத்
தன்னேழு லட்சமும் சாதித்தேன் சித்தரே. (371)

சாரமாக கூறினேன் என்று சொன்ன திருமூலரே அந்த நூல்களை எங்கள் கண்ணால் கண்டால் மிகவும் சந்தோஷமடைவோம். அதைக் காட்டுவீரா? சற்று பொறுமையாக இருங்கள் சித்தர்களே! இன்னும் அநேக நூல்கள் உள்ளன அதையும் கூறுகிறேன் கேளுங்கள். ஏழு லட்சத்தை குறுக்கி எண்ணாயிரமாகவும், பிறகு ஐந்தாயிரமாகவும், அதன் பிறகு மூவாயிரமாகவும், கடைசியாக இவற்றை குறுக்கி ஆயிரமாகவும் பாடி வைத்தேன். மேலும் கேளுங்கள். எனக்கு முன்பு குருவான

நந்தி எல்லாவற்றையும் குறுக்கி முன்னூற்று முப்பது என்ற நூலை இயற்றினார். இதைத் தவிர இன்னும் அநேக நூல்கள் உள்ள இவையாவையும் பார்த்து சித்தியடைந்தது மட்டுமில்லாமல் ஈசனால் கூறப்பட்ட ஏழு லட்சம் என்ற கிரந்தத்தையும் முழுமையாக படித்துள்ளேன்.

சாற்றிய நூலேழில் தப்பாதோ அங்கங்கள்
போற்றிய ஈசன்நூல் போகாதோ பொட்டென
நாற்றியே வாஞ்சு அல்லாஞ் சரிபாரு
வாற்றிய நான் போறேன் வாருங்காண் சித்தரே. (372)

வாருங்காண் என்று வளமாய் மருவண்டம்
கூருங்காண் ஓடிக் கொடுந்தீயால் வேகுற்று
தாருங்காண் தப்பி தனியாண்டம் விட்டுநான்
பாருங்காண் பாரென்று பாரீர் அடுக்கொன்றே. (373)

நீர் கூறிய ஏழு வகையான நூல்களில் எந்த ஒரு அங்கங்களும் பிசகில்லாமல் இருக்குமா? அதுமட்டுமின்றி மகிமை வாய்ந்த ஈசன் நூலைக் காட்டிலும் மேலானதா? கொடுங்கள் அதை நாங்கள் அனைவரும் சோதித்துப் பார்க்கிறோம் என்று கோபங் கொள்ளவே நீங்கள் அதை சோதித்து சரிபார்க்க வேண்டுமானால் என் பின்னே தொடர்ந்து வாருங்கள் அந்த நூல்கள்யாவும் என்னுடைய அண்டத்தில் உள்ளது. கட்டாயம் கிடைக்கும் என்று கூறிவிட்டு உடனே பறந்து சென்று மற்றொரு அண்டத்துள் புகுந்தேன். அப்பொழுது அந்த அண்டம் முழுவதும் தீயால் எரிவதை கண்டு அங்கிருந்து தப்பித்து மறுவண்டத்தில் புகுந்தேன்.

அடுக்கைக் கடந்து அதுமேலே தான்தோற்ற
ஒடுக்கியே பாயில் உலாவுறு சித்தர்கள்
தடுக்கிய மேனிதான் தங்கமும் ஒவ்வாது
மடுக்கியே பார்த்தென்னை வாவென்றார் சித்தரே. (374)

சித்தரே எவ்விடஞ் சேர்த்து இருப்பது
பத்தித்த சித்தாலே பாய்ந்தீரோ அண்டங்கள்
முத்திக்கும் புத்திக்கு முன்காய சித்திக்கும்
எத்திக்கும் நூல் உமக்கேஇது என்றாரே. (375)

இவ்வண்டத்தில் பல பக்தர்கள் உலாவுவதைக் கண்டேன். அவர்கள் மேனி தங்கம் போல் சொலித்தது. அச்சித்தர்கள் என்னைக் கண்டு வா என்று அழைத்தார்கள். பிறகு நீர் யார்? எங்கு வசிக்கிறீர்? மேலும் ஆகாயத்தில் பறக்கும் குளிகை முறைகளையும் காய சித்தி முறைகளையும் எந்த நூலைப் பார்த்துக் கற்றுக் கொண்டீர் என வினாவினார்கள்.

என்றநல் சித்தர்கள் எய்திய நூல்கேளு
பண்டசிவன் சொல் பராபரி என்தாய்க்கு
கண்டே கடந்தேன் கவனித்தேன் இவ்வண்டம்
உண்டே பதினேழரை எல்லாம் பார்த்தேனே. (376)

சொல்கிறேன் கேளுங்கள்! சிவனால் பார்வதிக்கு கூறப்பட்ட ஏழு லட்சம் என்ற நூலைப் பார்த்து இவ்வளவு சித்தியையும் பெற்றேன். அதுமட்டுமின்றி அண்டங்களையும் சுற்றி வருகிறேன். மேலும் பதினேழு அறைகளையும் தாண்டிப் பார்த்தேன்.

பார்க்க முறைதான் பதினாறல்லோ நூலில்
ஏர்க்க ஒன்றேது என்னையா சொல்லென்றார்
சேர்க்கவே பாருங்கள் சேர்ஏழு லட்சமும்
ஆர்க்கவே பார்த்தோம் அதிலொன்றைக் காணோமே. (377)

பதினேழு அறைகளை தாண்டிப் பார்த்தேன் என்று கூறிய (திருமூலரே!) சித்தரே! எல்லா நூல்களிலும் பதினாறு அறைகள் மட்டுமே கூறப்பட்டுள்ளது அப்படியிருக்கையில் ஒன்று அதிகமாக உம்மால் கூறப்பட்டது எங்ஙனம்? என்று கேட்டார்கள். அதற்கு ஏழு லட்சம் என்ற நூலைப் பார்த்தீர்களானால் எல்லாம் தோன்றும் என மறுமொழி அளித்தேன். ஆனால் அவர்கள் அதையும் பார்த்து விட்டோம். நீர் கூறியதை போல் அதிலொன்றும் அதிகமில்லை.

மூலிகைக் குளிகை

காணாப் பொருளொன்று கடந்த சொரூபம்
வீணார் அவர் கூவி வெளியாய் விடாது
தோணாப் பொருளொன்று தோன்றும் சொரூபந்தான்
பூணாக நந்தி புகழ்ந்த முறையொன்றே. (378)

உங்களால் அறியப்படாத பொருள் சொரூபக் குளிகைதான்! அக்குளிகையால் வேதாந்தப் பொருள் வெளிப்படையாய்த் தோன்றும். ஆனால் அதுவும் ரூபமற்று காணப்படும். அதன் முறைகளை நந்தி பகவான் எனக்கு கூறியருளினார்.

ஒன்றே குளிகையை உத்தமாய் நான் பார்த்து
கண்டே களிக்கக் கரத்திலே தாராயோ
பண்டே குளிகையைப் பார்த்துநீ சோபித்தால்
இண்டே என் அகண்டம் ஏறவுங் கூடாதே. (379)

அப்படியானால் நான் ஒரு முறை அந்த குளிகையை பார்த்துவிட்டு தருகிறேன். அதை என் கையில் கொடு என்று அச்சித்தர்கள் கூட்டத்தில் ஒருவர் இவ்வாறு

கேட்டார். அதற்கு நான் மறுமொழியாக என்ன கூறினேன் என்றால், உன் கையில் கொடுப்பதைப் பற்றி எனக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் நீ அதை எடுத்துக் கொண்டு ஓடி விட்டால் என்னால் மீண்டும் என்னுட அண்டத்திற்கு செல்ல முடியாது. (என கூறினேன்.)

திருடன் குளிகை வாங்கினது

கூடாதே போகக் குளிகை எடுப்பாரோ
ஆடோ மாடோநான் அறிவற்ற சென்மமோ
நாடாங் குளிகையை நானிட்டுத் தாரேன்காண்
தேடாங் குளிலகையைச் சித்தியைப் பார்த்தென்றான். (380)

அதற்கு அச்சித்தர் சீ! சீ! குளிகையை எவனாவது திருடுவானா? நானென்ன அறிவு கெட்ட ஜென்மமா? அல்லது மாடா? பயங்கொள்ளாமல் கொடு சோதித்துப் பார்த்து விட்டு தருகிறேன் என்றார்.

என்றவன் வாயிலே இட்டேன் குளிகையை
இன்றிய பூரணம் மார்க்கத்தில் போய்விட்டார்
நன்றே அருந்து அளாவினேன் காணாதே
தாண்டி கமலினி தன்னால் தொடர்ந்தேனே. (381)

இவ்வாறு கூறியதைக் கேட்டு அவர் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு சொரூபக் குளிகையை அவர்வாயில் வைத்தேன் உடனே அவர் பூரண மார்க்கத்தில் சென்று விட்டார். அவரைக் காணாமல் தவித்தேன். (கண்ணுக்கு தெரியாத அளவிற்கு மறைந்துக் கொண்டு பறந்து விட்டார்) பிறகு கமலி என்ற குளிகையால் அச்சித்தரை பின் தொடர்ந்தேன்.

தொடர்ந்து அண்டந்தோறுந் துரத்தியே யான் சொல்லிற்
கடந்தானே பேரண்டங்களை ஆயிரத்து எட்டும்
நடந்தானே புவனமும் நானும் பின்சென்றிட
வடந்தான் பதந்தாண்டி அப்பால் பிடித்தேனே. (382)

அவனைப் பின்தொடர்ந்து செல்லுகையில் ஆயிரத்து எட்டு அண்டங்களையும் தாண்டிச் சென்று விட்டான். மேலும் புவனங்களையும் கடந்து செல்லுகையில் கடைசி புவனத்தின் எல்லையில் அவனைப் பிடித்தேன்.

பிடிக்கில் பிரிந்தான் பெரிய வெளியூடே
அடக்கிய முப்பாழும் அப்புறந் தாண்டினான்
நடக்கும் மனோன்மணி நாயகி வாசலில்
இடுக்கி பிடிக்கையில் ஏகினான் சித்தனே. (383)

ஏகினான் நிஷ்கள ஏக வெளியிலே
ஆகினான் மட்டும் அவன்பின்னே சுத்தினேன்
மாதி இளைத்தான் அவள்மாய்கை சிக்கினான்
பாகியா வென்கை பறித்தேன் குளிகையே. (384)

அப்படி பிடிக்கும்பொழுது மீண்டும் தப்பித்து அண்டவெளியில் பறந்தான். மேலும் மூன்று வகையான பாழ்மண்டலங்களையும் கடந்துசென்றான். ஆனால் கடைசியாக உள்ள மனோன் மணியின் வாசலில் அவனைப் பிடித்தேன். அங்கு தப்பித்து நிஷ்களங்கமான ஏகவெளியில் சென்றான். அவ்வெளி முழுவதும் சுற்றி தொடர்ந்து சென்று பிடிக்க முயற்சித்தேன். ஆனால் குளிகையின் வேகத்தால் தளர்ச்சி கண்டு சோர்வுற்று தேவியின் மாயையில் சிக்கி நின்றான். அச்சமயத்தில் வெகு ஜாக்கிரதையாக அவன் வாயில் உள்ள குளிகையை என் கைக்கொண்டு பிடிங்கினேன்.

பறிப்பாயோ நீயென்று பாங்காகத் தர்க்கித்தான்
செறிப்பாயே நானேறித் திரிந்து வருமுன்னே
கறிப்பான கள்ளனோ காக்கனோ போக்கனோ
குறிப்பாய்த் தொடர்ந்து குறிசொல்லீர் என்றானே. (385)

அவனிடமிருந்து பிடுங்கும் பொழுது, ஏன் பிடுங்குகிறாய்? என்று வாதம் செய்தான். நான் அவற்றை கவனியாமல் குளிகை கொண்டு பறக்க ஆரம்பித்தேன். உடனே அவன் தொடர்ந்து வந்து சித்தரே! நான் கள்ளனோ! காக்கனோ! அல்லது நேரான போக்கற்றவனோ எதுவாயின் மன்னித்து பூரத்திற்கும் என் அண்டத்தை நோக்கி செல்வதற்கும் வழி காட்டுங்கள் என்றான்.

குறியேது உனக்குக் குறிகெட்ட சித்தர்நீர்
பறியாச்சோ அண்டத்தில் பார்த்தோர் சிரியாரோ
அறிவாட்சி இல்லாத அறிவிதுகாண் யான்தந்தேன்
நெறியாச்சுது என்று நிமிஷத்தில் வந்தேனே. (386)

நெறிகெட்ட சித்தர் நீர்! நான் ஒருகாலும் உனக்கு வழிகாட்ட மாட்டேன். நான் பார்த்து வந்த அண்டங்களில் நீ வசிக்கும் அண்டமே மிகவும் பொல்லாததாகும். இன்னும் அங்குள்ள சித்தர்கள் எப்படிப்பட்டவர்களோ? முன் பின் தெரியாத உனக்கு புத்தி கொண்டு பாராமல் தவறாக குளிகை கொடுக்கப்பட்டதால் வந்த விளைவைக் கண்டேன். இனி உன்னுடைய அண்டத்திற்கு நீ போனால் போ. இல்லையேல் இங்கேயே கிட! என்று கூறிவிட்டு உடனே மறுவண்டத்திற்கு பறந்து சென்றேன்.

வந்தே அடுக்கு வளமாகச் சோதித்து
பந்திக்கீழ் அண்டம் பாய்ந்தேன் அடுக்கொன்றில்
அந்தித்த மேனி அதிகவெண் சங்குபோல்
சிந்தித்த சித்தர்கள் சேரச் சமாதியே. (387)

மேலண்டங்களை சோதித்துக் கண்டு பின் கீழ் உள்ள அண்டங்களை காணச் சென்றேன். அங்குள்ள ஒரு அண்டத்தில் வெண்சங்கு போல் உடல்கொண்ட சித்தர்களை கண்டேன். அவர்கள் அனைவரும் சமாதியில் இருந்தார்கள்.

சமாதியைக் கண்டு சரணம் பணிந்தேகி
வமாதித் தவனம் அதுவிட்டு வோடையில்
ஒமாதித்த சித்தர்கள் ஒளிபார்க்கில் ரத்தம்போல்
குமாதித்து உலாவையில் கூடிமுன் நின்றேனே. (388)

சமாதியை சுற்றி வந்து வந்தனங்கள் செய்து பிறகு அப்புவனத்தை விட்டு பறக்கும் பொழுது, அங்குள்ள மற்றொரு புவனத்தில் ரத்தச் சிகப்பாக மேனி கொண்ட சித்தர்கள் உலாவுவதை கண்டு அவர் முன்னே இறங்கி கைகூப்பி நின்றேன்.

நின்றவனைப் பார்த்து நீர் ஆரென்றார் சித்தர்
தொண்டன் அடியேன்காண் சொற்பெறுமூலன்காண்
அண்டே இரும் என்றார் அப்பனே வாவென்றார்
கண்டேனே சாரணை காட்டுறார் சித்தரே. (389)

முன்னே நின்றுக் கொண்டிருந்த என்னைப் பார்த்து நீர் யார்? என்றார். அதற்கு நான் என் பெயர் மூலன் என்றும் சித்தர்களின் தொண்டன் என்றும் கூறினேன். உடனே என்னை அழைத்து இங்கேயே சிறிது காலம் இரும் என்று கூறினார். அப்பொழுது அந்த சித்தர் மணிக்கு சாரணை செய்வதைப் பார்த்தேன்.

காட்டுறீர் சித்தரே கடுமணிப் பேரேது
தாட்டிய வட்டமா சித்தி மணியிது
நீட்டிக் கமிலினி நேருண்டோ இல்லையோ
தாட்டிகம் போறாது தன்மாத்திரை உண்டே. (390)

என்ன செய்கிறீர் சித்தரே என்றும் இதன் பெயர் என்னவென்றும் கேட்டேன். அதற்கு அவர் இதன் பெயர் அஷ்டமா சித்தி குளிகை என்றும், ஆனால் இதற்கு சமமான கமலி எந்த குளிகையும் வராது என்றும் கூறினார். இதைக் கேட்ட நான் இருந்தாலும் இதற்குச் சாரணை போதாது இன்னும் ஏற்றவேண்டும் என்றேன்!

உண்டென்றீர் மாத்திரை உறமேன் பிறக்காது
மண்டிய தங்கம் வளமாய்க் குருகாண
முண்டியே தொந்தனை யோட்டிட்டுஞ் சூதத்தை
தண்டியே கட்டிடச் சார்பை அறியோமே. 391)

இன்னும் சாரணை ஏற்ற வேண்டும் என்ற கூறிய மூவரே. நாங்கள் தங்கத்தை குருவாகச் செய்து சூதத்திற்கு தொந்தம் பண்ணி சாரணை ஏற்றும் முறையை நாங்கள் அறிந்திருக்கவில்லை.

தங்கக் குருமுறை

அறியா ததினாலோ அப்பனே மாத்திரை
மறியாச் சுருக்கு மகத்துவமும் இல்லை
குறியாகச் சொல்லாயோ கூட்டுறோம் சாரணை
பறிவான வண்டத்தில் பிறந்த பறிகேளே. (392)

கேளே பறிதான் கெடியாயிர மாற்று
நாளேறு ரத்தங்கள் நாலாற்றின் மேற்றுண்டு
வாளே யுபரச மாற்றான் வெகுஉண்டு
தாளேறத் தாரோம் தங்கச் குருசொல்லே. (393)

அதனால்தான் இச்சூத மாத்திரைக்கு தங்கம் உண்டாக்கும் சக்தியில்லை. எனவே முறையாக எங்களுக்கு சொல்லிக் கொடுப்பீரானால் அதன்படி நாங்களும் சாரணை ஏற்றிக் கொள்கிறோம். மேலும் மூலரே கேளுங்கள். நீங்கள் எங்களுக்கு கற்றுத் தருவீரானால் இவ்வண்டத்தில் உள்ள ஆயிரம் மாற்றுக் கொண்ட பிறவித் தங்கத்தையும், ரத்தினங்களையும், உபரசங்களையும் உமக்கு கொண்டு வந்து தருகிறோம். ஆகவே குரு முறையைக் கூறியருளும்!

சொல்லுறேன் சித்தரே சூட்சாதி சூட்சமாய்
கல்லும் பழுக்கக் கவனமும் கொடுபோக
மல்லிய தீபநீர் மாறாதம் உண்டிட
நல்லுங் கமலினி நல்மாறகங் கேளே. (394)

சித்தர்களே சூட்சாதி சூட்சமான முதற் ரசமணியை சொல்கிறேன் கேளுங்கள். இம்மணியால் கற்களும் தங்கமாகும். கெவனத்திலும் ஓடலாம். மேலும் தீ, நீர், காற்று போன்ற மகா பூதங்களையும் தன்னுள் அடக்கலாம். அப்படிப்பட்ட மகிமை வாய்ந்த கமலி என்ற குளிகையைப் பற்றிக் கூறுகிறேன் கேளும்.

கேளீர்நற் கார்முகில் கெடியான மாசூத
மாளீர்ப் புளியுப்பு மத்திக் கொளுத்திடு
வாளீர் விசைதான் வளமாக வன்பது
நாளீர் தவமித்திரம் நாட்டி உருக்கிடே. (395)

சூதத்துடன் கார்முகில் பாஷாணத்தை சேர்த்து புளியுப்பை அரைத்து மேலே பூசி கவசமாக செய்து கொளுத்த வேண்டும். இவ்வாறு ஒன்பது முறை செய்து மித்திரத்தை கூட்டி சூதத்தை உருக்கினால் நல்ல மணியாகும்.

(புளியுப்பு - என்று சரக்கின் பெயரை மறைமுகமாக கூறப்பட்டுள்ளது.)

'8

உருக்கிய சூதத்தில் ஊட்டிய சாரணை
பருக்கும் பிரிக்கும் பகைஎல்லாந் தீதானே
தெரிக்கில் விடுவிக்க நிர்மலமாய் நிற்கும்
தரிக்கிய தங்கத்தில் தாங்குஞ் சரியிதே. (396)

இம்மணிக்கு பலவகையான சத்துக்களை சாரணையாக கொடுத்துப் பாருங்கள். சகலவிதமான வேலைகளும் கைகூடும். இந்த மணிக்கு சரியிடை தங்கம் சேர்த்து நன்றாக உருக்கினால் மணியானது தங்கத்தை உட்கொண்டு தன் எடையில் எந்த ஒரு மாற்றமும் காணாமல் நிற்கும்.

சரியா விச்சூதம்போல் தாக்கு நிமிளையை
விரிவாய் உருக்கி மணிபோல் அதைவாங்கி
தரியான வீரம் சமைத்திடு பெண்கண்டர்
பிரிவு ஆயிரத்தொடு பேணும் குருவண்டே. (397)

குருவண்டினோடு கூட்டிடு வண்டத் தோல்
மருவிய சூதம் மகத்தான பூரமாம்
தருவிய ஏழுந் தனிக்காம நீரால்
பருவி அரைத்துநீ பாச்சாய் மணிக்கேதான். (398)

மணியை ரவிபட வைப்பாய் தினம்பத்து
அணியவே காமநீர் அப்பி வாசித்தலும்
பிணியாத் திறிவங்கம் பேறாம் அடர்த்துதங்
கணிய அரைத்து கவசித்து உலர்த்திடே. (399)

பிறகு சூதமணியின் எடைக்கு சம அளவு நிமிளையை கூட்டி உருக்கி மணியாக வாங்கி வைத்துக் கொண்டு பின்னர் வீரம், வெண்கண்டர், (கட்டி வெளுத்து குருவாக மாற்றப்பட்ட துருசு) குருவண்டு ஆயிரம். அண்டத்தோல், சூதம், பூரம் போன்ற ஏழு வகையான சரக்கையும் சமஅளவு எடுத்து காமநீர் விட்டரைத்து மணியின்மேல் பூசி சூரிய ஒளியின் முன்பாக பத்து நாட்கள் காயவைத்து பிறகு திரிவங்கத்தை (கரிவங்கம், வெள்வங்கம், வங்கம்) காமநீரால் அரைத்து காயவைத்து மணியின் மேல்பூசி உலர்த்த வேண்டும். (திரிவங்கத்தை - நாகம், கருநாகம், வெண்நாகம் என்று பாடபேதங் கொண்டு கூறுவதுண்டு.)

உலர்ந்த பிறகு உறவாய் மிறிவிலே
கலந்தே நால்திக்கும் காட்டிடாய் நால்பீடம்
தலந்தே வெளியிலே தாக்கு புடமொன்று
வலந்தே குருவாகும் அற்புதம் சித்தரே. (400)

அற்புதஞ் சொன்னேன் அடங்காப் பறிக்குரு
கற்பகம் ஈடோ கலங்காக் குருமுன்னே
நிற்புத சங்கம் நிறைந்தேறும் தொந்தனை
நற்பதஞ் சூதத்தை நாட்டிக் 'குருபாரே. (401)

உலர்ந்த மணியை நான்கு புறம் பீடம் அமைத்து அதன் மத்தியில் வைத்து புடமிட்டு எடுத்துப்பார்த்தால் உயர்தரமான குரு மருந்து கிட்டும். இந்த குரு மருந்துக்கு சமமான சரக்கு இவ்வுலகில் கிடையாது. ஏன் கற்பக விருட்சமும் இணையாகாது. இப்பரிக் குரு மருந்தைக்கொண்டு சூதத்தை பலமுறை தொந்தித்தால் நல்ல குளிகையாகும்.

பாரென்றீர் மூலர் பராபரா வென்னையா
வாரின்றி பண்ணவும் மற்றோர்க்குங் கூடாது
கூரென்ற வித்தை குருதெட்சணை கேளும்
தாரென்ற தங்கமும் தாக்குங்கான் ரத்தமே. (402)

குளிகை

ரத்தினத்தோடே நலமான தங்கமும்
ஒத்தித்த சாரணை யோர்முன் குளிகைக்கு
மத்திதகு எடுத்தது வாய்பேச் சிருக்கையில்
கொத்தித்த காந்தியுங் கொடிய ரவியாச்சே. (403)

குரு மருந்தைக் கொண்டு குளிகையை கூறிய மூலரே குரு தட்சணையாக ஏதேனும் கேளும். உயர்தரமான தங்கம் வேண்டுமா அல்லது இன்னும் வேரேதேனும் வேண்டுமா என என்னை நோக்கி அவர்கள் கேட்கவே நானும் அவையெல்லாம் வேண்டாம் முறையாக குளிகைக்கு ரத்தினத்தின் சத்தையும், தங்கத்தையும் சேர்த்து சாரணை ஏற்றி வாயில் வைத்துக் கொண்டால் கோடி சூரியனைப் போல் தேகத்தில் ஒளியுண்டாகும். முறையாக குளிகை செய்து ஞானத்தில் நிற்பதே எனக்களிக்கும் குரு தட்சணையாகும் என்று கூறிவிட்டு மறுவண்டத்திற்கு சென்றேன்.

ஆச்சே குளிகையால் அப்பால் கடந்திட்டே
பாச்சே சலமாய்ப் பரவிச்சு வோரண்டம்
நீச்சே கடந்தே நிறைய நுழைந்திடில்
வாச்சே சமாதியாய் வல்லோர் இருந்தாரே. (404)

குளிகைக் கொண்டு மற்றொரு அண்டத்தையும் கடந்து சென்றேன். அப்பொழுது ஒரு அண்டம் முழுவதும் சலமயமாய் இருந்ததை கண்டேன். அச்சலத்தினுள்ளே சென்று பார்த்தேன். அங்கு பல வகையான சித்தர்கள் உள்ளே சமாதியில் இருப்பதை கண்டுக் கொண்டேன்.

இருந்தோரைச் சுற்றி எழிலாய் மறுவண்டம்
பரிந்தே நுழைந்தேன் நான் பட்டம் பகல்போலே
தெரிந்தே நல்வரவு திரண்டுது அவ்வண்டம்
அறிந்தே கடந்தேன் அடுக்கெல்லாம் போனேனே. (405)

பிறகு அவர்களை வலம்வந்து வணங்கிவிட்டு மறுவண்டத்திற்கு சென்றேன். அங்கு பகல் பொழுதில் என்னைக் க்ண்ட சித்தர்கள் நல்ல வகையில் உபசாரம் செய்தார்கள். இதையும் கடந்து இன்னும் மேன்மேலும் சென்று அனைத்தையும் கண்டு களித்தேன்.

நுழைந்தேன் அதுக்கெல்லாம் நுகர்ந்து ஆயிரத்தெட்டு
மழைந்தே திரிந்தபின் ஆசையும் வர்ச்சித்தேன்
நுழைந்தேன் சகலமும் ஓடினேன் ஆடினேன்
தழைந்தே சமாதியில் தானானேன் நந்தியே. (406)

பிறகு ஆயிரத்தெட்டு அண்டத்தை பார்த்து முடித்துவிட்டு ஆசை அடங்கியவனாய் சகலத்தையும் கண்டு ஓடி ஆடி ஓய்ந்த பின்னர் சமாதியில் நின்றேன். அப்பொழுது நான் நானாகவே இருந்தேன்.

வாசிப் பிரயோகம்

தானே அவனாகத் தான் அவன் நானாக
ஊன நற்கோட்டம் உறுதி முத்தப்பண்ணு
வானே நல்வாசியை வைத்துவைத் தங்கங்கே
பானே பழக்கமாய்ப் பார்த்துத் தெளிந்திடே. (407)

நான் அவனாகவும் (சிவனாகவும்), அவனே நானாகவும் இருப்பதை கண்டேன். இதேபோல் நீயும் முதலில் நல்லவகையான கற்பங்களைக் கொண்டு கோவிலான இத்தேகத்தை திடப்படுத்து பிறகு ஆறாதாரங்களிலும் வாசி வைத்து ஏறி பழக்கம் கொள்ள வேண்டும்.

தெளியாதே காலத்தில் தேகத்தைத் தாக்காது
தெளியாத காலத்தில் சித்தெட்டும் எய்யாது
தெளியாத காலத்தில் சேராது பூரணம்
தெளியாத மாண்பர்க்குத் திரட்டெல்லாம் பொய்யாமே. (408)

மனதை தெளியபடுத்தியோகத்தில் நிலைக்கவில்லை என்றால் தேகம் [illegible]க்காமல் அழியும் அதுமட்டுமின்றி அஷ்டமா சித்தியும் கிட்டாது பூரணத்தையும் [illegible] முடியாது. எல்லாவிதமான கிரியைகளும் பொய்யாக போகும்.

பொய்யாது வாசிப் புகழாம் சிவயோகங்
கையாற ஏந்துங் கனியாம் இதில்ஞான
மையார்ந்த கண்ணியும் மாயீசன் பாழிப்பால்
எய்யாது வெய்யும் எடுக்குங் கவுனமே. 409)

கவுனம் எடுக்குங் களிம்பறு முன்தேகம்
புவனத்துச் சித்தர்கள் பூசித்துப் பாழிப்பார்
தவனமும் இல்லை சாகார் ஒருநாளும்
சிவனிவன் தானாகுஞ் சேர்வார் சிவயோகம். (410)

வாசியோகமான சிவயோகத்தில் நின்றால் உள்ளங்கைநெல்லிக் கனிப்போல் ஞானம் வந்துகூடும். தேவியும், ஈசனும் உன்னுடன் பேசுவார்கள். மேலும் ஆகாயத்தில் பறக்கும் சித்தியும் ஏற்படும். அது மட்டுமின்றி தேகத்திலுள்ள மாசுகள் நீங்கப்பெற்று உலகத்திலுள்ள சித்தர்களுடன் பேசும் தன்மையும் ஏற்படும். இவைமட்டுமின்றி வாடாமலும் (இளமைக் குன்றாமலும்) இறவாமலும் சிவலோகத்தை அடைவார்கள்.

வாசிவா வென்று வாசியில் ஊடாடி
வாசியை அங்கங்கே வைத்துநீ சாதித்தால்
வாசியும் ஈசனும் மருவியே ஒன்றாகும்
வாசியைப் போல் சித்தி மற்றொன்றும் இல்லையே. (411)

இல்லையே சித்தி இதைப்போல் எளிதாக
பல்லுயிர் நாளெல்லாம் பார்த்தாலுங் கிட்டாது
சொல்லுயர் வாசி கருதி முடிந்திட
வல்லுயிர் வாதிகாள் வாசியைப் பார்த்திடே. (412)

வாசியை வாவென்று கூவியழைத்து ஒவ்வொரு ஆதாரமாக நிறுத்தி வெற்றிக் கொண்டால் வாசியும் சிவனும் ஒன்றே என்ற ஞானம் ஏற்படும். வாசியோகத்தைப் போல் எளிதான சித்தி முறை வேறெதுவும் கிடையாது. இம்முறையில் நிற்காமல் பல ஆண்டுகள் யோகம் பார்த்தாலும் சித்தியாகாது. எனவே வேதத்தின் இறுதிப் பொருளான வாசியை முறையாக வசப்படுத்தி யோகத்தில் நில்லுங்கள்.

பார்த்திடச் சோம்பினால் பலியாது பேய்வாதம்
பார்த்திடச் சோம்பினால் பரமுங் கிடையாது
பார்த்திடச் சோம்பினால் படுவார் பிறப்புள்ளே
பார்த்திட வல்லோர்க்கும் பகலிரவு ஒண்ணுமே. (413)

வாசி யோகத்தில் நிற்பதை விடுத்து சோம்பல் கொண்டால் வாதமும், சித்தியும் கைகுள்ளாகாது. மேலும் மோசமடையாமல் பிறப்பிறப்பில் சுழன்று

கொண்டேயிருப்பர். யோகத்தில் நின்று வாசியைப் பார்ப்பவர்க்கு இரவு பகல் அற்ற இடமான கைலாயம் சித்திக்கும்.

ஒன்னும் வகாரம் உருகு மனோன்மணி
பண்ணும் சிகாரம் பகுந்த சதாசிவம்
தன்னாக ரண்டொன்றாய்த் தாங்கிடப் பூரணம்
கண்ணாறக் கண்டு களித்தேநான் பார்த்திடே. (414)

"வா" - என்ற எழுத்து மனோன்மணியையும் "சி" - எழுத்து சதாசிவத்தையும் குறிக்கும். இவை இரண்டும் இணைந்தால் பூரணமான பிரம்மப் பொருள் சித்தியாகும். (வா + சி = வாசி) இதை முறையாக பழகியானும் சித்தியடைந்தேன். அதே போல் நீயும் முயற்சி செய்.

பார்த்திடு என்றே சொல்லிப் பார்க்காத மாண்பர்க்கு
ஏத்திய வாதந்தான் எல்லாம் வெறும்பொய்யாம்
வார்த்திய மாத்திரை வயத்தம்ப வித்தையும்
காத்திர மிடப்பூனை கைப்பலன் ஒக்குமே. (415)

பார் என்ற நான் கூறியதைக் கேட்டும் யோகத்தில் நிலைக்காதவர்க்கு வாதம் என்ற வார்த்தையும் பொய்யாகும். மேலும் குளிகை முறையும் சித்தியாகாமல் பாழாகும். இவர்கள் குட்டியிட்ட பூனைப்போல் அங்குமங்கும் அலைய வேண்டியதுதான்.

கல்லுப்புக் கட்டு

ஒக்குமே வாதம் முகம்பார்த்து சித்திக்கும்
தக்குமோ தேகம் சதாகோடி காலமும்
உக்குமோ மேனி உறுவாம் பிறப்பது
தொக்குமா வாதஞ்சொல் ஆதிக் கல்லுப்பே. (416)

யோகம் பார்த்தவர்க்கு வாதமும் சதாகோடிகாலம் வாழும் தன்மையும் உண்டாகும். அதுமட்டுமின்றி மீண்டும் இப்பூமியில் பிறவாமல் போவான். வாதம் என்ற சொல்லுக்கு பிறப்பிடமே கல்லுப்புத்தான்.

கல்லுப்போ வென்று கசட்ரே எண்ணாதே
நல்லுற்ற வாரிதி நாயகி நாதங்காண்
வெல்லுற்ற நீரில் உருப்பட்டு பாரைபோல்
வல்லுற்ற உப்பால் .வளர்ந்தது வாதமே. (417)

கல்லுப்பு என்று கூறியவுடன் என்னமோ ஏதோ, என்று மலைக்காதே. இதுவே கடற்பத்தினின் நாதமாகும். அதாவது கடலினுள் உப்பானது கரையாமல் கட்டிகளாய் நிற்கும். இந்த கல்லுப்பால் வாதம் என்ற வார்த்தையே வளர்ந்தது.

வளர்ந்திடும் உப்பை வளமாகக் கட்டிட
உளந்து திரிந்தாலும் ஒருவாகக் கட்டாது
வறிந்து இதைக்கட்ட வறிந்தோர்க்கு எல்லாஞ்சாம்
துலைந்திடா மாத்திரை சொர்னக் குருவாமே. (418)

கல்லுப்பைக் கட்டுவதென்பது மிகவும் கடினமாகும். இதை கட்டுவதற்கு மூலிகை தேடி காடு மலை சென்றாலும் பலிதமாகாது முறையாக எவர் இக்கல்லுப்பை கட்டுகிறார்களோ அவர்களுக்கே எல்லா சரக்குகளையும் மடியச் செய்து குரு மருந்தாக மாற்றும் தன்மையும் தங்கமும் சித்தியாகும்.

கல்லுப்பு

குருவாகவே உப்பின் கூறுநான் சொல்லுகிறேன்
விரிவாகக் கேளுங்கள் வேதாந்த மூர்த்திகாள்
பரிவாம் படிக்குப் பகிர்ந்திடும் கண்டரும்
தருவாஞ் சமபாகம் தாக்கரைச் சூடனே. (419)

சூடன் அரையுமுன் சொல்முதல் ரண்டையும்
நீடவே வெண்கரு நேராய் அரைத்திட்டு
ஓடவே லேசாய் உறவாக வில்லை செய்
கூட ரவியிற் குமட்டு தினம் பத்தே. (420)

பத்தாம் தினத்தில் பரிந்து குருவாகும்
மத்தான கல்லுப்பை இடித்திடு பாக்குபோல்
குத்தாக் குருபூசு குமட்டியே வாட்டிடு
எத்தான இந்துப்பு இதின்மேலே லேபியே. (421)

லேபித்து வாட்ட நிறையெல்லாம் வெண்கரு
தாபிச் சவடு தனியாக நாற்சேரை
ஏபித்த கல்லுப்பில் போடு முற்சேரை
ஆபித்த சுண்ணாம்பு அதுரண்டு சேரையே. (422)

உப்பை குருவாக்கும் முறையைக் கூறுகிறேன். கேளுங்கள் துரிசையும் சூடனையும் சமஅளவு எடுத்து முட்டையின் வெண் கருவால் அரைத்து வில்லை செய்து பத்து நாட்கள் சூரியனின் முன்பாக வைத்தால் பத்தாம் நாளில் குருவாக யாறும். இக்குரு மருந்தை பாக்கு போல் சீவி கல்லுப்பின் மேல் வெண் கருவால்

குழைத்து தடவி தணலில் வாட்ட வேண்டும். பிறகு இந்துப்பை முன் போல் வெண் கருவுடன் கலந்து முன்பு வாட்டிய உப்பின் மேல் பூசி மீண்டும் தணலில் இட்டு வாட்ட வேண்டும். வாட்டிய கல்லுப்பை தனியாக எடுத்து வைத்துக் கொண்டு பிறகு சவுட்டுப்பு நான்கு சேர், கல்லுப்பு மூன்று சேர், கற் சுண்ணம் இரண்டு சேர், பின்னர்,

சேரை இடுநீ திரண்ட பிரண்டையை
பூரை அரசு மபாலிவரா மாறகம்
நேரொத்த சாம்பல் நிரையொன்றுக் கோர் சேரை
தாரையே ஆருந் தனிவார் அமுரியே. (423)

அமுரியினாலே அரைத்திடு நன்றாகத்
திமிரிய பாதியைச் சேர்த்த பூவோட்டிலே
கமரிய வுப்பைக் கலகப் பதித்திடு
வமரிய பாதி வளமாக மேற்பூசே. (424)

பூச மருவோடு போட்டுநீ சீலைசெய்
மாசிலா ஈசனை வாழ்த்திப் புடம்போடு
ஆசிலா உப்பை அடவாய் உருக்கிப்பார்
தேசித்து எறித்தால் திரும்பப் புடம்போடே. (425)

பிரண்டை சாம்பல், பூ அரசன் சாம்பல்.......... (ஒரு மூலிகையின் பெயர் பாடலில் தவறாக உள்ளதால் இங்கு விடப்பட்டது) போன்ற மூன்று வகையான சாம்பலை வகைக்கு ஒரு சேர் எடுத்துக் கொண்டு முன் எடுத்துக் கொண்ட சவுட்டுப்பு, கல்லுப்பு, சுண்ணாம்பு போன்றவற்றையும் கூட்டி அமுரியில் நன்றாக அரைத்து இரு புது மண் அகலை வாங்கி ஒரு அகலில் பாதியளவு ஒரு பாக மருந்தை வைத்து அதன் மேல் முன்பு வாட்டிய கல்லுப்பை போட்டு இவ்வுப்பின் மேல் மீதியுள்ள மருந்தின் மற்றொரு பாகத்தால் நிரப்பி மறு அகலால் மூடி சீலை மண் செய்து காய வைத்தல் வேண்டும். பிறகு காய வைத்த அகலை அசைக்காமல் புடம் போட்டு ஆறிய பின் எடுத்து பார்த்தால் உப்பு கட்டியிருக்கும். இவ்வுப்பை தீயிலிட்டு பார்க்கும் பொழுது வெடித்து எறியுமானால் மீண்டும் முன் போல் மருந்து கூட்டி புடம் போட வேண்டும்.

போட்டே எடுக்கப் புகழாம் குருவுப்பு
ஆட்டே சரக்கெல்லாம் அப்பனே கொண்டிடும்
நீட்டேநற் சீனத்தில் நிரையாக லேபித்து
வேட்டே ரவியில் உருவாகக் கட்டுமே. (426)

முறையாக புடம் போட்டு பார்த்தால் உப்பு குரு மருந்தாயிருக்கும். இக்குருவுப்பானது எல்லாவகையான சரக்குகளை கொன்று தின்னும் உப்பு குருவை

சீனத்தின் மேல் வெண் கருவால் அரைத்து பூசி ரவியிலிட்டால் உருகாமல் திடப்பட்டு கட்டும்.

சீனக் கட்டு

கட்டிய சீனமும் கல்லுப்புச் சேர்சமன்
ஒட்டி அமுரி உறவாகும் வெண்கரு
கட்டி இணங்க நலமாக லேபித்து
மட்டிய வாட்டால் வளமாக வாட்டிடே. (427)

வாட்டு முதிர்ந்தால் மருவித் தெறித்திடும்
கோட்டு தற்சூடன் குருப்பூசு உள்கரு
காட்டிய கட்டுக் கரைக்கெலா மூள்நஞ்சு
ஆட்டி அப்பூசி அமளியாக் கட்டிடே. (428)

கட்டிய சீனத்தையும், கல்லுப்பையும், சம அளவு கூட்டி அமுரியும் வெண்கருவும் சேர்த்தரைத்து வெடியுப்பின் மேல் பூசி தணலில் வாட்டினால் திடப்பட்டு கட்டும். வாட்டும் பொழுது கவனம் தேவை இல்லையேல் உப்பு தெரித்து போகும்! கட்டிய வெடியுப்பையும் கல்லுப்பையும் சம அளவு எடுத்து வெண் கருவால் அரைத்து சூடனின் மேல் பூசி வாட்டினால் சூடனானது திடப்பட்டு குருவாகும். கட்டினங்களுக்கு இச்சூடன் குருவே மிகவும் அவசியமாகும். ஆகவே முதலில் சூடனை குருவாக செய்து கொள்

சாரக்கட்டு

அமளி இணங்க அடவான கல்லுப்பு
தமளிய சீனம் சமனாக வெண்கரு
கமளி அரைத்துக் கலந்த விடைச்சாரம்
உமளித்துப் பூசி உறவாக வாட்டிடே. (429)

வாட்டிய உள்கரு வளமாக நீபூசு
ஆட்டிய கட்டெல்லாம் அப்பா மறவாதே
நீட்டிய சாரம் நிமிரவே வாட்டிடு
கூட்டிய சுண்ணாம்பு கொட்டி எரித்திடே. (430)

எரித்திடச் சாரம் இறுகும் எலும்புபோல்
மரித்துப் புகைந்தால் மறுபடி நீயெரித்
தரித்திரம் போகும் சகலமும் கட்டுண்ணும்
வரித்திய வாதம் அகப்பட்டிது பாரே (431)

கட்டிய வெடியுப்பு, கல்லுப்பு, சீனம், இம்மூன்றையும் சமஅளவு எடுத்து வெண்கருவால் அரைத்து சாரத்தின் மேல் முறையாக பூசி வாட்ட வேண்டும். எந்த சரக்கை வாட்டினாலும் வாட்டும் குகைக்கு உள் பக்கம் மருந்து பூச வேண்டும். இதை ஒருகாலும் மறக்க கூடாது. சாரத்தை முறையாக வாட்டிய பின் சுண்ணாம்பின் நடுவில் வைத்து நன்றாக எரிக்கவேண்டும். எரித்து ஆறிய பின் எடுத்து பார்த்தால் சாரம் எலும்பு போல் திடப்பட்டிருக்கும். இதை நெருப்பிலிட்டு பார்க்கும் பொழுது புகைந்தால் முன்போல் மருந்துபூசி வாட்டி எரிக்க வேண்டும். சாரம் கட்டிப்போனால் வாதம் சித்தியாவதோடு தரித்திரமும் விலகும்.

பாரே இச்சாரம் பரிவான வெண்கரு
நேரே அரைத்ததை லேபித்து வீரன்மேல்
காரே தனல்மேலே கைம்முறையாய் வாட்டுத்
தாரே இணங்கன்.தசைசூடங் கல்லுப்பே. (432)

வீரம் கட்டில் வேதை

உப்பொடு மூன்றும் உறவாக மேற்பூசு
செப்பிட்டு சோடுஞ் சீலையொன்று இட்டுமே
தப்பொடு தீயில் தவறாதே வாட்டிட
ஒப்பொடு வீரம் உருகி அசையுமே. (433)

கட்டின சாரத்தை வெண்கருவால் அரைத்து வீரத்தின்மேல் பூசி தணலிலிட்டு வாட்டவேண்டும். பிறகு வெடியுப்பு, சூடன், கல்லுப்பு இவை மூன்றை வெண்கருவால் அரைத்து வாட்டிய வீரத்தின் மேல்பூசி மீண்டும் தணலிலிட்டு வாட்டி உருக்கினால் திடப்படும்.

சாரகுரு

அசைகின்ற வீரம் அணுகில் நவலோகம்
இசைகின்ற மாற்றும் எட்டரை தப்பாது
பசைகின்ற சாரத்தின் மேலே பரவிடத்
தசைகின்ற சாரந் தவள குருவாமே. (434)

வீரஞ் சித்தியானால் நவலோகங்களும் கட்டாயம் எட்டரை மாற்றுள்ள தங்கமாக மாறும். இவ்வீர குருவை சாரத்தின்மேல் பூசினால் சாரமானது தவளம் போல் நீறி குருவாகும்.

குருவான சாரங் குறிப்பாய் இடைரண்டு
மருவான வீரம் மாட்டிதில் ஓரிடை
தருவான சூதமுந் தானாம் இடைரண்டு
பெரு வமுர்தத்தொடு பேராங் குருவண்டே. (435)

துரிசு குரு

பேராகக் கட்டின சாரமும் ஓரிடை
வாரான குக்குடம் வளமான வெண்மலம்
தாரான வேழுற் தனியரை வெண்கரு
ஓராந் துரிசியும் ஓரேழ் வராகனே. (436)

ஓரேழ் வராகன் ஒருகட்டியாய் வாங்கி
ஆரேழ் இதைப்பூசி அடர்ந்த ரவியில்வை
தாரே சலாசத்து தனிச்சுன்ன மேற்பூசு
வாரே நற்சீலை வளமாகச் செய்திடே. (437)

செய்திட்டு உலர்த்தித் திறமாக மூன்றுநாள்
பைதிட்ட வங்கம் பருகி உருகையில்
கைதிட்ட மாகநீ கலங்காமல் தோய்த்துவா
மைதிட்ட மாக அடவாய்ப் பதினொன்றே. (438)

சாரகுரு இரண்டெடை, வீரம் ஓர்எடை, சூதம் இரண்டு எடை, குருவண்டு, கட்டின சாரம் ஓர் எடை, கோழியின் வெண்மலம், அமுர்த்தம்: (அமுர்த்தம் என்ற சரக்கு நாதத்தையா, அல்லது விந்துவையா அல்லது அமுரியையா எதை குறிக்கிறது என்பது சந்தேகமாக உள்ளது), போன்ற ஏழுவகையுான சரக்குகளையும் வெண்கருவால் அரைத்து ஏழுவராகனெடை உள்ள ஒரு துருசுக்கட்டியின் மேலே பூசி சூரியனின் முன்பாக வைத்து பிறகு சிலாசத்து சுன்னத்தை உலர்ந்த முன் துருசுக் கட்டியின் மேலே பூசி, சீலை செய்து மூன்று நாட்கள் உலர வைத்து, மூன்றாம் நாள் ஒரு அயச் செட்டியில் ஈயத்தை போட்டு நன்றாக உருக்கி அதில் முன் உலர வைத்துள்ள துருசை பதினொறு முறை துவைக்க வேண்டும்.

(இப்பாடலின் துருசுக்கு சிலாசத்து சுன்னமே கவசமாக உள்ளது. மண்சீலை இங்கு கூறப்படவில்லை).

பதினோர் தரந்தானும் பாங்காகத் தோய்ச்சிடில்
மதியோ விதுவென்ன வளமாய்க் குருவாகு
மதியாம் சரக்கு அறுபதுங் கட்டுண்ணும்
நிதியாப் பிறந்திடும் நிமிஷத்தில் கற்பமே. (439)

முறையாக பதினொரு முறை துவைத்தாயானால் துருசு குருவாகும். இத்துருசு குருவால் அறுபது வகையான பாஷணங்களும் கட்டும், வினாடியில் காயம் சித்தியாகும்.

தங்கக் குரு

கற்பஞ் சொன்னேன் கனத்த குருவாக
வற்பங்காண் சொன்னேன் அறையுறேன் இந்நூலில்
நிற்பகத் தங்கம் நிலையுற்று உருகையில்
தற்ப நிமிளைச் சமபாகந் தாக்கிடே. (440)

தாக்கு இடைரண்டுஞ் சமனாக வீரத்தைத்
தூக்கிக் குகையைச் சுழண்டு மணியாக
ஆக்குந் துரிசி குரு அதில்பாதி கல்வத்தில்
நோக்கு நற்சூதம் நிறைமணிப் பாதியே. (441)

பாதியாம் சூதத்தில் பாதியிடு வீரம்
நேதியாம் வெண்கரு நீட்டி அரைக்கையில்
கோதிக் குருவண்டு கொட்டதில் ஐம்பது
ஏதியாம் பூரமும் எட்டொன்று கூட்டிடே. (442)

கற்பத்தை கூறிய இதேநூலில் தங்கத்தை குருமருந்தாக செய்யும் முறையையும் கூறுகிறேன் கேள். தங்கத்தை குகையிலிட்டு உருக்கி அதற்கு சம எடை நிமிளையும், இவை இரண்டிற்கும் சமஅளவு வீரத்தையும் சேர்த்து உருக்கி மணியாக வாங்க வேண்டும். பிறகு அம்மணியின் எடைக்கு சரிபாதி துருசு குருவும் இதே எடை சூதமும், சூதத்திற்கு பாதியளவு வீரமும் சேர்த்து வெண்கருவால் அரைக்க வேண்டும். அரைக்கும்பொழுது ஐம்பது குருவண்டும் எட்டில் ஒரு பங்கு பூரமும் சேர்க்க வேண்டும்.

கூட்டி அரைத்துக் குமுற மணிமேகலை
ஆட்டி உலர்த்து அடவாக மூன்று நாள்
நீட்டுங் கிளிஞ்சில் நிலவாஞ் சலாசத்து
ஆட்டியே வண்டோடு அடவாகப் பூசியே. (443)

பூசித்திடு ஈசன் புகழாம் பராசத்தி
ஆசிக் கணேசன் அடவாந் திசைதேவர்
மாசித்த நிருவாணி மகத்தாங் குருவொரு
தேசித்துப் பூசிக்க நீயாங் குருவாமே. (444)

கூட்டிய மருந்துகளை நன்றாக அரைத்து முன் மணியின் மேல்பூசி மூன்று நாட்கள் காயவைத்து அதன் மேல் கிளிஞ்சல் சுன்னத்தையும் சிலாசத்து சுன்னத்தையும் அண்டச் சுன்னத்தையும் வெண்கருவால் குழைத்து பூசிபுடம்போட்டு

ஈசன் பராசக்தி, கணேசன், திக்தேவர்கள் நிர்வாணி, குரு போன்றவர்களை பூசித்து புடமாறிய பின் எடுத்துப் பார்த்தால் தங்கள் குருமருந்தாம் இருக்கும்.

குடுவான தங்கத்தின் கூறுகேள் தொந்தனை
பருவாநீ தங்கத் தகட்டிலே பத்தொன்று
விரிவாந் துரிசிக் குருவவ் விடைபூசி
தருவான வண்டப் பொடிக்கீழ்மேல் தாக்கிடே. (445)

தாக்கு களங்கத் தயக்கிப்புடத்தைநீ
போக்கு சதமெட்டும் போய்ஏறும் தொந்தனை
ஆக்குமே சூதத்தில் ஈரண்டு கொண்டிட
போக்குந் துரிசிக் குருபத்துக் கொன்றிடே. (446)

இட்டே வாய் நீரால் இழைய அரைத்திடு
கட்டே உருளுங் கபனித்த மத்தங்காய்
மட்டே புடந்தான் வளமாய்ப் பதினொன்று
நட்டே குளிகை நலமாய் இறுகுமே. (447)

இத்தங்க குருவால் செய்யப்படும் தொந்தனைகளை கூறுகிறேன் கேள். தங்கத்தை தகடாக அடித்து அதன் எடைக்கு பத்திலொரு பங்கு தங்க குருவும் துருசுக் குருவும் பூசி அண்டப் பொடிகளை தகட்டிற்கு மேலும் கீழும் இட்டு புடம் போட்டால் குருவாகும். இதேபோல் நூற்று எட்டு முறை செய்யுங்கால் வாதம் கைகூடும். (இக்குருவை மீண்டும் முன்போல் தங்கக்கட்டி மேல் பூசி அண்டவோடுகளை கீழும் மேலுமிட்டு புடம்போட குருவாகும். மீண்டும் இக்குருவை முன்போல் திரும்பத் திரும்பச் செய்வதே தொந்தமாகும்). தொந்தித்த குருவை சூதத்துடன் பத்துக்கொரு பங்கு சேர்த்தால் கட்டி மணியாகும். இம்மணியின் மேல் துருசுக் குருவை பத்துக்கொரு பங்கு எடுத்து வாய் நீரால் இழைத்து பூசி, ஊமத்தங்காயினுள் வைத்து புடம் போட வேண்டும். இவ்வாறு பதினொரு முறை புடம் போட்டால் குளிகையானது நன்றாக இறுகி மணியாகும். (ஒவ்வொரு முறையும் மணியின்மேல் துருசுக்குருவை பூசி வேறு ஊமத்தங்காயினுள் வைத்து புடம்போட வேண்டும்).

இறுகுங் குளிகைக்கு ரெட்டிப்புச் சூதம்வார்
மறிகி அரைத்திடுவாய் நீரால் உண்டைசெய்
குருகுந் துரிசி குருபூசி சற்றேநீ
அறுகு மத்தங்காயில் அதுக்குள் புடம்போடே. (448)

இறுகிய குளிகைக்கு இரண்டு பங்கு பச்சை ரசத்தை வார்த்து வாய் நீரால் அரைத்து உருண்டையாக்கி இதின் மேல் துரிசுக் குருவைப் பூசி முன்போல் ஊமத்தம் காயினுள் வைத்து புடம்போட வேண்டும்.

போட்டுவா இப்படி புடந்தோறும் அட்டாக
ஆட்டுந் தொழிலில் ஆருக்கு நான் சொன்னேன்
நீட்டு நல்வாசிகள் நின்றிடு வேதாந்தக்
கூட்டிடுஞ் சித்தர்க்குள் குலாவி யொளித்தேனே. (449)

ஒளித்தே குருமுன்னே யொருகுரு இட்டல்ல
வளித்தேனே ஆயிரம் அதுக்குஞ் சுறுக்கிது
தெளித்தேனே ஞானத்தைத் தெளிவுள்ளார்க்கே சித்தி
பழித்த கசடர்கள் பார்த்தால் பலியாதே. (450)

மீண்டும் புடம்போட்ட மணியின் எடைக்கு இரண்டு பங்கு சூதம் சேர்த்து வாய் நீரால் அரைத்து உருண்டை செய்து துருசுக் குருவை பூசி ஊமத்தங்காயினுள் வைத்து புடம்போட வேண்டும். இவ்வாறு பதினொரு முறை புடம் போட்டால் குளிகை திடப்பட்டு சித்தியாகும். இந்த குளிகை முறையை இதுவரை யாருக்கும் நான் சொன்னதில்லை. வேதாந்தி மற்றும் வாசியோகம் புரிவோர். சித்தர்கள் போன்ற யாருக்குமே இதை நான் சொல்லவில்லை. ஆனால் உனக்காக இங்கு வாய்திறந்து சொல்லிவிட்டேன். இது ஆயிரம் வகையான குளிகைகளின் சுருக்கமாகும். ஞானத்தின் எல்லையில் நிற்போர்க்கே இது சித்தியாகும். கசடர்கள் செய்து பார்த்தால் பலியாது.

தங்க குருவினால் காய சித்தி

பலியாது பாவி பரதூஷ மூடர்க்கு
பலியாது ஞானத்தைப் பார்க்காச் சண்டாளர்க்குப்
பலியாது வாசிப் பருவம் அறியாட்டால்
பலியாது யீசன் பதம்போற்றா மாண்பர்க்கே. (451)

மேற்கூறிய குரு மருந்து குளிகை முறையானது பரம்பொருளை தூஷிப்பவனுக்கும், ஞானத்தை நோக்காத சண்டாளனுக்கும், வாசியை அறியாதவனுக்கும், ஈசனான சிவபெருமானை வணங்காதவனுக்கும் பலிதமாகாது.

போற்றிய சொர்னக் குருதான் தினங்குன்றி
ஆற்றியே உண்ணு அமர்ந்தொரு மண்டல
மாற்றியே மேனி வளமாகச் சட்டைபோம்
தோற்றிய பானு சுடராகும் சித்தியே. (452)

முன் செய்த தங்க குருவை குன்றியளவு வீதம் ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகத்தில் சட்டை நீங்கி சூரியனைப் போல் பிரகாசமுண்டாகும்.

சித்தியாம் சொர்னக் குருவால் சரக்கெல்லாம்
ம்த்திப் பிரட்ட அசையாமல் கட்டுண்ணும்
வத்தித்த லோக வகை கண்டு நூறுடன்
சித்தித்த வாயிரத் தொன்றிடில் ஏமமே. (453)

இத்தங்க குருவை எல்லா சரக்கின் மேலும் பூசி தணலில் இட்டு வாட்டினால் கட்டிப் போகும். அது மட்டுமின்றி கட்டிய சரக்குகளை முறையான இனங் கண்டு சரியான லோகத்தில் ஆயிரத்துக்கொரு பங்கு ஈந்தால் தங்கமாகும்.

ஏமத்தைக் கண்டு இறுமாந்து போகாதே
வாமத்தைத் தொட்டு வளமாகப் பூசை செய்
காமத்தை விட்டுக் கண்டுகொள் வாசியைச்
சாமத்த சாரணைச் சாற்றாய் குளிகைக்கே. (454)

. தங்கத்தைக் கண்டு மயங்காமல் காமத்தை அடக்கி வாமபாகிபான தாயை பூசித்து வாசி யோகத்தில் நின்று முறையாக குளிகைக்கு சாரணை ஏற்று!

குளிகையை வாயிட்டுக் காடு மலை தோறும்
அழிவில்லாச் சித்தர்கள் அங்கங்கு போய்ச் சென்று
தெளிவுறத் திரட்டெல்லாம் தெளிந்தபின் நீகேட்டு
கழிவுறு கால்தன்னைக் கட்டாய் சமாதியே. (455)

சாரணை ஏற்றிய குளிகையை வாயிலிட்டுக் கொண்டு கெவுன மார்க்கத்தில் சென்று மலையில் வாழும் சித்தர்களுடன் பேசி மேலும் பல அருமையான முறைகளையும், நூல்களையும் கற்றுக் தேர்ந்து அழிவில்லாத சமாதியில் நில்.

சமாதி உரைத்தாக்கால் தர்க்க ரிஷியென்பார்
சமாதி குளிகையில் ஆடினால் சித்தென்பார்
காமதித்த வாசியைக் கண்டோர் சிவயோகி
புமாதித்த மூன்றும் பொருளொத்த ஞானமே. (456)

சமாதி முறைகளைப் பற்றி கூறினால் உன்னை ரிஷி என்று போற்றுவர். குளிகை முறைகளை பற்றி கூறி அக்குளிகைகளை கொண்டு சித்தாடினால் உன்னை சித்தன் என்று அழைப்பர். மேலும் வாசியை அடக்கி மேலுக் கேற்றினால் உன்னை சிவயோகி என்பார்கள். ஆக மொத்தம் மூன்றும் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது தான். (மூன்று முறைகளும் ஞானத்தையே போதிக்கிறது. அதாவது சமாதி, குளிகை, வாசியோகம்.)

கெந்தி சத்து

ஞான மயமான நல்லோர்கள் கேளுங்கள்
மானமாங் கெந்தியை வாங்கிநீ கைம்முறை
கானமாங் கட்டிய கல்லுப்பு ஓர் பலம்
ஒனமாங் காரக் குருவோர் பலம்போடே. (457)

கெந்தகச் சத்துகள்

போடு ஒருபலம் புகழ்கட்டுச் சாரத்தை
ஓடுநற் கெந்தியும் ஒன்பது வெப்போடு
தேடுந் துகையது தீர்க்கப் பனிரண்டு
நீடுங் கல்வத்தில் நீ பழச் சாறிடே. (458)

பழச்சாற்றில் பூவெல்லாம் பாங்காய்ப் பிசைந்திடு
இழைத்தே பிழிந்து இழுத்தரை கெந்தியை
தழைத்தே தினமூன்று தப்பாது அரைத்துவா
பிழைத்தே பூவரசன்றான் பூச்சாறு வார்த்திடே. (459)

வார்த்திட்டு அரை மூன்று நாளும் வளமாகக்
கோர்த்திட்டு நிற்குங் குமரிப்பூ மூன்றுநாள்
சேர்த்திட்டு ஒன்பது தினமுங் கடந்தபின்
வார்த்திட்ட வில்லை போல் வாகாய் உலர்த்திடே. (460)

சத்து சோதிக்க மித்திரம்

உலர்த்தியே ஞானத்தில் ஊது சிவயோகி
மலர்த்திய சத்து வருங்காணும் ஓர்பலம்
குலர்த்தில் இதைவாங்கு கொட்டு மறுபுகை
அலர்த்தி உருக்கிட அடவாக சோதியே. (461)

ஞானமயமாய் இருக்கும் நல்லோர்களே கேளுங்கள். நல்ல கெந்தகத்தை வாங்கி முதலில் சுத்தி செய்ய வேண்டும், சுத்தித்த இக்கெந்தகத்தை ஒன்பது பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் கட்டிய கல்லுப்பு ஒரு பலமும், காரக் குரு ஒரு பலமும், கட்டிய சாரம் ஒரு பலமும், கூட்டி ஆக பன்னிரெண்டு பலங் கொண்ட இச்சரக்குகளை குழிக்கல்லிட்டு பழச்சாறு விட்டு மூன்று நாள் முழுவதும் அரைக்க வேண்டும். பிறகு பூவரசன் சாற்றில் மூன்று நாட்களும், குமரிப் பூவின் சாற்றில் (கற்றாழை பூச்சார்) மூன்று நாட்களும் அரைத்து ஒன்பதாம் நாளில் வில்லைத் தட்டி உலர வைத்து குகையிட்டு ஊத வேண்டும். அவ்வாறு ஊதுங்கால் கெந்தியானது சத்தாக விழும். இச்சத்தை மீண்டும் முன் போல் பழச்சாற்றிலும், பூச்சாற்றிலும் மும்மூன்று நாட்கள் அரைத்து குகையிட்டு ஊத வேண்டும். ஊதிய மருந்துகள் சத்தாக விழும். இச்சத்தை சோதனை செய்து பார்.

சோதிக்க மித்திரம் சூட்டினால் காரத்தை
ஆதிவளை பலமதில் போடு மூன்றிடை
காதிய வீரமுங் காத்திட ஓரடை
பேதித்து அரைத்துப் பிலக்கப் பொடி செய்யே. (462)

பொடியை உருக்கையில் போட்டுவா சோதனை
படிவாக வித்தை வாங்கி ரவிகானு
மடியும் அளவும் அடவாகச் சோதித்தால்
கெடிய ரவிகானுங் கேளீர் நற்சித்தரே. (463)

ஏகமித்திரமான காரத்துடன் கெந்திச் சத்தை உருக்கி பார்ப்பதே சோதனையாகும். பிறகு மூன்று பங்கு வளையலுப்பும் ஒரு பங்கு வீரம் சேர்த்து நன்றாக அரைத்து பொடி செய்து கெந்திச் சத்தை உருக்கும் பொழுது தூவ வேண்டும். இதனால் உயர்தரமான கெந்தி செம்பு கிடைக்கும். ஒவ்வொரு வில்லைகளையும் உருக்கும்பொழுதும் முன் போல் பொடி தூவி சோதிக்க வேண்டும். இதனால் உயர்தரமான கெந்தி செம்பு கட்டாயம் உண்டாகும்.

தங்கச் செம்பு

கேளீர் இடுச்செம்பு கெடிநூறிடு தங்கம்
வானீர் உருக்க மகத்தாம் பறிச்செம்பு
ஆனீர் இரதம் அடவாய்க் கோடிக்கவா
ஆணிவேர்ப் பண்ணி வைப்பாய் குளிகையே. (464)

இந்த கெந்திச் செம்பைப் போல் நூறு மடங்கு தங்கம் சேர்த்து உருக்கினால் நங்கம் செம்பாகும். இத்தங்கச் செம்பை ரசத்துடன் கோடிக்கொரு பங்கு சேர்த்தால் நிரண்டு மணியாகும்.

குளிகை எடுத்துக் குமட்டி வலக்கரந்
தெளிவாகவே கட்டிச் சிந்தித்து வாசியை
நெளிவாகப் போக்காமல் நிறுத்தியே உள்ளுக்குள்
ஒளிவாக வாயிட்டு வோடுங் கவனமே. (465)

இம்மணியை எடுத்து வலக்கரத்தில் கட்டிக் கொண்டு வாசியை நோக்கினால் :மூச்சானது வெளியே ஓடாமல் உள்ளேயே ஒடுங்கி கவன மார்க்கம் சித்தியாகும்.

ஓடலாம் எங்கும் உலாவலாம் அண்டத்தில்
தேடலாம் பூரணம் தெளிவா நாமதுவாச்சு
தேடலாஞ் சித்தர் திரட்டெல்லாம் பாவித்து
கூடலாம் ஞானக் குறிப்பங்கில் நாமாச்சே. (466)

கெவுன மார்க்கத்தால் அண்டங்கள் முழுவதும் சுற்றி வரலாம். அங்குள்ள சித்தர்களின் நூல்களை எல்லாம் பார்த்து ஞான எல்லையில் நின்று பூரணத்தை அடையலாம். அதனால் உனக்குச் சித்தன் என்ற பெயருண்டாகும்.

பறிச் செம்பினால் காயசித்தி

ஆச்சே இச்செம்பு வாத்தாளுட நாதம்
போச்சே வெகுதூரம் பூட்டதில் தொந்தனை
மாச்சே மதிமேலே வைப்பாயிரத் தொன்றுங்
காச்சே கனகங் கனமான மாற்றிதே. (467)

ஆத்தாள் நாதமான இச்செம்பை தங்கத்துடன் சேர்த்து பலமுறை தொந்தித்து பிறகு தொந்தித்த செம்பை வெள்ளியில் ஆயிரத்துக்கொரு பங்கு ஈந்தால் மகா பெரிய மாற்று கொண்ட தங்கமுண்டாகும். (தொந்திக்கும் முறை:- அதாவது நூறு பலம் தங்கத்தில் ஒரு பலம் கெந்தி செம்பை சேர்த்தால் நூறு பலந் தங்கமும் செம்பாக மாறும். செம்பாக மாற்றமடைந்த தங்கத்திலிருந்து ஒரு பலம் எடுத்து நூறு பலம் தங்கத்துடன் சேர்த்தால் அதுவும் செம்பாக மாறும். இதே போல் நூறு முறை தொந்தம் செய்த பிறகு வெள்ளியுடன் சேர்க்க வேண்டும்.)

மாற்றும் பரிச்செம்பை மாட்டிக் குருபண்ணு
ஆத்தாளுந் தந்தையும் அறைந்த ரகசியம்
ஏத்தாங் குருவீசம் ஏழுநாள் தின்றிடே
ஊத்தா நல்தேகம் ஒளி பார்க்கில் கூசுமே. (468)

இந்த தங்கச் செம்பை குரு மருந்தாகச் செய்து ஒரு வீசம் வீதம் ஏழு நாட்கள் உட்கொண்டால், தேகத்தில் சூரியன் போல் ஒளி ஏற்பட்டு கண் கூசல் உண்டாகும். இம்முறையை சிவனாலும் பார்வதியாலும் எனக்கு கூறப்பட்டதாகும்.

(தேகத்தின் ஒளியால் மற்றவர் கண்கள் கூசும் என்பதை இங்கு கூறுகிறார்.)

கூசுமே கண்களுங் கொடியரவி ஒப்பாய்
மாசுமே தேகமும் மதகற் சிலையாகும்
பேசுமே பூரணம் உம்மைப் பிரியாது
வாசி மேல் வாசிவாசி அவனாமே. (469)

பிரகாசம் என்றால் சாதாரணம் இல்லை. கோடி சூரிய பிரகாசமாயிருக்கும். மேலும் தேகத்திலுள்ள குறைகள் நீங்கி கற்களைப்போல் திடமாகும். அது சமயம் அவனும் வாசியும் ஒன்றாகவே ஆவார்கள்.

அவனாகவே வாசி அவ்வாசி தானாக
சிவனாகவே நின்ற சித்தர் மகாரிஷி
மவுன சமாதியில் வாழ்வார் வெகுகோடி
புவனத்தில் வேதாந்தி புண்ணியர்க்கு எய்துமே. (470)

நீ - வாசியாகவும், வாசி - சிவனாகவும், சிவனே சித்தராகவும் இருப்பதை காண்பாய். இதே நிலையில் தான் இதற்கு முன்னுள்ள சித்தர்களும், வேதாந்திகளும் சமாதியில் நின்று வெகுகோடி காலம் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை புண்ணிய சாலிக்கு மட்டுமே வாய்க்கும்.

எய்திடும் கல்லுப்பால் எட்டெட்டும் ஆடலாம்
கைதிடு மேரு கவனமும் ஆடலாம்
வைதிடு ஞானத்து அகண்டத்தில் ஊடலாம்
பைதிடு வாசி பலிக்கின்ற காலமே. (471)

கல்லுப்பால் அறுபத்து நான்கு சித்தும் விளையாடலாம். அது மட்டுமின்றி ஆகாய மார்க்கமாகச் சென்று மகாமேருவை வலம் வரலாம். ஞானத்தில் நின்ற அகண்டத்தை பார்த்து கால வரையற்று லோகத்தில் வாழலாம்.

காலம் ஏதென்று கலங்காத வல்லோரை
கோலமே ஆறு குறிப்பான சக்கரந்
தூலமே அங்கங்கே சொன்னேன் இதுதெய்வம்
பாலையே அட்சரம் பாங்காய் அறிந்திடே. (472)

அறிந்துநீ அங்கங்கே அடவாய்ப் பழகிவா
வறிந்துநீ புத்தியில் வைத்திடு வாசியை
எறிந்துநீ ஏறி எடுத்ததெல்லாஞ் சித்தி
பறிந்துநீ அண்டத்தில் பாயுமுறை கேளே. (473)

காலவரையற்று எவ்வாறு வாழ்வது என்று ஏங்காதே! நான் கூறிய வல்லாரை முதற்கொண்ட கற்பங்களை உட்கொண்டு ஆறாதாரங்களையும் அங்கு உள்ள தேவதா மூர்த்தங்களிடமும் அதிலுள்ள அட்சரங்களையும் கண்டு வாசி வைத்து நின்றால் காலங் கடந்து வாழலாம். மேலும் எடுத்த காரியம் எல்லாம் சித்தியாகும். இனி அண்டத்தின் உற்பத்தி முறையைக் கூறுகிறேன் கேள்!

அண்ட உற்பத்தி

கேளேநீ அண்டங் கெடியான உற்பனம்
தேளே பிருதிவிதனில் மேல்சலம் ஆச்சு
கேளேகேள் வன்னிக் கொடுங்காத் திதின்மேலே
வாளே வெளிவானம் வளர்ந்தது அண்டமே. (474)

இவ்வுலகம் தோன்றிய விதம் கேள்! முதலில் பிருதிவியும் அதன்மேல் சலமும், சலத்தின்மேல் அக்கினியும், அக்கினியின் மேல் வாயுவும், வாயுவின்மேல் ஆகாசமும், ஆகாசம் வளர்ந்து அண்டமாயும் நின்றது. (அதாவது பரந்து நிற்கும் ஆகாயம் முதல்

பஞ்சபூத உற்பத்தி இங்கு கூறப்பட்டது. இனி பஞ்சபூதத்தால் ஏற்பட்ட தூல மாத்திரைகளைப் பற்றி கூறப்படுகிறது.)

அண்டத்தின் மேலே அடர்ந்தது பூமிதான்
பண்டுத்த பூமிமேல் படர்ந்தது அப்புனல்
தண்டப் புவிமேல் சார்ந்தது வன்னிதான்
கண்டத் தழல்மேல் கலந்தது வாயுவே. (475)

பிண்ட உற்பத்தி

வாயுவு மேலே மருவிற்று ஆகாசம்
காயுமோர் அண்டத்தில் கண்டகுறிப்பிது
பாயுமோர் ஆயிரத் தெட்டுக்கும் இப்படி
பாயுமோர் பிண்டம் பரிந்துநீ பார்த்திடே. (476)

இவ்வண்டத்தின் மேல் பூமியும். பூமியின்மேல் நீரும், நீரின்மேல் அக்கினியும், அக்கினியின்மேல் வாயுவும், வாயுவின் மேல் ஆகாசமும் நிற்கிறது. இது ஒரு அண்டத்தை பற்றியதாகும். இதேபோல் ஆயிரத்தெட்டு அண்டங்கள் உள்ளன. இனி பிண்ட உற்பத்தியைக் கேள்.

பார்த்திடு மாங்கிஷம் பரித்த பிருதிவி
வார்த்திடு ரத்தம் வழலையில் நீராச்சு
தோற்றிடு வாய்வு சுழண்டேறிப் புக்கிற்று
காற்றோடு தீயுங் கலந்தே விரும்பிற்றே. (477)

இவ்வுடலில் உள்ள மாமிசங்கள் பூமியின் தத்துவமாகும். சளி, ரத்தம், நீர் தத்துவமாகவும், உடலை சூடு உண்டாக்குவது அக்கினி தத்துவமாகவும், நாம் விடும் மூச்சை வாயு தத்துவமாகவும் ஆயிற்று. நம் உடலில் அக்கினியானது வாயுவுடன் கூடியே உள்ளே செல்கிறது.

கலந்தே செவிக்குள்ளே கண்டு துவாதச
மலந்தே இடையின் ரண்டாச்சு வாரிதி
குலந்தே சுழிமுனை கூடிற்று மேருவாய்த்
தலந்தே பிண்டத்தில் சார்ந்த முறையாச்சே. (478)

காதிற்குள் (செவிக்குள்) ஆகாச தத்துவம் புகுந்து நின்றது. கடலே நம்முள் இரண்டு விதமாக பிரிந்து சிறு நீராக உள்ளது. சுழுமுனையே மேரு தத்துவமாகும் இதுவே பிண்டத்தின் தத்துவமாகும்.

(அதாவது அண்டமான வெளிமண்டலங்கள் பிண்டமான நம் உடலிலும் உள்ளது என்பதை கூறுகிறார். பூமி - மாமிசமாவும், நீர் - இரத்தமாகவும், நெருப்பு -

சூடாகவும், வாயு - மூச்சாகவும், ஆகாயம் கேட்கும் சக்தியாகவும், பூமியிலுள்ள கடல் - வியர்வையாகவும், சிறுநீராகவும், மகாமேரு சுழுமுனையாகவும் இருப்பதை காண வேண்டும் என்கிறார்.)

ஆச்சே இப்பிண்டத்துக்கு ஆதாரம் பூமிதான்
வாச்சே பூமேலே வளர்ந்தது அப்புனல்
காச்சே புனலுக்குள் கருந்தீகாண் பானுவுந்
தேச்சே வீரைஞ்சு சுழல்வாய்வுமேல் விண்ணே. (479)

விண்ணுற்ற அண்டம் விரைந்தபின் பிண்டத்தில்
கண்ணுற்றாப் போலவே கண்டிடு சிற்றிண்டம்
பண்ணுற்ற பேரண்டம் பார்த்ததும் இப்படி
தண்ணுற்ற மேரு தலை வீற்றுருவனே. (480)

இப்பிண்டமான சரீரத்திற்கு ஆதாரம் பூமியாகும். ஆதாரமான பூமியின் மேல் நீரும் நீரான கடலின் மேல் நெருப்பான சூரியன் உள்ளது. இந்த நெருப்பின் மேல் வாயுவும், வாயுவின்மேல் ஆகாயமும் உள்ளது. ஆகாயம் வளர்ந்து அண்டமாயிற்று. மீண்டும் அண்டத்தால் பிண்டமும் உண்டாயிற்று. இதே போல் (பேரண்டங்களைப் போல்) சிற்றண்டங்களும் உள்ளது. இதையும் முறைப்படி வகுத்து பார்த்தல் வேண்டும். பூமிக்கு தலை பகுதியாக உள்ளது மேரு. இந்த மேரு துருவத்தை நோக்கி வலம் வருகிறது.

துருவன் தலைக்குள் சுழண்ட இனங்கேளும்
பருவ ரவிமதி மற்றுள்ள கோள்ராசித்
தருவி இருபது தானேழாம் ரோகணி
மருவிப் பரவும் பலபல மீன்களே. (481)

பலபல பேர்சொல்லிப் பகர்வார் பெரியோர்கள்
வலவிய செக்குப் போல் ஆடிற்று அவ்வாலை
நிலாவித் துருவனாம் நின்ற தமரோடும்
கலஃபிக் கவனங் கலந்தோடும் அண்டமே. (482)

துருவ நட்சத்திரத்தை மையமாகக் கொண்டு சூரியன், சந்திரன் மற்றுமுள்ள கோள்களும், இருபத்தேழு நட்சத்திரங்களும் சுற்றி வருகின்றன. இந்த விண் மீன்களுக்கு அசுவனி, பரணி, கிருத்திகை, ரோகிணி போன்ற பெயர்களை பெரியோர்கள் சூட்டியுள்ளார்கள். செக்கு மாடு நடுவிலுள்ள செக்கையே மையமாகக் கொண்டு சுற்றி வருவது போல் துருவத்தை சுற்றி மற்ற கோள்கள் வலம் வருகிறது. ஆனால் துருவன் தான் நின்ற இடத்தை சுற்றாமல் மேல் நோக்கியே செல்கிறான். இவன் மூல அண்டத்தை நோக்கி செல்வதை கவனம் என்றழைக்கப்படுகிறது.

அண்டத்துப் பக்கம் அசையாது வல்லோடு
வெண்டுற்றுப் பாய்ந்தாலும் வாகாய் அழியாது
உண்டுற்று மேலோடு உருகும் அறிவாக
வெண்டுற்ற சித்தர் இதங்கண்டு பாருமே. (483)

அண்டத்தை சுற்றி ஒரு அசையாத ஒடு உள்ளது. அந்த வோட்டை எந்த வஸ்துவாலும் அழிக்க முடியாது. ஆனால் அது உருகும் தன்மை உள்ளதாக அறிந்துக் கொள். இவையாவும் சித்தர்கள் பார்த்த முறையாகும்.

கண்டு கண்டு அண்டங் கடந்தோடி நீபாரு
பண்டு உரைத்த பழக்கத் துடனேநீ
அண்டிடு மாத்திரை ஆருக்குங் காட்டாதே
ஒண்டிடு நவ்வென்று மாத்திரை ஓடிடே. (484)

அதே போல் நீயும் அண்டத்தை கடந்து சென்று பார் முறையாக குளிகைக் கொண்டு அனுதினமும் பழகினால் கட்டாயம் சித்தியாகும். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் உன்னிடம் உள்ள குளிகையை யாரிடத்துங் காட்டாதே. முறையாக குளிகை கொண்டு பூரணத்தில் ஓடிப்பார்.

மூலாதாரம்

ஓடிடும் போது ஒருமித்து வாசியை
நாடிடு திக்கை நலமாய் இதத் தெண்ணி
கூடிடு மார்க்கத்தில் கோடிகாண் சித்தர்கள்
ஆடிடு மார்க்கம் அறிந்துகொள் மூலமே. (485)

கெவன மார்க்கத்தில் செல்லும் பொழுது செல்ல வேண்டிய திக்கை மனதில் எண்ணிக் கொண்டும் வாசியை இழுத்து மூலத்தில் ஒடுக்கி நிற்றல் வேண்டும். அப்பொழுதுதான் கோடிக் கணக்கான சித்தர்களுடன் பேச முடியும்.

மூலம் இருந்த முறைகேளு மண்டம்போல்
கோலம் அதின்மேலே குலாவிய நாளிதழ்
சீல நடுவே சிறந்திடு முக்கோணம்
மாலயன் மூன்றில் அமர்ந்த சிகாரமே. (486)

சிகாரமே முத்தில் சிறந்த முனையொன்றில்
ஒகார வடிவாகி ஓமென்று குண்டலி
நகார முதலாறு நற்சக்கர மையம்
மகாரக் குருதாள் அளாவி இரங்கிற்றே. (487)

மூலாதாரமானது முட்டைப் போல் ஒரு கோளமும் அதைச் சுற்றி நான்கு இதழ்களும், நடுவில் முக்கோணமும் கொண்டதாயிருக்கும். இம்முக்கோணத்தில் சிகாரம் என்ற ஒரு பொருள் உள்ளது. சிகாரத்தின் ஒரு முனையில் அகாரமும், மற்றொரு முனையில் உகாரமும் இடையில் ஓங்காரமும் உள்ளது. இந்த மூலாதாரமே ஆறாதாரத்திற்கும் ஆதியாகும், மேலும் இங்கிருந்து தோன்றி நாடிகள் ஆறு சக்கரங்களையும் கடந்து குருபாதம் வரை (சகஸ்ராரம் வரை) பரவி புருவ மையத்தில் வந்து நிற்கும்.

இரங்கிப் புருவம் இடைக்குள்ளே நின்றது
தரங்கித்த மாவாசல் தாளாகி நின்றது
மரங்கித்த மூலம் மருவும் இதழ்நாலில்
அரங்கத் தவர்முதல் அறிவான சார்விடே. (488)

இட்டது நாலும் இருந்த சிகாரமும்
ஒட்டியே பாய்ந்து உருவாயின வல்லபை
கட்டி முனையொன்றில் கணபதியே நிற்பார்
மட்டான குண்டலி வாய்க்குள்ளே நந்தியே. (489)

சுவாதிட்டானம்

நந்தியைப் பார்த்திடு நாட்டு சிகாரத்தை
அந்தி வகாரம் அடவாகவே பூரி
பந்திய வேதம் பலபல நூலெல்லாம்
சிந்திக்கத் தோன்றிடும் சேருவை வாசியே. (490)

புருவ மையமே தமர் வாசலாகும். முதலில் மூலாதாரத்திலுள்ள நான்கு இதழ்களை அறிவால் அறிந்து பார்த்தால் அங்கு சிகாரம் தோன்றும். அந்த சிகாரத்தின் ஒரு முனையில் கணபதியும், மற்றொரு முனையில் வல்லபையும் நிற்பார்கள். சிகாரத்தின் கீழ் முனையில் தலை கவிழ்ந்த குண்டலி பாம்பு இருக்கும். அந்த பாம்பின் வாயினுள்ளே நந்தியிருப்பார். (இதழின் அட்சரங்களான வ-ச-ஷ-ஸ என்பதாகும்.) நம்முடைய முக்கிய நோக்கம் நந்தியைக் காண்பதே நந்தியைக் கண்டால் யோகமும், ஞானமும் வேதாந்தங்களும் பல நூல்களின் சாரத்தையும் அறிந்து கொள்ளலாம். ஆகவே மூலத்தில் வாசி வைத்து நின்றால் நந்தி அனைத்தையும் உனக்கு போதிப்பார்.

(குண்டலி யோகத்தின் வரைப் படங்களுடன் விளக்கம் வேண்டுமானால் எமது வெளியீடான போகர் ஞான சூத்திரம் என்ற நூலில் காணலாம்.)

சேரும் தினந்தான் தெளிவாகக் கண்டிடு
பாரு விடாமலே பாழிப்பான் என்னந்தி
கூறாது தாண்டக் குலாவிய சக்கரம்
சேறிதழ் ஆறும் சுவாதிட்டம் என்பரே. (491)

அனுதினமும் விடாமல் மூலத்தில் மனதை வைத்து வாசி கொண்டு ஊதினால் என் குருவான நந்தி உன்னிடத்தில் தோன்றி அனைத்தையும் போதிப்பார். இந்த மூலாதாரத்தை தாண்டி நான்கு அங்குலம் மேலேறிச் சென்றால் சுவாதிட்டம் என்ற ஆதாரம் காணும்.

என்பார் இதழாறில் இருக்கின்ற வட்சரம்
வன்பாம் பகாரம் வகுத்தலவ்வோ டாறும்
தம்பால் நடுவே சதுராம் நகாரங்காண்
இன்பாக வாணி இருக்கும் பிரமனே. (492)

மணி பூரகம்

பிரமனைப் பார்த்துப் போயில் தெளிந்துநீ
அரமனைக் குள்ளே அந்தித்து வாசியை
உரமனைத் தாக்கு ஓடிலும் ஓடாது
திரமனை யோடுஞ் சிவயோகி ஆகுமே. (493)

இச்சக்கரம் ஆறு இதழ்களை கொண்டதாகவும் இதன் மத்தியில் சதுரமும், இச்சதுரத்தின் மத்தியில் 'ந' என்ற எழுத்தும் நிற்கும். மேற்கூறிய ஆறு இதழ்களில் ப3 - ப4·- ம - ய - ர - ல என்ற ஆறு அட்க்ஷரங்கள் நிற்கும். இச்சக்கரத்தின் மத்தியில் பிரம்மாவும் சரஸ்வதியும் நிற்பார்கள். இவர்களிடத்தில் மனதை நிறுத்தி வாசி கொண்டு ஊதினால் பிறவிச் சுழலில் அகப்படாமல் சிவலோக பதவி நிலைக்கும்.

ஆகின்ற சக்கரம் அதின்மேல் மணிபூரம்
பாகின்றியே நிற்கும் பாய்ந்து இதழ்பத்தாய்
வாகின்ற பத்தினில் வரைந்த எழுத்துகேள்
போகின்றபா முதல் புகழாம் பகாரமே. (494)

இச்சக்கரத்திற்கு மேல் ஆறு அங்குலம் தாண்டிச் சென்றால் மணிபூரகம் என்ற பத்து இதழ்கள் கொண்ட சக்கரத்தைக் காணலாம். இவ்விதழ்களில் ட3 - ட4 - ண - த1 - த2 - த3 - த4 - ந - ப1 - ப2 போன்ற பத்து அட்க்ஷரங்கள் நிற்கும்.

புகழாறு மையையும் பொலிந்த பிறைபோலே
மகழா மகார மருவி இருந்தது
நிகழான மாலும் நிறையான லட்சுமி
அகலாது இருப்பார் களப்பனே பார்த்திடே. (495)

இச்சக்கரத்தின் மத்தியில் ஒரு பிறையும் பிறையின் மேல் "ம" என்ற எழுத்தும் நிற்கும். இதன்மேல் திருமாலும், லட்சுமியும் இருப்பார்கள். அங்கு அவர்களை வணங்கி நில்!

அநாகதம்

பார்த்திடு வமர்போகம் பாலிக்கு மாயோகங்
கார்த்திடு நீதான் கருமேக வண்ணனை
கோர்த்திடு வாசிக் குமட்டி அதில்பாரு
ஆத்திடு மப்பால் அநாகதம் கண்டிடே. (496)

அவ்விடத்தில் வாசி வைத்து நின்றால் சகல ஐஸ்வர்யங்களையும் பெறலாம். அதுமட்டுமில்லாமல் யோகசித்தியும் உண்டாகும். ஆகவே கார்மேக வண்ணனான திருமாலை தரிசனம் செய்வாயாக! இதை கடந்து எட்டு அங்குலம் ஏறினால் அநாகதம் என்ற சக்கரத்தை காணலாம்.

சக்கரம்

கண்டிடு சக்கரம் காணிதழ் பனிரண்டு
தண்டி எழுத்தின் சாற்ற முறைகேளு
அண்டிடு சக்கர முதலாக வவ்வரை
ஒண்டிப் பனிரண்டும் உறுதியாய் நின்றதே. (497)

இச்சக்கரமானது பன்னிரண்டு இதழ்கள் கொண்டு இருக்கும். இவ்விதழ்களில் க1 - க2 - க3 - க4 - ங - ச1 - ச2 - ஜ3 - ஜ4 - ஞ - ட1 - ட2 - போன்ற அட்க்ஷரங்கள் நிற்கும்.

முக்கோணம்

நின்ற நடுமையம் நேராக முக்கோண
மண்டி சிகாரம் அதுக்குள்ளே நின்றது
தண்டிய ருத்திரன் தாயான பார்வதி
அண்டித் தொழுதுநீ ஆட்டிடாய் வாசியே. (498)

விசுத்தி

வாசியை ஆட்ட மகத்தா மனதுடன்
ஓசியே பானு ஒருகோடி போலொளி
தேசியின் தேசு சிறக்க அதிற்பாரு
ஆசியைத் தாண்டி அதன்மேல் விசுத்தியே. (499)

சக்கிரத்தின் நடுவில் நேர்முக்கோணமும், அம்முக்கோணத்தினுள் "சி" என்ற எழுத்தும் நிற்கும். இச்சிகாரத்தின் மேல் ருத்திரனும் ருத்திரியும் நிற்பார்கள். அவ்விடத்தில் திடமான புத்திகொண்டு வாசியை வைத்து ஊதி நின்றால் கோடி

சூரியப் பிரகாசத்துடன் ருத்திரனும் - ருத்திரியும் காட்சியளிப்பார்கள். அவர்களை கண்டு வணங்கி அதை தாண்டி விசுத்தி என்ற ஆதாரத்திற்கு செல்ல வேண்டும்.

விசுத்தி இதழ்தான் விளங்கிப் பதினாறு
வசுத்திய அட்சர மாமுதல் ஈரெட்டும்
பசுத்தி இதழ்க்குள் பரவியே நின்றது
ஒசித்து நடுமையம் ஓரறு கோணமே. (500)

கோண நடுவே குவிந்த வகாரங்காண்
ஆன மயேசுரம் ஆத்தாள் மயேஸ்பரி
பேணி இருந்தது பேரான கண்டங்காண்
பூணப் பரத்தின் புகழாம் அடியிதே. (501)

அநாகத்திலிருந்து பத்து அங்குலத்தின் மேலும் விசுத்தி அக்கிரமானது பதினாறு இதழ்கள் கொண்டதாயிருக்கும் இவ்விதழ்களில் அ - ஆ - இ - ஈ - உ - ஊ - ரு - ரூ - லு - லூ - ஏ - ஐ - ஓ - ஔ - அம் - அஹ, என்ற அட்க்ஷரங்கள் நிற்கும். இதன் மத்தியில் அறுகோணமும், அறுகோணத்தின் மத்தியில் "வ" என்ற எழுத்தும் நிற்கும். இவ்வகாரத்தின் மேல் மகேஸ்வரரும், மகேஸ்வரியும் நிற்பார்கள். இவ்விடத்திற்கு கண்டம் என்ற பெயரும் உண்டு. இதுவே பரம்பொருளான ஆத்மாவின் ஸ்தானம் என்றும் வழங்கப்படுகிறது. இதை முதலில் நீ அறிந்துக் கொள்.

அடியிலே வாசி அசையாமல் வைத்திட
முடியிலே கொண்டுபோய் முட்டும் அதுபாரு
கொடியிலே ஓடிடுங் கூப்பிடும் பூரணம்
அடியில் கனிபோல வாய்க்குங்காண் ஆணமே. (502)

இவ்வளவு மகிமை வாய்ந்த இவ்விடத்தில் நீ வாசி வைத்து நின்றால் பரம்பொருளான பூரணம் உன்னை தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளும். மேலும் கவுன சித்தியும் மிக எளிதில் சித்திக்கும்.

வாய்க்கும் தலமேல் வளமான ஆக்கினை
காய்க்கும் இதழ்ரண்டு தான்எழுத்து ஹ - ளகாண்
பாய்க்கு நடுவே பகுத்தயகாரங் காண்
வாய்க்கும் சதாசிவம் வட்ட மணியென்னே. (503)

இந்த விசுத்தியை கடந்தால் ஆக்கினை என்ற இரண்டிதழ்க் கொண்ட சக்கரத்தை காணலாம். ஹ - ள - என்ற எழுத்துக்கள் இரண்டு இதழ்களில் நிற்கும். இதன் மத்தியில் "ய" - என்ற எழுத்து, யகாரத்தின்மேல் சதாசிவனும், மனோன்மணியும் நிற்பார்கள்.

மணியாம் மனோன்மணி மாதாவை நேசித்து
அணியாய் அதற்குள் அடவான வாசியைப்
பணியாகவே பூட்டிப் பார்த்திடு யோகிக்குத்
தணியாம் ரிஷிராசன் தானாகும் தப்பாதே. (504)

அங்குள்ள மனோன்மணியிடம் புத்திக் கொண்டு வாசி வைத்து நின்றால் உனக்கு ராஜரிஷி என்ற பெயர் உண்டாகும். இது ஒருகாலும் பொய்யாகாது.

வண்ணம்

தானாக நின்ற சடச சகர்வர்ணங்
கோனாகு மூலம் குமட்டிய பொன்னிறம்
தானாளும் அதுமேலே நாலங்குலம் தாண்டல்
வானான கஞ்சந்தன் வர்ணம் வெளுப்பென்னே. (505)

இனி சக்கரத்தின் வர்ணங்களும் அதன் இடைவெளியின் அளவுகளையும் கூறுகிறேன் கேள்! மூலாதாரம் என்ற சக்கரம் பொன்னிறமாய் இருக்கும். மூலத்திற்கு மேல் நாலங்குலம் தாண்டினால் வெள்ளை நிறங் கொண்ட சுவாதிட்டானம் என்ற பிரம்மாவின் பதியை அடையலாம்.

அங்குலம்

வெளுப்பான கஞ்சன்றன் மேலாறு அங்குலம்
விருப்பான மால்தான் விரைந்த கருநிறம்
தளுப்பாதி மேலே தானெட்டு அங்குலம்
மளுப்பான ருத்திரன் கண்ட சிவப்பென்னே. (506)

இதைக் கடந்து ஆறு அங்குலம் சென்றால் கரிய நிறம் கொண்ட திருமாலின் பதியான மணிபூரகத்தை அடையலாம். இதைக் கடந்து எட்டு அங்குலம் ஏறினால் சிகப்பு நிறங் கொண்ட ருத்திரனின் பதியை அடையலாம்.

குருபதம்

சிவந்த மதிமேலே சேர்பத்து அங்குலம்
அவன்தான் மயேஸ்பர நாதன் உமைபச்சை
அவன்தான் அங்கே அதின்மேல் பனிரண்டில்
தவந்தான் சதாசிவன் தானஞ்சு வர்ணமே. (507)

இச்சக்கரத்தை விட்டு பத்து அங்குலம் கடந்து சென்றால் பச்சை நிறங் கொண்ட மகேஸ்வரனின் ஸ்தானமான விசுத்தியை காணலாம். இப்பதியைத்தாண்டி

பன்னிரண்டு அங்குலம் மேலேறினால் பஞ்சவர்ணங் கொண்ட சதாசிவனை அடையலாம்.

வன்னங்கள் சொன்னேன் வளர்ந்தங்குலஞ் சொன்னேன்
தன்னங்கு எழுத்தோடு சார்ந்த இதழ்சொன்னேன்
பன்னங்கள் வாழ்ந்த பதிதேவதை சொன்னேன்
உன்னங்கள் வாசியை ஊட்டிடு தப்பாதே. (508)

இதுவரை ஆறாதாரங்களான சக்கரங்களின் வர்ணமும், எழுத்தும், இதழ்களின் எண்ணிக்கைகளும் தேவதைகளும் முறையாக சொல்லி விட்டேன். இதை அறிந்து சரியான வகையில் வாசி வைத்து நில்!

தப்பாதே தாண்டத்து தானாங் குருபதம்
ஒப்பாய் இதழ்காண ஓராயிரத் தெட்டு
கொப்பா நடுவே குறிப்பது ஐங்கோணம்
அப்பா அகார உகார மகாரமே. (509)

மகாரத் துடனே மருவிய நாதங்கேள்
பகாரத்தை வித்து பரிவாய் இதுவஞ்சு
ஓகாரத்துச் சோதி ஒளிபோல் வெளியாகி
நிகாரத்த நின்மலம் நின்ற வடிவாமே. (510)

வடிவாம் இடத்திலே வைத்திடு வாசியை
நெடிவாய்ப் போகாமல் நிறுத்தி அதில்பாரு
குடிவாம் பிலப்புறுக் கொண்டிடும் பூரணம்
வடிவான வேதாந்த வாதிப் பொருளிதே. (511)

தப்பாமல் வாசியோகத்தில் நின்றால் குருபதமான ஆயிரம் இதழ் கொண்ட சகஸ்ராரத்தில் ஞானமயமான பூரணத்தைக் காணலாம். அதாவது தலை உச்சியில் ஆயிரம் இதழ் கொண்ட பூரணத்தைக் காணலாம். அதாவது தலைஉச்சியில் ஆயிரம் இதழ் கொண்ட சக்கரம் உள்ளது. இதன் மத்தியில் ஐங்கோணமும், ஐங்கோணத்தின் மத்தியில் அ - உ - ம - நாதம் - விந்து போன்ற ஐந்து விதமான ஓங்காரத்தின் அங்கங்கள் நிற்கும். இக்குருபதத்தில் நிற்மலமான சோதியுள்ளது. அச்சோதியின் இடத்தில் வாசி வைத்து நின்றால் வேதாந்தப் பொருளான பூரண சோதியின் தரிசனம் உண்டாகும்.

பொருளாம் அதில்நின்று போக்கோடே மேல்நோக்கிச்
சுருளாம் துவாத சந்தோற்று மதினேறு
வருளா முனைமுக் கடைந்தால் மகாஞான
மருவாய்ப் பிடரியில் வைத்திடு யோகமே. (512)

இக்குருபதத்தை தாண்டிச் சென்றால் நூறு சந்திரனுக்கு சமமான ஒளிக் கொண்ட துவாதசம் என்ற ஆதாரம் தோன்றும். அவ்விடத்தில் நின்றுக் கொண்டு மூக்கு நுனியில் மனம் வைத்தால் ஞானம் சித்திக்கும், அதேபோல் பிடரியில் மனம் வைத்தால் யோகம் சித்தியாகும்.

யோகமாம் குண்டலி யோகத்தை நோக்கிட
பாகமாய்க் கீழே பதினொன்றும் கண்டிடும்
நாகமாய் நின்ற நடுமையம் நோக்கினால்
ஆகாமல் ருத்திரன் அழல்கோடி பானுவே. (513)

பானுவுக் குள்ளே உறுதிமுறை அஞ்சும்
நாணும் படியாக நாசியில் பாய்ந்திடில்
தேனுவு மீதனில் தெளியாது ஞானங்கள்
வானுவாம் வாசியை வைத்துநீ பார்த்திடே. (514)

மேலேறிய மார்க்கத்தைப்போல் பிடரியில் நின்று கீழுள்ள சக்கரங்களை நோக்கினால் சோட சகலைகளும் வெளித் தோன்றி பிரகாசிக்கும். மேலும் நடுமையமான இருதய கமலத்தில் மனம் வைத்தால் கோடி சூரிய பிரகாசமான ருத்திர பகவானைக் காணலாம். இவ்வாறின்றி மூச்சை அடக்காமலும், வாசியை அறியாமலும் மூச்சை வீணாக்கி நின்றால், உலகுள்ள காலம் வரை வாழ்ந்தாலும் ஞானமுண்டாகாது. ஆகவே ஆணவத்தை ஒழித்து வாசியை ஆதாரச் சக்கரங்களில் வை!

பார்த்திட்டேன் யானும் பழகிஇம் மார்க்கத்தைக்
கோர்த்திட்ட அண்டத்தில் கூசாமல் ஓடினேன்
நாத்திட்ட அண்டம் அடங்காப் புவனமும்
பேர்த்திட்ட வத்தோடு பூரணங் கண்டேனே. (515)

நானும் இம்மாதிரியே அனுதினமும் வாசி வைத்து பழகி அதனால் ஞான சித்தியும், யோக சித்தியும் பெற்று அண்டங்கள், புவனங்கள் போன்றவைகளை கண்டு களித்து இறுதியில் தவ நெறியில் நின்று பூரணப் பொருளுடன் ஒன்றி விட்டேன்!

கண்டேனே காட்சியைக் காரணர் காட்டிட
விண்டேனே சித்தர்க்கு வெளியாய்த் தொழிலெல்லாம்
பண்டே குளிகைப் பருவமெல்லாஞ் சொன்னேன்
கொண்டே முன்னாயிரங் கூறினேன் அன்னூறே. (516)

நான் கண்ட அனைத்து மார்க்கங்களையும் எல்லா சித்தர்களும் அறிய வேண்டி சகல தொழில் முறைகளையும், குளிகை முறைகளையும் மூவாயிரம் என்ற நூலாக எழுதி போட்டேன்.

அன்னூறு சொன்னேன் அடவான சித்தர்க்கு
அன்னூறு சொன்னேன் அகண்ட மெய்ஞ்ஞானிக்கு
அன்னூறு சொன்னேன் அடியேன் சிவன்சொல்ல
அன்னூறும் பார்த்தோர்க்கு ஆதிமகா சித்தே. (517)

அது மட்டுமின்றி அதை குறுக்கி அறுநூறு என்ற இந்நூலை கூறி வைத்தேன். எதற்காக இந்த அறுநூறு என்ற நூலை எழுதினீர் என்று கேட்பாயாகில் சொல்கிறேன் கேள். அகண்ட மார்க்கத்தில் நிற்கும். மெய் ஞானிக்கும், சித்தர்களுக்கும் சிவபெருமானிடமிருந்து அறிந்துக் கொண்டு நூலா கவடித்தேன். இதைமுழுமையாக பார்ப்போர்க்கு அதிகமான சித்திகள் ஏற்படும்.

சித்தாக வேண்டினால் சேர்ந்துண்ணும் கற்பத்தை
வைத்தான வாசியை வைத்துவைத்தே பாரு
கொத்தான ஆசையும் கோபமும் விட்டிடு
உத்தார் உனக்கு ஒருகோடி சித்தரே. (518)

நீயும் சித்தனாக வேண்டுமானால் கற்பத்தை உட்கொண்டு வாசி வைத்து ஆதாரங்களைக் கடந்து கோபத்தையும் ஆசையையும் அகற்றி நின்றால் உனக்கும் சித்தன் என்ற பேர் வாய்ப்பதோடு கோடிக் கணக்கான சித்தர்களின் அருளும் உண்டாகும்.

கோடிதுறை சொன்னேன் குலாவிய வாதத்தால்
ஆடியே பார்த்து அழியாதே பொன்னாலே
நாடியே நாவின் ருசியரலே வண்டுபோல்
ஊடிக் கமலத்து ஒடுங்காதே சித்தரே. (519)

நான் கோடிக் கணக்கான வாத முறைகளை உனக்காக சொன்னேன். அதன் மூலம் வாதம் பார்த்து தங்கத்தைக் கண்டு மயங்காமல் நில். நாவின் ருசியால் உண்டானது தாமரையை நோக்கிச் சென்று ஆபத்தில் சிக்கி இறப்பது போல் நீங்களும், பெண், பொன் ருசி போன்ற ஆசையில் சிக்காமல் நில்லுங்கள் சித்தர்களே!

ஒடுங்கிச் சகமெல்லாம் ஒட்டி இறந்தார்கள்
அடுங்கிய சாங்கத்து அகண்ட நானென்பார்கள்
எடுங்கிய வசம் எறிந்த வலைசிக்கி
நடுங்கித் தளர்ந்து நவில்வார்கள் எய்யாதே. (520)

நான் கூறியதைப் போல் சில சித்தர்கள் புத்தியை மாயா் விஷயத்தில் சிக்க வைத்து இறந்தார்கள்! மேலும் சிலர்தானே அகண்ட சச்சிதானந்தப் பொருள் என்று கூறிக் கொண்டு எமனால் எரியப்பட்ட வலையில் சிக்கி தளர்ந்து மாண்டு போவார்கள்.

இப்படிப்பட்டவரைக் கண்டால் நீ இந்த நூலையும் கொடுக்காதே. குளிகையையும் காட்டாதே.

எய்யாது சாங்கத்து எளிதாக மெய்ஞ்ஞானம்
மையாக உலகத்தில் வாழ்ந்தே இருக்கையில்
பொய்யாமோ கண்டது புத்திதான் கெட்டுதோ
கையாற வாசிதான் கண்டபின் சாங்கமே. (521)

உண்மையான அகண்ட சச்சிதானந்தப் பொருளை உலக வாழ்க்கையில் இருப்பவர்களால் அடைய முடியாது. அப்படிக் கண்டாலும் அது பொய்யாகவே போகும். உண்மையில் வாசி யோகத்தில் சித்தியடைந்தவர்க்கே மூலப் பொருளைக் காண முடியும்.

சாங்கமாய் யான்சொன்ன சடாதார மார்க்கமும்
ஓங்காக் குருபதம் உயரோடு அஞ்சிலும்
பாங்காகப் புத்தியால் பகுந்தே மனமுன்னி
வாங்காமல் பார்த்து மகத்தான சித்தமே. (522)

நான் சொன்ன குண்டலி யோக முறையில் நின்று ஒழுங்காக ஆதாரங்களைக் சடந்து குருபதத்தில் புத்தி கொண்டு கூடி நின்றால் நீயே! மகா பெரிய சித்தனாவாய்.

சித்தம் சிவன்காண் சேர்மனம் சத்திகாண்
ஒத்த நற்புத்தி உறுதி மகாயோகம்
கொத்தாக மூன்றுக்குங் குடிலங்காண் ஆங்காரம்
பத்திநல் ஆங்காரம் பாவத்துக்கு ஏதுவே. (523)

சித்தமே சிவன். மனமே சித்தி திடமான புத்தியே முறையான யோக மார்க்கம். இவைமூன்றுக்கும் கேடாக இருப்பது அகங்காரம். இந்த ஆங்காரமே பாவஞ் செய்யத் தூண்டுகிறது. ஆகவே ஆங்காரத்தை பாவச் செயலில் செல்லாமல் ஒடுக்கி நின்றால் நல்ல புத்தியும், யோகமும் பலிதமாகும்.

சூத சுத்தி

ஏதுவாய் நின்ற எழிலான சூதத்தில்
கோதுவாய் நின்ற குடிலம் அயலேழுக்கு
ஏதுவாய்ப் போகாட்டால் கெவனம் எடுக்காது
வாதுவாம் வாதத்துக்கு ஆகாது ஆகாதே. (524)

அதே போல் கெவுன மார்க்கத்தில் செல்ல தேவையான சூதத்தில் மாசுகள் அதிகமாக இருக்கும். இச்சூதத்திலுள்ள மாசுகள் அகன்றால்தான் கெவுனம் பாய முடியும். இல்லையேல் ஆகாயப் பிரவேசம் செய்ய முடியாது.

ஆகாத கன்மசம் அகற்ற முறைகேளு
வாகான கல்லுப்பு மாட்டு சமபாகந்
தாகாக் குமரிப்பூச் சாற்றை மூன்று நாள்
பாகாய்க் கழுவிப் பதனமாய் வாங்கிடே. (525)

சூதத்திலுள்ள மாசுகளை நீக்கும் விதத்தை கூறுகிறேன் கேள். சூதத்தின் எடைக்குச் சமபாகம் கல்லுப்பைச் சேர்த்து குமரிப்பூச்சாற்றால் (கற்றாழை சாற்றால்) மூன்று நாட்கள் அரைத்து பத்திரமாக கழுவி வைத்துக் கொண்டு.

சூதக் கட்டு

வாங்கிட்ட சூதம் வளமாய்ப் பலம்ரண்டு
தாஙகிட்ட சட்டியில் தானே அதை வார்த்து
ஓங்கிட்ட வண்டோடு உடன்சூடன் கண்டரும்
பாங்கிட்ட சாரமும் பாரிரு காரமே. (526)

காரத் துடனே கருகிய ரண்டுப்பு
வாருற்ற அப்பிரேகம் வாங்கு நவநீதம்
நேரொத் திடவே நிரையாக ஒன்பதும்
தாரொத்து அமுரியால் தாக்கி அரைத்திடே. (527)

பின்னர் குருவண்டு சூடன் துருசு, சாரம், இருவகையான காரம், இரண்டு வகையான உப்பு, அப்பிரக நவநீதம் போன்ற ஒன்பது வகையான சரக்குகளை சம அளவு எடுத்து அமுரியால் நன்றாக அரைக்க வேண்டும்.

அரைத்தே கலக்கு வமுரிப்படி நாலில்
விரைத்தே சூதத்தில் விளங்கச் சுருக்கிடு
தரத்தே இறக்கிநீ தான்வாங்கு பிஷ்டியை
துரைத்தே படிநாலு சூட்டாய் அமுரியே. (528)

சூட்டிக் கலக்கிச் சுகமாய் மறுவிசை
ஆட்டிச் சுருக்கிடு அப்படிச் சூதத்தில்
தீட்டிப் படிதான் நிலையாய்ச் சுருக்கஞ்சு
மாட்டியே பூட்டி வளமாக வாங்கிடே. (529)

அரைத்த மருந்தை நான்குபடி அமுரியில் கரைத்து இதில் முன் எடுத்து வைத்துள்ள சூதத்திலிருந்து இரண்டு பலம் வாங்கி சுருக்கிட வேண்டும். பிறகு அடிவண்டலை வாங்கி முன் போல் நான்குபடி அமுரியில் கரைத்து மீண்டும் சூதத்தை சுருக்கிட வேண்டும். இவ்வாறு ஐந்து முறை சுருக்கிட வேண்டும்.

வாங்கியே கல்வத்தில் வைப்பாய் பனிப்பட
ஓங்கி ரிதுவாய் ஒழுகுஞ் செயநீர்ப்
போங்கிச் செயநீர் போட்டரை கற்பூரம்
பாங்கிய சூதத்தில் பாய்ச்சிச் சுருக்கிடே. (530)

சுருக்கிடச் சூதந்தான் துள்ளாது வாலையாம்
மருக்கி எடுக்காது மகத்தாம் கனலுக்கு
ஒருக்குந் தொழிலுக்கும் ஒடுங் குளிகைக்கும்
செருக்கும் இதை விட்டால் திரட்டெல்லாம் பொய்யாமே. (531)

சுருக்கிட்ட சூதத்தை கல்வத்திலிட்டு பனியில் வைத்தால் செயநீராய்ப் போகும். இந்நீரில் கற்பூரம் சேர்த்து கலக்கிக் கொண்டு சூதத்திற்கு சுருக்கிட்டால் சூதம் சுத்தியாகி நல்ல உயர்தரமான வாலை ரசமாகும். இந்த ரசமானது எல்லாவிதமான தொழில்களுக்கும், குளிகை முறைகளுக்கும் பயன்படும் நெருப்பினால் எந்த ஒரு மாற்றத்தையும் அடையாது. இவ்வாறு சுருக்கிடாவிட்டால் எல்லாவிதமான செய்கைகளும் பொய்யாகும்.

திரட்டுந் தொழிலுக்குஞ் சேர்த்து குளிகைக்கு
மருட்டிய சூதத்தை வளமாகச் சுத்திசெய்
அருட்டியே சுத்திக் கசத்துநீ பூட்டினால்
பிரட்டாகும் பாரு பேரான சித்தரே. (532)

பேரான சுத்தியில் பிலப்படுமே சூதம்
தாரான தீபனம் தானாகும் சாரணை
காரானை போலே கவனங் கொடுபோகும்
ஆரார்கள் பார்த்தாலும் அப்பனே தப்பாது. (533)

முறையாக நான் சொன்னதுபோல் சுத்தி செய்தால் குளிகை மற்றும் எல்லாவிதமான தொழில்களும் சித்தியாகும். இம்முறை மிகவும் கடினமானது என்று நீ விடுவாயானால் தொழில் முறைகள் எதுவும் பலியாமல் அழியும். இம்முறையில் சுத்திக்கப்பட்ட சூதமானது திடப்பட்டு சத்திகளை உட்கொண்டு சாரணை ஏறும். சாரணைகள் பலப்பட்டால் கெவுனம் சித்தியாகும். இம்முறையை யார் அறிந்து செய்தாலும் சித்தியாகும்.

தப்பாமல் இப்படி சரக்கான எட்டெட்டும்
ஒப்பாய் சுறுக்கிடு ஊறல்போய் சுத்தியாம்
கொப்பான வேதை கொடுக்க மிகநன்று
இப்பால் இதைவிட்டால் எய்யாது வாதமே. (534)

சூதத்தை சுருக்கிட்ட இதே முறையில் அறுபத்து நாலு பாஷாணங்களை சுருக்கிட்டால் அவைகளும் மாசு நீங்கப் பெற்றதாகும். அதனால் வாதமும் கை கூடும். இதை விட்டால் வேறு முறையில் வாதம் எய்யாது.

இரும்புருக்கு

வாதம் பிறந்தது மகத்தாம் இரும்பிலே
போத விரும்புண்டால் புகல்காய சித்தியாம்
தாதா இரும்பு தனிவெண்பதாம் கற்பம்
மாதா இரும்பை வளமாய் உருக்கிடே. (535)

வாதமானது இரும்பை அடிப்படையாகக் கொண்டு பிறந்ததாகும். மேலும் இரும்பை உட்கொண்டால் காய சித்தியும் கைகூடும். நூற்றி இருபது கற்ப வகைகளில் இரும்பு என்பதாவது கற்பமாகும். ஆகவே இரும்பை முதலில் உருக்கிப்பார்.

உருக்க முறைகேளு உள்ளொளி வேதாந்தி
பருக்கிய சாரம் பரிவாம் பொரிகாரம்
செருக்கிய வீரம் சிறந்தொரு லிங்கம்
மருக்கிய தாளக மன்னுநற் சூதமே. (536)

சூதத்தோடு ஆறையுந் தூக்காறு காசிடை
வேதத்தோடு ஒத்த வெடியுப்பு நீர்வார்
வாதத்தைப் பூசித்துப் பாங்காய் அரைத்திடு
நீதத்தோடு ஆறும் நிலையாகக் கட்டுமே. (537)

உருக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். சாரம், பொரிகாரம், வீரம், லிங்கம், தாளகம், சூதம் போன்ற ஆறு வகையான சரக்குகளை வகைக்கு ஒரு காசிடை கூட்டி வெடியுப்பு செயநீரால் ஒரு மிக்க அரைத்தால் சரக்குகள் கட்டி மடியும்.

கட்டுஞ் சரக்கோடு காசிடை பூநாக
மட்டுறு வாளம் வளருமுட் காவேளை
எட்டும் எலியால் எழுவாம் பருப்போடு
வெட்டுரு வேப்பம் விரையின் பருப்போடே. (538)

பருப்புடன் அஞ்சும் பகுந்தஞ்சு காசிடை
அருப்பொடு முன்னாறும் ஆகப் பதினொன்றும்
விருப்போடு அரைநீ வெடியுப்பு நீர் வார்த்து
கருப்போடு அரப்பொடி தானாம் பலம்ரண்டே. (539)

ரெண்டையுங் கூட்டி நிமிரப் பிசைந்திடு
ஒண்டை உருக்கி உறவாகத் தாக்கிடு
தண்டி உருக்கித் தானே மணியாகும்
மண்டி மணியை அடவாய் நுறுக்கிடே. (540)

அடவாய் முன்போலே அளவாய்ப் பதினொன்றும்
படவாகக் கூட்டியே பாய்ச்சி உருக்கிடு
கடவாக ஏழ்திரங் கபளித்து உருக்கிடு
தடவான சோதனை தாக்கிநீ சோதியே. (541)

சோதிக்க லோகந்தான் சொர்னம்போல் நின்றாடும்
மாதித் திரையில்லை மற்றுஞ் சவடில்லை
ஆதித்த பாஷாணம் அறுபதும் உட்கொள்ளும்
போதிக்கும் தேகம் பிறக்கும் இதிற்பொன்னே. (542)

மடிந்த இச்சரக்குடன் பூநாகம், நேர்வாளம், முட்காவேளை, காட்டாமணக்கு விதை, வேப்பம்விதை போன்ற சரக்குகளை வகைக்கு காசெடை எடுத்துக்கூட்டினால் மொத்தம் பதினொறு காசெடை வரும். (அதாவது முன் மடிந்த சரக்குகள் மொத்தம் ஆறு காசெடை பிறகு இந்த ஐந்து சரக்குகள் மொத்தம் ஐந்து காசெடை ஆக பதினொறு காசெடையே மொத்தம்) இவற்றை முன்போல் வெடியுப்பு செயநீரால் அரைத்துக் கொண்டு இதனுடன் இரண்டு பலம் இரும்புப் பொடியை சேர்த்து நன்றாக பிசைந்து உருண்டையாக்கி குகையிலிட்டு உருக்கினால் மணியாக விழும், இம்மணிகளை உடைத்து முன்போல் பதினொறு மருந்துகளை கூட்டி வெடி உப்பு செயநீரால் அரைத்து பிசறி உருக்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை செய்து சோதித்தால் இரும்பானது தங்கம் போல் சொலிக்கும். இதில் எந்த மாசுக்களும் இருக்காது. இச்சுத்தித்த இரும்பானது அறுபது வகையான பாஷாணங்களையும் உட்கொண்டு வாதம் புரியும். அதுமட்டுமின்றி தேகத்தையும் சித்தியாக்கும்.

பொன்னாக வேண்டினால் பூட்டுநல் லிங்கத்தைப
பொன்னாக வேண்டினால் பூட்டுதில் நாகத்தை
பொன்னாக வேண்டினால் பூட்டு நிமிளையை
பொன்னாக வேண்டினால் பூட்டுநீ துத்தமே. (543)

பூட்டு ரசத்தைப் புகழான லோகத்தில்
நீட்டுநீ தங்கமும் நேராம் இடையொன்று
ஆட்டு மணிக்குள்ளே அந்த இடைகெந்தி
கூட்டிப் பொடி செய்து குப்பிக்கு எடுத்திடே. (544)

தேகம் பொன்னாக வேண்டுமானால் இச்சுத்தித்த இரும்பிற்கு சமஅ[illegible] லிங்கம், நாகம், நிமிளை, துத்தம், சூதம் போன்றவை கூட்டி உருக்கிக் கொ[illegible]

இம்மொத்த எடைக்குச் சமஅளவு தங்கம் சேர்த்து உருக்குதல் வேண்டும். பிறகு தங்கம் சேர்த்த இம்மணியின் மொத்த எடைக்கு சம அளவு கெந்தி (கெந்தம்) சேர்த்து பொடி செய்து குப்பியில் அடைத்து புடம் போடுதல் வேண்டும்.

எடுத்தே எரித்திடு இயல்பாய் ஆறுசாமம்
படுத்தே செந்தூரம் பவள நிறமாகும்
அடுத்தே நீகுண்ணி அமர்ந்துண்ண மண்டலம்
கடுத்தே உன்தேகங் கல்லுஞ் சமனாமே. (545)

கல்லான உன்தேகங் கரத்தால் மலைகுத்து
சில்லாகுந் தூளாகும் சித்தும் அதுபாரு
வெல்லா விரும்பினை வேண்டும்போ துண்ணலாம்
வல்லான சித்தரே வச்சிர தேகமே. (546)

ஆறுசாமம் புடம்போட்டபின் எடுத்துப்பார்த்தால் பவள நிறத்தில் செந்தூரம் கிட்டும் இச்செந்தூரத்தை குன்றியளவு ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகம் கல்லாகும். கல்லான தேகத்தால் நீ மலையை குத்தினால் மலைகள் தவிடு பொடியாகும். இதை விருப்பம் உள்ளவரை தொடர்ந்து உட்கொள்ளலாம். இதனால் தேகம் வைரம் போலாகும்.

தேகம் இருந்தல்லோ சித்தெல்லாம் ஆடலாம்
தேகம் இருந்தாக்கால் சேரலாம் பூரணம்
தேகம் இருந்தாக்கால் திரட்டெல்லாம் பார்க்கலாம்
தேகம் இறந்தாக்கால் சேர விழலாமே. (547)

தேகம் வைரம் போலாகினால் சகலவிதமான சித்துக்களையும் விளையாடலாம். பூரணத்துடன் கலந்து நிற்கலாம். உலகிலுள்ள சகல நூல்களையும் படித்து அறியலாம். இவ்வாறின்றி தேகம் அழிந்து போனால் அனைத்தும் பாழாகும்.

சேரவே கற்பம் செலுத்திய காலத்தில்
ஆர மதிமேலே ஆத்தாளை நீபாரு
தாரவே மூலத் தணலைப் பிறக்கும்பார்
கோரவே கற்பங் குமட்டிச் செரிக்குமே. (548)

செரிக்கின்ற காலத்தில் சேருஞ் சமாதியைத்
திரிக்கின்ற மாயையைச் சாராதே விட்டிடு
மரிக்கின்ற வார்த்தைதான் வாராது ஒருநாளும்
துரிக்கின்ற வேதத் துரியங்கைச் சிக்குமே. (549)

கற்பம் உட்கொள்கின்ற காலத்தில் புத்திகொண்டு மனோன்மணியை நோக்கினால் மூலத்திலுள்ள குண்டலி மேலெழும். கற்பமும் செரித்து உடலுடன் கலக்கும். கற்பம் உடலுடன் கலந்தால் சமாதி யோகம் கைகூடும். இறப்பு என்ற வார்த்தைக்கும் இடமில்லாமல் போகும். வேதத்தின் முடிவான பொருள் கையில் சிக்கும். எனவே மாயையான பெண்ணுடன் கூடாமல் கற்பத்தைக் கொள்!

சிக்கவே ஆத்தாளைச் சீராக வாமத்தில்
ஒக்கவே அண்டமுடன் மாங்கிஷம் அது
பக்கம் பலகாரம் பரபஞ்ச பாத்திரம்
திக்கெட்டில் பூசையுஞ் செய்திடில் சித்தரே. (550)

கற்பங் கொள்ளும் காலத்தில் ஆத்தாளை இடது பாகத்தில் (வாமகதந்திரப்படி) மது அன்னம், மாமிசம், பலகாரம், பஞ்சபாத்திரம் ஆகியவைகள் வைத்து அஷ்ட திக்குகளை பந்தனம் செய்து பூசை செய்ய வேண்டும்.

சித்தாக ஈசனும் சேர் நிருவாணிக்கு
கொத்தாய் வடியுங் குடத்தில் மதுவும்வை
பத்தான மாங்கிஷம் பரிமளம் பூச்சாத்து
முத்தான தீபத்தால் முன்னிட்டுப் பூசிரே. (551)

பூசித்து அன்பாய்ப் புகழ்ந்தேற்றி அர்ச்சித்து
மாசித்து தாவென்று மாதாவை நீகேளு
காசித்தி ஆகுங் கவனங் கொடுபோகும்
வாசித்து வாத மலர்ந்து வணங்குமே. (552)

ஈசனுக்கும் நிற்வாணிக்கும் குடத்தில் மதுவைத்து மாமிசங்களை நிவேதனம் செய்து வாசம் உள்ள பூக்களைச் சாற்றி தீப தூபம் போன்ற உபசாரங்கள் காட்டி மனதில் அன்பு கொண்டு அர்ச்சனைகள் செய்து "தாயே எனக்கு சகலவிதமான சித்தியையும் கொடு என்று தாயை நீ வணங்கினால், வாதமும் கெவுனமும் உன்னை வணங்கும்.

வணங்கா மலர்த்தாளை வாதத்தைப் பார்ப்போர்கள்
பிணங்கான வர்கள் பேசாதே இந்நூலை
இணங்கா தவளோடே எய்யாது சித்தெல்லாம்
தணங்காள் நிருவாணி சண்ணுவாள் தப்பாதே. (553)

ஆத்தாளை வணங்காத வீணர்கள் இந்நூலைக் கொண்டு வாதம் பார்த்தால் பொய்யாகும். சித்தியும் ஏற்படாது. எனவே அப்படிப்பட்டவர்க்கு இந்நூலைக் கொடுக்காதே. நிவாணியான தேவி அவளை எமபாசத்தால் பிணித்து அழிப்பாள்.

தப்பாமல் நாதாக்கள் சகல ரிஷிகளும்
ஒப்பா மறையோரு முயர்ந்த மெய்ஞ்ஞானிகள்
எப்பான வேதாந்தம் எவ்வகை சித்தரும்
அப்பா இவர்கள்தான் அர்ச்சிக்கும் பூசையே. (554)

குரு வர்க்கத்தவர்கள், ரிஷிகள், வேதாந்திகள், மெய்ஞ்ஞானிகள் போன்றவர்களும் இத்தேவியை பூசித்தே சித்தியடைந்தார்கள். பூசையென்பது இவர்கள் கூறிய முறைப்படி செய்தல் வேண்டும்.

பூசை அறியாவிட்டால் பூட்டாதே சூதத்தை
பூசை அறியாவிட்டால் போடாதே வேதையை
பூசை அறியாவிட்டால் புருமையம் பாராதே
பூசை அறியாவிட்டால் பொய்யாகும் நூலெண்ணே. (555)

பூசைமுறையை அறியாமல், சூதத்தைக் கட்டுதல் கூடாது. வேதை செய்யக் கூடாது. யோகமும் புரியக் கூடாது. மேலும் பூசை மார்க்கத்தை அறியாமல் இந்த நூலை படித்தாலும் சித்தியாகாது.

நூலேது செய்யும் நுழையாட்டால் வாமத்தில்
பாலோடு அன்னம் படைத்தாலும் பாங்கல்ல
கோலோடு சூலமுங் கோடி நிருவாணி
மேலோடு வண்டம் விரிய அறைவாளே. (556)

நூலை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும். தாயின் அருள் இல்லையேல் எதுவும் சித்தியாகாது. வெறும்பாலையும், பொங்கலையும் வைத்துபடைத்தால் பூசையாகாது. இதனால் கோபம் கொண்டு நிருவாணியும் ஈசனும் ஈரேழு லோகமும் கேட்கும்படி அறைவார்கள்.

நாகசுத்தி

அறையாமல் ஈசன் அகலாமல் வாதங்
குறையாமல் வாமத்தின் கூரோடு பூசைசெய்
நிறையாக நில்லு நிமிஷத்தில் சித்தியாம்
துறையா முறையெல்லாம் சொன்னேன்நான் சித்தரே. (557)

அவ்வாறு அறை வாங்குதல் கூடாது என்ற எண்ணம் உனக்கு இருக்குமேயாயின் நீ முறையாக வாமபாகத்தில் பூசைசெய். அதனால் எல்லா காரியமும் நிமிஷத்தில் சித்தியாகும். சித்தனான உனக்கு நான் எல்லா முறைகளையும் சொன்னேன். அதன்படி செய்.

சித்தான நாகந் திறமாகக் கட்டுன்ன
மத்தான சித்தரே வகையாகக் கேளுங்கள்
கொத்தான நாகத்தில் குத்து நுணலைநெய்
சத்தான சாரத்தில் தன்னுக்குள் சாய்த்திடே. (558)

சாய்த்திடுங் காலந் தணல்வைத்து உருகையில்
பாத்திடு நெய்யைப் பருவமாய்க் குத்திவா
காத்திட வாரு கலரு பதினொன்று
ஆத்திடும் வில்லைபோல் ஆகுங்காண் சுத்தியே. (559)

நாகத்தைக் கட்ட நல்ல முறையொன்றை கூறுகிறேன் கேள். நாகத்தை அயக்கரண்டியிலிட்டு இலுப்பன் நெய் வார்த்து உருக்கி சாரத்தில் சாய்க்க வேண்டும். இவ்வாறு நெய் வார்த்து பதினொரு முறை உருக்கிச் சாய்த்தால் கசடுநீங்கி வில்லைப்போலாகும்.

நாகக் கட்டு

சுத்தித்த நாகத்தைச் சூட்டிக் குகை வைத்து
டத்தித்தக் கல்லுப்பும் பாங்காம் வெடியுப்பும்
ஒத்தித்த காரம் ஒரு மூன்று கட்டினம்
மத்தித்த நாகத்துக்கு அந்த விடை மூன்றே. (560)

மூன்றும் பொடித்து முழங்கவே தூவிலா
ஊன்றியே வாங்கி உறவாக் கட்டுண்ணும்
நீன்றிய நாகம் நிலைத்தாடுங் கண்விட்டு
தான்றிப் புகைத்திட்டார் தாக்குமுறை ஒன்றே. (561)

முறையான நாக முதற்றரங் கட்டிது
அறையான சூதத்தை அமளியாய்க் கொன்றிடும்
துறையான சாரமும் சூழ்கட்டுங் காரமும்
நிறையாய்ப் பொடிசெய்து நீட்டிவார் சூதமே. (562)

நாகக் களங்கு செந்தூரம்

சூதமும் நாகமும் சூழ்ந்தே உருகையில்
போதவுஞ் சாரப் பொடிதூவ அசையாது
கோத விரண்டுஞ் குமறி உருகையில்
மாதைய தங்கத்தை மாட்டிய பாதியே. (563)

பிறகு நாகத்தை நிறையாக எடுத்து இதற்கு சம அளவுகட்டிய கல்லுப்பும், வெடியுப்பும் காரமும் எடுத்து இம்மூன்றையும் பொடி செய்து நாகம் உருகுகையில் தூவி உருக்க வேண்டும். இதனால் நாகமானது கட்டி மணிப்போல் கண்விட்டாடும். இவ்வாறின்றி நாகம் புகைந்தால் மீண்டும் முன்போல் பொடி தூவி உருக்க வேண்டும். இதுவே முதல்தரமான கட்டாகும். இக்கட்டிய சாரத்தையும், காரத்தையும் பொடி செய்து தூவி உருக்க வேண்டும். பிறகு இச்சுத நாகத்தின் எடைக்கு பாதியளவு தங்கம் கூட்டி!

பாதியை யூன்றப் பருவத்தில் வாங்கிநீ
கோதி மணியைக் குமுறப் பொடியாக்கி
நீதியாம் கெந்தகம் ரெட்டிப்பு அதில் கூட்டி
ஆதியாம் வீரமது எட்டுக் கொன்றிடே. (564)

ஒண்ணாக அஞ்சு உறவாகக் குப்பியில்
பண்ணாய் அடைத்துப் பதித்திடு வாலுகை
தெண்ணான தீமூட்டு சிவந்த பதம்பாரு
கண்ணான செந்தூரங் காட்டிப் பசும்பொன்னே. (565)

நன்றாய்ச் சேருமளவிற்கு உருக்கி மணியாய் வாங்கி கல்வத்திட்டு பொடி செய்து, இதனுடன் இரண்டு பங்கு கெந்தகமும் எட்டுக்கொரு பங்கு வீரமும் சேர்த்து குப்பியை அடைத்து வாலுலுகையில் வைத்து தீமூட்டி எரிக்க வேண்டும். எரிக்கும்பொழுது முறையான பதம் பார்த்து இறக்கினால் பசும்பொன்னான செந்தூரம் கிடைக்கும்.

பொன்னான லோகத்தில் பூட்டுவாய் நூற்றொன்று
பண்ணான நாகம் பழுக்குந் சுகம்பாரு
எண்ணா துறைக்கெல்லாம் ஏற்றம் இதுவாகும்
வண்ணா திருவாணி வாசித்தி பீடமெ. (566)

இச் செந்தூரத்தை நூற்றுக்கொரு பங்கு நவலோகத்துல் ஈந்தால் பழுத்து தங்கமாகும். இது எல்லாவிதமான துறைக்கும் பயன்படும். இந்நாகத்தின் மேல்தான் திருவாணி அமர்ந்து பவனி வருகிறாள். வாதத்தில் நாகமே முக்கிய இடம் பெறுகிறது.

பீடமாய் நின்ற பலத்த மாகநாதம்
நாடவே வேண்டில் நலமாகப் பூசைசெய்
தேடவே வேண்டாம் சித்தியாம் எட்டெட்டு
மாடவே நாகத்தின் ஆண்மை இனங்கேளே. (567)

பீடத்தில் நாத சொரூபமாய் இருக்கும் தாயை பூசை செய்தால் அறுபத்து நான்கு சித்தியும் உண்டாகும். இன்னும் இந்த நாகத்தால் ஏற்படும், வேதையைப் பற்றிக் கூறுகிறேன் கேள்!

சூதம் - நாகம் - அயத்தங்கச் செந்தூரம்

கேளே யிந்நாகம் கெடியாய்ப் பலமொன்று
வாளே இரும்பு வளமாய்ப் பலமொன்று
தானே நலத்தங்கந் தனையும் பலமொன்று
ஏளே நற்சூதம் இடுமுப் பலமிதே. (568)

பலமான ஆறும் பருகி உருகையில்
தலமான கெந்தக சத்தினில் ஓர்பலம்
குலமாய் உருக்கியே கொட்டிப் பொடியாக்கி
நலமாக ரெட்டிப்பு நாட்டதில் கெந்தியே. (569)

இன்னுங்கேள்! செயநாகம் ஒருபலம், சுத்தித்த இரும்பு ஒருபலம், சுத்தித்த தங்கம் ஒருபலம், செயசூதம் மூன்று பலம் ஆக ஆறுபலம் கொண்ட சரக்குகளை குகையிலிட்டு உருக்குதல் வேண்டும். உருக்கும்பொழுது கெந்தக சத்தை ஒரு பலம் கூட்டி மணியாக உருக்கிக் கொண்டு இம்மொத்த எடைக்கு இருபங்கு கெந்தி சேர்த்து பொடி செய்தல் வேண்டும்.

கெந்தியுடன் கூடக் கேளிருபத் தொன்றும்
அந்தித்துக் குப்பி அடைத்தேத்து வாலுகை
பந்தித்து எரித்திடு வயிரவர் பூசைசெய்
கொந்தித்த செந்தூரம் கொடிய வருணனே. (570)

ஆக மொத்தம் இருபத்தொரு எடைக் கொண்ட இம்மருந்துகளை குப்பியிலடைத்து வாலுலுகையிலேற்றி வயிரவரை பூசைசெய்து தீ மூட்டி எரிக்க வேண்டும். பிறகு ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் செந்தூரம் சூரியனைப் போல் பிரகாசிக்கும்.

அருணனாம் செந்தூரம் ஆயிரத் தொன்றிட
வருணனைப் போலே வருஷிக்குஞ் சொர்னந்தான்
தருணத் தினம்பார்த்து சரணிக்கக் குன்னிதான்
கருணை பராசக்தி காந்தியாம் தேகமே. (571)

தேகத்தின் காந்திதான் சிற்பரத்தோடு ஒக்கும்
வாகொத்த பூரணம் வாவாவென்றே கூவு
மாகத் தியமல மகண்ட நிராகாரம்
பாகொத்த சித்தரே பாரிதின் ஆண்மையே. (572)

ஆண்மைதான் சொல்ல அடங்காது நாகத்தை
வாண்மையாய்ப் பார்த்து மதிசூடி கண்டிலார்
நீண்மையாய்த் தாய்க்கு நிலைத்தமண் காணாத
ஏண்மையே சித்தரே இதற்கொன்றும் ஒவ்வாதே. (573)

சூரியனைப்போல் பிரகாசிக்கும் இந்த செந்தூரத்தை அனுதினமும் ஒரு குன்றியளவு உட்கொண்டால் பராசக்தியின் கருணையால் தேகமும் சூரியனைப் போல் பிரகாசிக்கும். இக்காந்திக்கு சிற்பரம் தான் இணையாகும். இதனால் பூரணம் உன்னை தன்னுடன் வா என்று அழைத்து அணைத்துக் கொள்ளும். நிராகாரப் பொருளே இதற்கு சமம், செயநாகத்தின் பெருமையை சிவபெருமானாலும், பார்வதியாலும் கூற முடியாது என்றால் மற்றவரைப் பற்றிக் கேட்பானேன், அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தது செயநாகம்!

நாகச் செயநீர்

ஒவ்வாது நாகத்து உதித்த வகைகேளு
செவ்வாகச் சுத்தித்த நாகம் பலமொன்று
சிவ்வான சூதத்தைச் செந்தூர பாதிகாண்
நவ்வாய்ப்பொடி செய்து நாட்டிடாய் கல்வமே. (574)

கல்வப் பொடிமேல கண்ட யிடைவீரம்
வல்லொக்க தூவியே வைத்திடு மூலையில்
செல்வச் செயநீர் திரண்டோடு வெண்மையாய்ச்
சொல்லொத்த வேதை துதிக்கநா வில்லையே. (575)

இன்னும் நாகத்தின் முறையைக் கூறுகிறேன் கேள்! சுத்தித்த நாகத்தை ஒரு பலம் எடுத்துக் கொண்டு இதில் பாதியளவு சூதத்தைச் சேர்த்து நன்றாகப் பொடி செய்தல் வேண்டும். இப்பொடியின் எடைக்கு சமஅளவு வீரம் சேர்த்து பீங்கானிலிட்டு ஒரு மூலையில் வைத்து மறுநாள் பார்த்தால் வெண்மையான நீர் திரண்டு நிற்கும். இந்த நீரின் வேதை முறையைக் கூற நாவே கிடையாது.

நாவில்லா நீரின்பேர் நாகச் செயநீர்காண்
காவில்லாக் காடி சாரத்தின் வேதைகேள்
தாவில்லா நீருக்குள் தானே துவைத்ததை
மேவில்லா தங்கத் தகட்டுமேல் சுற்றிடே. (576)

சுற்றியே தோய்த்துச் சுகமாக வாட்டினால்
பற்றியே உள்ளுக்கு பாரீர் இதனாண்மை
அற்றிப் பரிதானதற்கு நாற் கொண்டேற்றி
மற்றி மயிர்சுற்றி மாட்டிடாய் தீபமே. (577)

காடி காரச் செந்தூரம்

தீபத்தில் வாட்ட சிவப்பாக மாட்டுக்குங்
கோபத்தை விட்டிடு கொட்டுவது மச்சை
ஆபத்தை நீக்கிட ஆத்தாளைப் பூசைசெய்
கோபத்தை நீக்கிடுஞ் சொர்ன வருடமே. (578)

வருடம் பொருந்திடு மாதாவைப் பூசித்தால்
அருடியாங் காரம் அருண நிறமாகும்
பருசியா லோகத்தில் பாய்ச்சிடு நூற்றொன்று
புருசெயக் காரம்போல் பொட்டியை வாட்டிடே. (579)

இந்த நீருக்கு நாகச் செயநீர் என்று பெயர். இதில் காடி காரத்தை துவைத்து தங்கத் தகட்டை மேலே சுற்றி வாட்டினால் காரம் திடப்பட்டு மெழுகாகும். இதை அப்படி கலைக்காமல் அத்தகட்டின் மேல் நூற் கொண்டு சுற்றி தீபச்சுடரில் வாட்டினால் காரமும், தங்கமும் கூடி செந்தூரம் சூரியனைப்போல் சிகப்பாக இருக்கும். ஆனால் வாட்டுவதற்கு முன்பாக தேவியை பூசை செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் இடையில் தடையேதுமில்லாமல் செந்தூரம் சித்தியாகும். செந்தூரம் சித்தியானால் சொர்ணம் மழைப்போல் கொட்டும். ஆகவே முறைப்படி ஆத்தாளைப் பூசித்து கோபத்தை வென்ற நவலோகத்தில் நூற்றுக்கொரு பங்கு ஈந்தால் தங்கமுண்டாகும். காடிக் காரத்தை செய்தது போல் பொட்டிலுப்பையும் செயநீரில் துவைத்து வாட்ட வேண்டும்.

இணங்கன் செந்தூரம்

வாட்டும் இணங்கன் வளமாய்ச் செந்தூரிக்கும்
ஓட்டு நவலோகத் தொருநூற்றில் வேதைதான்
காட்டுந் துளயமுங் கட்டின சாரமும்
நீட்டுமுன் தீபம் நிலையாய்ச் செந்தூரியே. (580)

துரிசி சாரம் கல்லுப்பு செந்தூரம்

செந்தூர முன்போலே செய்திடுங் கல்லுப்பை
பந்தூரம் அஞ்சுமே பாங்காகுஞ் செந்தூரம்
எந்தூரம் ஓடும் எனக்கேழ்க்கில் நூறோடும்
மந்தூரும் வேதையைக் காணீர் பெரியோரே. (581)

முறை முன் போல் வாட்டுவதால் வெடியுப்பும் செந்தூரமாக மாறும். இச்செந்தூரத்தை நவலோகத்தில் நூற்றுக்கொரு பங்கு ஈந்தால் வேதைத் தங்கமுண்டாகும். வெடியுப்பை செய்தது போல் கட்டிய துரிசையும், கல்லுப்பையும், சாரத்தையும் நாக செயநீரில் துவைத்து வாட்டி செந்தூரித்தால் வேதையானது எவ்வளவு தூரம் செல்லும் என்று சொல்ல முடியாது. இது நாள் வரை இதன் எல்லையை யாரும் கண்டதில்லை. (வேதை மாற்று சொல்ல முடியாத அளவிற்கு உண்டாகும் என்பதை உருவகப்படுத்தி இங்கு கூறப்படுகிறது.)

நாக குரு

பெரியோரே நாகம் பிலக்க குருபண்ண
பரியோமுன் நாகத்தில் பாய்ச்சிடச் சமன்தங்கம்
சரியே நற்சூதமுந் தாக்கு அதுக்குள்ளே
வரியோடு கல்வத்தில் வைத்துப் பொடி செய்யே. (582)

பொடிக்குச் சமனாகப் பூட்டு சவ்வீரத்தை
பொடிக்குச் சமனாகப் பூட்டிடு வெண்கண்டர்
பொடிக்குச் சமனாகப் பூட்டிடு எருக்கம்பால்
பொடிக்குத் துவளப் பொலிவாய் அரைத்திடே. (583)

நாகத்தை குரு மருந்தாக செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். கட்டிய நாகத்தை ஒரு நிறையாக எடுத்துக் கொண்டு சம அளவு தங்கமும் சூதமும் சேர்த்து கல்வதிலிட்டு பொடி செய்ய வேண்டும். பிறகு இப்பொடியின் எடைக்கு சம அளவு சவ்வீரம், வெண்கண்டர், எருக்கம் பால் ஆக இம்மூன்றையும் முன் பொடியுடன் சேர்த்து நன்றாக அரைத்து சிறுவில்லைகளாகத் தட்டி காயவைத்து இவ்வில்லைகளின் மேலும் கீழும் அண்டப் பொடிகளை வைத்து புடம் போட்டால் குருவாகும்.

அரைத்தே உருட்டி அடவாக லேசுபோல்
தரைத்தே நல்வில்லையாய்ச் சார உலர்த்திடு
புரத்தே நல்லண்டப் பொடிபோடு கீழ்மேலும்
துரத்தே புடமொன்று சூழக் குருவாமே. (584

தங்க குரு

குருவான நாகங் கொடுக்க முறைகேளு
அருவான ஒன்பதில் அந்திப்பாய் நூற்றொன்று
திருவாகு மாற்று சிறக்கப் பதினாறு
விருவாகுந் தங்கத்தின் மேற்பூசிப் போட்டிடே. (585

போட்டிடில் தங்கம் புடத்தில் குருவாகும்
மாட்டிய வேதை அளவில்லை யான சொல்
தீட்டிய பூரணம் நிர்மலச் சித்தரே
காட்டிய நாகங் கரைசொல்லக் கூடாதே. (586)

நாக குருவை நவலோகத்தில் நூற்றுக்கொரு பங்கு ஈந்தால் பதினாறு மாற்றுள்ள தங்கம் உண்டாகும். நாக குருவை தங்கத்தின் மேல்பூசி புடம்போட்டால் நீறி குருவாகும். இத்தங்க குருவால் அளவில்லாத வேதைகள் பலிதமாகும். பூரணத்தில் நிற்கும் சித்தரே நாகத்தின் பெருமைக்கு கரை சொல்ல முடியாது.

சாரச் செயநீர்

கூடாத சாரச் செயநீர் குறிகேளு
தாடாங் கிளிஞ்சி சமனிடை சாரமும்
நீடாய்ப் பொடித்து நிறுத்திவை மூன்றுநாள்
வாடாய்க் குகைக்குள்ளே வைத்திடாய் காரமே. (587)

காரம் உருகையில் காட்டுவாய் இப்பொடி
தாரவே தீயினில் தண்ணீர்போல் நின்றாடும்
வேறவே கொட்டி உறவாய்ப் பொடிசெய்து
ஆரவே கல்வத்து அமர்ந்த பனிவையே. (588)

வைத்திட நீராகும் மகத்தாஞ் செயநீராம்
கைத்திட நாகங் கருலோகஞ் சுத்தியாம்
பைத்திடப் பாஷாணம் பலமற்று ஊறல்போம்
மொய்த்திட வாட்டு முதற்றர நீரிலே. (589)

இனி சார செயநீரை பற்றி கூறுகிறேன் கேள். கிளிஞ்சலை பொடி செய்து சம எடை சாரம் சேர்த்து மூன்று நாட்கள் அசையாமல் வைத்து பிறகு குகையில் காரத்தை வைத்துருக்கி முன் பொடியைத் தூவினால் சரக்குகள் இணைந்து தண்ணீர் போலாகும். அதை வேறொரு கரண்டியில் ஊற்றினால் உடனே உறைந்து கட்டும். கட்டிய சரக்கை பொடி செய்து கல்வத்திலிட்டு பனியில் வைத்தால் செயநீராகும். இச் செயநீரில் நாகம், வங்கம், பாஷாண வகைகள் போன்றதை துவைத்து வாட்டினால் ஊறல் நீங்கி சுத்தமாகும். வாட்டு முறைக்கு இந்த நீரே முதன்மை இடத்தை வகிக்கிறது.

வெடியுப்பு செயநீர்க் குரு

நீராகி உப்பு நிலைக்க முறை கேளு
ஆராங் கிளிஞ்சிச் சதையை உலர்த்திட்டு
பாராய் கரண்டியில் பாங்காய் வெடியுப்பு
தாராய் உருகையில் தாக்கால் சதையிதே. (590)

சதையுண்டு இணங்கன் தம்பித்துத் தின்றிடும்
மதையுண்டு வாங்க மகத்தாம் ஐயநீருங்
கெதையுண்ட பாண்டம் போல் கெடியாகவே
ததையுண்ட நீர்தான் பகர முடியாதே. (591)

வெடியுப்பை கட்டி குருவாக்கும் முறையைக் கேள். கிளிஞ்சலை உலர வைத்துக் கொண்டு பிறகு வெடியுப்பை கரண்டியிலிட்டு உருக்கி முன் உலர வைத்துள்ள கிளிஞ்சலை ஒவ்வொன்றாக சேர்த்து வந்தால் வெடியுப்பானது

கிளிஞ்சலை தின்று விட்டு தம்பித்து நிற்கும். இதை எடுத்து பொடி செய்து பனியில் வைத்தால் செயநீராகும். இச்செயநீரின் பெருமையை அளவிட முடியாது.

முடியாத நீருமுன் சாரச் செயநீரு
பிடியாய்ச் சரிகூட்டிப் பேதித்தால் வெண்ணெயாம்
வடிவான வீரம் வழங்கிய கற்பூரம்
கடியாம் வெண்கண்டர் கலந்தங்கு வைத்திடே. (592)

சரக்குக் கட்டு

வைத்தே இதற்குள்ளே மாட்டிடு வெண்காரம்
கைத்தே சவர்க்காரம் கடுஞ்சுன்னத்தோடு அஞ்சும்
ஒத்தே இடைதானும் அஞ்சும் ஒருபலம்
பைத்தே இருந்தரும் பாச்சாய் பலம்ரண்டே. (593)

ரண்டோடு அஞ்சும் நிலையவே மத்திக்க
தண்டோ தயிர்போல் தயிர் வெண்ணெயே ஆகும்
கண்டே சரக்கெல்லாம் கட்டியே வாட்டிட
பண்டே கதையல்ல பார்க்கையில் கொல்லுமே. (594)

கொல்லுமே பாஷாணக் கூட்ட இனமெல்லாம்
கொல்லுமே தான்சாரக் காரக் குலமெல்லாம்
கொல்லுமே என்பான் கொடிதான லோகத்தை
கொல்லுமே சூதம் கோபத்தில் ஆனையே. (595)

இந்த வெடியுப்பு செயநீருடன் முன் செய்த சாரச் செயநீரையும் சரியளவு கூட்டி கலக்கினால் வெண்மை நிறமுள்ள வெண்ணையாய் போகும். இவ்வெண்ணையில் வீரம், கற்பூரம், வெண்கண்டர், வெங்காரம், சவர்க்காரச் சுண்ணம் இவை ஐந்தையும் வகைக்கு ஒருபலம் கூட்டியும் பிறகு இரண்டாவது முறை முன் போல் ஐந்து சரக்கையும் வகைக்கு இருபலங் கூட்டி (வெண்ணையுடன் சேர்த்து) மத்தித்தால் தயிர்ப் போலாகும். இத்தயிரை கொண்டு சரக்கின் மேல் பூசி வாட்டினால் மடிந்து சாகும். (எவை எல்லாம் மடியும் என்று கேட்பாயாகில் கூறுகிறேன் கேள்.) பாஷாண வகைகளும், காரசார வகைகளும் லோக வகைகளும், சூதமும் இச்செய நீரைக் கண்ட மாத்திரத்தில் மடிந்து சாகும்.

செயநீரில் கட்டு சரக்கு

ஆனையைப் போலே அசைந்தாடும் சூதந்தான்
பூனையைப் போலே புலம்பித் தவித்திடும்
சேனையைக் கட்டும் தெளிதாம் நவநீதம்
வானை கடந்தோடி வாழ்கின்ற சித்தரே. (596)

கெவுனம் பாயும் சித்தர்களே கேளுங்கள். சூதமானது இவ்வெண்ணையைக் கண்டமாத்திரத்தில் யானையைப் போல் அசைந்தாடியும் குட்டியிட்ட பூனையைப்போல் புலம்பித் தவிக்கும்.

துரிசு சுன்னம்

சித்தான சாரச் செயநீரில் சவ்வீரம்
கொத்தாய் கரைத்துக் குழப்பியே கண்டர்மேல்
நித்தாகப் பூசி நிலையொரு மண்டலம்
வித்தார வெய்யில் விளங்கநீ போட்டிடே. (597)

போட்டிடப் பச்சைப் பொருமிக் கழண்டோடி
நீட்டிடக் கண்டால் நிலைத்தாடும் வெண்ணெய்போல்
ஆட்டிடக் காணவே அகண்டநல் நீதமும்
கூட்டிடவே மார்க்கங் கொள்கின்றேன் சித்தியே. (598)

முன்செய்த சாரச் செயநீரில் சவ்வீரத்தை கரைத்து நன்றாக குழப்பி துருசின் மேல் பூசி ஒரு மண்டலம் வெய்யிலில் வைத்தால் துருசிலுள்ள பசுமை அகன்று வெண்மை நிறம் கொண்டதாய் பெருமி நீரும். இந்த துருசுச் சுன்னத்தையே முன்பு (592 ஆம் பாடலில்) வெண்கண்டர் என்று கூறியுள்ளேன். இதையே செயநீருடன் கலந்து தயிர் போலாக்கி வேதை செய்தால் சித்தியாகும்.

(கவனிக்க, 592 ஆம் பாடலில் வெண்ணையுடன் கலக்கும் சரக்கில் வெண்கண்டர் எனக் கூறப்பட்ட சரக்கின் செய்முறை இங்கு உள்ளது.)

சாரக்கட்டு

சித்தி வெடியுப்புச் சேர்ந்த செயநீரில்
பத்திய சாரத்தைப் பாங்காய்த் துவைத்துநீ
அத்திய மண்டலம் அப்பா வெயிலில்வை
முத்திய சாரமும் முதற்றரக் கட்டிடே. (599)

வெடியுப்பு செயநீரும் சார செயநீரும் கலந்த தயிரில் (594 ஆம் பாடலில் உள்ள தயிர் போன்ற செயநீரில்). சாரத்தை துவைத்து ஒரு மண்டலம் வெய்யிலில் இட்டு வைத்தால் சாரம் உயர்தரமான கட்டாகும்.

சீனக் கட்டு வெண் காரக் கட்டு

கட்டிடும் இப்படி கடியதோர் சீனத்தை
ஒட்டிடும் இப்படி உறவாக வெண்காரம்
மட்டிடும் இப்படி வளமான கல்லுப்பும்
பட்டிடும் கண்டாய்ப் பச்சை கிளிகட்டே. (600)

இதே போல் சீனம், வெண்காரம், கல்லுப்பு போன்ற சரக்குகளையும் தயிர்பூசி வாட்டினால் (594 ஆம் பாடலில் உள்ள தயிர்) மடிந்து கட்டும்.

கல்லுப்புக் கட்டு

கட்டும் துரிசியும் கடியதோர் காரமும்
வெட்டுநற் சாரமுடன் சேர்ந்த சீனமும்
மட்டுநற் பூரம் விளங்கிய கல்லுப்புக்
கொட்டும் அமரி மலத்தினீர் கூர்மையே. (601)

கூர்மையோடு ஏழுங் குறிப்பாய்ச் சமபாகம்
வார்மையாய் வாய்நீர் மத்தித்து வீரன்மேல்
தார்மையாய்க் கட்டித் தணல்வாட்டித் தீபமேல்
ஓர்மைசெய் சீலை உயறவே வாட்டிடே. (602)

வீரக்கட்டு

வாட்டிட வாட்டிட வளமாகச் சவ்வீரம்
வாட்டிட வாட்டிட வகையு மணிபோலே
நீட்டிடத் தங்கம் நிமிஷத்தில் நீராகும்
பூட்டிட வேதையும் போகுங்காண் தூரமே. (603)

கட்டிய துரிசு, காரம், சீனம், பூரம் கல்லுப்பு, அமுரியுப்பு போன்ற ஏழுவகை சரக்கையும் வாய் நீரால் மத்தித்து வீரத்தின் மேல் பூசி தணலிலும் தீபத்திலும் சீலை செய்து வாட்ட வேண்டும். இவ்வாறு வாட்டுங்கால் சவ்வீரமானது திரண்டு மணிபோலாகும். இம்மணியினால் தங்கம் நீறிச் சுன்னமாகும். மேலும் அளவில் வாத வேதையும் உண்டாகும்.

தூரமும் ஓடிடும் சூதத்தைக் கொன்றிடும்
பாரமும் அல்ல பலகாரச் சாரங்காண்
நேரமும் இல்லை நிமிஷத்தின் உப்புநீர்
ஆரமும் பூண்டநம் ஆத்தாள் அறைந்ததே. (604)

அது மட்டுமின்றி சூதம், காரசாரம், கல்லுப்பு, போன்றதையும் குரு நிமிஷத்தில் கொன்று மடியச் செய்யும். இம்முறையை உயர்தரமான மாலையணிந்ததாய் எனக்கு உபதேசம் செய்தான்.

அறைந்தாளே ஆத்தாள் அவளை நான் பூசிக்க
நிறைந்தாளே உள்ளெ நிலைத்த மதுவாலே
அறைந்தாளே மூலத்தில் ஆமென்று மேலோடி
குறைந்தவள் நாலுக்குள் கூட்டிநான் பார்த்தேனே. (605)

நான் முறையாக தாயை பூசை செய்தால் எனக்கு அவள் உபதேசம் செய்தாள். (எவ்வாறு செய்தேன் எனில்) முதலில் மது வைத்து பூசை செய்து பிறகு மூலத்தில் வாசி வைத்து ஏற்றி குரு பீடத்தில் ஏறி நின்றேன். அப்பொழுது துரிய பீடத்தில் எனக்கு உபதேசம் செய்தாள்.

பார்த்தேனே ஞானத்தைப் பட்டம் பகலாக
கோர்த்தேனே வாசிக் குறிப்பாக ஒன்பதில்
தோர்த்தேனே வாசனை சூதத்தைக் கூட்டிநான்
போர்த்தேனே சாரணைப் பூட்டினேன் கண்டிடே. (606)

முறையாக பூசை, யோகம், போன்றதை செய்ததால் ஞானத்தை வெகு எளிதில் அடைந்தேன். மேலும் வாசியை ஆதாரங்களில் நிறுத்தி வாசனைகளை ஒழித்து சூதத்தை கட்டி சாரணை பூட்டி அண்ட புவனங்களை பார்த்து வந்தேன்.

உபரசங்கள் சத்து

கண்டிடு கட்டிய சாரமும் ஒரிடை
தண்டிடு வெண்காரந் தன்னொடு வீரமும்
பண்டித தாளகச் சத்தும் பரிந்திடு
மண்டிடுக் கண்டர் வளமான ரங்கியே. (607)

ரங்கொடு ஆறும் நிரைதான் சரிகூட்டி
பங்கான உப்புநீர் பாங்காய் அரைத்திட்டு
மங்காய் உபரசம் வாங்கிடச் சத்ததில்
தங்காமல் நாளொன்று தாக்க உருக்கிடே. (608)

உருக்கிய சத்தாகும் உபரசம் எல்லாந்தான்
பருக்கிட லோகம் பகுந்தாடும் தண்ணீர்போல்
நெருக்கிட ரத்தினம் நிமிஷத்தில் நீராகும்
சொருக்கிடு சாரணை சூதத்தில் சோதியே. (609)

கட்டியசாரத்தை ஒரு நிறையாக எடுத்து இதற்கு சமன் வெண்காரம், வீரம், தாளகச் சத்து துருசு, ... (ஒரு சரக்கின் பேர் சரியாக விளங்கவில்லை) போன்ற சரக்குகளை வெடியுப்புச் செயநீரால் அரைத்து உபரசங்களுடன் சேர்த்து உருக்கினால், சத்தாக விழும். சகலவிதமான உபரசங்களையும் இதேபோல் செய்தால் சத்தாக விழும். நவரத்தினம் நவலோகம் போன்ற அனைத்தும் இதே முறையில் உருக்க சத்து உண்டாகும். இச்சத்துக்களை முறையாக சோதித்து சாரணை ஊட்ட வேண்டும்.

சோதித்துச் சூதத்தைச் சூட்டடா சாரணை
ஆதிக் கெவனம் அடவாய் எடுக்காது
போதிக்க மாட்டாது பிலமான காயத்தை
வாதிக்கு ஆடும் வகுத்ததோர் ஞானமே. (610)

சத்துக்களை நன்றாக சோதித்த பிறகே சூத்திரத்திற்கு சாரணையாக ஊட்ட வேண்டும். இல்லையேல் கெவுனமும் பாயாது தேக சித்தியும் உண்டாகாது. நான் கூறிய முறைகள் யாவும் ஞானயோகிக்கே சித்திக்கும்.

ஞானங் கொடுப்பாளே நாடினாள் மாதாவை
பானங் கொடுக்கையில் தாய்க்கென்றே உன்னுவீர்
பானங் கொடுக்கையில் பரத்துக்கு என்றேகொடு
வானந் திறக்குமே வாதமும் சித்தியே. (611)

ஞானத்தை வேண்டி தாயாரை பூசித்தால் கண்டிப்பாக ஞானத்தை கொடுப்பாள். ஆனால் அவளுக்கு மதுவகைகள் வைத்து பூசித்து பிறகு அம்மதுவை தன்னுள்ளே நின்று அவளே உட்கொள்கிறாள் என்ற எண்ணத்துடன் உட்கொள்ள வேண்டும். எது செய்தாலும் தாய்க்கே அர்ப்பனம் என்று கூறி செய்தால் கெவுன சித்தி உண்டாவதோடு வாதமும் பலிதமாகும்.

சித்தியா பானத்தால் சேர்ந்திடும் எட்டெட்டு
முத்தியாம் பானத்தால் முப்பாழுஞ் சூனியம்
பத்தியாம் பானம் பரத்திலே சேர்ந்திடும்
சத்தியாம் வேதாந்தத் தாயவள் கண்டிடே. (612)

ஆத்ம சமர்ப்பனத்துடன் வைக்கப்படும் மதுவால் தாய் சந்தோஷம் கொள்கிறாள். அதனால் அறுபத்து நான்கு சித்தும், முக்தியும் உண்டாகும். முறையாக செய்யப்படும் பானத்தால் முப்பாழும் சூனியத்தில் அடங்கும். அந்த சூனியவஸ்து பரத்துடன் ஒடுங்கும். பரமே எங்கும் வியாபித்த தாயாக அறிதல் வேண்டும்.

கண்டவர் சித்தர்கள் கவனிகள் ஞானிகள்
உண்டவர் யோகிகள் ஒளிவாம் மறையோர்கள்
ஒண்டவோ ருத்திரன் உடனைந்து பேர்களும்
அண்டியே பூசித்து மகத்துவம் ஆனாரே. (613)

ஆனாரே இவர்கள்தான் மாதாவைப் பூசித்து
தேனாரவே உண்டு சேர்ந்தார் பதிதோறும்
வானாரத் தாண்டலாம் மாயமும் போக்கலாம்
கோனானு கூடுங் குறிக்கெய்தும் பானமே. (614)

தாயை பரமாக கண்டு வணங்கி சித்தியடைந்தவர்களே சித்தர், ஞானி, கவுனி, யோகி, வேதாந்தி என்ற பெயருடன் பூமியில் என்றென்றும், நிலைத்து நின்றனர். இவ்வளவு ஏன் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் போன்ற ஐந்து பேர்களும் தாயை உபாசித்தே ஆதார தேவதைகளாய் நின்றனர். மேலும் தாயை

முறையாக பூசிப்பதால் அண்டத்தை தாண்டலாம். சகலவிதமான மாயைகளையும் வென்று வாழலாம். பரம் பொருளையும் அடையலாம். இவை யாவும் மது வைத்து பூசிப்பதின் மகிமையே.

பானத்தை வாங்கையில் பாங்காய் வகாரத்தை
ஊனத்தை விட்டு உறிஞ்சியே பூசித்து
சீனொத்து நின்ற சிகாரத்தை ஊதிட
வானொத்து நின்ற மனோன்மணி காண்பளே. (615)

காண்பாள் மனோன்மணி கண்டிடு பூரணம்
வீண்பாழாய் நாளை விட்டு மறவாதே
ஏண்பாக நித்தம் எய்துமோ வெண்ணாதே
பூண்பாகச் சொல்லுகிறேன் பொலிவாகச் சித்தியே. (616)

மதுவை தாயிடமிருந்து பூசித்த பிறகு பிரசாதமாக எடுத்து வாசி மூலத்தில் வங் என்று நிறுத்தி மதுவை உட்கொண்டு பிறகு சிங் கென்று இடை நாடியின் வழியாக மூச்சை இழுத்து வாசியை மேல் நோக்கி ஏற்றினால் மனோன்மணித் தாய் வெளிப்படையாக காண்பாள். அவளே பூரணப் பொருளாகவும் நிற்கிறாள். உன்னுடைய வாழ் நாளை வீணாக்காமல் மறதியின்றி அனுதினமும் பூசை செய்! பூசை செய்வதால் பலன் கிட்டுமா என்று சந்தேகங் கொள்ளாதே கட்டாயம் சித்தியுண்டாகும்.

சமாதி லேகியம்

சித்தியா மூலிகை சேரு பலமொன்று
வெத்திய வண்ட முறப்பொடு மூன்றதில்
மத்திய பத்திரி வழங்கிய சாதிக்காய்
அத்திய சீரகம் அதனில் கிராம்பிடே. (617)

இட்டே கசகசா இயல்சாதி பத்திரி
மட்டான சாரப் பருப்புடன் ஏழையுந்
தட்டே இடைதான் கரிதூக்குக் கால்பலம்
மட்டான வார்நெய் உறவார்த்து அரைத்திடே. (618)

அரைத்ததோர் ஏழும் அதுமுன் நீரண்டையும்
விரைத்தாவின் பாலில் இணங்க வரைத்திடு
தரைத்தே கொதிக்கையில் சர்க்கரை ஈர்பலம்
நிரைத்தே குழம்புக்குள் நீட்டி மதுவாரே. (619)

வாரே உருட்டிடு வைத்துவை வஸ்துவால்
வாரே உதயத்தில் வாசமெல்லாந் தீர்த்து
பாரே சமாதியில் பாக்களவே உண்டு
யாரேனும் பிறகு எல்லாம் பொசித்திடே. (620)

பொசிக்கும் முறையெல்லாம் பூரணிக்கே எண்ணு
மெசிக்கி நற்தோடமும் இங்கிழை வாராது
மசிக்கு மறவாதே மகத்தான சித்தரே
தசிக்கவே மந்திரந் தாக்காய் சமாதியே. (621)

ஒரு பலம் கஞ்சா, அண்டம் மூன்று, இதை தனியாக எடுத்து வைத்துக் கொண்டு, பிறகு பத்திரி, சாதிக்காய், சீரகம், கிராம்பு, கசகசா, சாதிபத்திரி, சாரப்பருப்பு போன்ற ஏழு சரக்குகளையும் வகைக்கு கால் பலமெடுத்து நெய் விட்டு நன்றாய் அரைத்துக் கொள். பிறகு முன் எடுத்து வைத்துள்ள இரண்டு வகையான சரக்கையும் இதனுடன் கூட்டி மீண்டும் பால் விட்டரைத்து அடுப்பேற்றி கொதிக்க வைத்துக் கொள். கொதிக்கும் பொழுது இரண்டு பலம் சர்க்கரையும் மதுவையும் விட்டு கிளறி உருண்டையாக உருட்டி எடுத்துக் கொண்டு தாயை பூசை செய். பிறகு அனுதினமும் பாக்களவு சூரியன் உதிக்கின்ற சமயத்தில் உட்கொண்டு பிறருடைய சத்தம் இல்லாத இடத்தில் சென்று மந்திரத்துடன் கூடிய சமாதியில் நில்! (நின்றால் யோகமும் ஞானமும் கை கூடும்.)

சமாதியை உன்னிடு தாயாரைப் பூசித்து
அமாதிக் கிரிகையாய் ஆகாததைச் செய்யாதே
கமாதி பொறிவழி கண்டு நீ ஓடாதே
புமாதியப் பொன்னாசை பூட்டாதே பொல்லாதே. (622)

சமாதியில் நின்றுக் கொண்டு (ஆகாத) வேண்டாத காரியங்களில் ஈடுபடாமலும் புலன்களின் வழியே மனதை செலுத்தாமலும், பெண்ணாசைக் கொள்ளாமலும் இரு.

பொல்லாத ஆனந்தம் பூட்டிடுங் காலத்தில்
மல்லாடாதே நின்று வார்த்தைகள் பேசாதே
கொல்லாதே ஒன்றையும் கூடாதே பெண்ணோடு
சொல்லாதே தீனியில் சேர்வாய் அகண்டமே. (623)

சமாதி யோகம் பழகுங்காலத்தில் மிகுந்த ஆனந்தம் ஏற்படும். அந்த ஆனந்தத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் உள்ள பெண்ணாசைகளையும், வீண் வார்த்தைகளும், அதிக உணவில் ஆசைகளையும் நீக்க வேண்டும். அப்பொழுதுதான் அகண்ட சச்சிதானந்த பொருளுடன் இணைந்து நிற்கும் தகுதி ஏற்படும்.

அகண்டஞ் சிவமாச்சு ஆத்தாள் விளக்காச்சு
தகண்ட இரண்டுஞ் சமாசரப் பூரணம்
உகண்ட உன்மணியும் உசரப் பதிதோன்றும்
சிகண்டியந் தாண்டிடில் சின்மயங் காணுமே. (624)

அகண்டமே சிவன். அதிலுள்ள விளக்கே தேவியான ஆத்தாள். இவரிரண்டு பேரும் கூடி நிற்பதே பூரணம் எனப்படும். ஆகவே நாத விந்துவான வாசியை புருவமையங் கடந்து செலுத்தினால் ஆதி பொருள் காணும்.

காணுமே ஞானங் கடுகப் பலித்திடும்
காணுமே யோகம் கடுகப் பலித்திடும்
காணுமே வாதம் கடுகப் பலித்திடும்
காணுமே காயம் கடுஞ்சித்தி முத்தியே. (625)

இவ்வாதி பொருளைக் கண்ட மாத்திரத்தில் யோகம், ஞானம், வாதம், காயசித்தி போன்றவையாவும் கை கூடும். கடைசியில் முக்தியும் ஏற்படும்.

முத்திக்கு இதைவிட்டால் மூவுலகு எய்யாது
சித்திக்கு இதைவிட்டால் தேடியுங் கிட்டாது
பத்திக்கு இதை விட்டால் பரத்துக்கு வாளல்லா
கத்தியே வேதங் கடைசியில் உண்மையே. (626)

முக்தியடைய வேண்டுமானால் எளிய முறையான யோக பாதையைக் காட்டிலும் வேறு வழியில்லை பக்தியுடன் கூட இந்த மார்க்கமே பூரணப் பொருளை அடைய வழி கோலுகிறது. வேதமும் கடைசியில் இதையே உணர்த்துகிறது.

உண்மை இதைவிட்டு சாவுமொன்று இல்லையே
வண்மையாய்ப் பார்த்து மகிழ்ந்தார் பெரியோர்கள்
தண்மையாய் நாயேனும் தக்கபடி சொன்னேன்
நன்மையாய் நந்தி நாடி முறைப்பாடே. (627)

இந்த நிலையில் நிற்பவர்க்கு கட்டாயம் இறப்பென்பதே கிடையாது. இந்த முறையில் நின்றே பெரியோர்களான முனிவர்களும் மகிழ்ச்சியடைந்தனர். மூலநாயகனாக நானும் இந்த முறையை தான் பின் பற்றினேன். என் குருவான நந்தியின் மார்க்கமும் இதுவே.

முறைபாடு கேளு முதல்நூற்றுப் பனிரண்டு
மறைபாடு உலகில் வயித்தியம் நான்சொன்னேன்
நிறைபாடத் தாய்வீடு நின்மலஞ் சித்தர்க்கு
துறைபாடு வந்நூற்றில் சூட்டுமுறை கேளே. (628)

இந்நூலில் உள்ள அங்கங்களைக் கேள். ஒன்றாவது பாடல் முதல் நூற்றிபனிரெண்டு பாடல் வரை வயித்தியம் சொன்னேன். இதில் குழந்தை பிறக்கும் விதியும், நோய்களின் விளக்கமும் சொன்னேன். இதற்கடுத்துள்ள மீதி ஐநூறு பாடலில் எதை பற்றி கூறியுள்ளேன் என்றால்

கேளே முன்சித்திக் கெடகெடச் சோதனை
வாளே நற்கற்ப மகத்தான மெய்ஞ்ஞானம்
தாளே குளிகை சமைத்திடச் செந்தூரம்
நாளே பரிக்குரு நற்கட்டு மார்க்கமே. (629)

மார்க்கங் கவனம் வழங்கும் புரியட்டம்
ஏர்க்கவே அண்டம் எழிலாக உற்பனம்
பார்க்கவே மேருவின் பட்டணந் தெய்வங்கள்
சேர்க்க மனோன்மணி சித்துள்ளுஞ் சொன்னேனே. (630)

காய சித்தியும் அதன் சோதனையும் மெய்ஞ்ஞானம், குளிகை, செந்தூரம், தங்கக்குரு, கட்டு மார்க்கம், கவுனம், எட்டு விதமான காயம், அண்டத்தின் உற்பத்தி மேருவின் லட்சணம், ஆதார தெய்வங்கள், மனோன்மணியின் தரிசனம் போன்றவைகளை பற்றி கூறியுள்ளேன்.

சொன்னேனே சாரணை சொர்ண ரவிக்குரு
சொன்னேனே சாரக் காரத்தின் சூட்சத்தை
சொன்னேனே ஆத்தாளை சுகமாகப் பூசிக்க
சொன்னேனே ஆத்தாள் சூழ்பூசை மார்க்கமே. (631)

மார்க்கமாய்ச் சக்கரம் வழங்கிய அட்சரம்
மார்க்கமாய் வாசியை வைக்க முறைப்பாடு
மார்க்கமாய் மூக்கில் மனோன்மணி மெய்ஞ்ஞானம்
மார்க்கம் பிடரி மகத்தான யோகமே. (632)

யோகமாய் மூலந் துதிக்கின்ற என்னந்தி
பாகமாய் நெஞ்சில் பகிர்ந்தாவி யோகமாம்
யாகமாய் நின்ற வசபைய பெண்ணுங்குந்
தாகமாய் முப்பாழுந் தப்பாமல் சொன்னேனே. (633)

பிறகு சாரணை, தங்கச் செம்பின் குரு, கார சாரத்தின் சூட்சம், தேவியின் பூசை முறை, பூசையின் பயன், சடாதாரங்களில் உள்ள சக்கரத்தின் அட்சரங்கள் வாசி முறை முனை மூக்கில் மனோன்மணி, மெய்ஞ்ஞானம், பிடரியோகம், மூலத்திலுள்ள நந்தியின் துதிமுறை, கண்ட யோகம், முப்பாழ் போன்றதை பற்றி கூறியுள்ளேன்.

சொன்னேனே ஐந்நூறு சூட்டு முன் ஆயிரம்
பன்னப் பலந்தான் பகருறேன் வல்லோரே
சின்னஞ் சிறுபிள்ளை சேர்ந்தநூறு எஞ்ஞானறும்
மன்னஞ் சிவஞான வாசிக்குள் வாழ்வரே. (634)

இந்நூலை எழுதுவதற்கு முன்னே ஆயிரம் என்ற நூலை பாடினேன். இதைப் பற்றி கூறுவதற்கு முன்பாக இந்த நூலின் பெருமையைக் கூறுகிறேன் கேள். இந்த நூலை ஒரு சிறு பிள்ளைப் பார்த்தாலும் கட்டாயம் வாசி யோகமான சிவஞான போதத்தில் நின்று வாழ்வான்.

வாழ்வார் மலைதொறும் வாதத்தோடு எட்டெட்டும்
தாழ்வாவது இல்லை சகல மகாசித்தி
கேழ்வா முன்னாயிரம் கெடிந்த அறுநூறுஞ்
சூழ்வாக நித்தம் சுகமாகப் பார்த்திடே. (635)

மேலும் மலையின் உச்சியில் சென்று சித்தர்களால் வாழ்வதோடு இல்லாமல் அறுபத்து நான்கு சித்தியும் ஏற்படும். எனவே முன் எழுதிய நூலான ஆயிரமும் அதன் சாரமான இந்த அறுநூறு என்ற நூலை அனுதினமும் படிப்பாயாக.

பார்த்திடும் ஆயிரம் பாட்டிலு மெத்தவே
கோர்த்திடும் அறுநூறு கோட்டினேன் ஞானத்தை
சேர்த்திடு ரண்டுந் திரட்டையும் ஒன்றாகக்
கார்த்திடும் சித்தை கடைந்தெழும் வெண்ணெயே. (636)

இரண்டு வகையான நூல்களிலும் ஞான முறைகளை அதிகமாக சொல்லியிருக்கிறேன். ஆக இவை இரண்டையும் புத்தி கொண்டு கடைந்து பார்த்தால் ஞானம் என்ற வெண்ணை கிட்டும்.

வெண்ணெய் கடைந்தேன் விரைந்தேழு லட்சத்தில்
எண்ணெயைப் போலே இதையும் உருக்கினேன்
கண்ணைத் திறந்த கடுஞான வேதாந்தி
எண்ணைக்கும் பார்க்கலாம் இந்தநூல் முற்றுமே. (637)

இந்த இரண்டு நூல்களையும் ஏழு லட்சம் என்ற மூல கிரந்தத்திலிருந்து வெண்ணையாக கடையப் பெற்று அதை உருக்கி நெய்யைப் போல இந்த நூலை எழுதி வைத்தேன். ஞானக் கண் கொண்ட வேதாந்தியானவன் எக்காலத்திலும் இந்த நூலைப் பார்த்து சித்தியடையலாம். (அதாவது காலத்தால் மாற்றம் கொள்ளாது நிற்கும்.)

திருமூலர் வயித்தியம் அறுநூறு
முற்றிற்று.
ஓம் - தத் - ஸத்

தாமரை
நூலகம்